செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–10

பொருள்வயிற்பிரிவு - 3



முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

பொருள்வயிற்பிரிவு - 3

தொகுதி - 10

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்
'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com
கிளைகள்
திருச்சி - 620 002 சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001 மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017
© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-777-1 (Vol-10)

தனிப்பிரதி விலை ரூ. 450/–
(தொகுதி–10)

மொத்த விலை ரூ. 7200/–
(14 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் xi

மதிப்புரை xvi

பதிப்புரை xvii

அகத்திணை xix

பொருள்வயிற்பிரிவு - 3

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 4	முல்லை	குறுங்குடி மருதனார்	847
அகநானூறு 23	மண்கண்	ஓரோடகத்துக் கந்தரத்தனார்	931
அகநானூறு 25	நெடுங்கரைக்	ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்	1036
அகநானூறு 37	மறந்துஅவண்	விற்றூற்று மூதெயினனார்	1107
அகநானூறு 69	ஆய்நலம்	உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்	1040
அகநானூறு 73	பின்னொடு	எருமை வெளியனார்	850
அகநானூறு 85	நல்நுதல்	காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்	853
அகநானூறு 97	கள்ளிஅம்	மாமூலனார்	1110
அகநானூறு 139	துஞ்சுவது	இடைக்காடனார்	934
அகநானூறு 163	விண்அதிர்பு	கழார்க்கீரன் எயிற்றியார்	999
அகநானூறு 175	வீங்குவிளிம்பு	ஆலம்பேரி சாத்தனார்	937
அகநானூறு 183	குவளை	கருவூர்க் கலிங்கத்தார்	1027
அகநானூறு 229	பகல்செய்	மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்	1114
அகநானூறு 235	அம்ம	கழார்க் கீரன்எயிற்றியார்	1002
அகநானூறு 243	அவரை	கொடியூர்கிழார் மகனார் நெய்தல் தத்தனார்	1005
அகநானூறு 273	விசும்புவிசைத்து	ஔவையார்	1007
அகநானூறு 277	தண்கதிர்	கருவூர் நன்மார்பனார்	1117
அகநானூறு 341	உய்தகைஇன்றால்	ஆவூர் மூலங்கிழார்	1120

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 338	அம்ம	ஓதலாந்தையார்	1044
ஐங்குறுநூறு 341	அவரோ	ஓதலாந்தையார்	1092
ஐங்குறுநூறு 342	அவரோ	ஓதலாந்தையார்	1093
ஐங்குறுநூறு 343	அவரோ	ஓதலாந்தையார்	1094
ஐங்குறுநூறு 344	அவரோ	ஓதலாந்தையார்	1095
ஐங்குறுநூறு 345	அவரோ	ஓதலாந்தையார்	1096
ஐங்குறுநூறு 346	அவரோ	ஓதலாந்தையார்	1097
ஐங்குறுநூறு 347	அவரோ	ஓதலாந்தையார்	1099
ஐங்குறுநூறு 348	அவரோ	ஓதலாந்தையார்	1098
ஐங்குறுநூறு 349	அவரோ	ஓதலாந்தையார்	1100
ஐங்குறுநூறு 350	அவரோ	ஓதலாந்தையார்	1101
ஐங்குறுநூறு 453	அவல்தொறும்	பேயனார்	922
ஐங்குறுநூறு 454	தளவின்	பேயனார்	924
ஐங்குறுநூறு 456	உள்ளார்	பேயனார்	1018
ஐங்குறுநூறு 457	பெய்பனி	பேயனார்	1015
ஐங்குறுநூறு 458	துணர்க்காய்க்	பேயனார்	925
ஐங்குறுநூறு 462	ஏதில	பேயனார்	971
ஐங்குறுநூறு 464	கண்ஏனக்	பேயனார்	1024
ஐந்திணை எழுபது 15	செங்கதிர்ச்	மூவாதியார்	948
ஐந்திணை எழுபது 16	தடமென்	மூவாதியார்	949
ஐந்திணை எழுபது 18	கதழ்உறை	மூவாதியார்	950
ஐந்திணை எழுபது 19	ஆலி	மூவாதியார்	943
ஐந்திணை எழுபது 20	இனத்த	மூவாதியார்	944
ஐந்திணை எழுபது 23	தேரைத்	மூவாதியார்	945
ஐந்திணை எழுபது 24	கல்ஏர்	மூவாதியார்	946
ஐந்திணை ஐம்பது 4	உள்ளார்கொல்	மாறன் பொறையனார்	834
ஐந்திணை ஐம்பது 5	கோடுயர்	மாறன் பொறையனார்	835
ஐந்திணை ஐம்பது 9	வருவர்	மாறன் பொறையனார்	970

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐந்திணை ஐம்பது 31	உதிரம்	மாறன் பொறையனார்	1102
கலித்தொகை 27	ஈதலில்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1045
கலித்தொகை 28	பாடல்சால்	பாலைபாடிய பெருங்கடுங்கோ	1049
கலித்தொகை 29	தொல்லெழில்	பாலைபாடிய பெருங்கடுங்கோ	1053
கலித்தொகை 32	எஃகுஇடை	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1057
கலித்தொகை 33	வீறுசால்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1061
கலித்தொகை 34	மன்னுயிர்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1066
கலித்தொகை 35	மடிஇலான்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1070
கலித்தொகை 36	கொடுமிடல்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1074
கலித்தொகை 150	அயம்திகழ்	நல்லந்துவனார்	1078
கார் நாற்பது 1	பொருகடல்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	866
கார் நாற்பது 2	கடுங்கதிர்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	868
கார் நாற்பது 3	வரிநிறப்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	869
கார் நாற்பது 4	ஆடு	மதுரைக் கண்ணங்கூத்தனார்	870
கார் நாற்பது 5	இகழுநர்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	871
கார் நாற்பது 6	தொடியிட	மதுரைக் கண்ணங்கூத்தனார்	873
கார் நாற்பது 7	நச்சியார்க்(கு)	மதுரைக் கண்ணங்கூத்தனார்	874
கார் நாற்பது 8	மண்இயல்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	875
கார் நாற்பது 9	கருவிளை	மதுரைக் கண்ணங்கூத்தனார்	877
கார் நாற்பது 10	வான்ஏறு	மதுரைக் கண்ணங்கூத்தனார்	878
கார் நாற்பது 11	புணர்தரு	மதுரைக் கண்ணங்கூத்தனார்	879

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கார் நாற்பது 12	மைஎழில்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	881
கார் நாற்பது 13	ஏந்தெழில்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	882
கார் நாற்பது 14	செல்வம்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	883
கார் நாற்பது 15	திருந்திழாய்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	884
கார் நாற்பது 16	கருங்குயில்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	886
கார் நாற்பது 17	அறைக்கல்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	887
கார் நாற்பது 18	கல்பயில்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	888
கார் நாற்பது 23	கண்திரள்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	889
கார் நாற்பது 25	கருங்கால்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	890
கார் நாற்பது 26	நலமிகு	மதுரைக் கண்ணங்கூத்தனார்	892
கார் நாற்பது 27	முருகியம்போல்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	893
கார் நாற்பது 34	விரிதிரை	மதுரைக் கண்ணங்கூத்தனார்	894
கார் நாற்பது 35	சென்றநம்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	895
கார் நாற்பது 38	புகர்முகம்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	896
கார் நாற்பது 39	அலவன்கண்	மதுரைக் கண்ணங்கூத்தனார்	897
கார் நாற்பது 40	வந்தன	மதுரைக் கண்ணங்கூத்தனார்	899
குறுந்தொகை 24	கருங்கால்	பரணர்	1086
குறுந்தொகை 35	நாண்இல	கழார்க்கீரன் எயிற்றியார்	1014
குறுந்தொகை 65	வன்பரல்	கோவூர் கிழார்	909
குறுந்தொகை 66	மடவ	கோவத்தனார்	967
குறுந்தொகை 68	பூழ்க்கால்	அள்ளூர் நன்முல்லையார்	1023
குறுந்தொகை 82	வார்உறு	கடுவன் மள்ளனார்	1026
குறுந்தொகை 98	இன்னள்	கோக்குள முற்றனார்	911
குறுந்தொகை 103	கடும்புனல்	வாயிலான் தேவன்	1010
குறுந்தொகை 110	வாரார்	கிள்ளிமங்கலங்கிழார்	1012
குறுந்தொகை 126	இளமை	ஒக்கூர் மாசாத்தியார்	912
குறுந்தொகை 148	செல்வச்	இளங்கீரந்தையார்	976
குறுந்தொகை 183	சென்ற	ஔவையார்	914

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 186	ஆர்கலி	ஒக்கூர் மாசாத்தியார்	916
குறுந்தொகை 192	ஈங்கே	கச்சிப்பேட்டு நன்னாகையார்	1088
குறுந்தொகை 194	என்னெனப்	கோவத்தனார்	917
குறுந்தொகை 197	யாதுசெய்	கச்சிப்பேட்டு நன்னாகையார்	1016
குறுந்தொகை 200	பெய்த	ஔவையார்	974
குறுந்தொகை 216	அவரே	கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்	919
குறுந்தொகை 221	அவரோ	உறையூர் முதுகொற்றனார்	957
குறுந்தொகை 251	மடவ	இடைக்காடன்	961
குறுந்தொகை 254	இலைஇல்	பார்காப்பான்	1090
குறுந்தொகை 277	ஆசுஇல்	ஓரிற்பிச்சையார்	993
குறுந்தொகை 282	செவ்விகொள்	நாகம் போத்தன்	864
குறுந்தொகை 285	வைகல்	பூதத்தேவன்	920
குறுந்தொகை 287	அம்ம	கச்சிப்பேட்டு நன்னாகையார்	862
குறுந்தொகை 317	புரிமட	மதுரைக் கண்டரதத்தனார்	995
குறுந்தொகை 338	திரிமருப்பு	பெருங்குன்றூர் கிழார்	1030
குறுந்தொகை 358	வீங்குஇழை	கொற்றனார்	860
குறுந்தொகை 380	விசும்புகண்	கருவூர்க் கதப்பிள்ளை	1019
குறுந்தொகை 382	தண்துளிக்கு	குறுங்கீரனார்	969
கைந்நிலை 25	கார்செய்	புல்லங்காடனார்	900
கைந்நிலை 26	குருதி	புல்லங்காடனார்	901
கைந்நிலை 29	....குருந்(து)	புல்லங்காடனார்	953
கைந்நிலை 31	.......வானம்	புல்லங்காடனார்	902
கைந்நிலை 32	கார்எதிர்	புல்லங்காடனார்	954
கைந்நிலை 36	பிடவம்	புல்லங்காடனார்	903

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 63	எரிநிற	கணிமேதாவியார்	1035
திணைமாலை நூற்றைம்பது 64	பேணாய்	கணிமேதாவியார்	1032
திணைமாலை நூற்றைம்பது 66	வல்வரும்	கணிமேதாவியார்	1033
திணைமாலை நூற்றைம்பது 67	வெறுக்கைக்குச்	கணிமேதாவியார்	1106
திணைமாலை நூற்றைம்பது 79	சென்றார்	கணிமேதாவியார்	836
திணைமாலை நூற்றைம்பது 93	கருங்கடல்	கணிமேதாவியார்	930
திணைமாலை நூற்றைம்பது 95	மேல்நோக்கி	கணிமேதாவியார்	837
திணைமாலை நூற்றைம்பது 98	வீயும்	கணிமேதாவியார்	981
திணைமாலை நூற்றைம்பது 99	பொன்வாளால்	கணிமேதாவியார்	987
திணைமாலை நூற்றைம்பது 100	பண்(டு)இியையச்	கணிமேதாவியார்	839
திணைமாலை நூற்றைம்பது 102	மான்எங்கும்	கணிமேதாவியார்	840
திணைமாலை நூற்றைம்பது 103	ஒருவந்தம்	கணிமேதாவியார்	989
திணைமாலை நூற்றைம்பது 104	ஐந்துருவின்	கணிமேதாவியார்	929
திணைமாலை நூற்றைம்பது 105	எல்லை	கணிமேதாவியார்	927
திணைமாலை நூற்றைம்பது 106	என்னரே.	கணிமேதாவியார்	992

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திணைமாலை நூற்றைம்பது 107	கருவுற்ற	கணிமேதாவியார்	841
திணைமாலை நூற்றைம்பது 108	கண்ணுள	கணிமேதாவியார்	984
திணைமாலை நூற்றைம்பது 109	என்போல்	கணிமேதாவியார்	926
திணைமாலை நூற்றைம்பது 110	பெரியார்	கணிமேதாவியார்	940
திணைமாலை நூற்றைம்பது 111	கானம்	கணிமேதாவியார்	941
திணைமாலை நூற்றைம்பது 112	தேரோன்	கணிமேதாவியார்	843
திணைமாலை நூற்றைம்பது 114	பாத்து	கணிமேதாவியார்	973
திணைமாலை நூற்றைம்பது 116	குருந்தே	கணிமேதாவியார்	844
திணைமாலை நூற்றைம்பது 117	கதநாகம்	கணிமேதாவியார்	845
திணைமாலை நூற்றைம்பது 118	கார்தோன்றிப்	கணிமேதாவியார்	986
திணைமாலை நூற்றைம்பது 119	உகவுங்கார்	கணிமேதாவியார்	983
திணைமாலை நூற்றைம்பது 120	பீடிலார்	கணிமேதாவியார்	990
திணைமாலை நூற்றைம்பது 121	ஒருத்தியான்	கணிமேதாவியார்	977
திணைமாலை நூற்றைம்பது 122	கானந்	கணிமேதாவியார்	979
திணைமொழி ஐம்பது 13	ஓங்கு	கண்ணஞ்சேந்தனார்	1103
திணைமொழி ஐம்பது 14	புன்கு	கண்ணஞ் சேந்தனார்	1104

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
திருக்குறள் 1221	மாலையோ	திருவள்ளுவர்	1122
திருக்குறள் 1222	புன்கண்ணை	திருவள்ளுவர்	1123
திருக்குறள் 1223	பனிஅரும்பிப்	திருவள்ளுவர்	1125
திருக்குறள் 1224	காதலர்	திருவள்ளுவர்	1126
திருக்குறள் 1225	காலைக்குச்	திருவள்ளுவர்	1127
திருக்குறள் 1226	மாலைநோய்	திருவள்ளுவர்	1128
திருக்குறள் 1227	காலை	திருவள்ளுவர்	1130
திருக்குறள் 1228	அழல்போலும்	திருவள்ளுவர்	1131
திருக்குறள் 1229	பதிமருண்டு	திருவள்ளுவர்	1132
திருக்குறள் 1230	பொருள்மாலை	திருவள்ளுவர்	1133
நற்றிணை 97	அழுந்துபடு	மாறன் வழுதி	1082
நற்றிணை 99	நீர்அற	இளந்திரையனார்	959
நற்றிணை 118	அடைகரை	பாலை பாடிய பெருங்கடுங்கோ	1084
நற்றிணை 193	அட்டரக்கு	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	997
நற்றிணை 214	இசையும்	கருவூர்க் கோசனார்	951
நற்றிணை 246	இடூஉ	காப்பியஞ் சேந்தனார்	856
நற்றிணை 248	சிறுவீ	காசிபன் கீரனார்	963
நற்றிணை 281	மாசுஇல்	கழார்க்கீரன் எயிற்றியார்	1021
நற்றிணை 289	அம்ம	மருங்கூர்ப்பட்டினத்துச் சேந்தன் குமரனார்	905
நற்றிணை 302	இழைஅணி	மதுரை மருதனிளநாகனார்	907
நற்றிணை 316	மடவது	இடைக்காடனார்	965
நற்றிணை 381	அருந்துயர்	ஔவையார்	955
நற்றிணை 387	நெறிஇருங்	பொதும்பில்கிழார் நக்கனார்	858
நாலடியார் 392	தம்அமர்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	904

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

சு. செல்லப்பன்

மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிற்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்துகளையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
    பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
    தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
    தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
    கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
    சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
    பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
    காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
    செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
    ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
    குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
    எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
    எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
    நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஓவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது ‘குறையிரத்தல்’ எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலியிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப்படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத்திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படுவராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்'' என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, 'வரைவின் மகளிர்', 'பொருள்விலைப் பெண்டிர்' என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் 'வாயில்கள்' எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் 'வாயில்' மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பொருள்வயிற்பிரிவு – 3

தொகுதி 10

பக்கம் 834 முதல் 1134 வரை

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 4 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்றான், தலைவன். கார் காலம் தோன்றியது. ஆயினும், அவன் வரவில்லையே என்று தோழி வருந்தினாள்.

உள்ளார்கொல் காதலர் ஒண்டொடி நம்திறம்
வள்வார் முரசின் குரல்போல் இடித்துரறி
நல்லார் மனங்கவரத் தோன்றிப் பணிமொழியைக்
கொல்வாங்குக் கூர்ந்த(து)இக் கார்.

தெளிவுரை

"ஒளி வீசும் வளையலை அணிந்த தலைவியே! தோல் வாரினால் இழுத்துக் கட்டப்பட்ட முரசின் ஒலியினைப் போன்று மேகக் கூட்டம் இடித்து முழங்கிக் கார் காலத்தை அறிவிக்கிறது. 'கார் காலத்தில் வந்து சேர்வேன்' என்று நம் காதலர் பிரியும்போது சொன்ன இனிய சொற்களைச் சிதைப்பது போல இக்காலம் தோன்றுகிறது. நம் பிரிவு நிலையை நம் தலைவர் எண்ணிப் பாராரோ?" (எண்ணிப் பார்த்து உடனே திரும்புவார்.)

கருத்து

முரசென முழங்கிக் கார் காலம் தோன்றிவிட்டது. காதலர் நம் நிலையை நிச்சயம் நினைத்துப் பார்ப்பார்; ஆதலின், இப்பொழுதே வருவார்.

சொற்பொருள்

1. உள்ளுதல் - நினைத்தல்; தொடி - வளையல்; நம் திறம் - நம் நிலையை.
2. வள்வார் - தோல் வாரினாலே நன்கு இழுத்துக் கட்டப்பட்ட; உரறி - ஒலித்து.

3. நல்லார் - காதலரைப் பிரிந்த பெண்கள்; கவர - வேறுபட; பணிமொழி - தலைவர் நம்மிடம் கூறிய இன்சொற்கள்.
4. கொல்வாங்கு - சிதைப்பதுபோல; கூர்ந்தது - (மிகுந்து) காணப் படுகிறது.

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 5 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்றான், தலைவன். கார் காலம் தோன்றியது. ஆயினும், அவன் வரவில்லையே என்று வருந்தித் தோழி ஆறுதல் மொழி கூறியது.

கோடுயர் தோற்றம் மலைமேல் இருங்கொண்மூக்
கூடி நிரந்து தலைபிணங்கி – ஓடி
வளிகலந்து வந்துறைக்கும் வானம்காண் தோறும்
துளிகலந்து வீழ்தரும் கண்.

தெளிவுரை

தலைவியே! மலை உச்சியில் பெரிய மேகக்கூட்டங்கள் திரண்டு கலந்து, ஒன்றுடன் ஒன்று மோதி, இடி இடித்துக் கீழிறங்குகின்றன. வழியில் காற்றுடன் கூடி மழை பெய்யத் தொடங்குகிறது. அந்த வானத்தைக் காணும்போதெல்லாம் உன் கண்களில் கண்ணீர்த் துளிகள் மிகவும் பெருகுகின்றன. (தலைவன் விரைவில் வந்துவிடுவான்; வருந்தாதே.)

கருத்து

கார் கால வானத்தைக் காணும்போதெல்லாம், அவ்வானம் மழை பொழிவதுபோல உன் கண்களும் நீர்த்துளிகளைச் சொரிகின்றன; உன்னை நினைந்து தலைவன் உடனே வந்து சேர்வான்; வருந்தாதே.

சொற்பொருள்

1. கோடு - மலைச்சிகரம்; இரு - கரிய, பெரிய; கொண்மூ - மேகக்கூட்டம்.
2. நிரந்து - கலந்து; தலைபிணங்கி - ஒன்றோடொன்று மாறுபட்டு; ஓடி - கீழிறங்கி.
3. வளி - காற்று; உறைக்கும் - பெய்யும்; காண்தோறும் - காணும் போதெல்லாம்.
4. துளி - கண்ணீர்த்துளி; வீழ்தரும் - வீழும்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 79 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன், தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற பருவம் தொடங்கியது. தோழி அதனைத் தலைவிக்குக் காட்டி, தலைவன் விரைவில் வருவான் என நம்பிக்கை ஊட்டும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது.

சென்றார் வருதல், செறிதொடி! சேய்த்தன்றால்
நின்றார்சொல் தேறாதாய்! நீடின்றி – வென்றார்
எடுத்த கொடியின் இலங்கருவி தோன்றும்
கடுத்த மலைநாடு காண்.

தெளிவுரை

“கைகள் நிறைய வளையலணிந்த தலைவியே! போரில் வெற்றி பெற்றவர் உயர்த்திய வெண்கொடியினைப்போல், வேனிலால் வறண்ட இம்மலைநாட்டில் கார் கால மழையால் அருவி பெருகி விழுகிறது. ஆதலால் பொருளை விரும்பி நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் வரும் நாள் தொலைவில் இல்லை; அண்மைத்தே. அவர் சொற்களின் உறுதிப்பாட்டை நீ தெரிந்து

தெளியவில்லை. காலம் நீட்டித்தல் இன்றி அவர் விரைவில் வருவது உறுதி" எனத் தோழி தலைவியிடம் தேறுதல் கூறினாள்.

கருத்து

அருவி பெருகி விழுமாறு கார் காலம் தோன்றிவிட்டது; தலைவர் சொன்ன சொல் தவறார்; விரைவில் வருவார்.

விளக்கம்

'சென்றார் வருதல் சேய்த்து அன்று' என்று சொல்வதன்வழி, தலைவன் சிறிது காலத்தில் (மிக அண்மைக் காலத்தில்) திரும்பி வந்து விடுவான் என்னும் நம்பிக்கையைத் தோழி, தலைவிக்கு ஊட்டுகிறாள்.

சொற்பொருள்

1. சென்றார் - பொருள் தேடச் சென்றவர்; செறிதொடி - கைகள் நிறைய வளையலணிந்தவளே; சேய்த்து அன்று - தொலைவில் உள்ளது அன்று.
2. நின்றார் - உன்னுடன் பழகிய தலைவர்; தேறாதாய் - தெளியாதவளே; நீடு இன்றி - கால நீட்டிப்பு இன்றி; வென்றார் - போரில் வென்றார்.
3. எடுத்த கொடி - எடுத்துக்காட்டிய வெள்ளைத் துகில்; இலங்கு அருவி - விளங்குகின்ற அருவி.
4. கடுத்த - வேனிலால் வறண்ட.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 95 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

தோழி, தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற பருவம் தோன்றியது. தோழி அதனைத் தலைவிக்குக் காட்டி, தலைவன் இப்போதே

வந்து சேர்வான் என நம்பிக்கை ஊட்டும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது. (வற்புறுத்தல் - தலைவன் வருகையைத் தலைவியின் மனத்தில் வலியுற நிலைபெறுமாறு செய்தல்.)

மேல்நோக்கி வெங்கதிரோன் மாந்தியநீர் கீழ்நோக்கிக்
கான்ஒக்கம் கொண்டுஅழகாக் காண்,மடவாய் – மான்நோக்கி!
போதாரி வண்டெலாம் நெட்டெழுத்தின் மேற்புரியச்
சாதாரி நின்றறையும் சார்ந்து.

தெளிவுரை

"இளமையான மான் போன்ற கண்களைக் கொண்ட தலைவியே! வெம்மையைக் கொண்ட கதிரவன் வழியாக நீரை வாங்கியுண்ட மேகம் பூமியை நோக்கி மழையாகப் பெய்கிறது. அக்காரணத்தால் முல்லைக்காடுகளெல்லாம் தழைத்தோங்கி அழகியனவாய் உள்ளன. பூத்தோறும் வரிகளுடன் கூடிய வண்டுகள் நெட்டெழுத்து ஓசைமேல் மேவி, 'சாதாரி' என்னும் பண்ணினைச் சார்ந்து ஒலிக்கின்றன. அதை நீ காண்க" என்று தோழி கூறினாள்.

கருத்து

மழை பெய்து காடெல்லாம் தழைத்து வண்டுகள் சாதாரிப்பண்ணைப் பாடிக் கார்ப்பருவ வரவைத் தெரிவிக்கின்றன. அவர் வந்துவிடுவார்; வருந்தாதே.

குறிப்பு

வண்டின் இன்னோசை சாதாரிப்பண்ணினை ஒத்திருக்கும் என்னும் குறிப்புக் கிட்டுகிறது.

சொற்பொருள்

1. மேல்நோக்கி - மேல்முகமாய்; மாந்திய - வாங்கி உட்கொண்ட.
2. கான் - முல்லை நிலமாகிய காடுகளெல்லாம்; ஒக்கம் கொண்டு - தழைத்து ஓங்குதலாகிய நன்மையினைப் பெற்று; மடவாய் - மடம் வாய் - இளமைத் தன்மையினைப் பெற்றுள்ள; மான் நோக்கி - மான் போன்று மருண்டு நோக்குபவள்.
3. போதாரி - போது ஆரி - பூக்களின்மேல் பரந்து (ஆரி - அரி); புரிய - விருப்பம் கொண்டு.

4. சாதாரி - ஒரு பண்; நின்று - நிலைபெற்று; அறையும் - ஒலிக்கும்; (சாதாரி) சார்ந்து - சார்பாக.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 100 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், கார் காலம் தொடங்கியும் வரவில்லை. தான் சொன்னவாறு அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி தோழியிடம் உரைத்தது.

பண்(டு)இயையச் சொல்லிய சொல்பழுதால் மாக்கடல்
கண்(டு)இயைய மாந்திக்கால் வீழ்த்(து) இருண்டு – எண்திசையும்
கார்தோன்றக் காதலர் தேர்தோன்றாது ஆகவே
பீர்தோன்றி நீர்தோன்றும் கண்.

தெளிவுரை

“தோழியே! முகிற்கூட்டம் கடலிற்படிந்து, மிகுதியான நீரைக் குடித்து, இருண்டு, எட்டுத் திசைகளிலும் மழை பெய்ய இறங்கித் தோன்றியும் தலைவரின் தேர் தோன்றவில்லை. எனவே, தலைவர் நம்மைப் பிரிந்து சென்ற காலத்து நம்மை இணங்க வைப்பதற்காக, ‘கார் காலத்தில் திரும்பி வருவேன்’ என்று குறிப்பிட்டுச் சொல்லிய உறுதிமொழியினின்றும் தவறி விட்டார். அதனால், என் கண்கள், என் மனத்திலுள்ள அச்சம் தோன்றும்படியாய் அழத் தொடங்கி விட்டன” எனத் தலைவி கூறினாள்.

கருத்து

கார் தோன்றியும் காதலர் தேர் தோன்றவில்லை; என் கண்களில் நீர் நிற்க வில்லை.

சொற்பொருள்

1. பண்டு - தலைவர் நம்மைப் பிரிந்த முற்காலத்தில்; இயைய - நாம் இணங்க வேண்டியதற்காக; சொல் பழுது - உறுதிமொழியினின்றும் தவறிவிட்டார்; மா - பெரிய.
2. கண்டு - கடல்நீரைக் கண்டு; இயைய - தன்னிடம் பொருந்தும்படி; மாந்தி - குடித்து; கால் வீழ்த்து - மழை பெய்ய இறங்கி.
3. கார் - கார் காலம்; தோன்றாது ஆகவே - தோன்றவில்லையாதலால்.
4. பீர் - அச்சம்; நீர் - கண்ணீர்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 102 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், கார் காலம் தொடங்கியும் வரவில்லை. தான் சொன்னவாறு அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் உரைத்தது.

மான்எங்கும் தம்பிணையோ(டு) ஆட, மறிஉகள,
வான்எங்கும் வாய்த்து வளம்கொடுப்ப, – கான்எங்கும்
தேன்இறுத்த வண்டோடு, தீதா, எனத்தேரா(து)
யான்இறுத்தேன் ஆவி இதற்கு.

தெளிவுரை

முல்லை நிலங்களில் எல்லா இடங்களிலும் ஆண்மான்கள் பெண்மான்களுடன் சேர்ந்து விளையாடுகின்றன; அவற்றின் குட்டிகளும் அவற்றுடன் கூடிக் குதிக்கின்றன; வான்வெளி யெங்கும் மேகங்கள் நிறைந்து மழையாய்ப் பெய்து வளத்தினைப் பெருக்குகின்றன; காடெங்கும் வண்டுகள் தம்முடன் சேர்ந்து

தங்கிய இணை வண்டுகளுடன் 'தீ, தா' என்று ஒலிக்கின்றன. இங்ஙனம் கார் காலம் தொடங்கியும் தலைவர் வரவில்லையே என மயக்கம் கொண்டு இப்பருவத்துக்குக் கப்பமாய் என் உயிரையே கொடுத்து வருந்துகின்றேன். (என் உயிர் சோரும்.)

கருத்து

கார் கால இன்பம் என்னை மயக்குவிக்கிறது; தலைவன் வந்து சேராததால் என் உயிர் சோர்கிறது.

சொற்பொருள்

1. மான் - ஆண்மான்; எங்கும் - எல்லா இடங்களிலும், பிணை - பெண் மான்; மறி - குட்டி; உகள - குதிக்க.
2. வான் எங்கும் - விண்வெளியெல்லாம்; வாய்த்து - மேகங்கள் நிரம்பி மழை பெய்து; கான் - காடு.
3. தேன் - தேன் வண்டுகள்; இறுத்த - தம்மோடு கூடித் தங்கிய; தீ தா - தீ, தா என்னும் ஒலிக்குறிப்புடன் ஒலித்தலால்; யான் தேறாது - நான் தெளியாதவளாய்.
4. ஆவி - என் உயிரை; இறுத்தேன் - கப்பமாய்க் கொடுத்து வருந்து கின்றேன்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 107 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்திக்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியது கண்டு, தலைவர் வரவில்லையே என வருந்தும் தலைவியிடம் தோழி சொல்லியது.

கருவுற்ற காயாக் கணமயில்என் றஞ்சி
உருமுற்ற பூங்கோடல் ஒடி – உருமுற்ற
ஐந்தலை நாகம் புரையும் மணிக்கார்தான்
எந்தலையே வந்த(து) இனி.

தெளிவுரை

"ஐந்துதலை நாகம் ஒன்று, பூத்துள்ள காயாம்பூத்திரட்சியைக் கண்டு தனக்குப் பகையான ஆண்மயில் தோகை விரித்தாடுகிறது என்று அஞ்சியது. அஞ்சிப் பின்வாங்கிய, அப்பாம்பு அருகே பூத்திருக்கும் வெண்காந்தள் பூக்கூட்டத்தோடு தன்னை மறைத்துக் கொண்டது. இத்தகைய கார்ப்பருவம் நம்மைத் தாக்குவதையே குறிக்கோளாய்க்கொண்டு வந்துள்ளது" எனத் தோழி தலைவியைப் பார்த்துக் கூறினாள்.

கருத்து

கார் காலம் நம்மை வருத்துவதையே கருத்தாய்க் கொண்டுள்ளதோ?

விளக்கம்

காயாம்பூ கொத்துக்கொத்தாய்ப் பூக்கும்; அரும்பு விரிந்தால் மயிற்கழுத்து போன்று பளபளக்கும்; நீல நிறம் கொண்டதா யிருக்கும். ஆகவே, அப்பூவைக் கண்ட ஐந்துதலை நாகம் அது தனக்குப் பகையான ஆண்மயில் என்று அஞ்சி ஓடியது. வெண்காந்தள் (கோடல்) மலர் சினம் கொண்ட பாம்பு தன் படத்தை விரித்திருப்பதுபோலத் தோன்றும். அதனாற்றான் மயிலைக் கண்டஞ்சிய நாகம், தன்னை ஒத்திருக்கும் வெண் காந்தளோடு சென்று சேர்ந்தது.

சொற்பொருள்

1. கருஉற்ற - கருக்கொண்டு பூத்துள்ள; காயா - காயாம்பூ; கண - தொகுதியான (தோகையைக் கொண்ட); மயில் - ஆண்மயில்.
2. உரும் உற்ற - (இருந்த இடத்தை விட்டுப்) பின்வாங்குதலுற்ற; பூங்கோடல் ஓடி - வெண்காந்தள் பூக்களுக்கு அருகே ஓடிச் சென்று; உரும் உற்ற - இடியாலே தாக்குண்ட.
3. ஐந்தலை - ஐந்துதலை; மணிக்கார் - அழகிய கார்ப்பருவம்.
4. எந்தலையே - என்னையே குறிக்கோளாய்க் கொண்டு; இனி - இப்பொழுது.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 112 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

பருவம் காட்டித் தோழி தலைமகளை வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் வருவதாய்க் கூறிச் சென்ற பருவம் தொடங்கியது. தோழி அதனைத் தலைவிக்குக் காட்டி, தலைவன் விரைவில் வந்து சேர்வான் என நம்பிக்கை ஊட்டும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது.

தேரோன் மலைமறையத், தீங்குழல் வெய்தாக,
வாரான் விடுவானோ? வாள்கண்ணாய்! – கார்ஆர்
குருந்தொடு முல்லை குலைத்தனகாண்; நாமும்
விருந்தொடு நிற்றல், விதி.

தெளிவுரை

தோழி, தலைவியை நோக்கி, "வாள் போன்ற கண்களைக் கொண்டவளே! ஒற்றைச் சக்கரத்தைக் கொண்ட சூரியன், மேற்கு மலையில் மறைந்தான். மாலைக்காலம் தொடங்கியது. ஆயர் ஊதும் புல்லாங்குழல் இசை கொடியதாய் உள்ளது; மழை பெய்தமையால் குருந்த மரங்களும் முல்லைச்செடிகளும் பூத்துக் குலுங்குகின்றன. தலைவன் குறிப்பிட்டுச் சென்ற பருவம் இது என்பதை உணர்க! இக்காலத்தில் நம் தலைவன் வாராமல் நம்மைக் கைவிட மாட்டான். ஆதலால், நாமும் அவன் வரவை எதிர்நோக்கி, விருந்து முதலியன செய்து காத்திருத்தல் நம் கடமையாகும்" என்று சொன்னாள்.

கருத்து

தலைவன் குறிப்பிட்ட கார்ப்பருவம் தோன்றிவிட்டது. அவன் வாராது நம்மைக் கைவிட மாட்டான்; கவலை நீங்கு.

சொற்பொருள்

1. தேரோன் - ஒற்றைச் சக்கரத் தேரினைக் கொண்ட சூரியன்; மலை - மேற்கு மலை; தீம் குழல் - இனிய புல்லாங்குழல்; வெய்தாக - கொடியதாய்.
2. வாரான் விடுவானோ? - வாராது இருந்துவிடுவானோ?; வாள் கண்ணாய் - வாள் போன்ற கண்களைக் கொண்டவளே; கார்ஆர் - மழை பெய்தலாலே.
3. குருந்து - குருந்த மரம்; குலைத்தன - பூத்துக் குலுங்கின.
4. விதி - கடமை.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 116 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி, தான் ஆற்றாளாய்ச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி, கார்ப்பருவம் தொடங்கியும் அப்பருவ காலத்தில் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற தலைவன் வரவில்லையே எனக் கவலை கொண்டாள். அவளை ஆற்றுவிக்கக் கருதிய தோழி வருந்திக் கூறியது.

குருந்தே! கொடிமுல்லாய்! கொன்றாய்! தளவே!
முருந்தேய் எயிறொடுதார் பூப்பித்(து) – இருந்தே,
அரும்(பு)ஈர் முலையாள் அணிகுழல்தாழ் வேய்த்தோள்
பெரும்பீர் பசப்பித்தீர், போர்ந்து.

தெளிவுரை

"குருந்த மரமே! கொடிமுல்லையே! கொன்றை மரமே! செம்முல்லைச்செடியே! மயிற்பீலியின் அடிப்பாகத்தைப் போன்ற பற்களுடனே பூமாலை அணிந்து, கோங்கு அரும்பின் அழகைக் கொண்ட கொங்கைகளைக் கொண்டவள், என் தலைவி. அழகிய கூந்தல் நீண்டு தாழ்ந்து புரள்கின்ற, மூங்கில் போன்ற அவள் தோள்களில் பெரிய பீர்க்கம் பூவின் நிறம்

போன்று மீளவும் பசலை பூக்கச் செய்தீரே! இஃது என்ன கொடுமை!" என்று தோழி வருந்தினாள்.

கருத்து

தலைவன் வாராமையால் தலைவியின் தோள்கள் மெலிந்து பசலை நிறம் கொண்டன.

சொற்பொருள்

1. குருந்தே - குருந்த மரமே!; கொடிமுல்லாய் - முல்லைக்கொடியே!; கொன்றாய் - கொன்றை மரமே!; தளவே! - செம்முல்லைக்கொடியே!
2. முருந்து - மயிற்பீலியின் அடிப்பாகம்; ஏய் - போன்ற; எயிறு - பல்; தார் - பூமாலை; பூப்பித்து இருந்து - விளக்கக் கொண்டிருந்த.
3. அரும்பு - கோங்கு அரும்பின் (தன்மையை); ஈர் - சிதைக்கின்ற; அணி குழல் - அழகிய கூந்தல்; தாழ் - தாழ்ந்து (புரள்கின்ற); வேய்த்தோள் - மூங்கில் போன்ற தோள்.
4. பெரும் - பெரிய; பீர் - பீர்க்கம் பூ (நிறம் போன்று); பசப்பித்தீர் - பசப்படையச் செய்தீர்; பேர்ந்து - மீளவும்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 117 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற பருவம் தோன்றியது; ஆனால், தலைவன் வரவில்லை. அதனால் வருந்தும் தலைவியிடம் தலைவன் விரைவில் வருவான் என நம்பிக்கை ஊட்டும் வகையில் தோழி வற்புறுத்திச் சொல்லியது.

கதநாகம் புற்றடையக் கார்ஏறு சீற
மதநாகம் மாறு முழங்கப் – புதல்நாகம்
பொன்பயந்த வெள்ளி புறம்ஆகப் பூங்கோதாய்!
என்பசந்த மென்தோள் இனி.

தெளிவுரை

"மலர் சூடிய கூந்தலைக் கொண்ட தலைவியே! சினம் மிக்க பாம்புகள் புற்றினைப் பாதுகாப்பிடமாய்க்கொண்டு சேரும்படி மேகம் இடியுடன் சினந்து முழங்குகிறது. அவ்விடிக்கு மாறாய் மதயானை ஒலித்து ஆரவாரிக்கிறது. புதர்களால் சூழப்பெற்ற சுரபுன்னை மரங்கள் வெள்ளியைப் போன்ற இதழ்கள் சூழ்ந்திருக்கப் பொன் போன்ற குறிப்பிட்ட பூந்துகள்களைக் கொண்டனவாய்ப் பூத்துள்ளன. (காதலன் குறிப்பிட்ட கார்ப் பருவம் தோன்றியது; காதலனும் வருவான்; அங்ஙனம் இருக்க) என்ன காரணத்தால் உன் மென்தோள்கள் பசலையைக் கொண்டுள்ளன" என்று கூறித் தோழி தலைவியை ஆற்றினாள்.

கருத்து

தலைவியே! கார் கால அறிகுறிகள் தோன்றிவிட்டன. தலைவன் வருவான்; இன்னும் கவலையோடு இருப்பதேன்?

குறிப்பு

வெண்மையான புறவிதழ்களுக்கு நடுவே மஞ்சள் நிறமுள்ள பூந்தாது இருப்பதை, 'வெள்ளி பெற்றெடுத்த தங்கம்' எனக் குறிப்பிட்டிருப்பது நயமிகுந்த தொடர்.

சொற்பொருள்

1. கத நாகம் - சினம் மிக்க நாகப்பாம்பு; கார் - மேகம்; ஏறு - இடி; சீற - முழங்க.
2. மத நாகம் - மதத்தினைக் கொண்ட யானை; மாறு - இடிக்கு மாறாய்; புதல் நாகம் - புதர்களால் சூழப்பெற்ற சுரபுன்னை மரம்.
3. பொன் பயந்த - பொன்னைப் பெற்றெடுத்த (பொன் போன்ற பூந்துகள் கொண்டு); வெள்ளி புறமாக - வெண்மையான புற இதழ்களைக் கொண்டு; பூங்கோதாய் - மலர் சூடிய கூந்தலைக் கொண்டவளே!
4. என் பசந்த - ஏன் பசப்புற்றன?; இனி - இப்பொழுது.

தோழி கூற்று

அகநானூறு 4 **குறுங்குடி மருதனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகளைப் பருவங் காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன், 'தான் கார்ப்பருவத் தொடக்கத்தே மீண்டு வருவதாய்க் கூறிச் சென்றான். தலைவி அவனது பிரிவாற்றாது மிகவும் வருந்தினாள். அது கண்ட தோழி, தலைவன் குறித்துச் சொன்ன கார்ப்பருவத்து வரவினை எடுத்துக் காட்டி, 'நம் தலைவன் இன்றே தோன்றுவான்; நீ வருந்தாதே' எனக் கூறித் தலைவியை ஆற்றுவித்தது.

முல்லை வைந்நுனை தோன்ற, இல்லமொடு
பைங்கால் கொன்றை மென்பிணி அவிழ,
இரும்பு திரித்தன்ன மாஇரு மருப்பின்,
பரல்அவல் அடைய, இரலை தெறிப்ப,
மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்ப,
கருவி வானம் கதழ்உறை சிதறி,
கார்செய் தன்றே, கவின்பெறு கானம்.
குரங்குஉளைப் பொலிந்த கொய்சுவல் புரவி,
நரம்புஆர்த் தன்ன வாங்குவள் பரிய
பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுஉண் பறவை பேதுறல் அஞ்சி,
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்,
உவக்காண் தோன்றும்–குறும்பொறை நாடன்,
கறங்குஇசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தள்
போதுஅவிழ் அலரின் நாறும்–
ஆய்தொடி அரிவை!நின் மாண்நலம் படர்ந்தே.

தெளிவுரை

ஆய்ந்தெடுத்த வளையலை அணிந்துள்ள தலைவியே! கூரிய முனை கொண்ட முல்லையின் அரும்புகள் தோன்றின; தேற்றா

மரத்தின் மொட்டுகளோடு பசிய அடியினைக் கொண்ட கொன்றை மரத்தின் மொட்டுகளும் மெல்லியனவாய்க் கட்ட விழ்ந்து மலர்ந்தன; இரும்பை முறுக்கிவிட்டாற்போன்ற கரிய பெரிய கொம்புகளைக் கொண்ட கலைமான்கள் பரல்கற்கள் நிரம்பிய பள்ளங்களிலெல்லாம் துள்ளிக் குதித்தன; பரந்த இடத்தைக் கொண்ட இந்நிலவுலகம் நீர் பெறாத வருத்தம் நீங்க, மின் முழக்கு முதலிய தொகுதியைக் கொண்ட மேகம் விரைவாய் மழைத்துளிகளைச் சிதறி அழகிய காட்டில் கார்ப்பருவத்தைத் தோற்றுவித்து விட்டது.

ஆரவாரிக்கும் ஓசைமிக்க விழாக்கள் நிறைந்த உறையூர்க்குக் கிழக்கே உள்ள நீண்ட பெரிய மலையில் நெருங்கிப் பூத்துள்ள மணமிக்க மலர்கள் போன்ற மாட்சிமை மிக்க உன் அழகினை இக்கார்ப்பருவத்தே நம் தலைவன் மறவாது நினைந்து பார்ப்பான்.

தலையாட்டத்தால் பொலிவு பெற்றனவும் கொய்யப்பட்ட பிடரி மயிரினைக் கொண்டனவுமான குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் குதிரைகள் விரைந்தோடி வரத் தலைவன் வந்து கொண்டிருக்கிறான். வழியில் பூத்துள்ள சோலைகளில் ஆணும் பெண்ணுமாய் இணைந்து வண்டுகள் யாழ்போல ஒலி எழுப்பித் தேனுண்டு கொண்டிருக்கின்றன. தேர் மணிகளின் ஓசையால் அவ்வண்டுகள் அஞ்சிப் பிரிந்துவிடாதவாறு மணிகளின் நாக்குகளை இழுத்துக் கட்டி ஓசையெழுப்பாதவாறு வேலைப் பாடு கொண்ட தேரினைச் செலுத்தி இவ்விடத்தே வந்து தோன்றுவான்; வருந்தாதே!

கருத்து

கார்ப்பருவம் தோன்றியுள்ளது; தலைவன் இப்போதே இவ்விடத்தே தேருடன் தோன்றுவான்; வருந்தாதே.

விளக்கம்

தலைவியே! மேகம் மழையினைப் பெய்து கானத்தைக் கார்ப் பருவமாய்ச் செய்தது. தலைவன், மாட்சிமைப்பட்ட உன் இன்பத்தை விரும்பி, கொய்துவிட்ட பிடரியினைக் கொண்ட குதிரை பூட்டப் பெற்ற தேரில் வந்து கொண்டிருக்கிறான். வரும்

வழியில், சோலைகளில் பூத்த பூக்களில் ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து தேன் உண்டு கொண்டிருக்கும் வண்டுகள் தேர் மணிகளின் ஒலியால் அஞ்சிப் பிரிந்துவிடுமோ என்று கருதி, மணிகளின் நாக்குகளை இழுத்துக் கட்டி ஓசையெழும்பாதவாறு இங்கே வந்து தோன்றுவான்; நீ வருந்தாதே.

குறிப்பு

துணையுடன் தேனுண்ணும் வண்டு பிரிந்து வருந்துவதற்குத் தலைவன் அஞ்சுவான் என்றது, அவன் தலைவியைப் பிரிந்திருக்க விரும்பாதவன் என்னும் குறிப்புடையது.

இன்பம் துய்க்கும் வண்டுகள் அச்சம் கொண்டு பிரிந்துவிடக்கூடாது என்றெண்ணும் தலைவனின் பேருள்ளம் புலப்படுத்தப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. வைந்நுனை - கூரிய நுனி; தோன்ற - அரும்புகள் தோன்ற; இல்லம் - தேற்றா மரம்.
2. மென்பிணி - (மலர்களின்) மெல்லிய பிணிப்பு (கட்டு); அவிழ - நெகிழ்ந்து விரிய.
3. திரித்தன்ன - முறுக்கிவிட்டாற்போன்ற; மாஇரு - கரிய பெரிய; மருப்பு - கொம்பு.
4. பரல்அவல் - பரல் கற்களைக் கொண்ட பள்ளங்கள்; இரலை - ஆண் மான்; தெறிப்ப - துள்ளிக் குதிக்க.
5. மலர்ந்த ஞாலம் - பரந்த உலகம்; புலம்பு - (நீரில்லாத) வருத்தம்; புறக்கொடுப்ப - விட்டொழிய.
6. கருவி வானம் - மின், இடி முதலியவற்றைக் கொண்ட மேகம்; கதழ்வு - விரைவு; உறை - மழைத்துளி.
7. கார் - கார்ப்பருவம்.
8. குரங்கு - வளைந்த; உளை - தலையாட்டம்; பொலிவு - அழகு; கொய் - கத்தரித்துக் கொய்யப்பெற்ற; சுவல் - பிடரி மயிர்; புரவி - குதிரை.
9. நரம்பு - யாழின் நரம்பு; ஆர்த்தன்ன - ஒலித்தாற்போன்று; வாங்கு - இழுக்கும்; வள் - கடிவாளம்; பரிய - நெகிழ.
10. பொங்கர் - சோலை; துணையொடு - பெடையொடு; வதிந்த - தங்கிய.

11. தாதுஉண் - பூந்தாதுகளை உண்ணும்; பறவை - வண்டு; பேதுறல் - மயங்குதல்.
12. மணிநா - மணிகளின் நாக்கு; ஆர்த்த - ஒலித்திடாமல் கட்டிய; தேரன் - தேரினைக் கொண்ட தலைவன்.
13. உவக்காண் - இவ்விடத்தே, இங்கே; குறும் பொறை நாடன் - சிறிய மலைகளைக் கொண்ட நாட்டிற்குத் தலைவன்.
14. கறங்குஇசை - ஆரவாரிக்கும் ஒலி; விழவின் - விழாக்களைக் கொண்ட; உறந்தை - உறையூர், சோழர் தலைநகர்; குணாது - கிழக்கே.
15. நெடும்பெரும் குன்று - நெடிய பெரிய குன்று (திருச்சிராப்பள்ளி); அமன்ற - நெருங்கிய; காந்தள் - காந்தள் செடி.
16. போது - மலரும் பருவத்து அரும்பு; அவிழ் - விரிந்த; அலர் - மலர்.
17. ஆய்தொடி - ஆராய்ந்தெடுக்கப்பட்ட வளையல்; மாண்நலம் - சிறந்த அழகு; படர்ந்து - நினைந்து.

தோழி கூற்று

அகநானூறு 73 | **எருமை வெளியனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பொருள்வயிற் பிரிகின்றான்; குறித்த பருவ வரவு கண்டு அழிந்த தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் காரணமாய்ப் பிரிந்த தலைவன், தான் மீண்டு வருவதாய்க் குறித்துச் சொன்ன கார் காலம் தொடங்கியும், தலைவன் வாராமை கண்டு தலைவி வருந்தியபோது அவளிடம் தோழி சொல்லியது.

பின்னொடு முடித்த மண்ணா முச்சி
நெய்கனி வீழ்குழல் அகப்படத் தைஇ,
வெருகுஇருள் நோக்கி யன்ன கதிர்விடுபு
ஒருகாழ் முத்தம் இடைமுலை விளங்க,
அணங்குறு கற்பொடு மடம்கொளச் சாஅய்,
நின்நோய்த் தலையையும் அல்லை, தெறுவர

என்ஆ குவள்கொல்? அளியள் தான்,என,
என்அழிபு இரங்கும் நின்னொடு யானும்
ஆறுஅன்று என்னா வேறுஅல் காட்சி
இருவேம் நம்படர் தீர வருவது
காணிய வம்மோ– காதல்அம் தோழி!
கொடிபிணங்கு அரில இருள்கொள் நாகம்
மடிபதம் பார்க்கும், வயமான் துப்பின்,
ஏனல்அம் சிறுதினைச் சேணோன் கையதைப்
பிடிக்கை அமைந்த கனல்வாய்க் கொள்ளி
விடுபொறிச் சுடரின் மின்னி,அவர்
சென்ற தேஎத்து நின்றதால் மழையே.

தெளிவுரை

தலைவியே! தலைவர் சென்றுள்ள நாட்டில் மழை பெய்துள்ளது.

கொடிகள் பின்னிக் கிடக்கும் சிறு காட்டில் இருண்ட கருநிறம் கொண்ட யானை சோர்கின்ற பதத்தை, சிறுதினையைக் காத்திருக்கும், சிம்மம் போன்ற வலிமை கொண்ட கானவன் பரண் மீதிருந்து பார்த்திருப்பான். உச்சியிலே தீச்சுடரைக் கொண்டுள்ள கட்டையின் அடிப்பகுதி அவன் கையில் இருக்கும். அது வீசப்படும்போது விழும் சுடர்ப்பொறிகளைப் போல, மழை மின்னலிட்டுக் காலூன்றிப் பெய்து நின்றது.

பின்புறமாய் முடிந்து போடப்பட்டிருக்கும் ஒப்பனை செய்யப்படாத கொண்டையிலே, நெய் கனிய வீழும் உன் கூந்தலை ஒருசேரக் கட்டியுள்ளாய். வெருகுப்பூனை இருளிலே நோக்கினாற்போல ஒற்றைவட முத்துமாலை முலைகளுக்கு இடையிலே ஒளிவிட்டு விளங்குகிறது. அருந்ததிபோலும் கற்பினளாய் மடப்பம் மிகுந்தவளாய், மெலிந்து, உன் அளவில் மட்டும் வருத்தம் கொள்பவளாய் அன்றி 'இரங்கத்தக்க இவள் என்னாகுவளோ?' என்று, என் வருத்தம் கண்டும் இரக்கம் கொண்டுள்ளாய். உன்னோடு வேற்றுமை இல்லாத நெறி யினைக் கொண்டவள் நான். நீ ஒன்றை நினைத்தால் அதுவே

என் வழியும் ஆகும். வேறுபாடற்ற எண்ணம் கொண்டுள்ள நம் இருவர் தம் வருத்தமும் தீருமாறு நம் தலைவர் வருதலை எதிர்சென்று காணுதற்கு எழுந்து வருக!

கருத்து

'அவர் சென்ற நாட்டிலும் மழை பெய்ததால், கார் காலம் தோன்றியதை அறிந்து, நம்மை எண்ணித் தலைவர் விரைவார்' எனக் கூறித் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

விளக்கம்

"தலைவியே! அருந்ததி போன்ற கற்பினைக் கொண்ட நீ, தலைவன் உரிய காலத்தில் வரவில்லை என்பதால் வருந்துகிறாய், அத்தோடு தோழியாகிய 'இவள் என்ன ஆவளோ' என்று என் பொருட்டும் வருந்துகிறாய். மேகம் மின்னி, கால் ஊன்றி, மழை பெய்து கார் காலம் தோன்றியதை அறிவிக்கிறது. இதைக் காணும் தலைவன் நம் வருத்தம் தீர, வர இருப்பதைக் காணலாம் வா" என்று தோழி, தலைவன் வந்துகொண்டிருப்பதாகச் சொல்லித் தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. பின் - பின்னுதல்; மண்ணா - அலங்கரிக்கப்படாத; முச்சி - கொண்டை.
2. நெய்கனி - நெய் தடவப்பெற்ற; வீழ்குழல் - தாழும் குழல்; அகப் பட - ஒருசேர; தைஇ - கட்டி.
3. வெருகு - காட்டுப்பூனை; இருள் நோக்கி அன்ன - இருளிலே பார்த்தாற் போல்; கதிர் விடு - ஒளி விட்ட.
4. ஒரு காழ் முத்தம் - ஒருவட முத்துமாலை; இடைமுலை - முலை யிடையே; விளங்க - ஒளிவிட்டு விளங்க.
5. அணங்குறு கற்பொடு - அருந்ததி போலும் கற்பினால் (அணங்கு - அருந்ததி); சாஅய் - மெலிந்து.
6. நின்நோய்த் தலையையும் அல்லை - உன் துன்பத்தை நினைப்பவளாய் மட்டுமன்றி; தெறுவர - அச்சம் வர.
7. அளியள் - இரங்கத்தக்கவள்.
8. என் அழிபு - என் வருத்தத்திற்கும்; இரங்கும் - இரங்குகின்றாய்.

9. ஆறு அன்று என்னா - ஒருவர் செல் நெறி சரியன்று என்று எண்ணாத; வேறு அல் காட்சி - வேற்றுமையற்ற அறிவு (வேறல்லா அறிவு என்றது தலைவியின் அறிவு கண்டதையே தோழியின் அறிவும் காணும் என்பதாம்.)
10. இருவேம் நம் - நம் இருவரது; படர்தீர - துன்பமும் நீங்க; வருவது - தலைவன் வந்துகொண்டிருப்பதை.
11. காணிய - காண்பதற்கு (என்னோடு நீயும்); வம்மோ - வருக.
12. பிணங்கு - பின்னிய; அரில - தூறு (சிறு காடு); இருள் கொள் - இருண்ட நிறத்தைக் கொண்ட; நாகம் - யானை.
13. மடிபதம் - சோர்ந்திருக்கும் சமயம்; வயமான் - வலிய சிங்கம்; துப்பு - வலிமை.
14. ஏனல் - தினை; சிறுதினை - (தினை வகையுள் ஒன்றான) சிறிய தினை; சேணோன் - பரண்மீது இருப்போன்; கையதை - கையிலுள்ள.
15. பிடிக்கை - (கொள்ளிக்கட்டையைப்) பிடிப்பதற்கான அடிப்பகுதி இடம்; கனல் வாய் - தீயினைக் கொண்ட (கை பற்றியுள்ள கட்டையின் மறுமுனையில் தீ பற்றியுள்ள); கொள்ளி - கொள்ளிக் கட்டை.
16. விடுபொறி - (வீசும்போது) விடும் சுடர்ப் பொறிகளைப் போல; அவர் - தலைவர்.
17. தேஎத்து - நாட்டில்; நின்றது - பெய்தது.

தோழி கூற்று

அகநானூறு 85 **காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிய, வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவத்தில் திரும்பி வருவதாய்க் கூறித் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் கார்ப்பருவம் தோன்றியும் வரவில்லை. அதனால் வருந்திய தலைவியிடம் ஆற்றியிருக்குமாறு தோழி கூறியது.

'நல்நுதல் பசப்பவும், பெருந்தோள் நெகிழவும்,
உண்ணா உயக்கமொடு உயிர்செலச் சாஅய்,
இன்னம் ஆகவும் இங்குநத் துறந்தோர்
அறவர் அல்லர் அவர்'எனப் பலபுலந்து,
ஆழல்– வாழி, தோழி!– 'சாரல்,
ஈன்றுநாள் உலந்த மெல்நடை மடப்பிடி,
கன்றுபசி களைஇய பைங்கண் யானை
முற்றா மூங்கில் முளைதருபு ஊட்டும்
வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை,
நல்நாள் பூத்த நாகுஇள வேங்கை
நறுவீ ஆடிய பொறிவரி மஞ்ஞை
நனைப்பசுங் குருந்தின் நாறுசினை இருந்து,
துணைப்பயிர்ந்து அகவும் துணைதரு தண்கார்,
வருதும், யாம்எனத் தேற்றிய
பருவம் காண்அது; பாயின்றால் மழையே.

தெளிவுரை

" 'தோழி! வாழி! எனது அழகிய நெற்றியில் பசலை படர்ந்தது; பெரிய தோள்கள் மெலிவடைந்தன; உண்ணாத காரணத்தால் வருத்தமுற்று உயிர் நீங்குமளவு மெலிந்தேன்; நாம் இத்தன்மை ஆக நம்மை விட்டுப் பிரிந்த அவர் அறவழியில் நடப்பவர் அல்லர்' என்று பலபடியாக மனம் வெறுத்து அழாதே!

"மலைச்சாரலில் கன்று ஈன்று சின்னாள் கழிந்த மெல்லிய நடையினைக் கொண்ட பெண்யானையும், அதன் கன்றும் கொண்டுள்ள பசியைப் போக்க ஆண்யானை முற்றாத இளைய மூங்கில் முளையைக் கொண்டுவந்து உண்பிக்கும்; வெற்றி பொருந்திய வேலினையுடைய திரையன் என்பவனின் நெடிய வேங்கடமலை இத்தன்மை கொண்டது. அம்மலையில் நல்ல காலைப்பொழுதில் இளைய வேங்கையின் நறிய பூக்களைக் குடைந்து, அவற்றின் துகள் படியப் பெற்ற புள்ளிகளையும் கோடுகளையும் கொண்ட ஆண்மயில், கள் ஒழுகி மணம் கமழும் குருந்த மரத்தின் கிளையிலிருந்து தன் துணையைக் கூவி அழைக்கும். தலைவன் நம்மிடம் தான் வருவதாய்த் தெளிவித்துச்

சென்ற பருவம், குளிர்ச்சி பொருந்திய கார்ப்பருவமே. அதற்கேற்ப, மழையும் பரவிப் பெய்கின்றது; அதனைப் பார்."

கருத்து

தலைவன் குறித்துச் சென்ற பருவம் தொடங்கிவிட்டது; அவனும் வந்து விடுவான்.

விளக்கம்

தலைவியே! 'தாம் சொன்னபடி நடவாமையால் தலைவர் அற நெறியினர் அல்லர்' என்று கூறி உண்ணாது உடல் மெலிவுற, 'இறந்துபடுவேன்' என்று கூறுகிறாய்! அவர் திரும்பி வருவதாய்ச் சொன்ன கார்ப்பருவம் தொடங்கி விட்டது. ஆண்மயில் வேங்கைப் பூவில் அளைந்து ஆடி, தன் துணையைக் கூவி அழைக்கும் இப்பருவம் தண்ணிய கார்ப்பருவமே! அதற்கேற்ப மழையும் பெய்கிறது, பார். 'விரைவில் அவர் வந்துவிடுவார்; ஆற்றியிரு' எனத் தோழி தலைவியிடம் உறுதிபடக் கூறுகிறாள்.

குறிப்பு

பிடிக்கும் அதன் கன்றுக்கும் பசியைப் போக்க ஆண்யானை, மூங்கில் இளமுளையைக் கொண்டுவந்து ஊட்டுவதைக் காணும் தலைவனிடம் தலைவியைப் பற்றிய எண்ணம் எழும்; உடனே திரும்புவான்; காலம் கழித்திடான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. பசத்தல் - பசலை படர்தல்.
2. உயக்கம் - வாட்டம்; சாஅய் - வாடி.
4. அறவர் - அற நெறியினர்; புலந்து - வெறுத்து.
5. ஆழல் - அழாதே!; சாரல் - மலைச்சாரல்.
6. ஈன்று - கன்றினை ஈன்று; நாள்உலந்த - சில நாள்களே ஆன, நாள் கடந்த; மடம் - இளமை.
7. களைஇய - நீக்க, போக்க.
8. முற்றா - இளம்; தருபு - கொண்டு வந்து; ஊட்டும் - உண்பிக்கும்.
9. வென்வேல் - வெற்றி வேல்; திரையன் - அரசருள் ஒருவன்; வேங்கடம் - வேங்கடமலை; நெடுவரை - நீண்ட மலை.
10. நல்நாள் - நல்ல காலைப்பொழுது; நாகு - மிக; வேங்கை - வேங்கை மரம்.

11. வீ - மலர்; ஆடிய - அளைந்த, குடைந்த; பொறிவரி - பொறிகளையும் கோடுகளையும் கொண்ட; மஞ்ஞை - மயில்.
12. நனை - தேன்; குருந்து - குருந்த மரம்; நாறு - மணம் கமழும்; சினை - கிளை.
13. துணை - துணையாகிய பெண்மயில்; பயிரும் - அகவி அழைக்கும்; கார் - கார்ப்பருவம்.
14. 'வருதும் யாம்' - நான் வருவேன்; தேற்றிய - தெளிவித்த.
15. பாயின்று - பரவிப் பெய்கின்றது.

தோழி கூற்று

நற்றிணை 246 **காப்பியஞ் சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததால் வேறுபட்டு மெலிந்த தலைவியை நோக்கித் தோழி, 'இனிய சகுனங்கள் தோன்றுகின்றன; அவர் வருவதாய்ச் சொன்ன பருவமும் தொடங்கி விட்டது; காதலர் இப்போதே வருவார்; வருந்தாதே' என வலியுறுத்திக் கூறித் தேற்றியது.

இடூஉ ஊங்கண் இனிய படூஉம்;
நெடுஞ்சுவர்ப் பல்லியும் பாங்கில் தேற்றும்;
மனைமா நொச்சி மீமிசை மாச்சினை,
வினைமாண் இருங்குயில் பயிற்றலும் பயிற்றும்;
உரம்புரி உள்ளமொடு சுரம்பல நீந்திச்
செய்பொருட்கு அகன்றனர் ஆயினும் பொய்யலர்,
வருவர் வாழி தோழி! புறவில்
பொன்வீக் கொன்றையொடு பிடவுத்தளை அவிழ,
இன்இசை வானம் இரங்கும்;அவர்,
வருதும் என்ற பருவமோ இதுவே.

தெளிவுரை

நமக்கு, இனிய சொல்லும் செயலும் நற்குறிகளாய் நிகழ்கின்றன. நெடிய சுவரில் உள்ள பல்லியும் நமக்கு நலமுண்டாக ஒலித்துத் தேற்றுகிறது. வீட்டு வேலியாக அமைந்துள்ள கரிய நொச்சியின் மேலே உயர்ந்து நிற்கும் மாமரத்திலிருந்து குயில்கள் கூவுகின்றன; கடுமையான காட்டுவழியில் பொருளீட்டச் சென்றுள்ள நம் தலைவர் தவறாமல் தாம் குறித்த பருவத்தில் வந்துவிடுவார். காட்டில் கொன்றை மரங்கள் பொன் போன்ற மலர்களைச் சொரிகின்றன; பிடவமும் அரும்புகளை ஈன்றுள்ளது. மின்னல் மின்னி மேகமும் முழங்குகின்றது. தலைவர் வருவதாய்க் குறித்த பருவமும் இதுவே. எனவே, இன்றே தலைவர் வருவார் என்பது உறுதி.

கருத்து

தலைவர் வருவதாய்ச் சொன்ன பருவத்தில் தவறாது வருவார்; வருந்த வேண்டா.

விளக்கம்

“தலைவி! நற்சகுனங்கள் தோன்றுகின்றன. பல்லி நற்சொல் கூறுகிறது. கார்ப்பருவமும் தொடங்கிவிட்டது; குயில்கள் கூவுகின்றன; கொன்றை மரங்கள் மலர்களைச் சொரிகின்றன; பிடவமும் அரும்பியுள்ளது. மேகம் மின்னி இடிக்கிறது. தலைவர் வருவதாய்க் கூறிய பருவம் இதுவேயாதலால் இப்போதே வருவார்; வருந்தாதே” எனத் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. இடூஉ ஊங்கண் - குறிப்பிட்ட இடங்கள் (கண் முதலியன); இனிய படூஉம் - இனிதாய்த் தோன்றுகின்றன.
2. பாங்கில் - நம் பக்கமாய்; தேற்றும் - (நலமுண்டாக ஒலித்துத்) தேற்றுகிறது.
3. மனை - வீடு; மா - பெரிய; நொச்சி - நொச்சி மரம்; மீமிசை - மேலே; மாச்சினை - பெரிய கிளை.
4. வினைமாண் - தன் செயலிலே மாண்புடைய; பயிற்றும் - கூவும்.

5. உரம்புரி உள்ளம் - தலைவனின் உறுதியான நெஞ்சம்; சுரம் - காட்டு வழி; நீந்தி - கடந்து.
6. பொய்யலர் - பொய் சொல்லாதவர்.
7. புறவு - காடு.
8. வீ - மலர்; பிடவு - பிடா மரம்; தளை அவிழ - அரும்புகள் இதழ் விரிந்து மலர்கின்றன.
9. இன்னிசை - இடியோசை; இரங்கும் - முழங்கும்; அவர் - தலைவர்.
10. வருதும் - வருவேன் (என்று கூறிச் சென்ற); பருவம் - பொழுது (கார் காலம்).

தோழி கூற்று

நற்றிணை 387 **பொதும்பில்கிழார் நக்கனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், குறித்த காலத்தில் வந்து சேராததால் தலைவி பெரிதும் வருந்தினாள். அப்போது தோழி, ‘தலைவன் சொல்லிச் சென்ற பருவம் தொடங்கிக் கொண்டிருக்கிறது; அவன் தவறாது வருவான்; நீ வருந்தாதே’ என்று தலைவியிடம் சொல்லி அவளைத் தேற்றியது.

நெறிஇருங் கதுப்பும், நீண்ட தோளும்,
அம்ம! நாளும் தொல்நலம் சிதைய,
ஒல்லாச் செந்தொடை ஒரீஇய கண்ணிக்
கல்லா மழவர் வில்லிடை விலங்கிய
துன்அருங் கவலை அருஞ்சுரம் இறந்தோர்
வருவர் வாழி தோழி! செருஇறந்து
ஆலங் கானத்து அஞ்சுவர இறுத்த
வேல்கெழு தானைச் செழியன் பாசறை
உறைகழி வாளின் மின்னி, உதுக்காண்,
நெடும்பெருங் குன்றம் முற்றி,
கடும்பெயல் பொழியும் கலிகெழு வானே.

தெளிவுரை

“தலைவியே! வாழ்க! அனைவரும் அஞ்சுமாறு போரில் வென்று ஆலங்கானம் என்னும் பாசறையில் பாண்டியன் நெடுஞ்செழியன் நிரம்பிய படையோடு வீற்றிருந்தான். அவன் வீரர்களின் உறையினின்று நீக்கிய வாளினைப் போல மேகம் மின்னி, நீண்ட பெரிய குன்றத்தைச் சேர்ந்து, ஆரவாரித்து, அதோபார்! மிகுந்த மழையைப் பொழிகின்றது. தலைவன் சென்ற வழி கொடியது. அங்கே போர் அல்லாது பிற தொழிலைக் கல்லாத மழவர்களின் அரணங்கள் குறுக்கிட்டு நிற்கும்; கவர்த்த வழிகள் பல தோன்றி, செல்வோர் உண்மை யான வழி எது என்று துணிய முடியாதவாறு மயங்கச்செய்யும். அத்தகைய மலைப் பெருவழியில் நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் குறித்த பருவத்தில் தவறாது வந்து சேர்வார். அதற்குள் ளாக, நீ வருத்தம் மிகுந்து நெறித்த உன் கரிய கூந்தலும் அகன்ற தோளும், பழைய அழகும் கெடும்படியாகச் செய்து விடாதே! பொறுத்திரு” என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

கருத்து

தலைவன் குறித்த பருவத்தில் தவறாது வந்து சேர்வான்; ஆற்றியிரு; அழுது வருந்தாதே.

விளக்கம்

தோழி தலைவியிடம், ‘அதோ பார், நெடிய பெரிய குன்றத்தைச் சூழ்ந்து மழைமுகில்கள் பெருமழையைப் பொழிகின்றன. கார் காலம் தோன்றத் தொடங்கிவிட்டது. ஆதலால், அச்சம் தரும் வழிகளைக் கடந்து சென்றுள்ள தலைவன் தவறாது வந்து சேர்வான். உன் அழகு கெடும்படியாக அழுது வருந்தாதே’ என்று கூறித் தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு செய்கிறாள்.

சொற்பொருள்

1. நெறி இருங்கதுப்பு - நெளிந்த கரிய கூந்தல்.
2. தொல் நலம் - பழைய அழகு; சிதைய - அழிய.
3. ஒல்லா - கை கூடாத; செந்தொடை - செம்மையான அம்பு; ஒரீஇய - செலுத்தும் குறி விலகிய; கண்ணி - தலைமாலை.

4. மழவர் - வீரர்; வில்லிடை - வில்லை அரணாக நிறுத்திய பாசறை; விலங்கிய - குறுக்கிட்ட.
5. துன்அரும் - கடத்தற்கரிய; கவலை - கிளைத்த வழி; இறந்தோர் - கடந்து சென்ற தலைவர்.
6. செரு இறந்து - போரிலே வெற்றி கண்டு.
7. ஆலங்கானம் - தலையாலங்கானம் என்னும் போர்க்களம்; இறுத்த - பொருத.
8. கெழு - பொருந்திய; தானை - படை; செழியன் - தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்னும் மன்னன்.
9. உறைகழி - உறையிலிருந்து நீக்கிய; உதுக்காண் - அதோ பார்.
10. முற்றி - சூழ்ந்து.
11. கடும் பெயல் - பெருமழை; கலிகெழு - முழக்கத்தினைக் கொண்ட; வான் - மழைமுகில்.

தோழி கூற்று

குறுந்தொகை 358 — **கொற்றனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகன் பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றமையால் வருந்திய தலைவியிடம், ‘அவன் குறித்துச் சென்ற கார்ப்பருவம் தோன்றியதைக் காட்டி, அவனும் வந்து விடுவான்’ எனத் தோழி கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்தியது.

வீங்குஇழை நெகிழ, விம்மி, ஈங்கே
எறிகண் பேதுறல்; ‘ஆய்கோடு இட்டுச்
சுவர்வாய் பற்றும்நின் படர்சேண் நீங்க
வருவேம்’ என்ற பருவம் உதுக்காண்:
தனியோர் இரங்கும் பனிகூர் மாலைப்
பல்ஆன் கோவலர் கண்ணிச்
சொல்லுவ அன்ன, முல்லைவெண் முகையே.

தெளிவுரை

“தலைவி! இறுக்கமாய் அமைந்த அணிகளெல்லாம் தளரும் படியாக வாய் விட்டு அழுது, நீர்த்துளிகள் வெளிவரும் கண்ணுடன் இங்கே நின்று மயங்காதே! கணவர் சென்ற நாள்களை எண்ணிக் கணக்கிடச் சுவரில் கோடு கிழித்து, அவ்விடத்திலேயே நின்று நீ துன்பமுற்றிருக்கிறாய்! ‘வந்து விடுவேன்’ என்று உன் காதலர் கூறிச் சென்ற பருவம் உன் துன்பம் விரைந்து விலகும்படியாக, அதோ தோன்றிவிட்டது பார்! தனித்திருக்கும் காதலர் வருந்தக்கூடிய, மிகுந்த குளிரினைக் கொண்ட இம்மாலைக் காலத்திலே பசுக்களை உடைய இடையர்கள் பலரும் அணிந்திருக்கின்ற பூமாலையில் உள்ள முல்லையின் மெல்லிய மொட்டுகள், (கார்ப்பருவம் தோன்றி விட்டது எனும்) இச்செய்தியைச் சொல்லுவன போலக் காணப்படுகின்றன.”

கருத்து

முல்லை மலர்ந்திருப்பதைப் பார்; கார் காலம் தொடங்கிவிட்டது; அவர் வந்து விடுவார்; வருந்தாதே!

விளக்கம்

“இதோ பார்! கார் காலம் தொடங்கி விட்டது. அதற்கு அறிகுறியாய் முல்லைப்பூக்கள் பூத்துப் பொலிகின்றன. காதலர் வருவதாய்க் குறித்த காலம் இதுவே! ஆதலால், அவர் வந்துவிடுவார்; வருந்தாதே!” எனத் தோழி தலைவியிடம் ஆறுதல் கூறுகிறாள்.

குறிப்பு

தலைவனைப் பிரிந்திருக்கும் காலத்தில் பெண்கள் சுவரில் ஒரு நாளைக்கு ஒரு கோடு இட்டு, அவன் சென்று எத்தனை நாள் ஆயின எனக் கணக்கிடுவது வழக்கம்.

சொற்பொருள்

1. வீங்கு - இறுகிய, செறிந்த; இழை - அணிகலன்; விம்மி - அழுது; ஈங்கே - இங்கே.

2. எறிகண் - நீர்த்துளிகளைச் சிந்தும் கண்; பேதுறல் - மயங்காதே; ஆய்கோடு - நாள்களை எண்ணிக் கணக்கிட்டு அறிய இடப்படும் கோடு.
3. பற்றும் - பிடித்து நிற்கும்; படர் - துன்பம்; சேண் நீங்க - முற்றும் நீங்கும்படி.
4. உதுக்காண் - இதோ பார்.
5. தனியோர் - காதலரைப் பிரிந்து தனித்திருப்போர்; பனிகூர் - மிகுந்த குளிரினைக் கொண்ட.
6. ஆன் - பசு: கோவலர் - இடையர்; கண்ணி - பூமாலை.
7. சொல்லுவ அன்ன - சொல்லுவனபோல இருக்கின்றன; முகை - மொட்டு.

தோழி கூற்று

குறுந்தொகை 287 **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை வேறுபட்ட கிழத்தி, நம்மைத் துறந்து வாராரென்று கவன்றாட்குப் பருவங் காட்டித் தோழி, ‘வருவர்’ எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவிடத்துத் தலைவி, ‘அவர் நம்மைக் கைவிட்டு மறந்தார்’ எனக் கூறிப் பெரிதும் தளர்ச்சி கொண்டுள்ளாள். அவளுக்குக் கார்ப்பருவம் தோன்றியதைக் காட்டி, ‘தலைவர் சொன்ன சொல் பிழையாமல் வருவார்’ எனக் கூறித் தோழி தேற்றியது.

அம்ம வாழி தோழி! காதலர்
இன்னே கண்டும், துறக்குவர் கொல்லோ?
முந்நால் திங்கள் நிறைபொறுத்து அசைஇ,
ஒதுங்கல் செல்லாப் பசும்புளி வேட்கைக்
கடுஞ்சூல் மகளிர் போல நீர்கொண்டு,
விசும்புஇவர் கல்லாது தாங்குபு புணரிச்
செழும்பல் குன்றம் நோக்கிப்
பெருங்கலி வானம் ஏர்தரும் பொழுதே.

தெளிவுரை

"தலைவி! வாழ்க! நான் சொல்வதைக் கேள். பன்னிரண்டு மாதம் கருவினைத் தாங்கி, தளர்ந்து சோர்வுற்று, நடக்கவும் இயலாது, பச்சைப்புளியங்காயைத் தின்பதற்கு விருப்பமுள்ள வராய்த் தலைச் சூலினைக் கொண்ட மகளிரைப் போல, நீர் உண்ட மேகங்கள் காணப்படுகின்றன. அவை கடல்நீரை முகந்து கொண்டு, வானத்தின் மேலே ஏற இயலாமல், அந்நீர்ச்சுமையைத் தாங்கிக்கொண்டு, ஒன்றோடொன்று சேர்ந்து, செழித்த பல குன்றுகளை நோக்கி, இடி முதலிய பெரிய ஆரவாரத்துடன் எழுந்து செல்லுகின்றன. இத்தகைய கார்ப்பருவத்தைப் பார்த்த பின்பும், தலைவர் உன்னைக் கைவிட்டுவிடுவாரா?"

கருத்து

தலைவர் உன்னைக் கைவிட மாட்டார்; மேக ஆரவாரத்துடன் கார் காலம் தொடங்கிவிட்டது. அவர் வந்துவிடுவார்.

விளக்கம்

மேகங்கள் கடல்நீரை முகந்தன. கருவுள்ள மகளிரைப் போலத் தண்ணீர்ச்சுமையைத் தாங்கிக்கொண்டு மெதுவாய் அசைந்து அசைந்து செல்கின்றன. வானத்தில் உயரே செல்ல இயலாமல் கருமேகக் கூட்டங்கள் ஒன்றாய்க் கூடி இடிஇடித்துச் செழித்த மலையுச்சிகளைச் சென்று சேர்கின்றன. இது கார் காலக் காட்சி.

குறிப்பு

பெண்கள் பத்துத் திங்களே கருக்கொண்டிருப்பர்; பத்தாம் திங்கள் கருவுயிர்ப்பர். இஃது இயல்பு. பெண்கள் பன்னிரண்டு திங்கள் கருக் கொண் டிருப்பது உண்டு என்பதை இச்செய்யுள் உரைக்கிறது. (வழக்கத்திற்கு மாறான, 'மிகுசுமை' என்பதைக் காட்டுவதற்காக, பத்து என்பதைப் பன்னிரண்டு என்றும் கூறியிருக்கலாம்.)

கருக்கொண்ட மகளிர் மாங்காய், புளி போன்ற புளிப்புப் பண்டங்களைத் தின்ன ஆசைப்படுவர். இஃது இயல்பு.

சொற்பொருள்

1. அம்ம - நான் சொல்வதைக் கேள்.

2. இன்னே கண்டும் - இப்பொழுது பார்த்தும்; துறக்குவர் கொல்லோ - கைவிட்டுவிடுவாரா?
3. முந்நால் திங்கள் - பன்னிரண்டு மாதம்; நிறை - (கருச்) சுமை; அசைஇ - தளர்ந்து சோர்வுற்று.
4. ஒதுங்கல் செல்லா - நடக்க இயலாது; பசும்புளி - பச்சைப் புளியங்காய்; வேட்கை - விருப்பம்.
5. கடும் - முதிர்வுற்ற, நிறைந்த; சூல் - கர்ப்பம்.
6. விசும்பு - வானம்; இவர்கல்லாது - ஏற இயலாது; தாங்குபு புணரி - நீரைத் தாங்கிக்கொண்டு.
8. பெரும்கலி - பெரும் முழக்கம்; ஏர்தரும் பொழுது - எழுந்து செல்லும் கார் காலம்.

தோழி கூற்று

குறுந்தொகை 282 **நாகம் போத்தன்**

திணை : பாலை

கூற்று

வினைவயிற்பிரிந்தவிடத்துத் தோழி கிழத்திக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் மீண்டு வருவதாய்க் குறித்துச் சென்ற கார்ப்பருவம் தொடங்கியதைக் கண்டதும் தலைவியின் காமநோய் மிகுதியாயிற்று. அதனைக் கண்ட தோழி, தலைவியைத் தேற்றுதற்குக் கூறியது.

செவ்விகொள் வரகின் செஞ்சுவல் கலித்த
கவ்வை நாற்றின் கார்இருள் ஓர்இலை
நவ்வி நாள்மறி கவ்விக் கடன்கழிக்கும்
கார்எதிர் தண்புனம் காணின், கைவளை,
நீர்திகழ் சிலம்பின் ஓராங்கு அவிழ்ந்த
வெண்கூ தாளத்து அம்தூம்பு புதுமலர்
ஆர்கழல் புகுவ போலச்
சோர்குவ அல்ல என்பர்கொல் நமரே?

தெளிவுரை

"செம்மண் மேட்டுநிலத்தில் பருவம் வாய்ந்த வரகுப்பயிர் தழைத்திருக்கும். அவ்வரகுப்பயிர் ஒன்றோடொன்று மோதி ஒலி எழுப்பிக்கொண்டிருக்கும். அப்பயிரின் கருநிறங்கொண்ட ஓர் இலையை மான்குட்டி கௌவித் தின்று தன் அன்றைய பசியைப் போக்கிக்கொள்ளும். அவ்வாறான கூதிர்க் காலத்தை எதிர் கொண்டமையால் குளிர்ச்சி பெற்றிருக்கும் புனத்தைத் தலைவர் காண்பார். அதைக் கண்டால், நீர்வளம் மிக்க மலைச்சாரலில் ஒரே மாதிரி மலர்ந்திருக்கும் வெண் கூதாளத்தின் அழகிய உள்துளையினைக் கொண்ட புதுமலர்கள் காம்பினின்று கழன்று உதிர்தலைப்போல, உன் கைவளைகள் சோர்ந்து கழன்று வீழா என்றா எண்ணுவார்? (கார் காலத்தில் உன் கைவளை கழன்று விழும் என்பதை உணர்ந்து அவர் உடனே திரும்புவார்" என்று சொல்லித் தலைவியினைத் தோழி தேற்றுகிறாள்.

கருத்து

வரகுப் பயிரை மான்குட்டி கவ்வித் தின்னக் கார் தோன்றிவிட்டது. கார்ப்பருவம் தொடங்கியதை அறிந்து 'நான் வந்துவிடுவேன்' என்று சொன்ன தலைவர் உடனே வந்து உன்னைக் காண்பார்.

விளக்கம்

'கார்ப்பருவம் தொடங்கியதால் நம் தலைவர் குளிர்ச்சி மிகுந்த புனத்தில் மான்குட்டி வரகுப்பயிரின் ஓர் இலையைக் கடித்துண்டு பசியைப் போக்கிக்கொள்வதைக் காண்பார். அங்கு எல்லா இடத்திலும் வெண் கூதாள மலர் ஒரே மாதிரி மலர்ந்து, காம்பினின்று நீங்கி விழுந்துகொண்டிருப்பதையும் காண்பார். அங்ஙனம் பார்க்கும் பொழுது, தம் பிரிவாலே உன் கை வளைகள் இவ்வாறே சோர்ந்து கழன்று வீழும் என்று எண்ணி விரைந்து மீள்வார்' என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

சொற்பொருள்

1. செவ்வி - பருவம்; வரகு - வரகுப்பயிர்; செஞ்சுவல் - செம்மண் மேட்டு நிலம்; கலித்த - தழைத்த.

2. கவ்வை நாற்றின் - ஒலிக்கின்ற பயிரின்.
3. நவ்வி - மான்; மறி - குட்டி; கவ்வி - கடித்து; நாள்கடன் கழிக்கும் - அந்த ஒரு நாளின் பசியைப் போக்கிக்கொள்ளும்.
4. கார் எதிர் - கார்ப்பருவத்தை ஏற்றுக்கொண்ட; தண்புனம் - குளிர்ந்த நிலம்.
5. சிலம்பு - மலை; ஓராங்கு அவிழ்ந்த - ஒரே மாதிரியாய்ப் பூத்த.
6. வெண்கூதாளம் - வெண்மையான கூதாள மலர்; அம்தூம்பு - அழகிய உள்துளையுள்ள.
7. ஆர் - காம்பு; கழல்பு உகுவ - கழன்று விழுவதைப் போல.
8. சோர்குவ அல்ல - (உன் வளைகள்) கழன்று வீழ்வன அல்ல; என்பர் கொல் - என்றா கருதுவார்?

தோழி கூற்று

கார் நாற்பது 1 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தோன்றியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி, வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்கூன்றித் தீம்பெயல் தாழ
வருதும் எனமொழிந்தார் வாரார்கொல் வானம்
கருஇருந்(து) ஆலிக்கும் போழ்து.

தெளிவுரை

தோழி தலைவியை நோக்கி, "கரையை மோதும் கடல் நிறத்தைக் கொண்ட திருமால் மார்பில் அணியும் மாலை போன்று, இந்திர வில்லைக் குறுக்காக நிறுத்தி வானம் இனிய

மழையினைப் பெய்கிறது. கார் காலத்தில் திரும்பி வருவேன் என்று கூறிச் சென்ற தலைவர் மேகம் கருக்கொண்டு நீர்த் துளிகளைப் பெய்யும்போது வாராமல் இருப்பாரா? வருவார்" எனக் கூறினாள்.

கருத்து

இந்திரவில் குறுக்காய் நிற்க இனிய மழை பெய்கிறது; கார் காலம் தொடங்கிவிட்டது; காதலர் வருவார்; கலங்காதே.

விளக்கம்

கரிய நிற மேகத்திற்குக் குறுக்கே வானவில்லிட்டிருப்பது, திருமால் தன் மார்பில் மாலையணிந்துள்ளதுபோன்ற தோற்றத் தைத் தருகிறது.

குறிப்பு

சிறு தூறல் இருக்கும்போதுதான் வானவில் தோன்றும். இருண்டு மின்னி மழை பெய்யத் தொடங்கியிருப்பது, கார் காலம் தொடங்கி விட்டதைத் தெரிவிக்கிறது.

சொற்பொருள்

1. பொரு - கரையை மோதும்; கடல்வண்ணன் - கடல் போன்ற நிறம் கொண்ட திருமால்; தார் - மாலை.
2. திருவில் - வானவில்; விலங்கு ஊன்றி - குறுக்காய் நிறுத்தி; தீம்பெயல் - இனிய மழை; தாழ - பெய்ய.
3. வருதும் - வருவேன்; வாரார் - வரவில்லை; வானம் - மேகம்.
4. கரு இருந்து - கருக்கொண்டு; ஆலிக்கும் - மழை பெய்யும்.

தோழி கூற்று

கார் நாற்பது 2 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தோன்றியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக்காட்டி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்திக் கூறியது.

கடுங்கதிர் நல்கூரக் கார்செல்வம் எய்த
நெடுங்காடு நேர்சினை ஈனக் – கொடுங்குழாய்
இன்னே வருவர் நமரென்(று) எழில்வானம்
மின்னும் அவர்தூ துரைத்து.

தெளிவுரை

"வளைந்த காதணியை அணிந்துள்ள தலைவியே! கொடிய கதிரைக் கொண்ட சூரியன், வெப்பம் தணிந்தனன்; கார் காலம் வளம் பெற்றுள்ளது. பெரிய காடுகளிலெல்லாம் நிறைந்த அரும்புகள் தோன்றியுள்ளன; மேகம் திரண்டெழுந்துள்ளது; 'தலைவர் இப்போதே வருவார்' என மேகம் தூது அனுப்பியுள்ளதுபோல மின்னல் மின்னுகிறது. எனவே, தலைவர் இப்போதே வருவார், நீ கலங்காதே!" என்று தோழி தலைவியை நோக்கிச் சொன்னாள்.

கருத்து

மேகம் திரண்டு, மின்னல் மின்னிக் கார் காலம் தோன்றிவிட்டதை அறிவிக்கிறது. எனவே, தலைவர் இப்போதே வருவார், கலங்காதே.

சொற்பொருள்

1. நல்கூர்தல் - வறுமைப்படுதல் (வெப்பம் தணிந்தது); கார் - கார் காலம்; செல்வம் - வளம்.
2. நெடுங்காடு - நீண்ட (பெரிய) காடுகள்; சினை - பூ அரும்பு; ஈனுதல் - தோன்றுதல்; கொடுங்குழாய் - வளைந்த காதணிகளைக் கொண்டவளே (குழை - காதணி).

3. இன்னே - இப்போதே; நமர் - சுற்றத்தார் (தலைவர்).
4. மின்னும் - மின்னுகின்றது.

தோழி கூற்று

கார் நாற்பது 3 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் கண்டழிந்த தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலம் தோன்றியதைக் கண்டு அக்காலத்தில் வருவதாய்க் கூறிய தலைவர் வரவில்லையே எனத் தலைவி வருந்தினாள். தலைவி ஆறுதல் அடைய வேண்டித் தோழி தான் ஆற்றாமை கொண்டவளாய்ச் சொல்லியது.

வரிநிறப் பாதிரி வாட வளிபோழ்ந்து
அயிர்மணல் தண்புறவின் ஆலி – புரள
உரும்இடி வானம் இழிய எழுமே
நெருநல் ஒருத்தி திறத்து.

தெளிவுரை

"காற்று இடைப்புகுந்து வீசுவதால் வரிகளுடன் கருஞ்செந்நீல நிறத்தைக் கொண்ட பாதிரி மலர்கள் உலர்ந்துள்ளன. இளமணலைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய முல்லை நிலத்தில் ஆலங்கட்டிகள் புரள, மேகம் இடிஇடித்து நேற்று முதற்கொண்டு மழை பெய்யத் தொடங்கியுள்ளது. தனியாய் இருக்கும் ஒருத்திக்கு அது துன்பம் தரும் (என்பதை உணரும் தலைவன் உடனே வருவான்)" எனத் தோழி தலைவியை ஆற்றுவிப்பதற்காக உரைத்தாள்.

கருத்து

கார் கால மழை பெய்யத் தொடங்கிவிட்டது. எனவே தலைவன் திரும்பி விடுவான்; வருந்தாதே.

விளக்கம்

கார் காலம் தொடங்கியதை மழை தெரிவிக்கிறது. அதனால் தலைவனின்றித் தனித்திருக்கும் தலைவி வருந்துகிறாள். தலைவன் வந்துவிடுவான் எனத் தோழி, தலைவியைத் தேற்றுகிறாள்.

குறிப்பு

பாதிரி கோட்டுப்பூவாகும்; வேனிற்காலத்தில் பூக்கும்; கார் காலத்தே உலர்ந்து விடும். இது கருஞ்செந்நீல நிறம் கொண்டது.

சொற்பொருள்

1. வரி நிறம் - வரிகளுடன் நிறம் கொண்டுள்ள; பாதிரி - பாதிரிப்பூ; வளி - காற்று; போழ்ந்து - பிளந்து, இடைபுகுந்து.
2. அயிர் - நுண்ணிய; புறவு - முல்லை நிலம்; ஆலி - பனிக்கட்டி போன்ற மழைத்துளி.
3. உரும் - இடி (உரும் - உரத்த ஒலி).
4. நெருநல் - நேற்று.

தோழி கூற்று

கார் நாற்பது 4 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி பருவம் காட்டித் தலைமகளை வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவியிடம் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

ஆடு மகளிரின் மஞ்ஞை அணிகொளக்
காடுங் கடுக்கை கவின்பெறப் பூத்தன;
பாடுவண் டூதும் பருவம் பணைத்தோளி!
வாடும் பசலை மருந்து.

தெளிவுரை

"மூங்கில் போன்ற மென்மையும் வழவழப்பும் கொண்ட தோளினைப் பெற்ற தலைவியே! கூத்தாடும் மங்கையரைப் போன்று மயில்கள் அழகு பெற்றுள்ளன; காடுகளும் அழகுபெறக் கொன்றை மலர்கள் மலர்ந்துள்ளன; இசை பாடும் வண்டுகள் மலர்ந்த அம்மலர்களில் அமர்ந்து பாடுகின்றன. ஆகவே, கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. இந்தப் பருவம், நீ வருந்துவதற்குக் காரணமான பிரிவுத்துன்பத்தைப் போக்கும் மருந்து" எனத் தோழி தலைவியைப் பார்த்துக் கூறினாள்.

கருத்து

தலைவியே! மயில் ஆட, கொன்றை மலரக் கார் தொடங்கிவிட்டது. உன்னை வருத்தும் பசலை நோயை நீக்கத் தலைவர் வந்துவிடுவார்.

சொற்பொருள்

1. ஆடுமகளிர் - கூத்தாடும் பெண்கள்; இன் (உவம உருபு) - போல; மஞ்ஞை - மயில்; அணி - அழகு.
2. கடுக்கை - கொன்றை; கவின் - அழகு.
3. ஊதும் - இசை பாடும்; பணை - மூங்கில்.
4. வாடும் - வாடுகின்ற.

தோழி கூற்று

கார் நாற்பது 5 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

இகழுநர் சொல்அஞ்சிச் சென்றார் வருதல்
பகழிபோல் உண்கண்ணாய் பொய்அன்மை ஈண்டைப்
பவழம் சிதறி யவைபோலக் கோபம்
தவழும் தகைய புறவு.

தெளிவுரை

தோழி தலைவியை நோக்கி, "அம்பினைப் போன்ற கூரிய கண்களைக் கொண்ட தலைவியே! பவளங்களைச் சிந்தியதைப் போல் முல்லை நிலக் காடுகளில் இந்திரகோபம் என்னும் பூச்சிகள் பரவித் தவழ்கின்றன. அவை தோன்றுவது, மழை பெய்யவிருப்பதற்கான அறிகுறி; கார்ப்பருவ வரவுக்கு அடையாளம். எனவே, இகழ்ந்து பேசுபவரின் சொல்லுக்கு அஞ்சிப் பொருள் தேடச் சென்ற நம் தலைவர் திரும்பி வருதல் பொய் யன்று; உண்மை" என்று கூறினாள்.

கருத்து

பவளம்போல் இந்திரகோபப்பூச்சிகள் நிலமெங்கும் பரவியிருப்பது கார் காலம் தொடங்கியதைத் தெரிவிக்கின்றது. தலைவன் வந்துவிடுவான்.

விளக்கம்

'இவன், இனிய இல்லறம் நடத்தப் போதிய பொருள் ஈட்டி வாராது வீட்டில் மனைவியுடன் இன்பம் துய்த்துக் கொண் டிருக்கிறானே' என்று அயலவர் தலைவனைப் பழித்துக் கூறினர். அப்பழிச்சொல் வாயிலாய்த் தன் கடமையை உணர்ந்த தலைவனும் பொருளீட்டி வரத் தலைவியைப் பிரிந்து சென்றான்.

சொற்பொருள்

1. இகழுநர் - பழித்துரைப்பவர்.
2. பகழி - அம்பு; உண்கண் - மையெழுதப்பட்ட கண்; பொய் அன்மை - பொய் அன்று; ஈண்டை - இங்கே.
3. கோபம் - தம்பலப்பூச்சி, இந்திரகோபப்பூச்சி.
4. தகைய - தன்மை வாய்ந்தது; புறவு - முல்லை நிலம்.

தோழி கூற்று

கார் நாற்பது 6 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

தொடியிட ஆற்றா தொலைந்ததோள் நோக்கி
வடுஇடைப் போழ்ந்தகன்ற கண்ணாய்! வருந்தல்;
கடி(து)இடி வானம் உரறும் நெடுஇடைச்
சென்றாரை நீடன்மின் என்று.

தெளிவுரை

வளையல்களை அணிவதற்கு இயலாதவாறு துவண்டுவிட்ட தலைவியின் தோள்களைப் பார்த்த தோழி, "மாவடு நடுவே பிளவுற்றதைப்போன்ற அகன்ற கண்களைக் கொண்ட தலைவியே! மேகம் கடுமையாய் இடிஇடித்து ஒலித்து, நீண்ட வழியில் சென்ற தலைவரிடம், 'காலந்தாழ்த்தாதீர், விரைந்து வருவீர்' எனக் கூறி முழங்கும். நீ வருந்தாதே; பிரிந்து சென்ற தலைவர் விரைவில் வருவார்!" என்று சொல்லித் தேற்றினாள்.

கருத்து

இடி முழக்கம் கார் வரவைத் தெரிவிக்கிறது; தலைவன் விரைவில் வருவான்.

விளக்கம்

மேகம் இடிஇடித்து ஒலிப்பது தலைவனைக் 'காலம் கடத்தாதே! விரைவில் வீடு திரும்பு' என்று சொல்வதுபோல இருக்கிறதாம்.

சொற்பொருள்

1. தொடி - தோள் வளை; ஆற்றா - (அணிவதற்கு) இயலாதவாறு; தொலைந்த - துவண்ட.
2. வடு - மாவடு; இடை - நடு; போழ்ந்து - பிளந்து.
3. கடிது - கடுமையாய்; உரறும் - முழங்கும்; நெடுஇடை - நீண்ட வழி.
4. நீடன்மின் - காலம் தாழ்த்தாதீர்.

தோழி கூற்று

கார் நாற்பது 7 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

நச்சியார்க்(கு) ஈதலும் நண்ணார்த் தெறுதலும்
தற்செய்வான் சென்றார்த் தரூஉம்; தளர்இயலாய்
பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரும் மின்னும் மழை.

தெளிவுரை

"மெல்லிய இயல்பினைக் கொண்ட தலைவியே! தம்மை விரும்பி அடைந்தவர்க்கு அவர் வேண்டியதைத் தருதற்கும், தம்மைப் பகைத்தாரை அழித்தற்கும், தம்மை நிலை நிறுத்திக்கொள்வதற்குமாகப் பொருள் தேடச் சென்றுள்ளார், தலைவர். குற்றமில்லாத புகழினைக் கொண்ட வேள்வித்தீயைப் போல எல்லாப் பக்கங்களிலும் மின்னுகின்ற வானம் அவரைக் கொண்டுவந்து சேர்க்கும்" எனத் தோழி தலைவியை ஆற்று வித்தற்குக் கூறினாள்.

கருத்து

எல்லாப் பக்கங்களிலும் மின்னல்கள் மின்னுகின்றன; அதனைக் காணும் தலைவன் உடனே திரும்புதல் உறுதி.

விளக்கம்

இல்லறம் மேற்கொள்ளும் தலைவன் தன்னை வந்து கேட்பார்க்குக் கொடுக்கவும், தன்னைப் பகைத்தாரை அழிக்கவும், தன் வாழ்வைச் செம்மையாய் நிலைநிறுத்திக்கொள்வதற்குமாகவே பொருளீட்டச் செல்கிறான்.

சொற்பொருள்

1. நச்சியார் - கேட்பார்; ஈதல் - கொடுத்தல்; நண்ணார் - பகைவர்; தெறுதல் - அழித்தல்.
2. தற்செய்வான் - தன் வாழ்வைச் செம்மையாய் நிலைநிறுத்திக் கொள்பவன்; தளர்இயல் - மெல்லிய இயல்பு.
3. பொச்சாப்பு - குற்றம்.
4. எச்சாரும் - எல்லாப் பக்கங்களிலும்.

தோழி கூற்று

கார் நாற்பது 8 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

மண்இயல் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்இயல் நல்லாய் பிரிந்தார் வரல்கூறும்
கண்இயல் அஞ்சனம் தோய்ந்தபோல் காயாவும்
நுண்அரும்(பு) ஊழ்த்த புறவு.

தெளிவுரை

“பெண்மை நலம் சிறந்த நல்ல தலைவியே! மண்ணால் ஆன இவ்வுலகத்தில் நிலை பெறும் புகழை விரும்பிப் பொருள் தேட நம் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றுள்ளார். அவர் திரும்பி வர இருப்பதை முல்லை நிலத்தில் காயா மரங்களில் இருக்கும் கண்ணுக்கிடும் மை போன்ற கரிய நிற அரும்புகள் தெரிவிக்கின்றன.”

கருத்து

தலைவர் வருவார் என்பதைக் கார் காலக் காயா அரும்புகள் காட்டுகின்றன.

விளக்கம்

கார் காலத்தில் காயா மரங்களில் கருநிற அரும்புகள் வெளிப்படும். காயா முல்லை நிலப்பூ; விரிந்தால் மயிற்கழுத்து போன்று பளபளக்கும் நீல நிறத்தது. இம்மலர் பூத்துத் தோன்றுங்கால் கருநீலக் காடாகவும், உதிர்ந்து கிடந்தால் கருமைக் கம்பளமாகவும் காட்சி தரும்.

சொற்பொருள்

1. ஞாலம் - உலகம்; மன்னும் - நிலை பெறும்.
2. இயல் - தன்மை; நல்லாய் - நல்லவளே; வரல் கூறும் - வருவதைச் சொல்லும்.
3. அஞ்சனம் - மை; காயா - காயாம்பூ.
4. நுண் - நுண்ணிய; ஊழ்த்த - தோற்றுவிக்கும்; புறவு - முல்லை நிலம்.

தோழி கூற்று

கார் நாற்பது 9 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

கருவிளை கண்மலர்போல் பூத்தன; கார்க்குஏற்று
எரிவனப்பு உற்றன தோன்றி – வரிவளை
முன்கை இறப்பத் துறந்தார் வரல்கூறும்
இன்சொல் பலவும் உரைத்து.

தெளிவுரை

தோழி தலைவியை நோக்கி, "வரிசையாய் அமைந்த வளையல்கள் உன் முன்னங்கையினின்று கழலுமாறு செய்துள்ள தலைவர், இனிய சொற்கள் பலவும் சொல்லிப் பிரிந்துபோனார். கண்மலர்போல் பூத்த கருவிளம் பூக்களும் தீயின் அழகை கொண்டனவாய் மலர்ந்துள்ள தோன்றிப் (காந்தள்) பூக்களும் பிரிந்து சென்ற தலைவர் வருவதை முன் அறிவிப்புச் செய்கின்றன (தலைவர் வந்துவிடுவார்; வருந்தாதே)" என்று கூறினாள்.

கருத்து

கருவிளம் பூக்களும் தோன்றிப் பூக்களும் கார் காலம் தோன்றிவிட்டதை அறிவிக்கின்றன.

விளக்கம்

பொருள் தேடப் பிரிந்த தலைவன், " 'கார்ப்பருவத்தே வருவேன்' எனும் இனிய சொல் கூறிப் பிரிந்தான். அப்பருவம் தொடங்கியதைக் கருவிளை மலர்களும், தோன்றிப் பூக்களும் முன் அறிவிப்புச் செய்கின்றன. (தலைவன் தவறாது வந்து சேர்வான்.)"

குறிப்பு

காந்தளின் செந்நிறப் பூவே தோன்றி. தோன்றி - செங்காந்தள் பூ.

சொற்பொருள்

1. கருவிளை - கருவிளம் பூ; கார் - கார் காலம்.
2. எரி - தீ; வனப்பு - அழகு; தோன்றி - தோன்றிப்பூ; வரிவளை - வரிசை யாய் உள்ள வளையல்.
3. இறப்ப - கழன்று விழ; துறந்தார் - பிரிந்து சென்றவர்.

தோழி கூற்று

கார் நாற்பது 10 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, ‘பிரிந்த தலைவன் விரைவில் வருவான்’ என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

வான்ஏறு வானத்(து) உரற வயமுரண்
ஆன்ஏற்(று) ஒருத்தல் அதனோ டெதிர்செறுப்பக்
கான்யாற்று ஒலியில் கடுமான்தேர் என்தோழி
மேனி தளிர்ப்ப வரும்.

தெளிவுரை

தோழி தலைவியை நோக்கி, “என் தலைவியே! வானத்தில் இடி முழங்குகின்றது. வலிமையையும் மாறுபாட்டையும் கொண்ட அந்த இடியை எதிர்த்துச் சினம் கொண்டு எருமைக்கடா தானும் முழங்குகிறது. விரைந்தோடும் குதிரை

பூட்டப்பட்ட நம் தலைவரின் தேர், காட்டாற்றின் ஒலிபோலும் ஒலி கொண்டு, உன் மேனி தழைக்க விரைந்து வருகின்றது" என்று கூறினாள்.

கருத்து

கார் காலம் தொடங்கியது; நீ மகிழுமாறு தலைவன் தேர் விரைந்து வருகின்றது.

குறிப்பு

இடிஇடிக்கும்போது அதற்கு எதிர் முழக்கம் செய்வதுபோல எருமைக்கடா முழங்குகின்றது.

சொற்பொருள்

1. வான் ஏறு - வான இடி; உரற - இடிக்க; வயம் - வலிமை; முரண் - மாறுபாடு.
2. ஆன்ஏறு - எருமை; ஒருத்தல் - கடா; எதிர் செறுப்ப - எதிர்த்து முழங்க.
3. கான்யாறு - காட்டாறு; கடுமான் - விரைந்தோடும் குதிரை.
4. தளிர்ப்ப - தழைக்க.

தோழி கூற்று

கார் நாற்பது 11 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்
வணர்ஒலி ஐம்பாலாய் வல்வருதல் கூறும்
அணர்த்தெழு பாம்பின் தலைபோல் புணர்கோடல்
பூங்குலை ஈன்ற புறவு.

தெளிவுரை

“வளைந்த, தழைத்த, ஐந்து வகையாய்ப் பின்னி முடிக்கப்பட்ட கூந்தலைக் கொண்ட தலைவியே! மேல் நோக்கி எழும் பாம்பின் படத்தைப் போன்று வெண்காந்தள், பூங்கொத்துகளை ஈன்றுள் ளது. இம்மை மறுமை இன்பங்களைத் தரவல்ல செல்வத்தைத் திரட்டி வரச்சென்ற நம் தலைவர் விரைவாய்த் திரும்பி வருவார் என்பதை அப்பூக்கள் கூறுகின்றன” எனத் தோழி தலைவியைப் பார்த்துச் சொன்னாள்.

கருத்து

வெண்காந்தள் பூக்கக் கார் காலம் தொடங்கியது; காதலர் வருவார்.

விளக்கம்

வெண்காந்தள் கார் காலத்தில் பூப்பது. அப்பூக்கள் காடு களில் தோன்றியிருப்பதால் கார் காலம் தொடங்கிவிட்டது என்பது தெரிகிறது.

குறிப்பு

கோடல் என்பது வெண்காந்தள் பூ.

சொற்பொருள்

1. புணர்தரு செல்வம் - இன்பங்களைச் சேர்க்கவல்ல பொருள்; தருபாக்கு - ஈட்டி வரச்சென்ற.
2. வணர் - வளைவு, நெளி; ஐம்பால் - ஐந்து வகையாய்ப் பின்னி முடிக்கப்படும் கூந்தல்; வல்வருதல் - விரைவாய் வருதல்.
3. அணர்த்து எழு - மேல்நோக்கி எழும்; புணர்கோடல் - வெண்காந்தள்; பூங்குலை - பூங்கொத்து.

தோழி கூற்று

கார் நாற்பது 12 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

மைஎழில் உண்கண் மயில்அன்ன சாயலாய்
ஐயந்தீர் காட்சி அவர்வருதல் திண்ணிதாம்;
நெய்அணி குஞ்சரம் போல இருங்கொண்மூ
வைகலும் ஏரும் வலம்.

தெளிவுரை

"கருமையும் அழகும் கொண்ட மை பூசப்பெற்ற கண்களையும் மயில்போன்ற சாயலையும் கொண்ட தலைவியே! எண்ணெய் பூசப் பெற்ற யானைகள்போல் கரிய மேகங்கள் நாள்தோறும் வலமாய் எழுகின்றன. ஆதலால், ஐயம் நீங்கிய அறிவைக் கொண்ட நம் தலைவர் உடனே திரும்புதல் உறுதி" என்று தோழி தலைவியை நோக்கிச் சொன்னாள்.

கருத்து

மேகங்கள் கறுத்து வலமாய் மேலெழுகின்றன; கார்ப்பருவம் தொடங்கி விட்டது; தலைவர் மீள்தல் உறுதி.

சொற்பொருள்

1. மை எழில் - கருமையும் அழகும்; உண்கண் - மை பூசப்பெற்ற கண்.
2. காட்சி - அறிவு; திண்ணிது - உறுதி.
3. நெய் அணி - எண்ணெய் பூசப்பெற்ற; குஞ்சரம் - யானை; இரு - கரிய; கொண்மூ - மேகம்.
4. வைகலும் - நாள்தோறும்; ஏரும் - மேல் செல்லும்.

தோழி கூற்று

கார் நாற்பது 13 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

ஏந்தெழில் அல்குலாய் ஏமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பில் பெயல்தாழ – வேந்தர்
களி(று)எறி வாள்அரவம் போலக்கண் வெளவி
ஒளிறுபு மின்னும் மழை.

தெளிவுரை

"அழகிய அல்குலைக் கொண்டவளே! தலைவருடன் இன்பம் அனுபவித்த உன் சரிந்த கூந்தலின் அழகைப் போன்று மழை பெய்கிறது; அரசர்கள் யானைகளைக் கொல்வதற்காகக் கையில் ஏந்தியிருக்கும் வாளைப்போல் இடிஇடித்து, கண்களைக் கவர்ந்து ஒளி விட்டு மின்னல் மின்னுகின்றது. எனவே, இக்காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்ற நம் தலைவர் வருவார்! நீ வருந்தாதே" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

மேகம் கறுத்து, மின்னல் மின்னி, இடி இடிப்பது கார் காலம் தொடங்கியதைக் காட்டுகிறது.

விளக்கம்

போர்க்களத்தில் யானைகளைக் கொல்ல அரசர்கள் வாளினை வீசுவது மின்னல் மின்னுவதுபோல இருக்கிறது. வாள், யானையை வெட்டும்போது அது பிளிறுவது இடி இடிப்பதாயும், கொட்டும் குருதி பெய்யும் மழையாகவும் தோன்றுகிறது.

சொற்பொருள்

1. ஏந்தெழில் - மிக்க அழகு; ஏமார்த்தல் - இன்புறுதல்.
2. வனப்பில் - அழகைப் போல; பெயல் - மேகம்.
3. களிறு எறி - யானையைக் கொல்ல எறியும்; வாள் அரவம் - வாள் முழக்கம் (போல இடித்து); வெளவி - கவர்ந்து.
4. ஒளிறுபு - ஒளிவிட்டு; மழை - மேகம்.

தோழி கூற்று

கார் நாற்பது 14 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, ‘பிரிந்த தலைவன் விரைவில் வருவான்’ என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

செல்வம் தரல்வேண்டிச் சென்றநம் காதலர்
வல்லே வருதல் தெளிந்தாம் வயங்கிழாய்
முல்லை இலங்கெயிறு ஈன நறுந்தண்கார்
மெல்ல இனிய நகும்.

தெளிவுரை

தலைவியை நோக்கித் தோழி, “ஒளி பொருந்திய நல்ல அணிகளை அணிந்துள்ள தலைவியே! முல்லைக்கொடிகள் மகளிரின் பல்லொத்த அரும்புகளை ஈன்றுள்ளன. அவை நம்மைப் பார்த்துச் சிரிப்பனபோல உள்ளன. நல்ல குளிர்ந்த மேகம் மெல்ல இனியவாய் மின்னுகின்றது. எனவே, செல்வம் கொணரச் சென்ற நம் காதலர் விரைவாய் வருவார் என நாம் தெளிந்தோம்” எனச் சொன்னாள்.

கருத்து

மங்கையர் முறுவல்போல் முல்லை மலர்ந்து கார் காலம் தொடங்கியதை அறிவிக்கிறது.

விளக்கம்

கார் காலத்தில் முல்லையரும்புகள் தோன்றியிருப்பது, பிரிந்திருப்போரைப் பார்த்துச் சிரிப்பதுபோல இருக்கிறதாம்.

சொற்பொருள்

1. தரல் - கொண்டுவருதல்.
2. வல்லே - விரைந்து; வயங்குதல் - ஒளி செய்தல்.
3. இலங்குதல் - விளங்குதல்; எயிறு - பல்; ஈன - தோற்றுவிக்க; கார் - கார் காலம்.
4. நகும் - சிரிக்கும்.

தோழி கூற்று

கார் நாற்பது 15 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

திருந்திழாய் காதலர் தீர்குவர் அல்லர்
குருந்தின் குவிஇணர் உள்ளுறை யாகத்
திருந்தின் இளிவண்டு பாட இருந்தும்பி
இன்குழல் ஊதும் பொழுது.

தெளிவுரை

தோழி தலைவியை நோக்கி, "திருத்தமான அணிகளை அணிந்த தலைவியே! குருந்த மரத்தின் குவிந்த பூக்கொத்துகளின் உள்ளிடமே தம் இருப்பிடமாய்க்கொண்டு வாழும் வண்டுகள், 'இளி' என்னும் பண்ணொலியை இசைக்கின்றன. கரிய தும்பிகள் இனிய குழல் ஒலியை எழுப்புகின்றன. இக்கார் காலத்தில் நம் தலைவர் நம்மைப் பிரிந்திரார்; விரைந்து இப்போதே வருவார்!" என்று கூறினாள்.

கருத்து

வண்டுகள் பாட, தும்பிகள் புல்லாங்குழல்போல் ஒலிக்கக் கார் காலம் தொடங்கிவிட்டது; கலங்காதே.

குறிப்பு

வண்டு, தும்பி என்பன வண்டின் வகைகள். வண்டின் ஒலி, 'இளி' என்னும் பண்ணொலியையும், தும்பியின் ஒலி, புல்லாங்குழலின் ஒலியையும் ஒத்திருப்பன என அறிகிறோம்.

சொற்பொருள்

1. இழாய் - இழைகளை (அணிகலன்களை) அணிந்தவளே; தீர்குவர் அல்லர் - பிரிந்து இரார்.
2. குருந்தம் - குருந்த மரம்; உள்ளுறை - இருப்பிடம்.
3. திருந்தின் - திருந்திய இனிய; இளி - ஒரு பண்; இரு - கரிய.
4. இன் - இனிய; ஊதும் - ஒலிக்கும்; பொழுது - கார் காலம்.

தோழி கூற்று

கார் நாற்பது 16 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

கருங்குயில் கையற மாமயில் ஆலப்
பெருங்கலி வானம் உரறும் – பெருந்தோள்
செயலை இளந்தளிர் அன்னநின் மேனிப்
பசலை பழுங்கண் கொள.

தெளிவுரை

"பெரிய தோளினைக் கொண்ட தலைவியே! கரிய குயில்கள் செயலற்று விட்டன. பெரிய மயில்கள் களித்து ஆடுகின்றன. ஒலி கொண்ட பெரிய மேகங்கள் முழங்குகின்றன. கார் காலம் தோன்றி விட்டது. ஆதலால், அசோக மரத்தின் இளந்தளிர் போன்ற உன் மேனியில் தோன்றியுள்ள பசலை மெலிவு கொள்ள நம் தலைவர் விரைவில் வருவார்" எனத் தோழி தலைவியை நோக்கிச் சொன்னாள்.

கருத்து

குயில் பாட, மயில் ஆட, மேகம் முழங்கக் கார் காலம் தொடங்கி விட்டது.

விளக்கம்

தலைவர் வந்து சேர்வார்; உன் பசலை நீங்கும்.

குறிப்பு

கார் காலத்தில் குயில் கூவும்; மயில் ஆடும்; வானம் இடிக்கும்.

சொற்பொருள்

1. கையற - செயலற்றுவிட; ஆல - ஆட.
2. கலி - ஒலி; உரறும் - இடிக்கும்.
3. செயலை - அசோகு.

தோழி கூற்று

கார் நாற்பது 17 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

அறைக்கல் இறுவரைமேல் பாம்பு சவட்டிப்
பறைக்குரல் ஏறொடு பௌவம் பருகி
உறைத்திறன் சூர்ந்தன்று வானம்; பிறைத்தகை
கொண்டன்று பேதை நுதல்.

தெளிவுரை

தலைவியைப் பார்த்துத் தோழி, "பேதையே! மேகம் கடல்நீரைப் பருகிப் பறை ஒலிப்பது போன்று இடிக்கிறது. இந்த ஒலி, மலைமேல் உள்ள பாம்பை வருத்துகிறது; பாறைக்கற்களைக் கொண்ட பக்க மலையின் மீது நீரைச் சொரிகிறது; இருளையும் கூட்டிவிட்டது. இக்கார் கால வரவைக் கண்டு உன் நெற்றி பிறைச்சந்திரனின் அழகை மீட்டுக்கொள்ளும். எனவே, தலைவர் விரைவில் வருவார்" என்று சொன்னாள்.

கருத்து

பாம்பு வருந்த இடியிடித்து, மழை பொழிந்து, கார் காலம் தொடங்கி யுள்ளது.

விளக்கம்

"தலைவியே! கார் காலம் தொடங்கிவிட்டது. தலைவன் வந்து சேர்வான். அவன் பிரிந்ததால் நீ இழந்த அழகை மீட்டுக்கொள் வாய்; வருந்தாதிரு" என்று தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. அறை - பாறை; இறுவரை - பக்க மலை; சவட்டி - வருத்தி.
2. ஏறு - இடி; பௌவம் - கடல்; பருகி - நீரை உண்டு.
3. உறைத்தல் - சொரிதல்; கூர்தல் - மிகுதல்; பிறைத்தகை - பிறையின் அழகு.
4. நுதல் - நெற்றி.

தோழி கூற்று

கார் நாற்பது 18 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்துவது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. அதனைத் தோழி தலைவிக்குக் காட்டி, 'பிரிந்த தலைவன் விரைவில் வருவான்' என்பதற்குரிய காரணங்களை எடுத்துக் கூறி வருந்தாது இருக்குமாறு கட்டாயப்படுத்தியது.

கல்பயில் கானம் கடந்தார் வரஆங்கே
நல்இசை ஏறொடு வானம் நடுநிற்பச்
செல்வர் மனம்போல் கவின்ஈன்ற நல்கூர்ந்தார்
மேனிபோல் 'புல்'என்ற காடு.

தெளிவுரை

"மலைகள் நெருங்கிய காட்டைக் கடந்து நம் தலைவர் சென் றுள்ளார். அவர் வருகின்ற காலமாய் இருப்பதால் வானத்தில் மேகங்கள் நிறைந்து மிக்க ஓசையைக் கொண்ட இடியை எழுப்பி நிற்கின்றன. வறுமையுற்றவரின் மேனியைப் போன்று முன்பு பொலிவில்லாமல் இருந்த காடுகள் இப்போது பொருளுடை

யவரின் மனம்போல் அழகைப் பெற்றுள்ளன" என்று தோழி தலைவியை நோக்கி உரைத்தாள்.

கருத்து

பொலிவிழந்திருந்த காடுகள் கார் காலம் தொடங்கியுள்ளதால் பொலிவு பெற்றுள்ளன.

உவமை

காடுகள் மழையில்லாமையால், வறுமையுற்றவர் மேனி போன்று பொலிவிழந்திருந்தன. மழை பெய்ததும் செல்வம் உடையவர் மனம்போலச் செழிப்புற்றன.

சொற்பொருள்

1. கல் - மலை; பயில் - நெருங்கிய.
2. நல் இசை - மிக்க ஓசை; ஏறு - இடி.
3. கவின் - அழகு; நல்கூர்ந்தார் - வறுமையுற்றவர்.
4. 'புல்' என்ற - பொலிவு இழந்தன.

தோழி கூற்று

கார் நாற்பது 23 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியதைத் தோழி, தலைவிக்குக் காட்டித் தலைவர் வருவார் என்று வற்புறுத்திச் சொன்னது.

கண்திரள் முத்தம் கடுப்பப் புறவெல்லாம்
தண்துளி ஆலி புரளப் புயல்கான்று
கொண்(டு)எழில் வானமும் கொண்டன்று எவன்கொலோ
ஒண்தொடி ஊடு நிலை.

தெளிவுரை

"ஒளிவீசும் வளையல் அணிந்துள்ள தலைவியே! முல்லை நிலமெங்கும் திரட்சிகளைக் கொண்ட முத்துகளைப் போன்ற நீர்த்துளிகளை மேகம் சொரிகின்றது. அதனால் பனிக்கட்டி போன்ற ஆலங்கட்டிகள் உருண்டோடுகின்றன. மழைத்தாரையும் மேகமும் வானம் முழுவதையும் சூழ்ந்துகொண்டன. தலைவன் திரும்ப இருக்கும் கார் காலம் தொடங்கி விட்டது. இனியும் ஊடல் கொண்டிருப்பது ஏன்?" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

மழைத்தாரையும் கருமேகமும் வானத்தைச் சூழுமாறு கார் காலம் தொடங்கி விட்டது; தலைவர் உடனே வந்து சேர்வார். வருந்தாதே!

சொற்பொருள்

1. கண்திரள் - பக்கம் திரட்சியுற்ற; முத்தம் - முத்து; கடுப்ப - போன்ற; புறவு - முல்லை நிலம்.
2. ஆலி - ஆலங்கட்டி; புயல் - மேகம்; கான்று - நீர் சொரிந்து.
3. கொண்டன்று - சூழ்ந்துகொண்டது (மழையோடு மேகமும் சேர்ந்து வானத்தை மறைத்துக்கொண்டது.)
4. ஒண்தொடி - ஒளி பொருந்திய வளையல்.

தோழி கூற்று

கார் நாற்பது 25 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகளை ஆற்றல் வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் கார் காலம் தொடங்கியும் வரவில்லையே என்று தலைவி வருந்தினாள். அவள்

ஆறுதல் அடையத் தோழி தான் ஆற்றாமை கொண்டவளாய்ச் சொல்லியது.

> கருங்கால் வரகின் பொரிப்போல் அரும்பவிழ்ந்து
> ஈர்ந்தண் புறவில் தெறுழ்வீ மலர்ந்தன
> சேர்ந்தன செய்குறி வாரார் அவரென்று
> கூர்ந்த பசலை அவட்கு.

தெளிவுரை

மிகவும் குளிர்ச்சி பெற்றுள்ள முல்லைநிலத்தில் கருமையான தாளினைக் கொண்ட வரகின் பொரியைப் போன்ற தெறுழ்வீ மலர்கள் அரும்பவிழ்ந்து மலரத் தொடங்கின. முன்பு தலைவர் குறிப்பிட்ட கார் காலத்திற்கான அடையாளங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. இன்னும் தலைவர் வரவில்லையே. தலைவிக்குப் பசலை மிகுதியும் படர்ந்துவிட்டதே! (அவளை எவ்வாறு தேற்றுவது? என்று அறியாது வருந்துகிறாள், தோழி.)

கருத்து

கார் காலம் தொடங்கியும் தலைவன் வந்து சேராததால் தலைவிக்குப் பசலை மிகுதியானது.

குறிப்பு

தெறுழ்வீ என்றே இப்பூ வழங்கப்படுகிறது. இது முல்லை நிலத்தில் பூக்கும். அப்பூ, வரகரிசியைப் பொரித்தெடுத்ததுபோலத் தோன்றும்.

சொற்பொருள்

1. கருங்கால் - கருமையான தாள்.
2. ஈர்ந்தண் - பெரிதும் குளிர்ச்சி பெற்றுள்ள; புறவு - முல்லை நிலம்; தெறுழ் வீ - ஒரு மலர்.
3. செய்குறி சேர்ந்தன அவர் குறித்துச் சென்ற பருவம் தொடங்கிவிட்டது.
4. கூர்தல் - மிகுதியாதல்.

தோழி கூற்று

கார் நாற்பது 26 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி தலைமகட்குப் பருவம் காட்டி வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது. பிரிந்த தலைவன் வருவான் என்பதற்குரிய காரணங்களை எடுத்துக்காட்டி, வருந்தாது இருக்குமாறு தலைவியைத் தோழி கட்டாயப்படுத்தியது.

நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கின் தகையுடைய ஆகிப்
புலம்எலாம் பூத்தன தோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை.

தெளிவுரை

குறைந்த சொற்களே பேசும் பழக்கத்தினைக் கொண்ட தலைவியே! கார்த்திகை முதல் நாளில் நம் வீட்டில் உள்ளவர் ஏற்றி வைத்த விளக்கொளிபோல, காந்தள் பூக்கள் பூக்கத் தொடங்கி விட்டன. அவை மழை வரவினைத் தூது சொல்கின்றன. (எனவே, தலைவர் விரைவில் வருவார் என்றனள், தோழி.)

கருத்து

வரிசையாய் வைக்கப்பட்ட கார்த்திகை விளக்குகளின் ஒளிபோல் காந்தள் பூக்கள் மலர்ந்து கார் காலம் தொடங்கியதற்கான அறிகுறியைத் தெரிவிக்கின்றன. சொன்ன சொல் தவறாது தலைவர் வந்து சேர்வார்; வருந்தாதே!

குறிப்பு

பண்டைக் காலத்தில் கார்த்திகைத் திங்களில் விளக்கேற்றும் பழக்கம் இருந்ததை இப்பாடல் தெரிவிக்கிறது. கார்த்திகைத் திங்கள் முதல் நாளில் ஏற்றப்பட்ட விளக்கு என்று கூறுவதால் தொடர்ந்து சில நாள் ஏற்றப் பட்டிருக்க வேண்டும் என்பதை அறிய இயல்கிறது.

காந்தள், கோடல், தோன்றி என காந்தள் மூவகையினது. தோன்றி - செங்காந்தள்.

சொற்பொருள்

1. நாட்டவர் - நாட்டிலுள்ளார்; இட்ட - ஏற்றி வைத்த.
2. தலைநாள் - கார்த்திகைத் திங்களின் முதல்நாள்; தகை - தன்மை.
4. புலம் - முல்லை நிலம்; தோன்றி - காந்தள் பூ.

தோழி கூற்று

கார் நாற்பது 27 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

ஊடுதலால் பசலை மிகும் எனத் தோழி தலைமகட்குக் கூறி வற்புறுத்தது.

கூற்று விளக்கம்

ஊடல் கொள்வதால் பசலை மிகும் என்று தோழி தலைவியிடம் சொல்லுதல்.

முருகியம்போல் வானம் முழங்கி இரங்கக்
குரு(கு)இலை பூத்தன கானம் – பிரிவுஎண்ணி
உள்ளா(து)அகன்றார் என்று ஊடியாம் பாராட்டப்
பள்ளியுள் பாயும் பசப்பு.

தெளிவுரை

குறிஞ்சிப்பறைபோல மேகம் முழங்குகிறது. காட்டில் குருக்கத்தி இலைகளுடன் பூக்கள் மலர்கின்றன. குடும்ப வாழ்வில் பிரிவும் நல்லது என்று பிரிந்து சென்றவரை எண்ணி ஊடல் கொள்ளாதே. அதனால் பசலை படுக்கையிலும் பாய் விரிக்கும்.

கருத்து

தலைவர் இன்னும் வரவில்லை என்று ஊடல் கொள்ளாதே; படுக்கையிலும் பசலை படர்ந்துவிடும்.

சொற்பொருள்

1. முருகு இயம் - குறிஞ்சிப்பறை; இரங்க - முழங்க.
2. குருகு - குருக்கத்தி.
3. உள்ளாது - நினைத்துப் பாராது; அகன்றார் - பிரிந்து சென்றார்; ஊடி - ஊடல் கொண்டு; பாராட்டி - அதனைச் சிறந்தது என்று பாராட்டி மேற்கொண்டோமானால்.
4. பள்ளி - படுக்கை அறை; பசப்பு - பசலை நோய்.

தோழி கூற்று

கார் நாற்பது 34 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் ஆற்ற வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியததைக் கண்டு தலைவி, அக்காலத்தில் வருவதாய்க் கூறிய தலைவர் வரவில்லையே என வருந்தினாள். தோழி அவளை ஆற்றுவிக்கத் தன் ஆற்றாமை தோன்றக் கூறியது.

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்
பெருவிறல் வானம் பெருவரை சேரும்
கருஅணி காலம் குறித்தார் திருஅணிந்த
ஒண்ணுதல் மாதர் திறத்து.

தெளிவுரை

மேகம் அலைகளைக் கொண்ட கடல்நீரை மிகுதியாய்ப் பருகி, மலை முகட்டை அடைந்து, கருக்கொண்டு மழை பொழியும் காலத்தைத் தலைவர், தாம் திரும்பி வரும் காலம் என்று தெய்வ உத்தி என்னும் தலைக்கோலத்தை அணிந்த தன் தலைவியிடம் கூறியிருந்தார்; ஆனால், இன்னும் வரவில்லையே எனத் தோழி வருந்தி உரைக்கிறாள்.

கருத்து

தலைவர் மீண்டும் வருவதாய் உறுதி சொன்ன காலம் இது. ஆனால், அவர் இன்னும் வந்து சேரவில்லையே!

சொற்பொருள்

1. விரி திரை - அலை விரிகின்ற; வெள்ளம் - கடல்நீர்; வெறுப்ப - மிகுதியாய்.
2. பெரு விறல் - மிகுந்த பெருமை; பெருவரை - மலைமுகடு; சேரும் - அடையும்.
3. கருஅணி - கருக்கொள்ளும்; காலம் - கார் காலம்; குறித்தார் - தான் திரும்ப வரும் காலம் எனக் கூறினார்; திரு - சீதேவி என்னும் தெய்வ உத்தி.
4. மாதர் திறத்து - தலைவியிடம்.

தோழி கூற்று

கார் நாற்பது 35 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் ஆற்ற வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியததைக் கண்டு தலைவி, அக்காலத்தில் வருவதாய்க் கூறிய தலைவர் வரவில்லையே என வருந்தினாள். தோழி அவளை ஆற்றுவிக்கத் தன் ஆற்றாமை தோன்றக் கூறியது.

சென்றநம் காதலர் சேண்இகந்தார் என்றெண்ணி
ஒன்றிய நோயோடு இடும்பை பலகூர
வெற்றி முரசின் இரங்கி எழில்வானம்
நின்றும் இரங்கும் இவட்கு.

தெளிவுரை

பிரிந்து சென்ற காதலர் நெடுந்தொலைவு சென்றார் என்று எண்ணிக் கலங்கிப் பசலை நோயுற்றுப் பல துன்பங்களால் அல்லல் படுகிறாளே இத்தலைவி என்று அழகிய மேகங்கள் இவள்மீது இரக்கம் கொண்டு, 'தலைவன் திரும்புகிறான்' என வெற்றியை அறிவிக்கும் முரசுகளைப் போன்று முழங்கி, இடிஇடித்து மழை எனும் கண்ணீரைச் சொரிந்து அழுகின்றன. இதனை அறிந்தாவது தலைவன் விரைவில் திரும்பட்டும்.

கருத்து

தலைவன் வந்து சேர்வான் என்பதை முரசறைந்து தெரிவிப்பதுபோல மேகம் இடிஇடித்துத் தெரிவிக்கிறது.

குறிப்பு

மழை பொழிவது, தலைவியின் இன்னல் கண்டு வானம் அழுவதுபோல இருக்கிறது.

சொற்பொருள்

1. சென்ற - பிரிந்து சென்ற; சேண் இகந்தார் - நெடுந்தொலைவு சென்றார்.
2. ஒன்றிய - பொருந்திய; நோய் - பசலை நோய்; இடும்பை - துன்பம்; கூர - மிகுதியாக.
3. இரங்கி - முழங்கி.
4. இரங்கும் - இரக்கமுற்று.

தோழி கூற்று

கார் நாற்பது 38 — **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தலைவர் பொய்த்தார் எனக் கூறித் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவர் தாம் குறிப்பிட்டுச் சொன்ன காலத்தில் வாராது பொய்த்து விட்டார் எனச் சொல்லித் தோழி தலைவியை ஆற்றுவித்தல்.

புகர்முகம் பூழிப் புரள உயர்நிலைய
வெம்சின வேழம் பிடியோடு இயைந்தாடும்
தண்பதக் காலையும் வாரார் எவன்கொலோ
ஒண்தொடி ஊடும் நிலை.

தெளிவுரை

ஒளிரும் வளையல்களை அணிந்தவளே! உயர்ந்த சிறப்பினைக் கொண்ட ஆண்யானைகள், புள்ளிகளைக் கொண்ட தம் முகம் புழுதியில் புரளப் பெண்யானைகளுடன் சேர்ந்து விளையாடும் குளிர்ச்சி பொருந்திய கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. ஆனால், தலைவர் இன்னும் வரவில்லை. நீ எதற்காகப் பிணங்கியிருக்கிறாய்? (அவர் பொய்த்துவிட்டார்; நீ ஏன் வருந்த வேண்டும்?)

கருத்து

தலைவர் பொய்த்துவிட்டார்; அதற்காகப் பிணங்கியிராதே!

சொற்பொருள்

1. புகர் - புள்ளி; பூழி - புழுதி; நிலைய - சிறப்பினைக் கொண்ட
2. வெம் சினம் - கடுமையான சினம்; வேழம் - ஆண்யானை; பிடி - பெண் யானை; இயைந்து - கூடி.
3. தண்பதம் - குளிர்ச்சி பொருந்திய தன்மை; காலை - கார் காலப்பொழுது.
4. ஊடும் நிலை - ஊடியிருக்கும் நிலை.

தோழி கூற்று

கார் நாற்பது 39 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

தலைவர் பொய்த்தார் எனக் கூறித் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவர் தாம் குறிப்பிட்டுச் சொன்ன காலத்தில் வாராது பொய்த்து விட்டார் எனச் சொல்லித் தோழி தலைவியை ஆற்றுவித்தல்.

அலவன்கண் ஏய்ப்ப அரும்பீன்று அவிழ்ந்த
கருங்குரல் நொச்சிப் பசுந்தழை சூடி
இரும்புனம் ஏர்க்கடி கொண்டார் பெருங்கௌவை
ஆகின்று நம்ஊர் அவர்க்கு.

தெளிவுரை

நண்டின் கண்களைப் போன்ற அரும்பை ஈன்று பின்பு மலர்ந்த கரிய பூங்கொத்தைக் கொண்ட பசுமையான நொச்சித் தழையைச் சூடி, பரந்த நிலங்களை உழவர்கள் ஏர் பூட்டி உழத் தொடங்கினர். இன்னும் தலைவர் வரவில்லை. அதனால் நம்மூரில் தலைவர்க்குப் பெரும்பழி உண்டாகியுள்ளது.

கருத்து

உரிய காலத்தில் வாராது தலைவர் பொய்த்துவிட்டார் என்பதை அறிந்து ஊராரே அவரைப் பழி கூறுகின்றனர்.

குறிப்பு

நொச்சி, வீட்டுமனையின் சூழலில் வளர்வது; மரவகையைச் சார்ந்தது; இதன் பூ, நண்டின் கண் போன்றது. தனியொரு பூ மிகச்சிறியது; எனவே, இதனைக் கொத்தாகவே பயன்படுத்தினர்.

சொற்பொருள்

1. அலவன் - நண்டு; ஏய்ப்ப - போன்ற; அவிழ்ந்த - மலர்ந்த.
2. குரல் - கொத்து; பசுந்தழை - பழமையான தழை.
3. இரும்புனம் - பரந்த நிலம்; ஏர்க்கடி கொண்டார் - ஏர் பூட்டி உழத் தொடங்கினர்; கௌவை - பழிச்சொல்.
4. அவர்க்கு ஆகின்று -அவருக்கு உண்டாகியுள்ளது.

தோழி கூற்று

கார் நாற்பது 40 **மதுரைக் கண்ணங்கூத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் வந்தமையால் தலைவர் வருதல் ஒருதலை எனக் கூறித் தோழி தலைமகளை ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

'கார்ப்பருவம் தொடங்கியது. அதனால் தலைவர் வருதல் உறுதியானது' என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

வந்தன செய்குறி வாரார் அவரென்று
நொந்த ஒருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணங் கொண்டன்று எழில்வானம்
நந்துமென் பேதை நுதல்.

தெளிவுரை

மென்மை வாய்ந்தவளே! தலைவர் சொல்லிச் சென்ற கார் காலத்திற்கான குறிகள் தோன்றிவிட்டன. தலைவர் வாரார் என்று வருந்திய உனக்கு நோயைப் போக்கும் மருந்தாகி அழகிய மேகம் ஈந்தின் கரிய நிறம் கொண்டது. உன் நெற்றி மகிழ்ச்சியால் இனி ஒளிரும்.

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது; இனி உன் நெற்றியில் ஒளி தோன்றும் படியாகத் தலைவன் உடனே வந்து சேர்வான்; வருந்தாதே! (கார் மேகம் உன் நோய் போக்கும் மருந்தாயிற்று.)

சொற்பொருள்

1. செய்குறி - (தலைவர் சொல்லிச் சென்ற) கார் காலத்திற்கான குறிகள்.
2. நொந்த - வருந்திய; நோய்தீர் மருந்தாகி - நோயைப் போக்கும் மருந்தாகி.
3. இந்து - ஈந்து - ஈச்ச மரம்; வண்ணம் - நிறம்; கொண்டன்று - கொண்டது.
4. பேதை - இளம் பருவத் தலைவி; நுதல் - நெற்றி.

தோழி கூற்று

கைந்நிலை 25 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகளைத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து தவிக்கும் தலைவிக்கு, கார் காலம் தொடங்கி விட்டதைச் சொல்லித் 'தலைவன் திரும்பும் காலம் இது' எனத் தோழி ஆறுதல் கூறியது.

கார்செய் புறவில் கவினிக் கொடிமுல்லை
கூர்எயிறு ஈன, குருந்(து)அரும்ப, ஒரும்
வருவர்நம் காதலர்; வாள்தடங் கண்ணாய்!
பருவரல், பைதல்நோய் கொண்டு!

தெளிவுரை

"ஒளிரும் அகன்ற கண்களைக் கொண்ட தலைவியே! மழை பெய்த முல்லைக்காடுகளில் முல்லைக்கொடிகள் செழித்து அழகு பெற்றுள்ளன; கூர்மையான பற்களைப் போன்ற அரும்புகளையும் தோற்றுவித்துள்ளன. குருந்த மரங்களிலும் அரும்புகள் தோன்றியுள்ளன. (இவையெல்லாம் கார் கால வரவைக் குறிப்பன. எனவே, கார் காலத்தில் திரும்புவேன் என்று சொல்லிச் சென்ற) நம் தலைவர் விரைவில் திரும்புவார். வருந்தாதே" என்று தோழி தலைவியிடம் வற்புறுத்திச் சொன்னாள்.

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது; தலைவர் வருவார்; உன் பசலை நோய் நீங்கும்.

சொற்பொருள்

1. கார் செய்த - மழை பெய்த; புறவு - முல்லைநிலக் காடு; கவினி - அழகு பெற்று.

2. கூர் எயிறு - கூரிய பல்; ஈனுதல் - தோற்றுவித்தல்; குருந்து - குருந்த மரம்; ஓர்தல் - அறிதல்.
3. வாள் - ஒளி (பொருந்திய); தடம் - அகன்ற.
4. பருவரல் - துன்பம், வருத்தம்; பைதல் நோய் - பசலை நோய்.

தோழி கூற்று

கைந்நிலை 26 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகளைத் தோழி பருவம் காட்டி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து தவிக்கும் தலைவிக்கு, கார் காலம் தொடங்க விருப்பதைச் சொல்லித் 'தலைவன் திரும்பும் காலம் இது' எனத் தோழி ஆறுதல் கூறியது.

குருதி மலர்த்தோன்றி கூர்முகை ஈன,
.... சேவல் எனப்பிடவம் ஏறி,
பொருதீ எனவெருளும் பொன்நேர் நிறத்தாய்!
அரி(து)அவர் வாரா விடல்

தெளிவுரை

பொன் போன்ற அழகிய நிறம் கொண்ட தலைவியே! செங் காந்தள் செடியின் கூர்மையான அரும்புகளிலிருந்து தோன்றிய மலர்கள் இரத்தம் போன்ற செந்நிறத்தைக் காட்டின. அச்செங்காந்தள் மலரைத் தன்னுடன் போர் செய்ய வரும் சேவல் எனக் கருதி, ஒரு சேவல், பிடவம் என்னும் செடியின்மீது ஏறி நின்று பார்த்தது. அப்பொழுது அச்செங்காந்தள் அதற்குச் சுடும் நெருப்பாய்த் தோன்ற, அச்சம் கொண்டு ஓடலாயிற்று. (கார் காலம் தொடங்கவிருக்கின்றது.) ஆதலின், நம் தலைவர் வாராதிருப்பது அரிது.

கருத்து

கார் காலம் தொடங்கி விட்டது; காதலர் விரைந்து வருவார்.

குறிப்பு

செங்காந்தள் மலர்ந்ததால் கார் காலம் தொடங்கியது என்பது உணர்த்தப் படுகிறது.

சொற்பொருள்

1. குருதி மலர் - செந்நிறம் கொண்ட மலர்; தோன்றி - செங்காந்தள் மலர்; முகை - அரும்பு; ஈன - தோற்றுவிக்க.
2. பிடவம் - பிடவ மலர்.
3. பொரு தீ - சுடும் நெருப்பு; வெருளும் - அஞ்சும்.
4. வாராவிடல் - வாராது இருப்பது.

தோழி கூற்று

கைந்நிலை 31 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

கார் கால வரவைத் தோழி தலைமகளிடம் சொன்னது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்கும் தலைவியிடம் கார் காலம் தொடங்கியுள்ளதைத் தோழி கூறியது.

....
..................வானம்
வந்து துளிவழங்கக் கண்டு.

தெளிவுரை

வானத்தில் உள்ள மேகங்கள் மழைத்துளிகளைப் பொழிவதைப் பார்த்துக் (கார் காலம் வந்ததை அறிந்துகொள்).

கருத்து

கார்காலம் தொடங்கிவிட்டது; (தலைவனும் வந்து சேர்வான்.)

சொற்பொருள்

4. வந்து - (மேகம்) தோன்றி; துளி - மழைத் துளி; வழங்கக் கண்டு - பொழிவதைப் பார்த்து.

தோழி கூற்று

கைந்நிலை 36 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தோழி, தலைமகளிடம் சொல்லி ஆற்றுவிப்பது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்து வருந்தியுள்ள தலைவியிடம், ‘கார் காலம் வந்துவிட்டது; தலைவன் திரும்புவான்’ என்று தோழி தேறுதல் சொல்வது.

பிடவம் குருந்தொடு பிண்டி மலர,
மடவ மயில்கூவ, மந்திமா கூரத்
தடமலர்க் கோதையாய்! தங்கார் வருவர்
இடபம்எனக் கொண்டு, தாம்

தெளிவுரை

அழகிய மலர் மாலையை அணிந்திருக்கும் தலைவியே! பிடவம், குருந்து, அசோகம் முதலியன மலர்ந்தன. மயில்கள் மகிழ்ந்து அகவி ஆடுகின்றன. குரங்குகளும், பிற விலங்குகளும் மழையில் நனைந்து நடுங்குகின்றன. கார் காலம் தொடங்கியது. தம்மை ஒரு காளை எனப் பெருமிதத்துடன் கருதிக்கொண் டிருக்கும் தலைவரும் எங்கும் இமைப்பொழுதும் தங்காது வருவார்.

கருத்து

மயில்கள் அகவி மகிழ்ந்தாடக் கார் காலம் தொடங்கிவிட்டது; கவலை நீங்கு.

சொற்பொருள்

1. பிடவம் - ஒரு வகைச் செடி; குருந்து - குருந்த மரம்; பிண்டி - அசோக மரம்.
2. கூவ - அகவி; மந்தி - குரங்கு; மா - விலங்கு; கூர - நடுங்க.
3. தடமலர் - அழகிய மலர்; கோதை - மாலை; தங்கார் - எங்கும் தங்க மாட்டார்; வருவர் - திரும்பி வருவார்.
4. இடபம் - காளை.

தலைவி பருவங்கண்டழிதல்.

தலைவி கூற்று

நாலடியார் 392 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வருவதாய்ச் சொல்லிச் சென்ற பருவம் வந்தும் அவன் வாராதது கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் தேடப் பிரிந்த தலைவன் திரும்பி வருவதாய்ச் சொல்லிய கார்ப்பருவம் வந்தும் அவன் வாராமை கண்டு வருந்திய தலைவி தோழிக்குச் சொல்லியது.

தம்அமர் காதலர் தார்சூழ் அணிஅகலம்
விம்ம முயங்கும் துணையில்லார்க்(கு) – இம்மெனப்
பெய்ய எழிலி முழங்கும் திசைஎல்லாம்
நெய்தல் அறைந்தன்ன நீர்த்து.

தெளிவுரை

தம்மால் விரும்பப்படும் காதலருடைய மாலையணிந்த அழகிய மார்பைத் தம் மார்பு இன்பத்தால் புடைத்துப் பொங்கும்படி தழுவுமாறு, தலைவன் அருகிலில்லாத மகளிர்க்கு, ‘இம்’ எனும் ஓசையுடன் மழைபொழிவதற்காக மேகங்கள் திக்குகள் எல்லாம் செய்கின்ற முழக்கம், சாப்பறை அடிப்பது போன்ற தன்மையதாய் இருக்கும்.

கருத்து

காதலர் அருகில்லாக் கார்ப் பருவம் களிப்பைத் தராது.

சொற்பொருள்

1. அமர் - விருப்பம்; தார் - மாலை; அகலம் - மார்பு.
2. விம்ம - புடைக்க; முயங்கும் - தழுவும்; துணை - காதலர்.
3. எழிலி - மேகம்.
4. நெய்தல் - சாப்பறை; நீர்த்து - தன்மையது.

தலைவி கூற்று

நற்றிணை 289 **மருங்கூர்ப்பட்டினத்துச் சேந்தன் குமரனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடைப் பருவங்கண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிய கார்ப்பருவம் தொடங்கிய பிறகும் தலைவன் வரவில்லை என்பதறிந்து தலைவி தன் மனம் நொந்து சொல்லியது.

அம்ம வாழி தோழி! காதலர்
நிலம்புடை பெயர்வது ஆயினும் கூறிய
சொல்புடை பெயர்தலோ இலரே; வானம்
நளிகடல் முகந்து, செறிதக இருளி,
கனைபெயல் பொழிந்து, கடுங்குரல் பயிற்றிக்
கார்செய்து, என்உழை அதுவே, ஆயிடை
கொல்லைக் கோவலர் எல்லி மாட்டிய
பெருமர வேரடிப் போல,
அருள்இலேன் அம்ம; அளியேன் யானே.

தெளிவுரை

"இந்நிலமே பெயர்வதாய் இருந்தாலும் என் காதலர் தாம் சொல்லிய சொற்களிலிருந்து மாறாதவர். மேகம், குளிர்ச்சி

பொருந்திய கடலில் நீரை முகந்து சென்று வானமெங்கும் செறிந்த இருளைச் செய்து, பெருமழை பொழிந்து, இடியிடித்துக் கார் காலம் தொடங்கியதெனத் தெரிவிக்கின்றது. முல்லைநிலப்பகுதியில் ஆயர்கள் இரவில் கொளுத்திய பெரு மரத்தின் வேரடிக் கட்டையைப் போன்று காமநோயும் என்னுள்ளேயே கனிந்து பெருகிக் கனன்றுகொண்டுள்ளது. இந்நிலையில் தலைவரின் அருளில்லாத நான் பெரிதும் இரக்கத்திற்குரியவள் ஆயினேன்" என, தலைவன் உரிய காலத்தில் திரும்பி வாரா திருப்பதனால் தலைவி நொந்து கூறினாள்.

கருத்து

கார் காலம் தொடங்கியது; காதலன் இன்னும் வந்து சேரவில்லை.

விளக்கம்

"மேகம் இருண்டு, மின்னி, இடித்துப் பெருமழை பெய்து கார் காலம் தொடங்கியிருப்பதை அறிவிக்கிறது. உலகமே தலைகீழாய் மாறினாலும் தான் சொல்லிய சொல்லிலிருந்து பிறழாத தலைவன் இன்னும் வந்திலன். எரிக்கப்பட்ட பெரு மரத்தின் வேரடிக்கட்டை அவிப்பாரின்றித் தானே வெந்து எரியும் கனல்போல என் நெஞ்சம் காம நோயால் கனன்று கொண்டிருக்கிறது" எனத் தலைவி, கார் காலம் தோன்றியும் காதலர் வாராதது குறித்து வருந்திக் கூறினாள்.

இறைச்சி

காட்டில் கோவலர் கொளுத்திய மரக்கட்டை அவிப்பாரின்றித் தானே வெந்தழிவதுபோல, நானும் அருள்செய்யும் தலைவரின்றிக் காமத்தீயால் வெந்து அழிந்துகொண்டிருக்கின்றேன் என்கிறாள் தலைவி.

குறிப்பு

உலகமே பிறழ்ந்தாலும் தலைவன் தான் சொன்ன சொல்லிலிருந்து பிறழாதவன் என்றது, அவன் தான் கூறியவாறே உடனே வந்து சேர்வான் எனத் தலைவி நம்பிக்கை கொண்டுள்ளாள் என்பதைப் புலப்படுத்துகிறது.

சொற்பொருள்

2. நிலம் புடை பெயர்தல் - உலகம் தன் நிலையினின்று பெயர்ந்தாலும்.
3. சொல் புடை - சொன்ன சொல்லிலிருந்து பிறழ்ந்து.
4. நளிகடல் - குளிர்ச்சி பொருந்திய கடல்; செறிதக - செறிந்து.
5. கனைபெயல் - மிக்க மழை; கடுங்குரல் பயிற்றி - இடி இடித்து.
6. கார் செய்து - கார் காலத்தைத் தோற்றுவித்து; உழை - பக்கம் (என் எதிரே தோன்றுகின்றது); ஆயிடை - அங்கே.
7. கொல்லை - புன்செய்க்காடு; கோவலர் - இடையர்; எல்லி - இரவு; மாட்டிய - எரி கொளுத்திய.
8. வேரடி - வேர் தோன்றிய அடிப்பகுதி.
9. அருள் இலேன் - அவர் அருளைப் பெறாதவள் ஆயினேன்; அளியேன் - இரங்கத்தக்கவள்.

தலைவி கூற்று

நற்றிணை 302 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : பாலை

கூற்று

பருவங் கழிந்தது கண்டு தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

'கார் காலம் தொடங்கும்போது வந்து சேர்வேன்' என்று கூறிப் பிரிந்தான் தலைவன். அப்பருவம் தொடங்கியும் அவன் வாராதது கண்ட தலைவி, 'அப்பருவம் தொடங்கியுள்ளதைத் தலைவன் அறியவில்லையோ' எனத் தன் வருத்தத்தை மனம் நொந்து கூறியது.

இழைஅணி மகளிரின் விழைதகப் பூத்த
நீடுசுரி இணர சுடர்வீக் கொன்றைக்
காடுகவின் பூத்த ஆயினும், நன்றும்
வருமழைக்கு எதிரிய மணிநிற இரும்புதல்
நரைநிறம் படுத்த நல்இணர்த்து எறுழ்வீ
தாஅம் தேரலர் கொல்லோ சேய்நாட்டு,

களிறுஉதைத்து ஆடிய கவிழ்கண் இடுநீறு
வெளிறுஇல் காழ வேலம் நீடிய
பழங்கண் முதுநெறி மறைக்கும்.
வாங்குஅருங் கானம் இறந்திசி னோரே.

தெளிவுரை

"தலைவர் பொருளீட்டிவரும் ஆர்வத்தினால் நம்மைப் பிரிந்து வெகுதொலைவில் உள்ள வேற்று நாட்டிற்குச் சென்றுள்ளார். அவர் சென்றுள்ள காட்டுவழியில் யானை தன் காலால் உதைத்து உழக்குதலினாலே புழுதி எழுந்து வழிச் செல்வோரின் கண்ணில் பட்டு மறைக்கும்; வயிரம் வாய்ந்த வேலமரங்கள் உயரமாக வளர்ந்திருக்கும். (கொன்றை மரங் களில்) பொன்னாலான அணிகளை அணிந்த பெண்களைப் போலக் கண்டார் விரும்பி நோக்குமாறு நீண்டு சுருண்டு ஒளிவீசும் பூங்கொத்துகள் காடு அழகு கொள்ளப் பூத்திருக்கும். இக்காட்சியினை அவர் காண்பார்; கண்டதும், நாம் திரும்பி வருவதாய்ச் சொன்ன காலம் இது என்னும் நினைவு அவருக்கு எழும். கொன்றையால் காடு அழகு பெற்றுள்ளதோடு, கார் கால மழையை எதிர்நோக்கி மலர்ந்திருக்கும் நீலமணியின் நிறத்தை யுடைய பெரிய பூம்புதரின் இடையே வெண்மையான எறுழம் பூக்களும் மலர்ந்து உதிர்ந்து பரவிக் கிடக்கும். தலைவர் இக் காட்சியினைக் காணாதிருப்பதற்கு வாய்ப்பில்லை. அவ்வாறி ருந்தும் அவர் வாராதிருப்பது என் நெஞ்சைப் பெரிதும் வருத்து கின்றது" என்றாள், தலைவி.

கருத்து

'கார் காலத்தில் திரும்பி வருவேன் என்று தலைவர் கூறிச் சென்றார். அவர், தாம் சென்ற வழியில் கொன்றைகள் பூத்திருப்பதையும், புதர்களில் எறுழம் பூக்கள் பரந்து கிடப்பதையும் கண்டிருப்பார். எனினும், அவர் வாராதிருக்கிறாரே' எனத் தலைவி வருந்திக் கூறினாள்.

குறிப்பு

கொன்றை, எறுழம் - கார் கால மலர்கள்.

சொற்பொருள்

1. இழை அணி - அணிகலன்கள் அணிந்த; விழைதக - விரும்பும் படியாக.
2. நீடு சுரி - நீண்டு சுருண்ட; சுடர்வீ - ஒளி வீசும் பூ.
4. வருமழைக்கு - கார் காலத்தில் பெய்யும் மழையை; எதிரிய - எதிர் நோக்கி மலர்ந்திருக்கும்; மணி - நீலமணி; இரும்புதல் - பெரிய புதர்.
5. நரை நிறம் - வெண்ணிறம்; படுத்த - கொண்ட; எறுழ்வீ - எறுழம் பூ.
6. தாஅம் - பரவிக் கிடக்கும்; தேரலர் - தெளிந்திலர்.
7. களிறு - ஆண்யானை; ஆடிய - அசைதலால்; கவிழ்கண் இடுநீறு - புழுதி எழுந்து கண்ணை மறைப்பது.
8. வெளிறு இல் - உள்துளை இல்லாதது; காழ் - வயிரம் ஏறிய; வேலம் - வேல மரம்; நீடிய - நிறைந்த.
9. பழங்கண் - பாழ்பட்ட; முதுநெறி - பழமையான பாதை.
10. வாங்கு அருங்கானம் - செல்வதற்கரிய காடு; இறந்திசினோர் - கடந்து சென்றோர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 65 **கோவூர் கிழார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது. (அழிந்த - வருந்திய.)

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்குமுன் வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவர், கார்ப்பருவம் தொடங்கிய பின்னரும் வந்து சேராததால் வருந்திய தலைவி தோழியிடம் கூறியது.

வன்பரல் தெள்அறல் பருகிய இரலைதன்
இன்புறு துணையொடு மறுவந்து உகளத்
தான்வந் தன்றே, தளிதரு தண்கார்
வாராது உறையுநர் வரல்நசைஇ,
வருந்திநொந்து உறைய இருந்திரோ எனவே.

தெளிவுரை

"வலிய பரல்கற்களிடையே உள்ள தெளிவான நீரைப் பருகிய, இரலைமான், இன்பத்தைத் தரும் தன் பெண்மானுடன் மகிழ்ச்சி யால் துள்ளி விளையாடிக் கொண்டிருக்கின்றது. தோழி! 'உரிய பருவம் தொடங்கியும் வாராமல் பிரிந்து சென்று தங்கியிருக்கும் தலைவர் வருகையை விரும்பி மிகவும் துன்புற்று இன்னும் உயிரோடு இருக்கின்றாயோ?' என்று என்னைக் கேட்பதுபோல மழைத் துளியைச் சிதறியவண்ணம் கார் காலமும் வந்து சேர்ந்து விட்டது."

கருத்து

இரலை மானினம் இன்பமுடன் துள்ளி விளையாடும் கார் காலம் தொடங்கி விட்டது; ஆனால் தலைவர் இன்னும் வரவில்லை.

விளக்கம்

'குறித்த காலத்தே வருவதாய்ச் சொன்ன தலைவன் அப்பருவம் தொடங்கியும் அவன் வாராதிருப்பதால் வருந்தி நொந்து இன்னும் உயிரோடு இருக்கிறாயே' என்று கார்ப்பருவம் தோன்றித் தலைவியை ஏளனம் செய்வதுபோல இருக்கிறதாம்.

கார்ப்பருவத்தில் மான் தன் துணையுடன் கூடித் துள்ளி விளையாடுகிறது. இக்காட்சி அவர் சென்றிருக்கும் இடத்திலும் காணப்படும்; அஃது இந்த மானைப்போலத் தாமும் தம் காதலி யுடன் கூடி மகிழ்ந்திருக்க வேண்டும் என்னும் எண்ணத்தை அவரிடம் தோற்றுவிக்காதா?

குறிப்பு

பீர்க்கு கார்ப்பருவப் பூ; இது கொடிப் பூவாகும்; பொன் நிறம் கொண்டது; முல்லைநிலப்பூ. கொடி, புதர்களிலும் வீட்டுக் கூரைகளிலும் படரும்.

சொற்பொருள்

1. வன் - வலிமையான; பரல் - பரல்கற்கள்; தெள்அறல் - தெளிந்த நீர்; இரலை - ஆண்மான்.
2. மறுவந்து - மகிழ்ச்சியால்; உகள - துள்ளி விளையாட.

3. தளி தரு - மழைத்துளியைச் சிதறும்; தண்கார் - குளிர்ச்சியான கார் காலம்.
4. உறையுநர் - தங்கியிருப்பவர்; நசைஇ - விரும்பி.
5. இருந்திரோ - இருக்கின்றீரோ; எனவே - என்று கேட்பதுபோல.

தலைவி கூற்று

குறுந்தொகை 98 **கோக்குள முற்றனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கூறிச் சென்ற பருவத்தே வாராமையால் வருந்திய தலைவி, ‘பருவம் தொடங்கியதையும், நான் பசலையுற்றுள்ள நிலையையும் யாரேனும் தலைவரிடம் சொன்னால் நன்மையாகும்’ என்று தோழியிடம் கூறியது.

‘இன்னள் ஆயினள் நல்நுதல்’ என்று,அவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே,
நன்றுமன் வாழி தோழி! நம்படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத்து அலர்சில கொண்டே.

தெளிவுரை

“தோழி! மாரிக்காலத்தில் நம் தோட்டத்திலுள்ள நீர் ஒழுகுகின்ற பசுமையான புதரிலே தழைத்துப் படர்ந்திருக்கிற பீர்க்கு மலர்கள் சிலவற்றைப் பறித்துக் கொண்டுபோய், தலைவரை நெருங்கிச் சென்று, ‘நல்ல நெற்றியைக் கொண்ட உன் காதலி, இப்போது இந்தப் பீர்க்க மலரைப்போல் பசலை நிறத்தைப் பெற்றுள்ளாள்’ என்று சொல்லுகின்ற ஒருவரைப் பெற்றால் மிகவும் நன்மையாய் இருக்கும்.”

கருத்து

நான் பசலை நோயுற்று அழகழிந்ததைத் தலைவரிடம் சென்று அறிவிப்பார் எவரும் இலரோ?

விளக்கம்

தலைவன் பொருளீட்டி வரப் பிரிந்தான்; கார்ப்பருவத்தே திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற அவன், அப்பருவம் தொடங்கியும் வரவில்லை. 'உன் பிரிவினால் தலைவி பசலையுற்றாள்; அவள் மேனி அழகும் அழிந்தது; நீ கூறிச் சென்ற பருவமும் தொடங்கியது' என்று அவனிடம் யாரேனும் நினைவுறுத்தினால் அவன் விரைந்து வருவான் எனத் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. இன்னல் ஆயினள் - இவ்வாறு ஆய்விட்டாள்; நல்நுதல் - நல்ல நெற்றி(யைக் கொண்ட உன் காதலி).
2. துன்னச் சென்று - நெருங்கிச் சென்று; செப்புநர் - சொல்பவரை; பெறின் - பெற்றால்.
3. படப்பை - வீட்டுக்கு அண்மையில் உள்ள தோட்டம்.
4. நீர்வார் - நீர் ஒழுகுகின்ற; பைம்புதல் - பசுமையான புதர்; கலித்த - தழைத்த.
5. மாரி - மழைக்காலம்; பீரம் - பீர்க்கம்; அலர் - மலர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 126 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியதைக் கண்டு தலைவியின் வருத்தம் மிகுதியானது. அவள் தன் வருத்தத்தைத் தோழியிடம் கூறி, ஆறுதல் பெற முயல்வது.

இளமை பாரார்; வளம்நசைஇச் சென்றோர்
இவணும் வாரார்; எவண ரோ?எனப்
பெயல்புறம் தந்த பூங்கொடி முல்லைத்
தொகுமுகை இலங்குஎயிறு ஆக
நகுமே தோழி! நறுந்தண் காரே.

தெளிவுரை

'நம் தலைவர் இளமைப்பருவத்தின் சிறப்பையும் நிலையாமையினையும் எண்ணிப் பாராமல், பொருள்மேல் ஆசைப்பட்டு அதனைத் தேடச் சென்றவர், இவ்விடத்திற்கு இன்னும் திரும்பி வரவில்லை. அவர் எவ்விடத்தில் இருக்கிறாரோ என நாம் எண்ணிக்கொண்டிருக்கிறோம்! நறிய குளிர்ந்த கார் கால மழையினால் காப்பாற்றப்பட்ட முல்லைக்கொடிகள் செழித்து வளர்ந்திருக்கின்றன. இம்முல்லைக்கொடிகள் தம் மலர் மொட்டுகளையே ஒளி விளங்கும் பற்களாய்க்கொண்டு என்னை நோக்கிச் சிரிக்கின்றன; நான் என்ன செய்வேன்?' என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

முல்லை மலரும் கார் காலம் தொடங்கியும் அவர் இன்னும் வரக் காணேன்.

விளக்கம்

இளமைப்பருவம் நிலை நில்லாதது; மறைந்துவிடும் தன்மை கொண்டது. அது மறைவதற்கு முன்பே மனமகிழ்ந்து இன்புற வேண்டும்.

குறிப்பு

முல்லைக்கொடிகள், 'எம் காதலனாகிய கார் காலம் வந்துவிட்டது; உன் காதலன் இன்னும் வரவில்லையே' என்று தலைவியை எள்ளி நகையாடிச் சிரிப்பதுபோல இருக்கிறதாம்.

முல்லை அரும்பவிழ்ந்திருப்பது பெண்கள் சிரிப்பினை ஒத்திருக்கும்.

சொற்பொருள்

1. வளம் - பொருள்; நசைஇ - விரும்பி.
2. இவண் - இங்கு; எவணரோ? - எங்குள்ளாரோ?

3. பெயல் - மழை; புறம் தந்த - காப்பாற்றப்பட்ட, வளர்த்த.
4. தொகுமுகை - வரிசையாய்த் தொகுத்து வைக்கப்பட்ட மொட்டுகள்; இலங்கு - ஒளி விளங்கும்; எயிறு - பல்.
5. நகுமே - எள்ளி நகையாடிச் சிரிக்குமே; கார் - கார் காலம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 183 **ஔவையார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் கூறிச் சென்ற கார்ப்பருவம் தொடங்கியும் அவன் வாராமையால் தலைவி ஆற்றாளென்று வருந்தியிருந்தாள், தோழி. அவளிடம் தலைவி, கார் கால அடையாளங்களைக் கண்டு அவர் வந்துவிடுவார் என்னும் நம்பிக்கையோடு ஆற்றியிருப்பதாய்க் கூறியது.

சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ
நம்போல் பசக்கும் காலை, தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல் நமரே?
புல்லென் காயாப் பூக்கெழு பெருஞ்சினை
மென்மயில் எருத்தில் தோன்றும்
புன்புல வைப்பிற் கானத் தானே.

தெளிவுரை

"கார் கால மழை பொழிவதற்குமுன் பொலிவிழந்திருந்த காயா மரத்தின் பெரிய கிளைகள், மழை பெய்த பின் பூக்கள் நிறையப் பெற்று, மென்மையான மயிலின் கழுத்தைப் போலத் தோன்றும். அவர் சென்றுள்ள புன்செய்நிலக் காட்டிடத்திலும் இக்கார் காலத்தில் கொன்றையின் அழகிய பசிய பூக்கள் நம் பசலையைப் போலப் பொன்னிறம் பெற்றிருக்கும். இத்தகைய

பருவத்தில் சிறிய தலையைக் கொண்ட தன் பெண்மானை நெருங்கிக் கிளைத்திருக்கும் கொம்புகளைக் கொண்ட ஆண்மான், பிரிந்து தனித்திருக்கக் காண்பாரா? (காணார்)."

கருத்து

காயாவும் கொன்றையும் பூத்திருக்கும் கார் காலத்தில் மான்கள் இணைந்திருப்பதைக் கண்டும் தலைவர் என்னோடு இணைய வரவில்லையே!

விளக்கம்

"தலைவர் தாம் சென்ற நாட்டில் கொன்றை மரங்கள் பூத்துப் பொன்னிறம் பெற்றிருப்பதைக் காண்பார். காயாம் பூக்கள் மயிலின் கழுத்து நிறம்போலப் பூத்திருப்பதையும் காண்பார். முல்லைக் காட்டில் கார்ப்பருவத்தில் மான்கள் தனியாய்த் திரிவதை அவரால் காண இயலாது. ஆணும் பெண்ணும் இணைந்தே உலவும். இவற்றைக் கண்டவுடன் கார் காலம் தோன்றிவிட்டதை அறிந்தும் மான்களைப்போல் தாமும் தமது துணையுடன் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்னும் எண்ணம் தூண்டவும் உடனே திரும்பி வருவார்" என்னும் நம்பிக்கையைத் தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. பசு வீ - பசிய மலர்கள்.
2. பசக்கும் காலை - பசக்கும் பொழுது (மாலை நேரம்).
3. பிணை - பெண்மான்; தீர்ந்த - பிரிந்த; நெறி கோட்டு - நெருங்கிக் கிளைத்திருக்கும் கொம்புகளைக் கொண்ட.
4. இரலை மான் - ஆண்மான்; நமர் - நம்மவர், தலைவர்.
5. புல்லென் காயா - பொலிவிழந்திருந்த காயா மரம்; பூக்கெழு - பூக்கள் நிறைந்த; பெருஞ்சினை - பெரிய கிளை.
6. எருத்து - கழுத்து.
7. புன்புலம் - புன்செய் நிலம்; வைப்பு - இடம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 186 **ஒக்கூர் மாசாத்தியார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் கூறிச் சென்ற பருவம் தொடங்கிய பின்னரும், அவன் வந்திலனாக, 'தலைவி இனி ஆற்றாள்' எனக் கவலை கொண்ட தோழியிடம் தலைவி கூறியது.

ஆர்கலி ஏற்றொடு கார்தலை மணந்த
கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி
எயிறுஎன முகையும் நாடற்குத்
துயில்துறந் தனவால் தோழி!என் கண்ணே.

தெளிவுரை

"தோழி! முல்லை நிலத்தில் மிகுந்த ஆரவாரம் கொண்ட இடியுடன் மழையும் கலந்து பெய்தது. முல்லையின் மென்மை யான கொடிகள் மகளிரின் பற்களைப் போல அரும்புகின்ற நாட்டையுடைய என் தலைவன் பொருட்டு என் கண்கள் தூக்கத்தை இழந்துவிட்டன" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

கார் தொடங்கியது; என் உறக்கம் விலகியது.

விளக்கம்

தலைவன் வரவில்லையே என்று தலைவி கவலை கொண்டிருக் கிறாள். கவலையுற்ற அவளைக் கண்டு தோழி மிகவும் துக்கமடைகிறாள்; அவளால் தலைவிக்குத் தக்க ஆறுதல் மொழி கூற இயலவில்லை. அவள் நிலை கண்ட தலைவி, தன் துக்கத்தைத் தானே தோழியிடம் சொல்லுகிறாள்.

குறிப்பு

'முல்லை முகையைக் கண்டதும் நம் இளமுறுவலை நினைவுகூர்ந்து தலைவன் நம்மிடம் விரைந்து வருவான் என நான் ஆற்றியிருக்கிறேன்' எனத் தலைவி தோழியிடம் கூறினாள் என்றும் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. ஆர்கலி - மிகுந்த ஆரவாரம்; ஏறு - இடியேறு; கார்தலை மணந்த - மழையும் கலந்த.
2. கொல்லைப்புனம் - முல்லை நிலம்; மென்கொடி - மென்மையான கொடி.
3. எயிறு - பல்; முகையும் - அரும்பும்.
4. துயில் துறந்தன - தூக்கத்தை இழந்தன.

தலைவி கூற்று

குறுந்தொகை 194 **கோவத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் 'ஆற்றாள்' எனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் திரும்பிவிடுவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் குறித்தபடி வாராததால் தலைவி வருத்தமுறுவாளே எனக் கவலையுற்றிருந்த தோழியிடம் தலைவி சொல்லியது.

என்னனப் படுங்கொல் தோழி! மின்னுபு
வான்ஏர்பு இரங்கும் ஒன்றோ? அதன்எதிர்
கான மஞ்ஞை கடிய ஏங்கும்;
ஏதில கலந்த இரண்டற்குஎன்
பேதை நெஞ்சம் பெருமலக் குறுமே.

தெளிவுரை

“தோழி! மின்னி வானில் எழுந்து முழக்கம் செய்யும் மேகம் ஒன்றுமட்டுமா என்னை வருத்துகின்றது? இந்த இடி முழக்கத்திற்கு எதிராய்க் காட்டிலுள்ள மயில்களெல்லாம் விரைந்து கூடி ஆரவாரிக்கின்றனவே! எனக்குப் பகையாய்ச் சேர்ந்துள்ள இவ்விரு ஒலிகளுக்கும் எதிர் நிற்க முடியாமல் என் மனம் அலைப்புண்டு மிகவும் வருந்துகிறது. என் நெஞ்சின் நிலையை என்னென்று சொல்வது?”

கருத்து

மேகம் முழங்கி மயில்கள் ஆடும் கார் காலம் தொடங்கிவிட்டது; அவர் இன்னும் வரவில்லை; என் நெஞ்சம் வருந்துகின்றது.

விளக்கம்

பகை ஒன்றென்றால் ஒருவாறு பொறுத்துக்கொள்ளலாம். இரு பகை ஒன்றாய்ச் சேர்ந்து வரும்போது நான் எப்படி எதிர்த்து நிற்க இயலும்? (மேகம் மின்னி முழங்குவது, ஒரு பகை; மயில் ஆடுவது, மற்றொரு பகை.)

சொற்பொருள்

1. என் எனப்படும் - என்னவென்று சொல்லப்படும்?; மின்னுபு - மின்னி.
2. வான் ஏர்பு - (மேகம்) வானத்தில் எழுந்து; இரங்கும் - முழங்கும்; ஒன்றோ - இஃது ஒன்று மட்டுமா?; அதன் எதிர் - அந்த இடிமுழக்கத்திற்கு எதிராய்.
3. மஞ்ஞை - மயில்; கடிய - விரைந்து; ஏங்கும் - ஆரவாரிக்கும்.
4. ஏதில கலந்த - எனக்கு வேறாய் எதிர்த்துச் சேர்ந்த.
5. மலக்குறும் - மயங்கும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 216 **கச்சிப்பேட்டுக் காஞ்சிக் கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

பருவ வரவின்கண் ஆற்றாளெனக் கவன்ற தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கிவிட்டதால் தலைவி ஆற்றியிருக்க மாட்டாள் என வருத்தமுற்றிருந்தாள், தோழி. அவளிடம் தலைவி, 'கார் கால மழை பெய்யத் தொடங்கி விட்டது; அவர் வாராததால் நான் எப்படி வருந்தாதிருக்க இயலும்?' என்று மனம் நொந்து கூறியது.

அவரே, கேடுஇல் விழுப்பொருள் தருமார், பாசிலை
வாடா வள்ளிஅம் காடுஇறந் தோரே;
யானே, தோடுஆர் எல்வளை ஞெகிழ நாளும்
பாடுஅமை சேக்கையில் படர்கூர்ந் திசினே;
'அன்னள் அளியள்' என்னாது, மாமழை
இன்னும் பெய்யும்; முழங்கி
மின்னும் தோழி!என் இன்உயிர் குறித்தே.

தெளிவுரை

"தோழி! நன்மை தரும் சிறந்த பொருளைத் தேடி வருவதற்காக, பசிய இலைகள் வாடாத, வள்ளிக்கொடி படர்ந்திருக்கும் அழகிய காட்டினைக் கடந்து தலைவர் சென்றுள்ளார். நானோ, சிறப்பாய் அமைந்துள்ள படுக்கையில் கிடந்து, தொகுதியாய் அமைந்த ஒளி பொருந்திய வளையல்கள் நெகிழும்படி கவலை கொண்டு நாள்தோறும் அவரை நினைந்து துன்பம் மிகுந்து வருந்துகிறேன். 'இப்படிப்பட்ட இவள் இரங்கத்தக்கவள்' என்று கருதாமல், பெரிய கரிய மேகம், மின்னி, இடித்து என் உயிரை வாங்க இன்னும் பெய்கிறது."

கருத்து

தலைவன் அருகில் இல்லாததால், கார்மழை பெய்யக் கண்டு, நான் வருந்தாது எப்படி இருக்க இயலும்?

விளக்கம்

“நானோ, பொருள் தேடச் சென்ற தலைவரைப் பிரிந்து வருந்தியிருக்கிறேன்; ஒளி பொருந்திய வளையல் கழன்று விழ, உடல் மெலிவுறப் படுக்கையில் வாடிக் கிடக்கிறேன். என் நிலை கண்டு இம்மேகம் இரங்காது, இன்னும் மழை பொழிய இடியினை முழக்க மின்னுகிறது. இந்நிலையில் நான் எப்படி ஆற்றியிருக்க இயலும்?” எனத் தலைவி தன்னைத் தேற்றிய தோழியிடம் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கேடு இல் - குற்றமில்லாத; விழுப்பொருள் - சிறந்த செல்வம்; தருமார் - தேடிக்கொண்டு வருவதற்காக; பாசிலை - பசிய இலைகள்.
2. வள்ளி - வள்ளிக்கொடி; இறந்தோரே - சென்றுள்ளார்.
3. தோடுஆர் - தொகுதியாய் அமைந்த; ஞெகிழ - நெகிழும்படி, கழலுமாறு.
4. பாடுஅமை - வேலைப்பாடு அமைந்த, சிறந்த; சேக்கை - படுக்கை; படர்கூர்ந்திசின் - துன்பம் மிகுந்து வருந்துகிறேன்.
5. அளியள் - இரங்கத்தக்கவள்; மாமழை - பெரிய மேகத் தொகுதி.
6. முழங்கி - இடித்து.
7. உயிர் குறித்து - உயிரை வாங்கக் கருதி.

தலைவி கூற்று

குறுந்தொகை 285 **பூதத் தேவன்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டு வேறுபட்டவிடத்து வற்புறுத்தும் தோழிக்கு வன்புறை எதிரழிந்து தலைமகள் சொல்லியது.

(வன்புறை - வற்புறுத்தல். எதிரழிதல் - இசையாமல் வருந்துதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் குறித்துச் சென்ற கார்ப்பருவத்தில் திரும்பாதலால் தலைவி மிகவும் வருந்தியிருந்தாள். அதனைக் கண்ட தோழி, தலைவன் வரும்வரை

ஆற்றியிருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறாள். அதற்கு இசையாமல் தலைவி தோழியிடம் கூறியது.

வைகல் வைகல் வைகவும் வாரார்
எல்லா எல்லை எல்லவும் தோன்றார்
யாண்டுளர் கொல்லோ தோழி ஈண்டுஇவர்
சொல்லிய பருவமோ இதுவே; பல்லூழ்
புன்புறப் பெடையொடு பயிரி, இன்புறவு
இமைக்கண் ஏதா கின்றோ? ஞெமைத்தலை
ஊன்நசைஇப் பருந்திருந்து உகக்கும்
வான்உயர் பிறங்கல் மலைஇறந் தோரே.

தெளிவுரை

தோழி! இங்கு இனிய ஆண்புறா ஒன்று, மெல்லிய புறச் சிறகைக் கொண்ட பெண்புறாவொடு பல முறை கூடுவதற்குரிய குறிப்பொடு அழைத்து, இமைப்பொழுதில் சொல்லுதற்கரிய மகிழ்ச்சியில் கூடித் திளைக்கின்றதே! ஆனால், தலைவர் சென்ற வழியில் ஞெமை மரத்தின் உச்சியிலிருந்த பருந்து ஒன்று இறந்து கிடப்பவரது தசையை விரும்பி உயரப் பறந்து கொண்டிருக்கும். அத்தகைய பருந்திருக்கும் வானளவு உயர்ந்து விளங்கும் மலையைக் கடந்து சென்ற நம் தலைவர், நிலை நில்லாத பகற்பொழுதுகள் வந்து வந்து போய்க் கொண்டே இருக்கவும் வாராராயினர். எல்லா இரவுப் பொழுதும் வந்து வந்து செல்லவும் நம்முன் தோன்றாராயினர். அவர் இப்போது எங்கு இருக்கின்றாரோ? அவர் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் இதுவேயாகும். (தாம் கூறியபடி வந்திலர்.)

கருத்து

அவர் சொன்ன பருவம் தொடங்கியும் அவர் வந்திலரே?

விளக்கம்

"தலைவர் வருவார், வருவார் என்று நாள்தோறும் நான் எதிர் பார்த்து ஏங்குகிறேன்; பகற்காலத்தில் எதிர்பார்த்தேன், வரவில்லை; பகல் கழிந்து இரவு ஏற்பட்ட பிறகாவது வருவார்

என்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன்; அப்போதும் வரவில்லை. அவர் திரும்பி வருவதாகச் சொல்லிச் சென்ற பருவமும் தொடங்கி விட்டது. இந்நிலையில் நான் வருந்தாமல் என் செய்வது? அவர் எங்கே இருக்கிறாரோ, அதுவும் தெரிய வில்லை" என்று தலைவி வருந்திச் சொல்லுகின்றாள்.

சொற்பொருள்

1. வைகல் - நாள்தோறும்; வைகல் வைகவும் - பகலிலே எதிர்பார்த்து இருக்கவும்; வாரார் - வந்திலர்.
2. எல்லா எல்லை - எல்லாப் பகலின் முடிவாகிய; எல்லவும் - இரவிலும்; தோன்றார் - காணப்பட மாட்டார்.
3. யாண்டுளர் - எங்குள்ளாரோ? ஈண்டு - இங்கே.
4. சொல்லிய - திரும்ப வருவதாய்ச் சொல்லிய; பல்லூழ் - பலமுறை.
5. புன்புறம் - மெல்லிய புறச்சிறகுகளைக் கொண்ட; பயிரி - அழைத்து; இன்புறவு - இனிய ஆண்புறா.
6. இமைக்கண் - இமைப்பொழுதில்; ஏது ஆகின்று ஓ - எத்தகைய இன்பத்தை அடைகிறது; ஞெமைத் தலை - ஞெமை மரத்தின் உச்சியில்.
7. ஊன் நசைஇ - தசை உணவை விரும்பி.
8. வான் உயர் பிறங்கல் - வானளவு உயர்ந்த மலையை; இறந்தோர் - கடந்து சென்றவர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 453 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவ வரவு கண்டு, ஆற்றியிருக்க இயலாதவளாகிய தலைவி, தன் தனிமைத்துயரினைத் தோழியிடம் சொல்லியது.

அவல்தொறும் தேரை தெவிட்ட, மிசைதொறும்
வெங்குரல் புள்ளினம் ஒலிப்ப, உதுக்காண்
கார்தொடங் கின்றால் காலை; அதனால்
நீர்தொடங் கினவால் நெடுங்கண்;அவர்
தேர்தொடங் கின்றால் நம்வயி னானே!

தெளிவுரை

"நீர் நிறைந்த பள்ளந்தோறும் தேரைகள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. மரங்களின் உச்சிதோறும் விரும்பத் தகுந்த குரலில் பறவைகள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன; அதோ பார்! கார்ப் பருவமும் இம்முல்லை நிலத்தில் தொடங்கிவிட்டது. ஆனால், அவர் தேரோ நம்மை வந்தடைய இன்னமும் பயணத்தைத் தொடங்கவில்லை. அதனால் ஒளி பொருந்திய என் நீண்ட கண்கள் நீர் பொழியத் தொடங்கிவிட்டன."

கருத்து

கார்ப்பருவம் தொடங்கிவிட்டது; ஆனால், தலைவரது தேர்ப்பயணம் நம் ஊரை நோக்கி இன்னும் தொடங்கவில்லை.

சொற்பொருள்

1. அவல் - பள்ளம்; தெவிட்ட - ஒலிப்ப; மிசை - மேலிடம்.
2. வெங்குரல் - விரும்பத் தகுந்த குரல்; புள்ளினம் - பறவையினங்கள்; உதுக்காண் - இதோ பார்.
3. கார் தொடங்கின்று - கார்ப்பருவம் தொடங்கிவிட்டது.
4. நீர் - கண்ணீர்.
5. தேர் தொடங்கின்றால் - தேர் தன் பயணத்தைத் தொடங்கவில்லை; நம் வயின் - நம்மை நோக்கி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 454 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் தலைமகள் ஆற்றாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவம் தொடங்கியது கண்டு ஆற்றியிருக்க முடியாதவளாகிய தலைவி தன் தனிமைத்துயரினைத் தோழியிடம் சொல்லியது.

தளவின் பைங்கொடி தழீஇப் பையென
நிலவின் அன்ன நேர்அரும்பு பேணிக்
கார்நயந்து எய்து முல்லை;அவர்
நேர்நயந்து உறையும்என் மாமைக் கவினே.

தெளிவுரை

"தோழியே! செம்முல்லையின் பசுமையான கொடியைத் தழுவியபடியே, மெல்லென, நிலவைப் போன்ற நீண்ட வெள்ளை அரும்புகளைக்கொண்டு கார்ப்பருவத்தை விரும்பிய முல்லையோ மலர்ந்திருக்கிறது. என் மாமை அழகோ, தானும் ஒளி பெற்றுத் தோன்றுதற்காகத் தலைவரின் தேர் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது."

கருத்து

கார் தொடங்கியது; தலைவரின் தேர் வரின் என் மாமை அழகு மிகும்.

சொற்பொருள்

1. தளவம் - செம்முல்லை; தழீஇ - தழுவி; பையென - மெல்ல.
2. நேர் அரும்பு - நீண்ட அரும்பு; பேணி - போற்றி.
3. நயந்து - விரும்பி
4. மாமை - நிறம்; கவின் - அழகு.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 458 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்குறித்துப் பிரிந்த தலைமகன் வரவு பார்த்திருந்த தலைமகள் பருவ முதிர்ச்சி கூறி ஆற்றாளாய் உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் கார் காலத் தொடக்கத்தில் வந்துவிடுவதாய்ச் சொல்லிப் பிரிந்து சென்றான். பருவம் முடியப்போகும் நிலையிலும் அவன் வாராமையால் துயரத்தைத் தாங்கவியலாத தலைவி, தோழியிடம் சொல்லியது.

துணர்க்காய்க் கொன்றை குழல்பழம் ஊழ்த்தன
அதிர்பெயற்(கு) எதிரிய சிதர்கொள் தண்மலர்
பாணர் பெருமகன் பிரிந்தெனை
மாண்நலம் இழந்தஎன் கண்போன் றவ்வே

தெளிவுரை

"கொத்தான காய்களைக்கொண்டுள்ள கொன்றை மரத்தில் மகளிர் கூந்தல் போன்ற பழங்கள் முதிர்ந்துவிட்டன. இடி முழக்கத்தோடு கூடிய பெருமழையின்போது கொன்றையின் தண்ணிய மலர்கள் உதிர்ந்தன. பாணர்களைப் பாதுகாக்கும் பெருமகனாகிய நம் காதலன் பிரிந்ததால், அழகை இழந்து பசலை பாயப்பெற்ற என் கண்களைப் போல, உதிர்ந்த கொன்றை மலர்களும் பொன்நிறம் மாறி வெண்மை நிறத்தோடு தோன்றுகின்றன!"

கருத்து

தலைவன் கூறிய காலம் முடியும் தறுவாயிலும் அவன் வந்து சேர வில்லையே!

விளக்கம்

மழையால் நனைந்து வெளிறிய நிறத்தோடு தோன்றும் கொன்றைப்பூ, பண்டைய அழகிழந்து பசந்து விளங்கும் தலைவியின் கண்களை ஒத்தது.

குறிப்பு

கொன்றையின் பழம் முற்றுவதும் அதன் மலர்கள் உதிர்வதும் கார்ப்பருவ முதிர்ச்சிக்கு அறிகுறிகள்.

சொற்பொருள்

1. துணர் - கொத்து; குழல் பழம் - பெண்களின் கூந்தல் போன்ற பழங்கள்; ஊழ்த்தன - முதிர்ந்து விளங்கின.
2. அதிர்பெயல் - இடியோடுங்கூடிய மழை; எதிரிய - ஏற்று; சிதர் - சிந்துதல்.
3. பாணர் பெருமகன் - பாணர்களைப் பாதுகாக்கும் பெருமகனாகிய நம் தலைவன்.
4. மாண் நலம் - மாட்சிமைப்பட்ட அழகு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 109 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியது; அக்காலத்தில் திரும்பி வருவேன் எனச் சொல்லிப் பிரிந்த தலைவன் வாராததால் பொறுத்துக்கொள்ளவியலாத தலைவி தோழியிடம் கூறியது.

என்போல் இகுளை! இருங்கடல் மாந்தியகார்
பொன்போல்தார் கொன்றை புரிந்தன; – பொன்போல்
துணைபிரிந்து வாழ்கின்றார் தோன்றுவர்; தோன்றார்
இணைபிரிந்து வாழ்வர், இனி.

தெளிவுரை

"என் உயிர் போன்ற தோழியே! மேகங்கள் கடல்நீரை அருந்தி மழையைப் பொழிந்தன. கொன்றை மரங்கள் பொன்னைப்

போன்ற மலர்களை மாலைபோலக் கொண்டு நின்றன. அரிதான பொன் போன்ற காதலியரைப் பிரிந்த காதலர் பலர் திரும்பி வந்து தம் காதலியருடன் சேர்ந்து வாழ்கின்றனர். என்னைப் பிரிந்து சென்ற காதலர் இன்னும் வாராமல் பிரிந்தே இருக்கிறார்" எனத் தலைவி தோழியிடம் கூறி வருந்தினாள்.

கருத்து

கார் காலம் தொடங்கியது; பிரிந்து சென்றவர் பலர் திரும்பிவிட்டனர். என் தலைவர் மட்டும் வாராதிருப்பது ஏனோ?

சொற்பொருள்

1. என்போல் - என் உயிர் போன்ற; இகுளை - தோழி; இரும் - பெரிய; மாந்திய - குடித்த; கார் - முகில்கள்.
2. பொன் போல் தார் - பொன்னால் செய்யப்பெற்றது போன்ற மலர் வரிசைகளை; புரிந்தன - பூத்தன; பொன்போல் - பொன்னைப் போன்று பெறுதற்கரிய.
3. துணை - காதலியரை; பிரிந்து வாழ்கின்றார் - பிரிந்து சென்ற காதலர்கள்; தோன்றுவர் - திரும்பி வந்து சேர்ந்தனர்; தோன்றார் - வந்து சேரவில்லை.
4. இணை பிரிந்து - தன் துணையைப் பிரிந்து வாழ்கின்ற தலைவர்; இனி - இக்கார் காலத்திலும்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 105 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், கார் காலம் தொடங்கியும் வரவில்லை. அவன் தான் சொன்னவாறு வரவில்லையே என்று வருந்திய தலைவி தோழியிடம் உரைத்தது.

எல்லை தருவான் கதிர்பருகி ஈன்றகார்
கொல்லைதரு வான்கொடிகள் ஏறுவகாண் – முல்லை
பெருந்தண் தளவொடுதம் கேளிரைப்போல் காணாய்
குருந்தம் ஒடுங்கழுத்தம் கொண்டு.

தெளிவுரை

"தோழியே! பகல் வேளையைத் தரும் கதிரவனின் கதிர்கள் நிலத்தில் உள்ள நீரைக் குடித்து உண்டாக்கிய மழையினால் முல்லை நிலத்தில் கொடிகள் தழைத்து மரங்களில் படர்வதைக் காணாய்! முல்லைச்செடிகள், பெரிய குளிர்ச்சி பொருந்திய செம்முல்லைச் செடிகளுடன் கூடிக் குருந்த மரங்களை, கணவரை மங்கையர் தழுவிக் கொள்வதுபோல், உறுதியாய்ப் பற்றி ஏறுவதையும் பாராய்" என்றாள், தலைவி.

கருத்து

கார்ப்பருவ மழையால் முல்லை தழைத்துக் குருந்த மரத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறது. ஆனால், நான் கணவனைத் தழுவியிருக்க இயலவில்லையே!

குறிப்பு

கார்ப்பருவக் காட்சி, தலைவிக்குப் புணர்ச்சி வேட்கையை மிகுவித்து அவள் வருந்துவதற்குக் காரணமாய் உள்ளது.

சொற்பொருள்

1. எல்லை தருவான் - பகல் தருபவன், சூரியன்; கதிர் - சூரியக்கதிர்கள்; பருகி - நீரைக் குடித்து; ஈன்ற - தோற்றுவித்த; கார் - கார்ப்பருவம்
2. கொல்லை - முல்லை நிலம்; தரும் - வளரச் செய்கின்ற; வான் - நீண்ட; ஏறுவ - (மரங்களில்) படர்ந்துகொண்டிருப்பதை.
3. பெரும் - பெரிய; தண் - குளிர்ச்சி பொருந்திய; தளவு - செம்முல்லை; தம் கேளிரைப்போல் - தம் சுற்றமாகிய கணவரைப்போல.
4. குருந்தம் - குருந்த மரம்; ஒடுங்கு - ஒடுங்கி நிற்கும்படியாக; அழுத்தம் கொண்டு - உறுதியாய்ப் படர்ந்து.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 104 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த கிழத்தி கொன்றைக்குச் சொல்லுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் தலைவன் வாராததால் வருத்தமுற்ற தலைவி தோழி கேட்குமாறு கொன்றை மரத்திடம் சொல்லியது.

ஐந்துருவின் வில்லெழுதி, நாற்றிசைக்கும், முந்நீரை
இந்துருவின், மாந்தி, இருங்கொண்மூ – முந்துருவின்
ஒன்றாய், உருமுடைத்தாய், பெய்வான்போல் பூக்கென்று
கொன்றாய்!கொன் றாய்!எற் குழைத்து.

தெளிவுரை

"ஈச்சம் பழம் போன்ற நிறம் கொண்ட மேகம் கடல் நீரைக் குடித்து, ஐந்து நிறங்களைக் கொண்ட வானவில்லை எழுதி வைத்தாற்போலத் தோன்றுவித்து, நான்கு திசைகளிலும் ஒன்றாய்ப் பரவி, இடி இடித்துப் பெய்யும் மழை என்னைக் கொல்லுகிறது. அதுபோலவே, கார் வரவை அறிவிக்க, கொன்றை மரமே! 'தழைத்துப் பூப்பூக்கச் செய்வேன்' என்று நீயும் என்னைக் கொல்லுகின்றாய்" என்று கொன்றை மரத்தைப் பார்த்துத் தலைவி கூறினாள்.

கருத்து

கொன்றை மரமே! கார் கால வரவை அறிவிப்பதுபோலப் பூக்களைத் தோற்றுவித்து என்னைக் கொன்றுவிடுகிறாய். (கொன்றாய், என்னைக் கொன்றாய்!)

சொற்பொருள்

1. **ஐந்து உருவின் - ஐந்து நிறங்களைக் கொண்ட; வில் எழுதி - வானவில்லை எழுதி; நாற்றிசைக்கும் - நான்கு திசைகளிலும்; முந்நீரை - கடல்நீரை.**

2. இந்து - ஈந்து - ஈச்சம் பழம்; உருவின் - நிறத்தோடு; இருங் கொண்மூ - பெரிய மேகம்; இந்து உருவின் - பழமையான உருவாகிய வானின் நீல நிறத்தைப் போன்று.
3. ஒன்றாய் - ஒன்றாய்ப் பரவி; உரும் - இடி; பெய் - மழையைப் பெய் கின்ற; வான்போல் - வானவெளி (என்னைக் கொல்வது) போல; பூக்கென்று - பூக்கிறேன் என்று.
4. கொன்றாய்! - கொன்றை மரமே!; குழைந்து - தழைத்து; கொன்றாய் - என்னைக் கொல்லுகின்றாய்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 93 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குரைத்தது.

கூற்று விளக்கம்

கார் காலத்தில் திரும்புவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன், கார் காலம் தொடங்கியும் வரவில்லை. அவன் தான் சொன்னவாறு வரவில்லையே என்று வருந்திய தலைவி தோழியிடம் உரைத்தது.

கருங்கடல் மாந்திய வெண்தலைக் கொண்மூ
இருங்கடல்மா கொன்றான்வேல் மின்னிப் – பொருங்கடல்
தன்போல் முழங்கித் தளவம் குருந்தணைய
என்கொல்,யான் ஆற்றும் வகை.

தெளிவுரை

"கருமையான கடலில் புகுந்து நீரையுண்ட, வெண்மையான உச்சியைக் கொண்ட மேகங்கள், பெரிய கடலில் மாமரத்தின் வடிவம் கொண்டிருந்த சூரபன்மனை வென்று அழித்த முருகப் பெருமானின் வேலைப் போன்று மின்னுகின்றன; கடலில் ஒன்றோடொன்று மோதும் அலைகளைப் போல இடித்து ஆரவாரம் செய்கின்றன. அதனால் செம்முல்லைக்கொடிகள் தளிர்த்து அருகில் உள்ள குருந்த மரத்தைச் சேர்ந்து படருகின்ற

கார் காலம் தொடங்கிவிட்டது. நான் பொறுத்துக்கொண்டிருப்பது எவ்வாறு?" எனத் தலைவி தோழியிடம் வினவினாள்.

கருத்து

இடி இடித்து மின்னும் கார் காலம் தொடங்கியும் தலைவன் வரவில்லை; நான் எப்படி ஆற்றியிருக்க இயலும்?

சொற்பொருள்

1. மாந்திய - நீரினை நிறைய உண்ட; கொண்மூ - மேகங்கள்.
2. இருங்கடல் - பெரிய கடல்; மா - மாமரம் (மாமரமாய் நின்ற சூரபன்மன்); கொன்றான் - கொன்றவன் (முருகன்); பொரு - (அலைகள்) மோதுகின்ற.
3. முழங்கி - ஆரவாரித்து; தளவம் - செம்முல்லை; குருந்து - குருந்த மரம்; அணைய - படர.
4. என் கொல்? - எவ்வாறு?

தலைவி கூற்று

அகநானூறு 23 **ஓரோடாகத்துக் கந்தரத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவன் தான் குறித்த கார்ப் பருவத்தில் திரும்பாது காலத்தை நீட்டினான். அதனைக் கண்ட தலைவி, ஆற்றாதவளாய்த் தோழியை நோக்கி வருந்திக் கூறியது.

மண்கண் குளிர்ப்ப, வீசித் தண்பெயல்,
பாடுஉலந் தன்றே, பறைக்குரல் எழிலி,
புதல்மிசைத் தளவின் இதல்முள் செந்நனை
நெருங்குகுலைப் பிடவமொடு ஒருங்குபிணி அவிழ,
காடே கம்மென் றன்றே, அவல,
கோடுஉடைந் தன்ன, கோடல் பைம்பயிர்,

பதவின் பாவை, முனைஇ, மதவுநடை
அண்ணல் இரலை அமர்பிணை தழீஇ,
தண்அறல் பருகித் தாழ்ந்துபட் டனவே;
அனையகொல் வாழி, தோழி! மனைய
தாழ்வின் நொச்சி, சூழ்வன மலரும்
மௌவல், மாச்சினை காட்டி,
அவ்அளவு என்றார், ஆண்டுச்செய் பொருளே!

தெளிவுரை

"தோழி! முரசு போல் முழங்கிய மேகம் நிலம் குளிர்ச்சி பெறுமாறு மழையைப் பெய்து ஒலி அடங்கிற்று. புதரின்மீது படர்ந்த செம்முல்லையின் கவுதாரியின் கால் முள்ளைப் போன்ற அரும்புகள், நெருங்கிய குலைகளைக் கொண்ட பிடாவின் அரும்புகளோடு கட்டவிழ்ந்து மலர்ந்ததால் காடெங்கும் கம்மென்று மணம் வீசுகின்றது. பள்ளமான இடங்களில் மலர்ந்துள்ள சங்குகள் உடைந்தாற்போன்ற வெண்காந்தள் மலர்களையும் பசிய வரகு முதலிய பயிர்களையும் அறுகின் கிழங்குகளையும் தின்ற ஆண்மான் பெண் மானோடு தழுவிக் குளிர்ந்த நீரைப் பருகி ஓரிடத்தே தங்கியுள்ளது.

"வீட்டில் உள்ள குறிய நொச்சியின் கரிய கிளையில் படர்ந்து மலரும் முல்லைக்கொடியைச் சுட்டிக்காட்டி, தாம் வேற்று நாட்டிலிருந்து திரும்புவது அம்முல்லை மலரும் காலமே என்று அன்று நம் தலைவர் சொன்னார். அவர் கூறிய காலம் இக் காலத்தினும் வேறானதோ?" என்று தோழியிடம் கூறித் தலைவி மயங்குகின்றாள்.

கருத்து

தலைவர் தாம் திரும்புவதாய்ச் சொன்ன கார் காலம் தொடங்கிவிட்டதைத் தலைவர் அறிந்திலரோ?

விளக்கம்

தலைவன் பிரிந்திருந்தபோது தலைவி தோழியை நோக்கி, "தோழி! மண் குளிர்ச்சி பெறுமாறு மேகம் மழை பெய்து ஓய்ந்தது; முல்லை அரும்புகள் பிடவமோடு மலர்ந்ததால்

காடெங்கும் 'கம்' என்று மணம் வீசுகிறது; மான்கள் தம் பிணையுடன் கூடிக் காந்தள் மலரையும் பயிர்களையும் மேய்ந்து, அறல்நீர் பருகி, ஓரிடத்தே தங்கியுள்ளன. வீட்டில் உள்ள நொச்சிக் கிளையைச் சுற்றிப் படர்ந்து மலரும் முல்லைக் கொடியைக் காட்டி, 'நான் பொருள் தேடி விட்டுத் திரும்ப வரும் காலம் இது மலரும் காலமே' என்று தலைவர் கூறிச் சென்றாரே! அக்காலம் தொடங்கியும் அவர் வரவில்லையே! ஒருவேளை, அக்காலம் இன்னும் தொடங்கவில்லையோ?" என்று தலைவி பெரிதும் வருந்திக் கூறினாள்.

சொற்பொருள்

1. மண்கண் - மண்ணுள்ள இடம், நிலம்; தண்பெயல் - குளிர்ச்சி பொருந்திய மழை.
2. பாடு - ஒலி; உலத்தல் - நீங்குதல், அடங்குதல்; பறை - முழவு; எழிலி - மேகம்.
3. புதல்மிசை - புதர்மீது; தளவு - முல்லை; இதல்முள் - கவுதாரியின் காலிலுள்ள முள்ளைப் போன்ற (இதல் - ஒரு வகைப் பறவை, கவுதாரி); நனை - அரும்பு.
4. குலை - பூங்கொத்து; பிடவம் - ஒரு வகைச் செடி; பிணி அவிழ - மலர.
5. கம் - 'கம்' என மணம் வீச; அவல் - பள்ளம்.
6. கோடு - சங்கு; கோடல் - வெண்காந்தள்.
7. பதவு - அறுகு; பாவை - கிழங்கு; முனைஇ - வெறுத்து; மதவுநடை - செருக்கிய நடை.
8. இரலை - ஆண்மான்; அமர் - விருப்பம்; பிணை - பெண்மான்.
9. தண்அறல் - குளிர்ந்த நீர்; தாழ்தல் - தங்குதல்.
10. மனைய - வீட்டிலுள்ள.
11. தாழ்வின் நொச்சி - குறிய நொச்சி; சூழ்வன - படர்ந்து.
12. மௌவல் - முல்லை; மாச்சினை - பெரிய கிளை.
13. அவ்அளவு - அக்காலத்து எல்லை (முல்லை மலரும் கால எல்லை); ஆண்டு - பொருள் தேடச் சென்றுள்ள இடத்தில்; செய் பொருள் - ஈட்டும் பொருள்.

தலைவி கூற்று

அகநானூறு 139 **இடைக்காடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து பொருளீட்டச் சென்ற தலைவன் கார்ப்பருவம் தொடங்குமுன் தான் வருவதாய்க் கூறிச் சென்றான். அப்பருவம் தொடங்கிய பின்னரும் அவன் வாராமையால் வருந்திய தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

துஞ்சுவது போல இருளி, விண்பக
இமைப்பது போல மின்னி, உறைக்கொண்டு,
ஏறுவது போலப் பாடுசிறந்து உரைஇ,
நிலம்நெஞ்சு உட்க ஓவாது சிலைத்துஆங்கு,
ஆர்தளி பொழிந்த வார்பெயல் கடைநாள்;
ஈன்றுநாள் உலந்த வாலா வெண்மழை
வான்தோய் உயர்வரை ஆடும் வைகறை,
புதல்ஒளி சிறந்த காண்புஇன் காலை,
தண்நறும் படுநீர் மாந்தி, பதவுஅருந்து
வெண்புறக்கு உடைய திரிமருப்பு இரலை;
வார்மணல் ஒருசிறைப் பிடவுஅவிழ் கொழுநிழல்,
காமர் துணையொடு ஏமுற வதிய;
அரக்குநிற உருவின் ஈயல் மூதாய்
பரப்பி யவைபோல் பாஅய்ப் பலஉடன்
நீர்வார் மருங்கின் ஈர்அணி திகழ;
இன்னும் வாரார் ஆயின்– நன்னுதல்!
யாதுகொல் மற்றுஅவர் நிலையே? காதலர்
கருவிக் கார்இடி இரீஇய
பருவம் அன்றுஅவர் வருதும்என் றதுவே.

தெளிவுரை

“அழகிய நெற்றியினைக் கொண்ட தோழியே! மேகம் உறங்குவது போல எங்கும் இருள் சூழ்ந்தது; வானம் பிளந்து

இமைப்பதுபோல மின்னல் மின்னியது; நீரைச் சுமந்து மேலே ஏறுவதுபோல எங்கும் சிற்றொலி எழப் பரவி, நிலமகளின் நெஞ்சம் துணுக்குறுமாறு ஓயாது இடி இடித்தது. இது பெருமழை பெய்த கார் காலத்தின் முடிவைத் தெரிவிக்கிறது. மழை கழிந்ததும் வெண்ணிற மேகங்கள் வைகறைப்பொழுதில் வானளாவிய உயர்ந்த மலைகளில் தவழுகின்றன; புதர்கள் சூரிய ஒளிபட்டுச் சிறப்புடன் ஒளிர்ந்து இனிய காட்சியைத் தருகின்றன. வெண்ணிற முதுகையும் முறுக்கிய கொம்புகளையும் கொண்ட ஆண்மான் தன் அழகிய பெண்மானுடன் குளிர்ச்சி பொருந்திய நறிய குளத்தின் நீரை மிகுதியாய்ப் பருகியது; அறுகம்புல்லை மேய்ந்தது; பின்னர், நீண்ட மணல் திடரின் ஒரு பக்கத்தே மலர்ந்துள்ள பிடவ மரத்தின் கொழுவிய நிழலில் தங்கியது; சிவந்த அரக்கினையொத்த நிறம் கொண்ட இந்திரகோபப் பூச்சிகள் ஊர்ந்து திரிகின்றன. அவற்றைப் பரப்பி வைத்தாற் போன்று ஈரமுள்ள இடங்கள் அழகுடன் திகழ்கின்றன.

"இன்னும் நம் தலைவர் வரவில்லையெனில் அவரது நிலை யாதோ? தாம் வருவதாய் அவர் தெரிவித்த காலம், மேகங்கள் கூடி இடிக்கும் இந்தப் பருவம் அன்றோ?"

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது; அவர் வரவில்லை; ஒருவேளை, அவர் கூறிய பருவம் வேறோ?

விளக்கம்

"நன்னுதால்! பிரிந்து சென்ற தலைவர் கார் காலத்தில் வருவேன் என்று சொல்லிச் சென்றார். வானம் உறங்குவதுபோல இருண்டு, வாய் திறப்பதுபோல மின்னி, எழுந்து நடப்பது போல இடித்து, மழை பெய்து கார் காலம் தொடங்கியதை அறிவித்தது. பெய்யும் மழை குறைந்து இப்பருவம் முடிவடைவதைக் காட்டும் வகையில் வெண் மேகங்கள் மலையுச்சியில் தவழ்கின்றன. வைகறைப்போதில், வெண்ணிற முதுகையும் முறுக்கிய கொம்பினையும் கொண்ட ஆண்மான், தான் விரும்பும் பிணை மானுடன் குளத்தில் நீர் பருகி, அறுகம் புல்லை உண்டு நெடிய

மணற்பரப்பின் ஒருபுறத்தில் அரும்பு மலர்ந்த பிடவினது கொழுவிய நிழலில் துயில் கொண்டிருக்கும். அரக்கின் நிறம் போன்ற உருவினைக் கொண்ட முதிர்ந்த இந்திர கோபப்பூச்சிகள் பரவியிருக்கும் ஈரமுள்ள இடங்கள் அழகுடன் காட்சியளிக் கின்றன. இக்காலத்திலும் தலைவர் வரவில்லையென்றால், சென்ற இடத்தில் அவர் நிலையாதோ? அவர் தாம் வருவதாய்க் குறித்த பருவம் முகில்களின் இடி முழக்கம் ஓய்ந்த இப்பருவம் தானே?" என்று தலைவி தோழியிடம் வினவுகிறாள்.

சொற்பொருள்

1. துஞ்சுதல் - உறங்குதல்; விண் - வானம்; பக - பிளக்க.
2. உறை - நீர்த்துளி, மழைநீர்.
3. பாடுசிறந்து - பெருமை மிக்கு; உரைஇ - உலாவி.
4. உட்க - துணுக்குற; ஓவாது - இடைவிடாது; சிலைத்து - இடித்து.
5. ஆர் - மிக்க; தளி - நீர், மழை.
6. உலந்த - கழிந்த; வாலா - தூய்மையில்லாத; மழை - மேகம்.
7. வரை - மலை; ஆடும் - தவழும்.
8. காண்புஇன் - காண்டற்கினிய; காலை - காலம்.
9. படு - குளம், மடு; மாந்தி - அருந்தி; பதவு - அறுகம்புல்.
10. வெண்புறக்கு - வெள்ளிய முதுகு; திரி - முறுக்குண்ட; மருப்பு - கொம்பு; இரலை - ஆண்மான்.
11. வார் - நீண்ட; மணல் - மணற்கரை; ஒருசிறை - ஒரு பக்கம்; பிடவு அவிழ் - பூக்கள் மலர்ந்துள்ள பிடவ மரம்.
12. காமர் - விருப்பம்; ஏமுற - இன்பம் பொருந்த; வதியும் - தங்கும்.
13. ஈயல் மூதாய் - தம்பலப்பூச்சிகள்.
14. பாஅய் - பரந்து.
15. நீர்வார் - நீர் ஒழுகிய; மருங்கு - பக்கம்; ஈர்அணி - ஈரத்துடன் கூடிய அழகு.
18. கருவிக்கார் - தொகுதியினைக் கொண்ட மேகம்; இரீஇய - நீங்கிய.
19. வருதும் - வருவேன்.

தலைவி கூற்று

அகநானூறு 175 **ஆலம்பேரி சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவனை எண்ணி வருந்திய தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழியிடம் தலைவி சொல்லியது.

வீங்குவிளிம்பு உரீஇய விசைஅமை நோன்சிலை
வாங்குதொடை பிழையா வன்கண் ஆடவர்
விடுதொறும் விளிக்கும் வெவ்வாய் வாளி
ஆறுசெல் வம்பலர் உயிர்செலப் பெயர்ப்பின்,
பாறுகிளை பயிர்ந்து படுமுடை கவரும்
வெஞ்சுரம் இறந்த காதலர் நெஞ்சுஉணர
அரிய வஞ்சினம் சொல்லியும் பல்மாண்
தெரிவளை முன்கை பற்றியும், 'வினைமுடித்து,
வருதும்' என்றனர் அன்றே– தோழி!–
கால்இயல் நெடுந்தேர்க் கைவண் செழியன்
ஆலங் கானத்து அமர்கடந்து உயர்த்த
வேலினும் பல்ஊழ் மின்னி, முரசுஎன
மாஇரு விசும்பில் கடிஇடி பயிற்றி,
நேர்கதிர் நிரைத்த நேமியம் செல்வன்
போர்அடங்கு அகலம் பொருந்திய தார்போல்,
திருவில் தேஎத்துக் குலைஇ, உருகெழு
மண்பயம் பூப்பப் பாஅய்த்
தண்பெயல் எழிலி தாழ்ந்த போழ்தே.

தெளிவுரை

"*பாலைநிலக்காட்டில் வழிப்பறி செய்யும் ஆடவர்கள், தமது பருமனான தோளில் உராயும்படி, வேகம் அமைந்த தமது வில்லை வைத்துத் தொடுக்கும் அம்பு, குறி தவறாது ஒலியுடன்*

பாய்ந்து சென்று, வழிச்செல்வோர் உயிரைப் போக்கும். இறந்தோரின் புலால் நாறும் உடலைப் பருந்துகள் தம் கூட்டத்தைக் கூவி அழைத்து உண்ணும். அத்தகைய கொடிய வழியில் நம் தலைவர் சென்றுள்ளார்.

"அவர் பிரிந்தபோது தம் மனமறிய, நான் நம்புமாறு உறுதிமொழி கூறியும், தேர்ந்தெடுத்த வளையல்களை அணிந்த என் முன்னங்கையைப் பற்றித் தேறுதல் சொல்லியும், தாம் முடிக்கக் கருதும் செயல் முடிந்ததும் உடனே திரும்புவதாய்ச் சொல்லிச் சென்றாரே!

"குளிர்ச்சி பொருந்திய மேகமானது, காற்றைப் போல் விரைந்து செல்லும் தேரினையும் கை வலிமையினையும் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போரில் வென்று உயர்த்திப் பிடித்த வேல்களைக் காட்டிலும் பன்முறை மின்னியது; அவனது முரசு முழக்கத்தைப் போல் இடி முழக்கம் எழுந்தது; பகைவர்களின் போர் எண்ணம் அடங்கு தற்குக் காரணமான திருமாலின் மார்பில் கிடந்தசையும் மாலைபோல, பல நிறம் கொண்ட அழகிய வான வில்லும் வானத்தில் தோன்றியது.

"இவ்வாறு மேகம், மண்ணுலகம் பயன் பெறுமாறு மழை பெய்யும் கார் காலத்தில் திரும்பிவிடுவேன்' என்று சொல்லிச் சென்ற தலைவர் திரும்பவில்லையே! என் செய்வேன்?" என்று தலைவி வருந்திக் கூறினாள்.

கருத்து

மண்ணுலகம் குளிர மழை பெய்யும் கார் காலம் தொடங்கியும் என் மனம் குளிரத் தலைவர் இன்னும் வரவில்லையே!

விளக்கம்

"தோழி! பொருள் ஈட்டப் பிரிந்த தலைவர், நம் நெஞ்சு நம்பும் படியாக அரிய உறுதிமொழிகள் கூறினார். 'மழை தொடங்கும் கார் காலத்தில் திரும்புவேன்' என்று கூறி, நம் கைகளைப் பற்றி, அன்பு மொழிகள் உரைத்துச் சென்றார். மேகம் மின்னி, இடி இடித்து, வானவில் இட்டு, மண் பயனடையப் பரவிக் குளிர்ச்சி

பெறுமாறு மழை பெய்கிறது. அவர் உறுதியளித்தபடி இக்கார் காலத்தில் வந்து சேரவில்லையே!" என்று தலைவி தோழியிடம் தன் ஆற்றாமையைக் கூறினாள்.

சொற்பொருள்

1. வீங்கு - பருத்த; விளிம்பு - தோளின் மேற்பகுதி; உரீஇய - உரசிய; நோன்சிலை - வலிமையான வில்.
2. தொடை - அம்பு; பிழையா - தப்பாது, குறித்தவாறு; வன்கண் ஆடவர் - வழிப்பறிகள்வர்.
3. விளிக்கும் - ஒலியுடன் செல்லும்; வெவ்வாய் - கூரிய முனை; வாளி - அம்பு.
4. ஆறு - வழி; வம்பலர் - புதியவர்; பெயர்த்தல் - போக்குதல்.
5. பாறு - பருந்து; கிளை - இனம்; பயிர்ந்து - கூவி அழைத்து; முடை - புலால் நாற்றம்; கவரும் - உண்ணும்.
6. வெஞ்சுரம் - பாலை நிலம்; நெஞ்சுஉணர - நம் நெஞ்சு கொள்ளும்படியாக.
7. வஞ்சினம் - சூளுரை.
8. வினை - செயல்.
9. வருதும் - வருவேன்.
10. கால்இயல் - காற்றைப் போல இயங்கும்; கைவண் - கை வலிமை; செழியன் - பாண்டியன் நெடுஞ்செழியன்.
11. ஆலங்கானத்து அமர் - தலையாலங்கானத்துப் போர்; கடந்து - வெற்றி பெற்று.
12. பல்ஊழ் - பன்முறை.
13. கடி இடி - கடிய இடி; பயிற்றி - ஒலித்து.
14. நேமிஅம் செல்வன் - சக்கரப்படையுடைய திருமால்.
15. போர்அடங்கு அகலம் - போர் ஒழிதற்குக் காரணமாகிய மார்பு; தார் - மாலை.
16. திருவில் - வானவில்; தேஎத்து - வானத்து; குலைஇ - வளைத்து; உருகெழு - அச்சம் பொருந்திய.
17. மண்பயம் பூப்ப - நிலம் பலனைத் தர; பாஅய் - பரவி.
18. தண்பெயல் - குளிர்ச்சி பொருந்திய மழை(யைப் பொழியும்); எழிலி - மேகம்; தாழ்ந்த போழ்து - இறங்கிப் பெய்யும் காலத்து.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 110 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியது; கார் காலத்தில் திரும்பி வருவேன் எனச் சொல்லிப் பிரிந்த தலைவன் வாராததால் பொறுத்துக்கொள்ளாத தலைவி தோழியிடம் கூறியது.

பெரியார் பெருமை பெரிதே இடர்க்கண்
அரியார் எளியரென்(று) ஆற்றாப் – பரிவாய்த்
தலையழுங்கத் தண்தளவம் தாம்நகக்கண்(டு) ஆற்றா
மலைஅழுத சால மருண்டு.

தெளிவுரை

“தோழியே! பொறுக்க இயலாத துன்பத்துடன் நாம் தலை குனியும்படி, குளிர்ச்சி பொருந்திய செம்முல்லைச்செடிகள், தம் சிறுமைக் குணத்தால் நம்மை நோக்கிச் சிரிப்பனபோலப் பூத்துள்ளன. ஆனால், மலைகளோ, முன்பு நமக்கு அருமையான வராய் இருந்த தலைவர், துன்பம் உண்டான இப்போது, அதனை நீக்க இயலாத தொலைவில் உள்ளாரே என்று எண்ணிப் பொறுக்க இயலாது மிகவும் வருந்தி மழைநீரைக் கண்ணீராய்க் கொண்டு வாய் விட்டு அழுகின்றன. இதனை நீ காண்! ஆதலால், பெரியவர்களின் பெருந்தன்மைக் குணம் உண்மையில் கொண் டாடத் தக்கதாகவே காணப்படும்” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

முல்லை பூத்து, மலைகளில் அருவி கொட்டும் இக்கார் காலத்திலும் தலைவர் வரவில்லை.

விளக்கம்

முல்லைப்பூக்கள் வெண்மையாய்ப் பூத்திருப்பது, அவை தலைவியைப் பார்த்து, 'இன்னும் உன் கணவர் வரவில்லையே' என்று ஏளனத்துடன் சிரிப்பதுபோல இருக்கிறதாம். மலையில் அருவிநீர் கொட்டுவது அம்மலை, தலைவியின் பிரிவாற்றாமை யைக் கண்டு இரங்கி அழுவதுபோலத் தோன்றுகிறதாம். பூக்கள் சிறியராய்ச் சிரிக்கின்றன; மலைகள் பெரியராய் வருந்துகின்றன. பூக்கள், பல; மலைகள் சில. சிறியவர் பலராயிருக்கப் பெரியர் சிலராய் இருப்பதுதான் உலக இயல்பு.

சொற்பொருள்

1. பெருமை - பெருந்தன்மைக் குணம்; இடர்க்கண் - துன்பம் உற்ற பொழுது.
2. அரியார் - தலைவிக்கு முன்பு அருமையானவராயிருந்த (தலைவர்); எளியர் - (இப்போது துன்பத்தை நீக்க இயலாத) எளியவராய்த் தொலைவில் உள்ளாரே என்று; ஆற்றா - பொறுக்காதனவாய்; பரிவாய் - துன்பத்துடன்.
3. தலை அழுங்க - நாம் தலைகுனியும்படியாக; தளவம் - செம்முல்லை; நக - சிரித்துக்கொண்டு இருக்க; ஆற்றா - பொறுக்கவியலாதனவாய்.
4. அழுத - (மழைநீரினை அருவியாய்க் கொட்டி) அழுதன; சால - மிகவும்; மருண்டு - மயக்கத்தோடு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 111 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியது; கார் காலத்தில் திரும்பி வருவேன் எனச் சொல்லிப் பிரிந்த தலைவன் வாராததால் பிரிவினைப் பொறுத்துக்கொள்ள வியலாத தலைவி தோழியிடம் கூறியது.

கானம் கடிஅரங்காக் கைம்மறிப்பக் கோடலார்
வானம் விளிப்ப,வண்(டு) யாழாக – வேனல்
வளரா மயிலாட வாட்கண்ணாய்! சொல்லாய்
உளராகி உய்யும் வகை.

தெளிவுரை

“வாள் போன்ற கண்களைக் கொண்ட தோழியே! மேகக் கூட்டம் இடிக் குரலாகிய பாடலைப் பாடுகிறது; வண்டுகள் யாழாய் இசைக்கின்றன; வேனிற்காலத்தில் ஆடாத மயில்கள் (இப்போது) நடனமிடுகின்றன; வெண்காந்தள் மலராகிய பார்வையாளர்கள் வியந்து பாராட்டிக் கைகளை அசைக் கின்றனர். இவ்வாறாய், முல்லை நிலம் சிறந்த நாடக அரங்காய் அமையுமாறு கார் காலம் தொடங்கியது; தலைவர் இன்னும் வரவில்லை. காதலரைப் பிரிந்த காதலியர் இறவாமல் பிழைக்க வழி ஏதேனும் இருந்தால் கூறு” எனத் தலைவி தோழியிடம் கேட்டாள்.

கருத்து

மயில் ஆட, வெண்காந்தள் மலரக் கார் காலம் தொடங்கிவிட்டது; காதலர் இன்னும் வரவில்லை; பிரிந்திருப்போர் பிழைத்திருக்க வழியுண்டாயின் கூறு.

விளக்கம்

கார் காலத் தொடக்கம் கண்ணுக்கினிய நாட்டிய அரங்காக இருக்கிறது. காடு - நாட்டிய அரங்கு. மேகத்தின் இடி - பாடல். வண்டுகளின் ஒலி - யாழ் இசை. மயில் - நாட்டிய மங்கை. வெண்காந்தள் பூக்கள் - நாட்டியத்தைக் காண்போர். அப்பூக்கள் காற்றிலசைவது - நாடகத்தினைப் பார்ப்போர் பாராட்டிக் கைகளை அசைப்பது. இவ்வளவு அழகியதாய்க் கார் காலம் நாட்டிய அரங்காய்க் காட்சி தருகிறது.

சொற்பொருள்

1. கானம் – முல்லைக்காடு; கடி - சிறந்த; அரங்கா - நாட்டிய அரங்காக; கைம்மறிப்ப - கைகளைத் தூக்கி, அசைத்துக் காட்ட; கோடல் - வெண்காந்தள் மலர் (நாட்டியம் காண்பவர்).

2. வானம் - முகிற்கூட்டம்; விளிப்ப - இடிக் குரல் (பாட்டினைப் பாட); வண்டு - வண்டொலி; யாழாக - யாழ் இசையாக; வேனல் - வேனிற் காலத்தில்.
3. வளரா - தோகை விரிக்காத; மயில் ஆட - மயில்தோகை விரித்து ஆடும் (நாட்டியப்பெண்ணாக); வாள் கண்ணாய் - வாள் போன்ற கண்களைக் கொண்டவளே!; சொல்லாய் - சொல்.
4. உளராகி - உயிரோடு இருந்து; உய்யும் - பிழைத்திருக்கும்; வகை - வழி.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 19 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

ஆலி விருப்புற்(று) அகவிப் புறவெல்லாம்
பீலி பரப்பி மயில்ஆலச் – சூலி
விரிகுவது போலும்இக் கார்அதிர ஆவி
உருகுவது போலும் எனக்கு.

தெளிவுரை

தலைவி தோழியை நோக்கி, "மயில் கூட்டம் மழைத்துளிகளை விரும்பி அகவியவாறு முல்லை நிலத்தின் பகுதிகளிலெல்லாம் தோகைகளை விரித்து ஆடுகின்றது. விருப்பத்திற்கிணங்க, மேகங்கள் கருக்கொண்டு மின்னலோடு முழக்கத்தைச் செய் கின்றன. அதனால் என் உயிர் உருகுகின்றது" என்று கூறினாள்.

கருத்து

கார் கால முழக்கம் என் உயிரை உருக்குகின்றது.

குறிப்பு

கருக்கொண்ட மேகம் 'விரிகுவதுபோல' அதிர்கின்றது; தலைவியின் உயிரோ 'உருகுவதுபோல' வருந்துகின்றது.

சொற்பொருள்

1. ஆலி - மழைத்துளிகள்; அகவி - கூவியழைத்து; புறவு எல்லாம் - முல்லைநிலப் பரப்பெல்லாம்.
2. பீலி - தோகை; மயில்ஆல - மயில் ஆட; சூலி - கருக்கொண்டு.
3. இக் கார் - இந்த முகில்; அதிர - முழங்க; ஆவி - உயிர்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 20 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

இனத்த அருங்கலை பொங்கப் புனத்த
கொடிமயங்கு முல்லை தளிர்ப்ப இடிமயங்கி
யானும் அவரும் வருந்தச் சிறுமாலை
தானும் புயலும் வரும்.

தெளிவுரை

ஆண்மான்கள் கூட்டமாய்ப் பெண்மான்களோடு மகிழ்ந்து திரிகின்றன; கொல்லையில் பல்வேறு கொடிகளோடு கலந்து படர்ந்து முல்லை அரும்புகள் தளிர்க்கின்றன. இக்கார்

காலத்தில் நானும் அவரும் துன்புற, மேகங்கள் இடி இடிக்க, மாலை நேரம் தானும் முகிலுமாய் வந்துள்ளது.

கருத்து

மான்கள், ஆணும் பெண்ணுமாய் மகிழ்ந்து இணைந்து திரிய, நானும் தலைவரும் தனியே பிரிந்து துன்புறுகிறோம்.

குறிப்பு

'யானும்' அவரும் வருந்த, மாலை 'தானும்' புயலுமாய் வரும்.

சொற்பொருள்

1. இனத்த - கூட்டமான; அருங்கலை - அரிய ஆண்மான்கள்; பொங்க - களித்துத் திரிய; புனத்த - கொல்லைகளில்.
2. தளிர்ப்ப - தளிர்க்கவும்; இடிமயங்கி - இடி இடித்தலோடு.
3. சிறுமாலை - சிறு பொழுதாகிய மாலை நேரம்.
4. புயலும் - மேகமும்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 23 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

தேரைத் தழங்குகுரல் தார்மணி வாய்அதிர்ப்ப
ஆர்கலி வானம் பெயல்தொடங்கிக் – கார்கொள
இன்(று)ஆற்ற வாரா விடுவார்கொல் காதலர்
ஒன்றாலும் நில்லா வளை.

தெளிவுரை

"தோழியே! மிக்க ஆரவாரத்துடன் கார் கால மேகம் மழை பெய்யத் தொடங்கிவிட்டது. தவளைகள் மகிழ்ச்சியால் இரைச்சலிடுகின்றன. என் கை வளைகளெல்லாம் கழன்று விழுகின்றன. நம் தலைவன், நம்மை ஆற்றுவிக்க இந்தக் காலத்திலும் வந்து சேர மாட்டாரா?" என்று தலைவி தோழியிடம் வினவுகின்றாள்.

கருத்து

தவளைகள் மகிழ்ச்சியால் இரைச்சலிடக் கார் மழை பொழிகிறது. பிரிவுத் துன்பத்தைப் போக்க நம் தலைவர் வந்து சேரமாட்டாரா?

சொற்பொருள்

1. தேரை - தவளை; தழங்கு - ஒலிக்கின்ற; தார்மணி - மாலையாக உள்ள மணிகள்; வாய்அதிர்ப்ப - ஒலிக்கும்படி.
2. ஆர்கலி - மிக்க ஆரவாரம் கொண்ட; வானம் - முகில்; கார்கொள - கார்ப் பருவத்தைத் தோற்றுவிக்க.
3. ஆற்ற - நாம் பொறுத்துக்கொள்ளும்படியாக; வாராவிடுவார் – வராது விட்டுவிடுவாரோ?
4. ஒன்றாலும் - ஒன்றேனும்; வளை - வளையல்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 24 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

கல்ஏர் புறவின் கவினிப் புதல்மிசை
முல்லை தளவொடு போ(து)அவிழ – எல்லி
அலை(வு)அற்று விட்டன்று வானமும் உண்கண்
முலைவற்று விட்டன்று நீர்.

தெளிவுரை

"கற்கள் பொருந்திய முல்லைநிலத்துப் புதர்களில் முல்லைச் செடிகளும் செம்முல்லைச் செடிகளும் அழகுற மலர்ந்துள்ளன. இரவு முழுவதும் மேகமும் இடைவிடாது மழைத்துளிகளைப் பெய்தது. மை தீட்டப் பெற்ற என் கண்களும் கண்ணீர்த் துளிகளைக் கொங்கைகளின்மீது வடித்துக்கொண்டிருக்கின்றன" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

கார் மழை பொழிவதுபோல என் கண்களும் பிரிவுத்துயரால் நீரைச் சொரிகின்றன.

சொற்பொருள்

1. கல் - கற்கள்; ஏர் - எழுந்து தோன்றும்; புறவு - முல்லை நிலம்; கவினி - அழகுடன் கூடி; புதல் -புதர்; மிசை - மேலே.
2. தளவு - செம்முல்லை; போது - மலர் மொட்டு; அவிழ - விரிய; எல்லி - இரவு.
3. அலைவுஅற்று - பெய்தல் நீங்காது, தொடர்ந்து; விட்டன்று - பெய்தது; உண்கண் - மையுண்ட கண்.
4. முலை - முலைகளின்மீது; நீர்வற்று விட்டன்று - கண்ணீர்த் துளிகளை வடித்துக்கொண்டிருக்கின்றன.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 15 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

செங்கதிர்ச் செல்வன் சினங்கரந்த போழ்தினால்
பைங்கொடி முல்லை மணங்கமழ – வண்டுஇமிரக்
காரோ(டு) அலமரும் கார்வானம் காண்தொறும்
நீரோ(டு) அலமருங் கண்.

தெளிவுரை

"சிவந்த கதிர்களைக் கொண்ட கதிரவன் தன் கதிர்களைச் சுருக்கி மறைந்துகொண்ட மாலைப்பொழுதில், முல்லை பசுங் கொடிகளில் மலர்கள் மலர்ந்து மணம் வீசுகின்றன. வண்டுகள் தேனுண்டு சூழ்ந்து ஒலிக்கின்றன. நீருண்ட மேகங்கள் விண்ணில் காட்சியளிக்கின்றன. கார் காலம் தொடங்கிவிட்டதைக் காணும் போதெல்லாம் என் கண்கள் நீரைச் சிந்தி வருந்துகின்றன"எனத் தலைவி தோழியிடம் சொன்னாள்.

கருத்து

முல்லை மலர்ந்து வண்டுகள் ஒலிக்கக் கார் காலம் தொடங்கிவிட்டது. தலைவன் இன்னும் வரவில்லை.

சொற்பொருள்

1. செங்கதிர்ச்செல்வன் - சிவந்த கதிர்களைக் கொண்ட கதிரவன்; சினம் கரந்தபோழ்து - வெம்மை குறைந்த மாலைப்பொழுது.
2. பைங்கொடி - பசிய கொடி; இமிர - ஒலிக்க.
3. கார் - கார் காலம்; அலமரும் - சுழலும்; கார் - மேகம்.
4. நீரோடு - கண்ணீருடன்; அலமரும் - வருந்துகின்றன.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 16 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

தடமென் பணைத்தோளி! நீத்தாரோ வாரார்,
மடநடை மஞ்ஞை அகவ, கடல்முகந்(து)
மின்னோடு வந்த(து) எழில்வானம்; வந்தென்னை
என்ஆதி என்பாரும் இல்.

தெளிவுரை

தலைவி தோழியை நோக்கி, “பெரிய மென்மையான மூங்கிலையொத்த தோள்களைக் கொண்ட தோழியே! நம்மைப் பிரிந்து சென்ற தலைவரோ வரவில்லை.அழகிய மேகமோ மென்மையான நடையினைக் கொண்ட மயில்கள் அகவக் கடல் நீரைக் குடித்து, வானில் பரந்து மின்னி, இடி முழக்கமிட்டு மழை பொழிகின்றது. இந்நிலையில் என்னிடம் வந்து, என்னைப் பார்த்து, ‘நீ எப்படி இருக்கிறாய்?’ என்று கேட்பாரும் இலர்” என்று சொன்னாள்.

கருத்து

மேகம் மின்னி, இடி முழக்குமிடக் கார் காலம் தொடங்கிவிட்டது; ஆனால், தலைவரோ இன்னும் வந்து சேரவில்லை. ‘நீ எப்படி இருக்கிறாய்?’ என்று என்னை ஆதரவுடன் கேட்பாரும் இலர்.

சொற்பொருள்

1. தட - பெரிய; பணை - மூங்கில்; நீத்தார் - பிரிந்து சென்றவர்.
2. மடநடை - மென்மையான நடை; மஞ்ஞை -மயில்; அகவ - ஒலிக்க.
3. மின் - மின்னல்; வானம் - மேகம்.
4. என் ஆதி? - எவ்வாறு இருக்கிறாய்?; இல் - இலர்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 18 **மூவாதியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் கார் காலத்தில் வருவதாய்க் கூறினான். கார் காலம் தொடங்கியது. ஆனால், அப்பருவத்தில் அவன் வரவில்லையே என்று வருந்திய தலைவி, தோழியிடம் கூறியது.

கதழ்உறை வானம் சிதற இதழ்அகத்துத்
தாதுஇணர்க் கொன்றை எரிவளர்ப்பப் பாஅய்
இடிப்பது போலும் எழில்வானம் நோக்கித்
துடிப்பது போலும் உயிர்.

தெளிவுரை

“மேகங்கள் விரைவாய் மழைத்துளிகளைத் தூவிப் பெய்கின்றன. இதழ்களின் உள்ளே பூந்தாதுகளைக் கொண்ட பூங்கொத்துகள் பொருந்திய கொன்றை மரங்கள் நெருப்பினைப் போல மலர்ந்து காணப்படுகின்றன; கார் காலத்தை உணர்த்துவது போன்று வானில் எங்கும் மேகங்கள் பரவிப் பரந்துள்ளன. வானவெளியைப் பார்த்தால் என் உயிர் வருந்தித் துன்பம் அடைகின்றது” என்று தலைவி தோழியிடம் வருத்தமுற்றுச் சொன்னாள்.

கருத்து

கொன்றை மரங்கள் பொன்போலப் பூக்கும் இக்கார் காலத்திலும் அவர் வாராததால் துன்பமடைகிறேன்.

குறிப்பு

வானம், ‘இடிக்கிறது’; தலைவியின் உயிர் ‘துடிக்கிறது’.

சொற்பொருள்

1. கதழ் - விரைவாய்; உறை - மழைத்துளி; சிதற - தூவ.

2. கொன்றை - கொன்றை மரம்; எரி வளர்ப்ப - நெருப்பினைப் போல மலர்ந்து காண; பாஅய் - பரந்து.
3. எழில் - அழகு.
4. துடித்தல் - துன்பம் அடைதல்.

தலைவி கூற்று

நற்றிணை 214 **கருவூர்க் கோசனார்**

திணை : பாலை

கூற்று

உலகியலாற் பிரிவுணர்த்தப்பட்ட தலைமகன் குறித்த பருவங்கண்டு தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

"தலைவர் என்னைப் பிரிந்தபோது, 'கார் காலத்து மலரினை உன் கருங் கூந்தலில் அணியுமாறு விரைந்து வருவேன்' என்று உறுதிமொழி பல கூறிச் சென்றார். கார்ப்பருவம் தொடங்கி மின்னலிட்டு மழை பொழிகிறது; அவர் இன்னும் வந்து சேரவில்லையே" என்று தலைவி வருந்திக் கூறியது.

'இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்ம்'என,
வினைவயிற் பிரிந்த வேறுபடு கொள்கை
'அரும்பவிழ் அலரிச் சுரும்புஉண் பல்போது
அணிய வருதும்நின் மணியிருங் கதுப்பு'என,
எஞ்சா வஞ்சினம் நெஞ்சுஉணக் கூறி
மைசூழ் வெற்பின் மலைபல இறந்து
செய்பொருட்கு அகன்ற செயிர்தீர் காதலர்
கேளார் கொல்லோ தோழி! தோள
இலங்குவளை நெகிழ்த்த கலங்குஅஞர் எள்ளி
நகுவது போல, மின்னி
ஆர்ப்பது போலும்இக் கார்ப்பெயல் குரலே.

தெளிவுரை

"செயலற்று வீட்டில் சோம்பியிருப்பவர்க்குப் புகழ், இன்பம், கொடை ஆகிய மூன்றும் கிட்டா. இக்கருத்தை மனத்தில்

கொண்டே நம் தலைவர் பொருளீட்டப் பிரிந்து சென்றார். பிரிந்தபோது அவர் என்னிடம், 'உன் நீலமணி போன்ற கருங் கூந்தலில் கார் காலத்தே வண்டு தேனுண்ணும்படியாக அரும்பி மலரும் மலர்கள் பலவற்றைச் சூட்டி மகிழ வந்து சேர்வேன்' என்று என் மனங்கொள்ளுமாறு உறுதிகள் பலவற்றைக் கூறினார்; இப்போது, சிகரங்கள் பல கொண்ட மலைகளைக் கடந்து சென்றுள்ளார். அவர் பிரிவினால் என் தோள்கள் மெலிந்து தொடிகள் நெகிழ, கலங்கி நான் அடையும் துன்பத்தைக் கண்டு, என்னை இகழ்ந்து நகைப்பதுபோல மேகம் மின்னி ஆரவாரம் செய்து மழை பொழிகின்றது. இம்மழையின் ஒலியை நம் தலைவர் இன்னும் கேட்கவில்லையோ? (கேட்டிருந்தால் இந்நேரம் இங்கிருந்திருப்பாரே)" என்று தலைவி வருந்திக் கூறுகின்றாள்.

கருத்து

மேகம் மின்னி ஆரவாரத்துடன் மழை பொழியும் கார் காலம் தொடங்கி விட்டது, காதலர் இன்னும் வரவில்லையே.

விளக்கம்

"தோழி! இல்லத்தில் சோம்பியிருப்போர்க்கு இசையும் இன்பமும் கொடையும் இல்லை என்னும் கருத்தால் பொருள் வயிற் பிரிந்த காதலர், 'கார் காலத்தே மீண்டுவந்து, மணி இருங்கூந்தலில் மலர் சூட்டி மகிழ்வேன்' என்று கூறிச் சென்றார். இங்கே நாம் காணும் மின்னும் இடியும் கொண்ட கார் மழை அவர் சென்ற நாட்டில் தோன்றுவது இல்லையோ? தோன்று மாயின், அவர் அதன் வரவை அறிந்து 'நாம் திரும்புவதாய்க் குறித்த பருவம் இதுதான்' என்று தெளிந்து, இந்நேரம் வந்திருப்பாரே; வரவில்லையே" என்று கூறித் தலைவி வருந்தினாள்.

சொற்பொருள்

1. இசை - புகழ்; ஈதல் - இல்லையென்றோர்க்குக் கொடுத்தல்.
2. அசை - தளர்ச்சி; அரும்புணர்வு - இம்மூன்றையும் ஆற்ற வேண்டும் என்னும் உணர்வு; இன்ம் - இராது.
3. வேறுபடு கொள்கை - வேறுபட்ட கோட்பாட்டினர் ஆயினார்.

4. அலரி - விரிந்த பூ; சுரும்பு - வண்டு; பல்போது - பல்வேறு மலர்கள்.
5. அணிய வருதும் - உன் கூந்தலில் சூட்டி மகிழ வந்து சேர்வேன்; மணி இருங்கதுப்பு - நீலமணிபோலும் கருமையான கூந்தல்.
6. எஞ்சா - குறைவற்ற; வஞ்சினம் - உறுதிமொழி; நெஞ்சுஉண - மனம் கொள்ளுமாறு.
7. மை - மேகம்; வெற்பு - மலைக்குன்று; இறந்து - கடந்து.
8. செயிர்தீர் - குற்றம் நீங்கிய.
9. தோள - தோளிலுள்ள.
10. கலங்கு அஞர் - கலக்கி வருத்தும் துன்பம்; எள்ளி - நகையாடி.
11. நகுவது - சிரிப்பது.
12. ஆர்ப்பதுபோலும் - ஆரவாரிப்பதுபோலும்; கார்ப்பெயல் - கார் காலப் பெருமழையின்; குரல் - இடிக்குரலை.
9. கேளார் கொல் - கேட்டிருக்க மாட்டாரோ?

தலைவி கூற்று

கைந்நிலை 29 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தோழியைப் பார்த்துத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

'கார் காலம் தொடங்கியது; தலைவர் வந்து சேரவில்லை' எனத் தலைவி தோழிக்குக் கூறியது.

..............குருந்(து)அலரப்
பீடுஆர் இரலை பிணைதழுவக் கா(டு)ஆரக்
கார்வானம் வந்து முழங்......
....

தெளிவுரை

மழை பொழிந்தது. குருந்த மரங்கள் பூத்துக் குலுங்குகின்றன. பெருமை பொருந்திய ஆண்மான்கள் பெண்மான்களைத் தழுவிக் கொள்கின்றன. நீர் நிறைந்து காடுகள் செழிக்க, இடி இடித்து மழை முழங்கிக் கொட்டுகிறது.

கருத்து

கார் காலம் தொடங்கி விட்டது; என் தலைவர் வரக் காணேன்.

சொற்பொருள்

1. குருந்து - குருந்த மரம்; அலர - பூத்துக் குலுங்க.
2. பீடு - பெருமை; ஆர் - பொருந்திய; இரலை - ஆண்மான்; பிணை - பெண்மான்; காடு ஆர் - காட்டில் நீர் நிறைய.
3. கார் - மேகம்; முழங்க - இடி ஒலிக்க.

தலைவி கூற்று

கைந்நிலை 32 **புல்லங்காடனார்**

திணை : முல்லை

கூற்று

தலைமகனை நினைந்த தன் நெஞ்சுக்குத் தலைமகள் கூறியது. நெஞ்சொடு கிளத்தது.

கூற்று விளக்கம்

தலைவனை நினைந்த தன் நெஞ்சத்தினிடம் தலைவி கூறியது.

கார்எதிர் வானம் கதழ்எரி சி.........................
....
.................லக மெழு நெஞ்சே! செல்லாயால்,
கூர்எரி மாலைக் குறி.

தெளிவுரை

வானத்தில் மேகங்கள் ஒன்றாய்த் திரண்டு, விரைந்து மின்னி, மழைத்துளிகளைச் சிந்துகின்றன. மனத்தில் கார் கால வரவும், அதனையொட்டித் தலைவரின் வரவும் நினைவுக்கு வந்து விட்டன. நெஞ்சே! என் நிலையைத் தலைவரிடம் சென்று சொல்.

கருத்து

நெஞ்சே! கார் காலம் தொடங்கிவிட்டதைத் தலைவரிடம் சென்று சொல்.

சொற்பொருள்

1. கார் எதிர் - மேகங்கள் திரண்டு; கதழ்தல் - விரைந்து; எரி - ஒளி, மின்னல்.
3. எழு நெஞ்சே! - நெஞ்சே எழுக!; செல் - சென்று (சொல்).
4. கூர்எரி மாலைக் குறி - மிகுதியாய் மின்னும் கார் கால வரவை (கூர் - மிகுதி; எரி - மின்னல்).

தலைவி கூற்று

நற்றிணை 381 **ஔவையார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாய தலைமகள் பருவ வரவின்கண் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன், தான் குறித்த பருவத்தில் திரும்பி வருவதாய்ச் சொல்லியபடி திரும்பவில்லை. அதனால் வருந்திய தலைவி தனக்குள்ளே சொல்லியது.

'அருந்துயர் உழத்தலின் உண்மை சான்ம்'எனப்
பெரும்பிறிது இன்மையின் இலேனும் அல்லேன்;
கரைபொருது இழிதரும் கான்யாற்று இகுகரை
வேர்கிளர் மாஅத்து அம்தளிர் போல,
நடுங்கல் ஆனா நெஞ்சமொடு, இடும்பை
யாங்கனம் தாங்குவென் மற்றே? ஓங்குசெலல்
கடும்பகட்டு யானை நெடுமான் அஞ்சி,
ஈர நெஞ்சமோடு இசைசேண் விளங்கத்
தேர்வீசு இருக்கை போல,
மாரி இரீஇ மான்றன்றால் மழையே.

தெளிவுரை

"*தலைவனைப் பிரிந்து தாங்குதற்கரிய பெருந்துயருற்றும் உயிர் துறவாமையால் நான் அன்பு இல்லாதவள் ஆகேன். கரையை மோதி ஓடும் காட்டாற்றின் இடிகரையில் வேர்களெல்லாம்*

அசைவுற்றுப் பிடிப்பற்று நிற்கும் மாமரத்தின் அழகிய தளிர் காற்றால் அசைவதுபோல, நடுக்கம் கொண்ட நெஞ்சத்தோடு இத்துயரத்தை எங்ஙனம் பொறுப்பேன்?

"அஞ்சி என்பவன் நிமிர்ந்த நடையோடு விரைந்து செல்லும் யானைப்படையை உடையவன். அன்பு நிறைந்த உள்ளத்தோடு அவன் தன் புகழ், நீண்ட நாள் நிற்குமாறு தேர்களைப் பரிசிலாய் இரவலர்க்குக் கொடுக்கின்ற அவனது கொலுமண்டபம் காண் பாரை மயங்க வைப்பதுபோல, கார் கால மேகம் மழையைப் பொழிந்து என்னை மயக்குகின்றது."

கருத்து

தலைவன் தான் திரும்பி வருவதாய்க் குறித்த பருவத்தே வாராதது கண்டு. "நான் இன்னும் இறந்துபடுதலின்றி உயிரோடு இருக்கின்றேன்; என் உள்ளமும் நடுங்குகின்றது. இத்துயரை எங்ஙனம் ஆற்றுவேன்?" எனத் தலைவி வருந்திக் கூறுகிறாள்.

குறிப்பு

தலைவி உயிர் வாழ்வதற்குக் காரணமாய் இருப்பது, காலம் தாழ்த்தினாலும் தலைவன் வருவான் என்னும் நம்பிக்கையே.

சொற்பொருள்

1. உழத்தல் - வருந்துதலால்; உண்மை சான்ம் என - சாதல் உண்மை என்பர்.
2. பெரும்பிறிது இன்மையின் - (ஆனால் நான்) இறவாதிருத்தலால்; இலேனும் அல்லேன் - அன்பில்லாதவளும் அல்லள்.
3. பொருது - தாக்கி; இழிதரும் - ஓடும்; கான்யாறு - காட்டாறு; இகுகரை - இடிந்துகொண்டிருக்கும் கரை.
4. வேர்கிளர் - வேர் பறிக்கப்பட்ட; மா - மா மரம்.
5. இடும்பை - துன்பம்.
6. ஓங்கு செலல் - தலையுயர்ந்து செம்மாந்து நடத்தல்.
7. கடும் - விரைந்து செல்லும்; பகட்டு யானை - போர் யானை; நெடுமான் அஞ்சி - அதியமான் நெடுமான் அஞ்சி, வள்ளல்களுள் ஒருவன்.
8. ஈர நெஞ்சம் - அன்பு நெஞ்சம்; இசை - புகழ்; சேண் - நீண்ட காலம்.

9. தேர்வீசு - தேர்களைப் பரிசிலாய்க் கொடுக்கின்ற; இருக்கை - நாள் அவை, அரசவை.
10. மாரி - மேகம்; மான்றன்று - மயக்குகின்றது.

தலைவி கூற்று

குறுந்தொகை 221 **உறையூர் முதுகொற்றனார்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடைப் பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் கூறிச் சென்ற பருவம் தொடங்கியும் அவன் வாராதது கண்டு வருந்திய தலைவியை, 'நீ ஆற்றியிருத்தல் வேண்டும்' என வற்புறுத்திய தோழியிடம் 'அவர் சொன்ன பருவம் தொடங்கியும் அவர் இன்னும் வரவில்லை; நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்?' என்று தலைவி சொல்லியது.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன;
பறியுடைக் கையர் மறிஇனத்து ஒழிய,
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே.

தெளிவுரை

"*கார் காலத்தில் பூக்கும் முல்லைகளும் பூத்துவிட்டன. பறி யோலையைக் கையில் ஏந்தியிருக்கும் இடையன், குட்டிகளைக் கொண்ட ஆட்டுமந்தையுடன் வயலிலேயே தங்கியிருப்பான். மந்தையிலிருந்து பாலை வீட்டிற்குக் கொண்டுவந்து, அதனை விற்றுவிட்டு உணவுடன் மீண்டும் மந்தைக்குச் செல்வான். அவன் தன் தலையிலே முல்லையின் சிறிய அழகிய அரும்பு களையே சூடியுள்ளான். இவ்வாறு கார்ப்பருவம் தொடங்கியும்*

தலைவர் இன்னும் வந்திலர்" எனத் தலைவி தோழியிடம் தான் ஆற்றியிருக்க இயலாமைக்கான காரணங்களைக் கூறுகிறாள்.

கருத்து

முல்லைப்பூக்கள் மலரும் கார்ப்பருவம் தொடங்கியது; அவர் இன்னும் வந்திலர்.

விளக்கம்

இடையன் ஆட்டுமந்தையுடனேயே தங்கியிருப்பான். மந்தையில் கறந்த பாலை வீட்டுக்கு எடுத்து வந்து, அதை விற்றுவிட்டு, தனக்குரிய உணவோடு மீண்டும் மந்தைக்கே செல்வான்.

இடைமகன் முல்லையரும்புகளைச் சூடியவனாய் இருந்தான் என்று குறிப்பிடுவதால், கார் கால வரவையும், அத்துடன் மாலைக் காலத்தின் வரவையும் குறிப்பிட்டுத் தான் பிரிவுத் துயரால் படும் துயர மிகுதியைத் தலைவி தோழிக்கு உணர்த்தினாள்.

குறிப்பு

பாலைத் தந்து உணவைப் பெறுவது பண்டமாற்று.

சொற்பொருள்

2. பறி - பனையோலையால் செய்த தடுக்கு. இது மழைக்குக் குடையாகவும், படுக்க விரிப்பாகவும் பயன்படும்; மறி - குட்டி; இனம் - ஆட்டு இனம் (மந்தை); ஒழிய - தங்கியிருக்க.
3. கூழ் - உணவு.
4. ஆடுடை - ஆடுகளை உடைய; சென்னி - தலை.
5. சிறு பசு - சிறிய அழகிய; முகை - (முல்லை) அரும்பு.

பருவமன்று எனத் தோழி வற்புறுத்தியது.

தோழி கூற்று

நற்றிணை 99 **இளந்திரையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டாற்றாளாய தலைமகளைத் தோழி, ‘பருவம் அன்று’ என்று வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் கார் காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்றான். கார் தொடங்கியது. ஆனால், அவன் தேர் வரவில்லை. அதனால் தலைவி வருத்தமடைந்தாள். தோழி தலைவியை நோக்கி, ‘இது கார்ப்பருவம் அன்று’ என்று கூறித் தேற்றினாள்.

நீர்அற வறந்த நிரம்பா நீள்இடைத்
துகில்விரித் தன்ன வெயிலவிர் உருப்பின்
அஞ்சுவரப் பனிக்கும் வெஞ்சுரம் இறந்தோர்
தாம்வரத் தெளித்த பருவம் காண்வர
இதுவோ?’ என்றிசின் மடந்தை – மதிஇன்று,
மறந்துகடல் முகந்த கமஞ்சூழ் மாமழை
பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்
‘கார்’என்று அயர்ந்த உள்ளமொடு, தேர்வில
பிடவமும், கொன்றையும், கோடலும்
மடவ ஆகலின், மலர்ந்தன பலவே!

தெளிவுரை

தலைவியே! காடு அறவே நீர் இல்லாது வறட்சியுற்றுள்ளது; கடக்க இயலாததாய் உள்ளது; நீண்ட வெளியில் வெண்மை யான ஆடையை விரித்து வைத்தாற் போன்று கொளுத்தும் வெயிலைக் கொண்டுள்ளது. நடுக்கத்தைச் செய்யும் இத்தகைய கொடுமையான காட்டில் காதலர் சென்றுள்ளார். அவர் தாம் திரும்பி வருவதாய் நம்மிடம் கூறிச் சென்ற பருவம் இதுதானே என்று நீ கேட்கிறாய். அப்பருவம் இஃது அன்று. அறிவில்லாமல்

பருவ காலத்தை மறந்து, கடல்நீரை உண்டதால் சூலுற்ற கரிய மேகம், தன்னிடத்திலுள்ள நீர்ப்பாரம் தாங்காமல் பெருமழையைப் பெய்தது. பிடவமும் கொன்றையும் காந்தளும் மற்றும் பிற மலர்களும் அஃறிணைப் பொருள்களாதலின் அம்மழையைப் பார்த்து இது கார் காலம் என்று கருதி மலர்ந்துவிட்டன. அதனால் இவற்றைக் கொண்டு இது கார் காலம் என்று கருதாதே!

கருத்து

இது கார் காலம் அன்று; மேகம், அறியாமையாலே கார் கால மழையைப் பொழியத் தொடங்கிவிட்டது. உண்மையான கார் காலத்தே தலைவர் தவறாது வந்து சேர்வார்.

விளக்கம்

பொருள்வயிற்சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் குறித்துச் சென்ற கார்ப்பருவம் தொடங்கியது; ஆனால், அவன் வரவில்லை. அதுகண்டு வருந்திய தலைவியை நோக்கித் தோழி, "இது கார்ப்பருவம் அன்று; கார் காலமன்றாயினும் அறியாமை கொண்டு மேகம் கடல்நீரையுண்டு சுமந்து சென்றது; நீரின் பாரத்தைத் தாங்க இயலாமல் மழையைப் பொழிந்துவிட்டது. மழை பெய்வதைக் கண்டு கார் காலம் எனக் கருதிப் பிடவமும் கொன்றையும் காந்தளும் மலர்ந்தன. அவற்றைக் கண்டு இது கார் காலமென்று கருதி மயங்காதே!" என வற்புறுத்திக் கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

குறிப்பு

கார் காலம் தொடங்கிவிட்டது; என்றாலும் தலைவியை ஆற்றுவிக்க வேறு வழி அறியாத தோழி, காலம் தவறி மழை பெய்ததே காரணம் எனக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. வறந்த - வறண்ட; நிரம்பா - கடக்கவியலாத; நீள்இடை - நீண்ட வழி.
2. துகில் - ஆடை; வெயில் அவிர் - வெயில் கொளுத்தும்; உருப்பு - வெப்பம்.

3 பனிக்கும் - நடுக்கம்; வெம்சுரம் - கடுமையான காடு.
4. தாம்வர - தாம் வருவதாய்; தெளித்த - கூறிச் சென்ற.
5. என்றிசின் - என்று கேட்கிறாய்; மதி இன்று - அறிவு இன்றி.
6. கமம் சூழ் - நிறைவுற்ற, சூலுற்ற; மாமழை - கரிய மேகம்.
7. பொறுத்தல் - தாங்குதல்; செல்லாது - இயலாது; இறுத்த - பெய்த; வண்பெயல் - பெருமழை.
8. கார் - கார் காலம்; அயர்ந்த - கருதிய; தேர்வில - ஆராயாது.
9. பிடவம், கொன்றை, கோடல் - மலர்கள்.
10. மடவ - அறிவில்லாதவை.

தோழி கூற்று

குறுந்தொகை 251 **இடைக்காடன்**

திணை : முல்லை

கூற்று

பிரிவிடைத் தோழி, 'பருவம் அன்று; பட்டது வம்பு' என்று வற்புறுத்தியது. (வம்பு - பருவம் தவறிப் பெய்யும் மழை)

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற கார் காலம் தொடங்கியபொழுது தலைவி வருந்த, 'இது கார் காலமன்று; இப்பொழுது பெய்வது காலம் அல்லாத காலத்துப் பெய்யும் மழை' என்று தோழி வற்புறுத்திக் கூறி ஆற்றுவித்தது.

மடவ வாழி! மஞ்ஞை மாஇனம்
கால மாரி பெய்தென, அதன்எதிர்
ஆலலும் ஆலின; பிடவும் பூத்தன;
கார்அன்று இகுளை! தீர்கநின் படரே!
கழிந்த மாரிக்கு ஒழிந்த பழநீர்
புதுநீர் கொளீஇய உகுத்தரும்
நொதுமல் வானத்து முழங்குகுரல் கேட்டே.

தெளிவுரை

"*தலைவி! மேகங்கள் கார்ப்பருவத்தில் பெய்வதற்கான புது நீரைக் கடலில் முகந்துகொள்ளும் பொருட்டுக் கழிந்த கார்*

காலத்தில் பெய்யாமல் தம்மிடம் நின்றுவிட்ட பழைய நீரினை இப்போது கொட்டுகின்றன. தொடர்பற்ற இக்காலத்தில் அறியாமையால் முழங்கும் இடிக் குரல் கேட்டு, பெருங் கூட்டமாய் மயில்கள் பருவத்திற்குரிய மழை பெய்ததெனத் தவறாய்க் கருதி அம்மேகக் கூட்டத்திற்கு எதிரே மகிழ்ந்து ஆடுகின்றன. அங்ஙனமே பிடவ மலர்களும் மலர்ந்தன. அவை அறிவற்றன. இஃது உண்மையான கார் காலம் அன்று. ஆதலால், நீ துன்பத்தினைக் கைவிடு."

கருத்து

கார் காலம் இன்னும் தொடங்கவில்லை; வருந்தாதே!

விளக்கம்

தலைவன் கார் காலத்தில் வருவதாய்க் கூறிச் சென்றான். அக் காலம் தொடங்கியும் தலைவன் வாராததால் தலைவி துயர் கொண்டாள். அது கண்ட தோழி, 'இது கார்ப்பருவம் அன்று; வருந்தாதே!' என்று தலைவியைத் தேற்றினாள். அதற்குத் தலைவி, 'மழை பெய்கிறது; மயில்கள் ஆடுகின்றன; பிடவம் பூத்துள்ளது. இவை கார் காலத்திற்குரியன அல்லவோ?' என்று வினவினாள். அதற்குத் தோழி, 'அறியாமை காரணமாய்க் கார்ப்பருவம் தொடங்கிவிட்டதாக எண்ணிக்கொண்டு மயில்கள் ஆடுகின்றன; பூக்கள் பூக்கின்றன. உண்மையில் கார் காலம் அன்று' என்று சொல்லித் தேற்றுகிறாள்.

குறிப்பு

தலைவியைத் தேற்றுவதால் ஏற்படும் நன்மை கருதி, அறியாமையால் இயற்கை பொய்த்தது எனத் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. மடவ - அறிவற்றன; மஞ்ஞை - மயில்; மாஇனம் - பெரிய கூட்டம்.
2. கால மாரி - கார் கால மழை; அதன் எதிர் - அதற்கு எதிரே.
3. ஆலுதல் - ஆடுதல்.
4. கார் - கார் காலம்; இகுளை - தோழி; படர் - துன்பம்.
5. கழிந்த மாரி - கழிந்த கால மழையில்; ஒழிந்த - பெய்யாது மீதியிருந்த.

6. கொளீஇய - கொள்ளும் பொருட்டு; உகுத்தல் - சொரிதல், பொழிதல்.
7. நொதுமல் - அயல் (கார் காலத்துக்கு அயலான); வானம் - மேகம்.

தோழி கூற்று

நற்றிணை 248 **காசிபன்கீரனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைமகளைத் தோழி மழைமேல் வைத்துப் பருவம் மறுத்தது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கிய பின்னும் தலைவன் திரும்பி வாராததால் தலைவி வருந்தியிருந்தாள். அப்போது தோழி, "இன்னும் உண்மையான கார் காலம் தொடங்கவில்லை; இது பொய்த்தோற்றம்" என்று ஆறுதல் கூறித் தலைவியைத் தேற்றியது.

சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
பொறிவரி நன்மான் புகர்முகங் கடுப்பத்
தண்புதல் அணிபெற மலர வண்பெயல்
கார்வரு பருவம் என்றனர் மன்இனிப்
போர்அருர் உள்ளம் நடுங்கல் காணியர்
அன்பின் மையிற் பண்பில பயிற்றும்
பொய்யிடி அதிர்குரல் வாய்செத்து ஆலும்
இனமயில் மடக்கணம் போல
நினைமருள் வேனோ? வாழியர், மழையே!

தெளிவுரை

"*தலைவியே! தலைவர் பொருளீட்டக் கருதிப் பிரியுங் காலத்தில், 'எப்போது வருவீர்' என்று நாம் கேட்டோம். அதற்கு அவரும், 'புள்ளிகளும் வரிகளும் அமைந்த யானையின் முகம் போலத் தோன்றும் குளிர்ச்சி பெற்ற புதர்கள் அழகுற, தேன்*

மணக்கும் சிறிய முல்லைப்பூக்கள் மலரும் மழை கொண்ட கார்ப்பருவமே, நான் வருங்காலம்' என்று மறுமொழி கூறினார். அவ்வாறிருக்க, மழையே! நீ இத்தலைவியிடம் பெரிதும் அன்பில்லாததால், அவள் நடுங்குவதைக் காண்பதற்காகச் சிறிதும் பண்பின்றி அதிர்ந்த ஓசையுடன் பொய்யாக மின்னி இடிக்கிறாய்! உன் முழக்கத்தை உண்மையெனக் கருதி, கார் காலம் தொடங்கிவிட்டது என்று நம்பி மயில்கூட்டம் ஆரவாரிக்கும். அறிவற்ற அம்மயில் கூட்டம்போல இது கார்ப் பருவம் என்று எண்ணி நான் மயங்குவேனா? மாட்டேன். இயல்பாக மழை பெய்யும் கார் காலத்தில் தலைவர் தவறாது வருவார். மேகமே! வாழ்க! ஆனால், பொய்யாக முழங்கி, மழை பொழிந்து கார் காலமென நம்புமாறு செயல்படாதே" என்று கூறி, "இஃது உண்மையான கார் காலம் அன்று; தவறி ஏதோ மழை பெய்து விட்டது; அதைக் கண்டு கலங்காதே" எனத் தலைவியைத் தேற்றுகிறாள்.

கருத்து

இது கார் காலம் அன்று; கலங்காதே.

விளக்கம்

"தலைவர் கார் காலத்தில் திரும்புவேன் என்றார். ஆனால், மேகம் காலமல்லாக் காலத்தில் மழையைப் பொழிந்திருக்கிறது. அதற்குத்தான் அறிவில்லையென்றால், நாம்கூடவா பொய்யை மெய்யென்று நம்பிவிடுவோம்? உண்மையான கார் காலம் தோன்றும்போது தலைவர் தவறாது வந்து சேர்வார்" என்று கூறித் தோழி, தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. வீ - பூ; தேங்கமழ் - தேன்கமழ் - தேன் மணம் வீசுகின்ற; பசுவீ - பசுமையான பூக்கள்.
2. பொறி - புள்ளி; வரி - கோடு; நல்மான் - யானை; புகர் - புள்ளி.
3. வண்பெயல் - மிகுதியான மழை.
4. கார்ப்பருவம் என்றனர் - கார்ப்பருவத்தில் வருவேன் என்று கூறினார்.
5. பேர்அஞர் - பெரிய துன்பம்; காணியர் - காணும் பொருட்டாக.

6. அன்பு இன்மையில் - எம்மிடம் உனக்கு அன்பு இல்லாமையால்; பண்பு இல பயிற்றும் - பண்பில்லாது சொல்லும்; பயிற்றும் - சொல்லும்.
7. பொய் இடி - பொய்யான இடி; அதிர்குரல் - அதிரும் குரல்; வாய் செத்து - உண்மையான கார்ப்பருவ முழக்கமெனக் கருதி; ஆலும் - ஆரவாரிக்கும்.
8. இனமயில் - மயில் இனம்; மடக்கணம் - அறிவற்ற கூட்டம்.
9. நினைமருள்வேனோ? - உன்னைக் கண்டு மயங்குவேனோ; மழையே - மேகமே.

தோழி கூற்று

நற்றிணை 316 **இடைக்காடனார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை மெலிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருப்பதால் தலைவியின் மனத்துயரம் மிகுதியாயிற்று. அவளது துயர நிலை கண்டு மனம் வருந்திய தோழி அவளிடம், ‘இது கார் காலம் அன்று’ என்று தேறுதல் கூறி ஆற்றுவித்தது.

மடவது அம்ம மணிநிற எழிலி
மலரின் மௌவல் நலம்வரக் காட்டிக்
கயலேர் உண்கண் கனங்குழை இவைநின்
எயிறுஏர் பொழுதின் எய்தரு வேம்எனக்
கண்அகல் விசும்பின் மதியென உணர்ந்தநின்
நன்னுதல் நீவிச் சென்றோர் நல்நகை
வாய்த்துவரல் வாரா அளவை அத்தக்
கல்மிசை யடுக்கம் புதையக் கால்வீழ்த்துத்
தளிதரு தண்கார் தலைஇ
விளியிசைத்து அன்றால் வியலிடத் தானே!

தெளிவுரை

"தலைவியே! முன்பு தலைவன் அழகான முல்லை மலரை அழகுற எடுத்துக்காட்டி, 'மை தீட்டப்பெற்ற கண்களையும் கனமான காதணியையும் கொண்டவளே! இதோ! இம்முல்லை உன் பற்களைப் போன்ற அரும்பு விடும்பொழுது நான் உன்னை வந்து சேர்ந்து விடுவேன்' என்று கூறி, நிலவு போன்ற உன் முகத்தில் உள்ள நல்ல நெற்றியைத் தடவிக் கொடுத்து ஆறுதல் கூறிப் பிரிந்து சென்றான். தான் விரும்பியவாறு அவன் தன் பணியை முடித்துத் திரும்பி வாராதிருக்கும் காலமல்லா இக்காலத்தில், மலைமேல் அதன் பக்கமெல்லாம் மறையும்படி நீர்க்காலை இறக்கி, குளிர்ச்சி பொருந்திய மேகம், முல்லை மலரும்படி மழையைப் பொழிந்து இடியிடிக்கத் தொடங்கி விட்டது. ஆகையால், நீலமணி போன்ற நிறத்தைக் கொண்ட இம் மேகம் மிக்க அறியாமை கொண்டது" எனத் தோழி தலைவி யிடம் கூறினாள்.

கருத்து

காலமல்லாக் காலத்தில் மழை பெய்கிறது; இது கார் காலம் என்று கருதாதே!

விளக்கம்

தலைவன் பிரிவால் வருந்தியிருந்த தலைவியைத் தோழி, "தலைவியே! நீ வருந்தாதே! முல்லை அரும்பும்போது வருவே னென்று தலைவன் கூறிச் சென்றான். அவன் வருவதற்கு முன்னரே, மேகம் அறியாமையால் இடிஇடித்து முல்லை மலரும்படி மழை பெய்யத் தொடங்கிவிட்டது. தலைவன் தான் சொன்ன சொல்லினின்றும் தவற மாட்டான்; குறித்த காலத்தே வருவான். அதுவரை மனத்தைத் தேற்றிக் கொண்டிரு" என்று கூறித் தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்.

சொற்பொருள்

1. மடவது - அறியாமை கொண்டது; மணி - நீலமணி; எழிலி - மேகம்.
2. மௌவல் - முல்லை; நலம் வரக் காட்டி - அழகுற எடுத்துக்காட்டி.
3. கனங்குழை - கனமான காதணி (அணிந்தவளே!).

4. எயிறு - பல்; ஏர் - அழகு; பொழுது - காலம் (கார்ப்பருவம்); எய்தரு வேம் - வந்து சேர்வேன்.
5. கண்அகல் - இடம் அகன்ற; விசும்பில் - வானத்தில்; மதியென - நிலவு என.
6. நுதல் - நெற்றி; நல்நசை - (நமக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற) நல்ல விருப்பம்.
7. வாய்த்து வரல் - மீண்டு வருவதற்குரிய காலம்; வாரா அளவை - வரும் முன்பே.
8. கல் - மலை; அடுக்கம் - சாரல்; புதைய - மறைய; கால்வீழ்த்து - மழைக் காலை இறக்கி.
9. தளிதரு - மழைத்துளியைப் பெய்யும்; தண்கார் - குளிர்ந்த கார் காலத்தை; தலைஇ - உருவாக்கி.
10. விளி இசை - இடி முழக்கம்; வியல் இடம் - அகன்ற வானப்பரப்பு.

தோழி கூற்று

குறுந்தொகை 66 **கோவத்தனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று' என்று வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பருவ வரவைக் கண்டு வருந்திய தலைவியிடம் தோழி அது, 'பருவ வரவன்று' என்று மறுத்து உறுதியாய்க் கூறியது.

மடவ மன்ற, தடவுநிலைக் கொன்றை
கல்பிறங்கு அத்தம் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை, நெரிதரக்
கொம்புசேர் கொடிஇணர் ஊழ்த்த,
வம்ப மாரியைக் கார்என மதித்தே.

தெளிவுரை

"கற்கள் நிறைந்து கிடக்கும் பாலை நில வழியைக் கடந்து சென்ற நம் தலைவர், மீண்டு வருவேனென்று கூறிய கார்ப்பருவம்

இஃது அன்று. அப்பருவம் வரும் முன்னரேயே காலமல்லாக் காலத்தில் பெய்யும் இம்மழையைக் கார் கால மழையென்று பிழைபட, பரந்த அடிப்பாகத்தைக் கொண்ட கொன்றை மரங்கள் கருதிவிட்டன. அதனால் அம்மரங்கள் கிளைகளில் மிகுதியாய்க் கொடிபோல் நீண்ட பூங்கொத்துகளைச் சரஞ்சரமாய்ப் பூக்கச் செய்துள்ளன. இக்கொன்றை மலர்கள் உறுதியாய் அறியாமை கொண்டன" என்று தோழி தலைவியிடம் கூறி அவளைத் தேற்றுகிறாள்.

கருத்து

இன்னும் கார் காலம் தொடங்கவில்லை. ஆதலால், நீ வருந்தாதே!

விளக்கம்

'தலைவியே, நீ வருந்தாதே! பாலை நிலத்து வழியே போன நம் தலைவர் தாம் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற கார் காலம் இன்னும் தொடங்கவே இல்லை. இப்பொழுது பெய்யும் மழை, கார் கால மழையன்று; காலமல்லாக் காலத்தில் பெய்யும் இம்மழையைக் கண்டு கொன்றை மரங்கள் ஏமாந்து கார் காலம் தொடங்கியதாய்க் கருதிக்கொண்டன. ஆதலால், கிளை முழுக்கச் சரஞ்சரமாய் மலர்களைப் பூக்கச் செய்துள்ளன. அவை அறிவற்ற அஃறிணைதானே!' என்று சொல்லித் தோழி தலைவியைத் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. மடவ - அறிவில்லாதவை; மன்ற - உறுதியாய்; தடவு நிலை - பரந்த அடிப்பாகத்தைக் கொண்ட.
2. கல் பிறங்கு - கற்கள் விளங்குகின்ற; அத்தம் - பாலை வழி.
3. பருவம் - (கார்) காலம்; நெரிதர - நிறைய.
4. இணர் - பூங்கொத்து; ஊழ்த்த - மலர்ந்தன.
5. வம்பமாரி - புதிய மழை; கார் - கார் காலம்.

தோழி கூற்று

குறுந்தொகை 382 **குறுங்கீரனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி, 'பருவம் அன்று', 'வம்பு' என்று வற்புறீஇயது. (வம்பு - (புதுமை), காலம் அல்லாக் காலத்தில் பெய்யும் மழை.)

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற கார்ப்பருவம் தொடங்கிய காலத்து, அவன் வாராமையால் வருந்திய தலைவியிடம் தோழி, 'இது கார்ப்பருவம் அன்று; இப்பொழுது பெய்வது காலமல்லாக் காலத்தில் பெய்யும் புதுமழை' என்று கூறித் தெளிவித்தது.

தண்துளிக்கு ஏற்ற பைங்கொடி முல்லை
முகைதலை திறந்த நாற்றம் புதல்மிசைப்
பூஅமல் தளவமொடு, தேம்கமழ்பு கஞல,
வம்புப் பெய்யுமால் மழையே; வம்புஅன்று,
கார்இது பருவம் ஆயின்,
வாரா ரோநம் காத லோரே?

தெளிவுரை

"தலைவி! பசுமையான முல்லைக்கொடிகள் குளிர்ச்சி பொருந்திய மழைத்துளிகளை ஏற்றன; வாய் அவிழ்ந்து அரும்புகள் மலர்ந்தன. அவற்றிலிருந்து எழுந்த மணம், புதர்களிலே மிகுதியாய்ப் பூத்திருக்கும் செம்முல்லையோடு சேர்ந்து, தேன் மணத்தை வீசுகின்றன. மேகங்களும் காலமல்லாக் காலத்தில் பெய்கின்றன. இது புதுமை. அன்றி, உண்மையான கார்ப் பருவமாய் இருக்குமாயின் நம் தலைவர், தான் சொன்ன படி வாராதிருப்பாரா?"

கருத்து

இது கார்ப்பருவம் அன்று; கார்ப்பருவமாயிருந்தால் தலைவர் தவறாது வந்திருப்பார்.

விளக்கம்

தொடங்கியது கார்ப்பருவமே என்றாலும், தோழி தலைவியைத் தேற்ற, 'சொன்ன சொல் தவறாத நம் தலைவர் இன்னும் வந்து சேராததால் இது கார்ப்பருவம் அன்று' என்று சொல்கிறாள்.

சொற்பொருள்

1. தண்துளி - குளிர்ச்சியான மழைத்துளி; பைங்கொடி - பசிய கொடி.
2. முகை - அரும்பு; தலைதிறந்த - மலர்ந்த; மிசை - மேலே.
3. பூஅமல் - பூக்கள் நிறைந்த; தளவம் - செம்முல்லை; தேம்கமழ்பு - தேன் மணக்குமாறு; கஞல - நெருங்கியிருக்க.
4. வம்புப் பெய்யும் - காலமல்லாக் காலத்தில் புதிதாய்ப் பெய்யும்; வம்பு அன்று - புதுமையானதே அல்லாமல்.
5. வாராரோ - வாராதிருப்பாரா?

தோழி கூற்று

ஐந்திணை ஐம்பது 9 **மாறன் பொறையனார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் என்று அழிந்த கிழத்தியைத் தோழி பருவம் அன்று என்று வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

'கார் காலத்தில் வருவேன்' என்று கூறிப் பிரிந்து சென்றான், தலைவன். அக்கார் காலம் தொடங்கியும் அவன் வாராததால் தலைவி வருந்தினாள். தோழி, 'இது கார் காலம் அன்று' என்று கூறித் தலைவியைத் தேற்றினாள்.

வருவர் வயங்கிழாய்! வாள்ஒள்கண் நீர்கொண்(டு),
உருகி உடன்றழிய வேண்டா, – தெரிதியேல்
பைங்கொடி முல்லை அவிழ்அரும்(பு) ஈன்றன,
வம்ப மழைஉரறக் கேட்டு.

தெளிவுரை

“ஒளி வீசும் அணிகலன்களை அணிந்த தலைவியே! காலமல்லாக் காலத்தில் புதிதாய்த் தோன்றிய மேகங்கள் கூடி முழங்கியதனால் பசிய முல்லைக் கொடிகள் அரும்புகளை ஈன்றுள்ளன. ஆய்ந்து பார்த்தால் இதனை அறியலாம். மெய்யாகவே கார்ப்பருவமாயிருப்பின் தலைவர் தவறாது வந்து சேர்ந்திருப்பார். எனவே, வாள் போன்ற உன் கண்களிலிருந்து நீர் பெருக நீ நொந்து அழிய வேண்டா.”

கருத்து

இது கார்ப்பருவமாயின் தலைவர் வந்திருப்பார். அவர் வாராததால் இது கார்ப்பருவம் அன்று.

சொற்பொருள்

1. வயங்கு இழாய் - ஒளி வீசும் அணிகலன்களை அணிந்தவளே!; வாள் - வாள் போன்ற; ஒள் - ஒளியைக் கொண்ட.
2. உடன்று - நொந்து; தெரிதியேல் - ஆய்ந்து பார்ப்பாயின்.
3. அவிழ் அரும்பு - மலரும் பருவத்தைக் கொண்ட மொட்டு.
4. வம்ப - காலமல்லாக் காலத்தில்; மழை உரற - மேகங்கள் கூடி முழங்க.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 462 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு வேறுபட்ட கிழத்தியைத் தோழி, ‘பருவம் அன்று’ என வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவ அறிகுறிகளைக் கண்டு தலைவி, தலைவன் வரவில்லையே என்று வருந்தினாள். தோழி அது, ‘கார்ப்பருவம் அன்று’ என்று கூறித் தலைவியை வருந்தக்கூடாது என வற்புறுத்தியது.

ஏதில பெய்ம்மழை கார்என மயங்கிய
பேதைஅம் கொன்றைக் கோதைநிலை நோக்கி
எவன்இனி மடந்தைநின் கலிழ்வே நின்வயின்
தகைஎழில் வாட்டுநர் அல்லர்
முகைஅவிழ் புறவின் நாடிறந் தோரே.

தெளிவுரை

“தலைவியே! அரும்புகள் இதழ் அவிழ்ந்தபடி இருக்கும் முல்லைக்காடுகளைக் கொண்ட நாட்டினைக் கடந்து சென்றுள்ளார், நம் காதலர். அவர் உன்னிடத்தே உள்ள தகைசிறந்த அழகினை வாடச்செய்யும் கொடியவர் அல்லர். காலத்தோடு பொருந்தாத மழை வந்து பெய்ததால், அதனைக் கார் காலத்து மழையெனக் கருதி மயங்கிய அறியாத் தன்மை கொண்ட அழகிய கொன்றையும் மலர்ந்திருக்கிறது. மாலை வடிவாய்த் தொங்கும் கொன்றைப் பூக்களைப் பார்த்துக் கார் காலம் தொடங்கிவிட்டது என்று நீயும் வருந்திக் கண்ணீர் விட்டு அழுவதால் என்ன பயன்?”

கருத்து

கொன்றை பேதைமையால் கார் காலம் அல்லாக் காலத்தும் மலர்ந்துள்ளது. கொன்றை மயங்கியதைப்போல் நீயும் மயங்காதே.

சொற்பொருள்

1. ஏதில - காரணமின்றி (கார் காலம் இல்லாதிருந்தும்); கார் என - கார் காலம் என்று கருதி; மயங்கி - தவறாய் உணர்ந்து.
2. பேதைஅம் கொன்றை - அறியாமையைக் கொண்ட அழகிய கொன்றைப் பூ; கோதை நிலை நோக்கி - மாலையாய்த் தொங்கும் கொன்றைப் பூக்களைப் பார்த்து.
3. எவன் - ஏன்?; கலிழ்வு - கலக்கம்; நின்வயின் - உன்னிடத்தில்.
4. தகை எழில் - தகைமையோடு பொருந்தியுள்ள அழகு; வாட்டுநர் - வருத்துபவர்.
5. முகை அவிழ் - மொட்டுகள் மலர்ந்த (மலர்); புறவு - முல்லை நிலம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 114 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் கேட்பத் தோழி குருந்த மரத்திற்குச் சொல்லுவாளாய்ப் பருவமன்றென்று வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

கார் கால வரவு கண்டு கலங்கிய தலைவி கேட்கும்வண்ணம், தோழி, குருந்த மரத்தை நோக்கிச் சொல்லியது.

பாத்து, படுகடல் மாந்திய பல்கொண்மூ,
காத்து, கனைதுளி சிந்தாமை, பூத்து,
குருந்தே! பருவங் குறித்(து)இவளை நைந்து
வருந்தேஎன் றாய்நீ வரைந்து.

தெளிவுரை

"குருந்த மரமே! ஒலிக்கின்ற கடல்நீரைப் பருகிய மேகங்கள் அந்நீரைப் பாதுகாத்து மலையின்மேற்சென்று மழைத் துளிகளைச் சிதறிச் சென்றுள்ளன. பெருமழை பெய்யாத நிலையில், 'இது கார்ப்பருவமோ!' என்று கருதுமாறு பூக்களை மிகுதியாய்ப் பூக்கச் செய்துவிட்டாய். அதனால் என் தலைவியை உடல் மெலிந்து வருத்தமடையச் செய்துவிட்டாய்" என்று தலைவியின் காதில் விழும்படி குருந்த மரத்தைப் பார்த்துத் தோழி சொன்னாள்.

கருத்து

மேகம் சிதறிய சிறு மழைத்துளிகளைக் கண்டு இது கார் காலம் அன்றெனினும் குருந்த மரப்பூக்களைப் பூக்கச் செய்துவிட்டது. எனவே, இது கார் காலம் எனக் கருதி வருந்தாதே!

சொற்பொருள்

1. பாத்து - (கடலினின்றும்) பகுத்தெடுத்து; படு - ஒலிக்கின்ற; கொண்மூ - முகில்கள்.

2. காத்து - அந்நீரைத் தன்னிடத்தில் காத்து வைத்து; கனைதுளி - செறிவான துளிகளை; சிந்தாமை - சிதறி நன்கு பெய்யாமலே.
3. பருவம் குறித்து - இது கார்ப்பருவம் என்று நம்பச்செய்து; இவளை - தலைவியை; நைந்து - உடல் மெலிந்து.
4. வருந்தே - வருந்துவாய்; என்றாய் நீ - நீ மிகவும் துன்புறுத்து கின்றாய்.

தலைவி கூற்று

குறுந்தொகை 200 **ஔவையார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் ஆற்றாளாகிய தலைமகட்குத் தோழி, 'பருவமன்று வம்பு' என்றவழித் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் குறித்த பருவம் தொடங்கிய காலத்து வருந்திய தலைவியை நோக்கி, "இது கார்ப்பருவம் போலத் தோற்றமளிக்கிறதே தவிர உண்மை யில் கார்ப்பருவம் அன்று" என்று கூறித் தலைவியைத் தேற்றினாள், தோழி. அப்பொழுது, "இது கார்ப்பருவமே! தலைவர் நம்மை மறந்துவிட்டார்' என்று தலைவி தோழியின் கூற்றை மறுத்துக் கூறியது.

பெய்த குன்றத்துப் பூநாறு தண்கலுழ்
மீமிசைத் தாஅய வீஇ சுமந்துவந்து
இழிதரும் புனலும்; வாரார் தோழி!
மறந்தோர் மன்ற; மறவாம் நாமே;
கால மாரி மாலை மாமழை
இன்னிசை உருமின முரலும்
முன்வரல் ஏமம் செய்துஅகன் றோரே.

தெளிவுரை

"*மழை பெய்த குன்றிலிருந்து பூ மணம் கமழும் குளிர்ச்சி பொருந்திய கலங்கல் நீர், அதன்மீது பரந்து உதிரும் பூக்களையும்*

சுமந்துகொண்டு அருவி நீராய் இறங்கி ஓடி வருகின்றது. நம் தலைவர், கார் கால மேகம் மாலை நேரத்தில் பெருமழை பொழிய இனிய ஓசையைக் கொண்டு இடி முழங்கும் முன்னரேயே நான் வந்துவிடுவேன் என்று உறுதி கூறிச் சென்றார். ஆனால், இன்னும் வரவில்லை. நீ என்னைத் தேற்று தற்காக இது கார் காலம்போலத் தோன்றினும் உண்மையான கார் காலம் அன்று என்கிறாய்; இது கார் காலமே! நம் தலைவர் நம்மை உறுதியாய் மறந்துவிட்டார்; ஆயினும், நாம் அவரை மறக்க மாட்டோம்" என்று தலைவி தோழியிடம் கூறி வருந்தினாள்.

கருத்து

தலைவர் குறித்த பருவத்தில் வரவில்லை; அவர் நம்மை மறந்து விட்டார்; அவர் மறந்தாலும் நாம் மறவோம்!

விளக்கம்

மலைமீது புது மழை பெய்தமையால் பூக்களோடு கலந்து மணம் பெற்று, கலங்கல் நீராய் ஓடி வருகிறது; அது தன்மீது உதிர்ந்து பரவும் மற்ற பூக்களையும் சுமந்துகொண்டு அருவியாய்க் கீழிறங்குகிறது. கார் கால மேகம் மாலை நேரத்தில் பெருமழை பொழிய இடித்து முழங்கிக்கொண்டிருக்கிறது. இவ்வாறாய்க் கார்ப்பருவம் தொடங்கியும் தலைவர் இன்னும் வரவில்லை. அவர் நம்மை மறந்தார்; நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டோம்.

சொற்பொருள்

1. தண்கலுழ் - குளிர்ச்சியான கலங்கல் நீர்.
2. மீமிசை - மேலே; தாஅய - பரவிக் கிடந்த; வீ - மலர்.
3. இழிதரும் - இறங்கி வரும்; புனல் - அருவி.
5. காலமாரி - கார் கால மேகம்.
6. உரும் - இடி; முரலும் - ஒலிக்கும்.
7. முன்வரல் - முன்னரேயே வருவது; ஏமம் - உறுதி, பாதுகாப்பு.

தலைவி கூற்று

குறுந்தொகை 148 **இளங்கீரந்தையார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி, 'பருவமன்று' என்று வற்புறுத்தத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் மீண்டு வருவதாய்க் கூறிச் சென்ற கார்ப்பருவம் தொடங்கியும் அவன் வாராமையால் துன்புற்ற தலைவியைத் தேற்றும் தோழி, 'இது கார்ப் பருவமன்று; அவர் பொய் சொல்ல மாட்டார்' என்று வற்புறுத்தத் தலைவி, 'கொன்றைகள் பூத்தன; இது கார்ப்பருவமே' என்று கூறியது.

செல்வச் சிறாஅர் சீறடிப் பொலிந்த
தவளை வாய பொலம்செய் கிண்கிணிக்
காசின் அன்ன போதுஈன் கொன்றை
குருந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்,
'கார்அன்று' என்றி ஆயின்,
கனவோ மற்றுஇது வினவுவல் யானே.

தெளிவுரை

"தோழி! செல்வக்குடியில் தோன்றிய சிறுவர்களின் சிறிய காலடிகளில் 'கிண்கிணி'கள் விளங்குகின்றன. அக்கிண்கிணிகள், தவளையின் வாயைப் போன்ற அமைப்பினைக் கொண்டு பொன்னால் செய்யப்பெற்றுள்ளன. அக்கிண்கிணிகளிலுள்ள பொற்காசினைப் போன்று கொன்றை மரங்கள் பேரரும்புகளைத் தோற்றுவித்துள்ளன. அக்கொன்றை மரங்கள் குருந்த மலர் களோடு சேர்ந்து அசைந்தாடுகின்றன. இத்தகைய குளிர்ச்சி மிகுந்த கார்ப்பருவத்திலேயும், 'இது கார்ப்பருவம்' அன்று என்று கூறுகின்றாய் என்றால் இஃது என்ன கனவா? என் வினாவிற்கு விடை சொல்" எனக் கூறி இது கார்ப்பருவமே என்பதைத் தலைவி வலியுறுத்திச் சொல்கிறாள்.

கருத்து

இது கார் காலமே; தலைவர்தான் வந்திலர்.

குறிப்பு

கொன்றையும் குருந்தும் கார் காலத்தே மலர்வன. கொன்றைப்பூ பொன் காசினைப் போன்றிருக்கும்.

சொற்பொருள்

1. சிறாஅர் - சிறுவர்; சீறடி - சிறு அடி, சிறிய காலடி; பொலிந்த - விளங்கிய.
2. வாய் - வாயைப் போன்ற.
3. போது - மலரும் பருவத்து அரும்பு; ஈனுதல் - வெளிப்படுத்துதல்.
4. அலம் வரும் - சுழலும்; பெருந்தண் காலை - மிக்க குளிர்ச்சியைக் கொண்ட பருவம்.
5. கார் அன்று - கார் காலம் அன்று; என்றியாயின் - என்று கூறுவாயாயின்.
6. வினவுவல் - கேட்பேன்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 121 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்துந் தோழிக்கு, தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் தான் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி அதற்கு எதிராய்க் கலங்கிச் சொல்லியது.

ஒருத்தியான்; ஒன்றல பல்பகை என்னை
விருத்தியாக் கொண்டன வேறாய் – பொருந்தில்
மடல்அன்றில், மாலை, படுவசி, ஆம்பல்
கடலன்றிக், கார்,ஊர் கறுத்து.

தெளிவுரை

“தோழியே! நான் ஒருத்தியாய் இருந்தும், ஒன்றன்று, பல பகைகள் என்னைத் துன்புறுத்துகின்றன. பனைமடலில் உள்ள அன்றிற்பறவை, மாலைக்காலம், பெய்கின்ற மழை, ஆம்பல் குழலோசை, கடல், கார்மேகங்கள் ஆகிய இவையனைத்தும் என்னை வருத்துவதையே தமது தொழிலாய்க் கொண்டுள்ளன. இதற்கு நான் என்ன செய்வேன்?” எனத் தோழியிடம் தலைவி வருந்திக் கூறினாள்.

கருத்து

கார் காலப் பகைகளாய் அமைபவையோ பல; அவை தரும் துன்பத்தைத் தனியொருத்தியாய் உள்ள நான் எவ்வாறு தாங்குவேன்?

சொற்பொருள்

1. ஒன்றல - ஒன்று அன்று; பல்வகை - பல வகையான (பகை).
2. விருத்தி - தொழிலாக; வேறு ஆ - வேறாய்ப் பிரிந்து; பொருந்து இல் - (பின்பு) பொருந்துதல் இல்லாத, அஃதாவது ஒன்றை விட்டு ஒன்று பிரியாத.
3. மடல் - பனைமடலில் (உள்ள); அன்றில் - அன்றில் பறவை; படுவசி - பெய்யும் மழை; ஆம்பல் - ஆம்பற்குழலோசை.
4. அன்றி - மேலும்; கார் - மேகம்; ஊர் - ஊர்ந்து, சேர்ந்து; கறுத்து - சினந்து.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 122 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் அன்றன்று வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் வன்புறை எதிரழிந்தது.

கூற்று விளக்கம்

'இது கார் காலம் அன்று' என்று தோழி சொல்ல, தலைவி அதனை மறுத்துக் கூறியது.

கானந் தலைசெயக் காப்பார் குழல்தோன்ற
ஏனம் இடந்த மணிஎதிரே – வானம்
நகுவதுபோல் மின்னாட நாண்இல்என் ஆவி
உகுவது போலும் உடைந்து.

தெளிவுரை

"என் தோழியே! முல்லைக்காடுகள் தழைக்கத் தொடங்கி விட்டன; ஆநிரையை மேய்த்துப் பாதுகாக்கும் ஆயர்களின் புல்லாங்குழல் ஓசை வெளிப்படுகிறது. பன்றிகள் நிலத்தைக் கிளறியதால் வெளிப்பட்ட மாணிக்கங்களுக்கு எதிராய் முகில்கள் சிரிப்பதுபோல ஒளிவிட்டு மின்னல்கள் மிளிர் கின்றன. இந்நிலையைக் கண்டும் நாணமற்றவளாய் நான் இன்னும் இறவாமல் இருக்கிறேன். என் உயிரோ, துயரத்தினால் துகளாகி உதிர்ந்து விழுவதுபோல உள்ளது" என்று தலைவி *தோழியிடம் கூறினாள்.*

கருத்து

இது கார் காலமே; அதற்குரிய அறிகுறிகள் தெளிவாய்த் தொடங்கி விட்டன.

விளக்கம்

'தலைவன் சொல்லிச் சென்ற கார் காலம் இன்னும் தோன்ற வில்லை. அப்பருவத் தொடக்கத்தில் தலைவன் தவறாது வந்து

விடுவான்' என்று தோழி தலைவியைத் தேற்றினாள். அவள் சொல்லை மறுத்து, 'கார் காலத்திற்குரிய அறிகுறிகள் தெளிவாகத் தோன்றிவிட்டன. இதைக் கார் காலம் அன்று என்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும். இது கார் காலம் என்பதில் சிறிதும் ஐயமில்லை; நான் இன்னும் இறவாமல் இருக்கிறேனே அதுதான் ஐயத்திற்கிடமாயுள்ளது' எனத் தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

மரங்கள் தளிர்த்தல்; மாலை நேரங்களில் ஆயர்கள் புல்லாங்குழலை ஊதிப் பசுக் கூட்டங்களை வீட்டிற்கு ஓட்டி வருதல், மின்னல்கள் ஒளி வீசுதல் ஆகியவை கார் கால அறிகுறிகள்.

மாணிக்கக் கற்களைவிட மின்னல் ஒளி சிறப்பாய் உள்ளது. அதனால், அஃது அக்கற்களைப் பார்த்து 'உம்மைவிட நான் மிகுந்த ஒளியினைக் கொண்டுள்ளேன்' என்று கூறிச் சிரிப்பதாய் உள்ளது என நயம்படக் கூறப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கானம் - காடு; தலைசெய - தழைத்து ஓங்க; காப்பார் - பசு மாடுகளை மேய்த்துப் பாதுகாக்கும் இடையர்; குழல் - புல்லாங்குழல்; தோன்ற - ஒலி உண்டாக.
2. ஏனம் - பன்றி; இடந்த - நிலத்தைக் கிளறியதால்; மணி - (வெளிப் பட்டுத் தோன்றிய) மாணிக்கக் கற்களுக்கு; எதிரே - எதிராய்.
3. நகுவது - சிரிப்பது; மின்ஆட - மின்னல் ஒளிவிட்டுத் தோன்ற; நாண் இல் - நாணம் இல்லாத; ஆவி - உயிர்.
4. உகுவது போலும் - உதிர்வது போன்றுள்ளது; உடைந்து - துகளாக நொறுங்கி.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 98 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்திய தோழிக்கு, தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

(வன்புறை - வன்பு + உறை - கடினமாய்க் கூறும் சொற்கள். எதிரழிந்து சொல்லல் - எதிராய்க் கலங்கிச் சொல்லுதல்)

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி, அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி கலங்கி அதற்கு எதிராய்ச் சொல்லியது.

வீயும் வியன்புறவின் வீழ்துளியால், மாக்கடுக்கை;
நீயும் பிறரொடும்காண், நீடாதே – ஆயும்
கழல்ஆகி பொன்வட்(டு)ஆய், தார்ஆய், மடல்ஆய்க்,
குழல்ஆகி, கோல்சுரியாய்க் கூர்ந்து.

தெளிவுரை

"முல்லை நிலத்தில் உள்ள சிறந்த கொன்றை மரம், மழைத் துளிகள் விழுந்ததால் சிறுமியர் விளையாடும் கழற்சிக்காய்க ளைப் போன்ற அரும்புகளைத் தோற்றுவித்தது; பின், பொன் னால் ஆன சூதாடு கருவிகளைப் போல் அவற்றை முதிர்வித்தது. பின்பு, பூமாலை போன்று பொலிவு பெறச் செய்தது; அதன்பின் அவற்றை இதழ்களாய் மலரச்செய்தது; பின்னர்ப் பெண்டிரின் கூந்தல்போலக் காய்க்கச் செய்தது; முடிவில் மிகுதியும் காய்க்கச் செய்து துளையைக் கொண்ட கொம்பாய் மாற்றி அவற்றை அழியச் செய்துவிட்டது. இதனை மற்ற தோழியரோடு நீயும் காலத்தாழ்வின்றி உடனே சென்று பார்" என்று தலைவி தோழியினைப் பார்த்துச் சொன்னாள்.

கருத்து

கொன்றை மரங்களில் அரும்புகள் தோன்றி, முதிர்ந்து, மலர்ந்து, காய்த்து, அழிந்தும்விட்டன. இவற்றையெல்லாம் அறிந்தும் இது கார் காலம் அன்று என்கிறாயே!

குறிப்பு

கொன்றை கார் காலத்தில் மலரும். மலர் பொன் நிறமாய் இருக்கும்; கொத்தாய்ப் பூக்கும்; அக்கொத்தின் மேல்பகுதி மலரும்போது கீழே, முகை, அரும்பு, நனை எனும் முறையில் அடுக்காய் நீண்டிருக்கும்.

இப்பூவின் வளர்ச்சிப் பருவத்தை நோக்கினால் (1) வாய் நெகிழாத பசிய மொட்டு, சிறுமிகள் விளையாடப் பயன்படும் கழற்சிக்காய் போன்றிருக்கும் (2) வாய் நெகிழ்ந்தபோது பொன்காசு போன்றும், பொன்னால் செய்த வட்டுக்காய் போன்றுமிருக்கும். (3) மலரோடு கூடிய கொத்து மாலை போன்றும் இருக்கும். (4) விரிந்த மலரின் இதழ் மடலாகவும் தோன்றும்.

சொற்பொருள்

1. வியன் புறவு - அகன்ற முல்லை நிலம்; வீழ் துளி - வீழ்ந்த மழைத்துளி; மா - சிறந்த; கடுக்கை - கொன்றை மரம்.
2. பிறரொடு - மற்றத் தோழியரோடு; காண் நீடாதே - நீடாதே காண் - கால நீட்டிப்பின்றி உடனே பார்; ஆயும் - சிறுமிகள் ஆய்ந்து விளையாடும்படியான.
3. கழல் ஆகி - கழற்சிக்காய்களைப் போன்ற அரும்புகளை முதன் முதலாய் தோற்றுவித்து; பொன் வட்டு ஆய் - பொன்னால் ஆன சூதுக் கருவிகளைப் போன்று (அவற்றை முதிர்வித்து); தார் ஆய் - பின்பு பூமாலை போன்று அவற்றைப் பொலிவித்து; மடல் ஆய் - பின்னர் அவற்றை இதழ்களாய் மலர்வித்து.
4. குழல் ஆகி - மேலும் அவற்றைப் பெண்களின் நீண்ட கூந்தல்போல் தோன்றச் செய்து; கூர்ந்து சுரிகோல் ஆய் - முடிவில் துளையினைக் கொண்ட கொம்பாக அவற்றை மாற்றி; வீயும் - அழிப்பிக்கும்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 119 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்தும் தோழிக்கு, தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி கலங்கி அதற்கு எதிராய்ச் சொல்லியது.

உகவுங்கார் அன்றென்பார், ஊரார்; அதனைத்
தகவும் தகவன்றென்(று) ஓரேன்; – தகவேகொல்
வண்துடுப்பாய், பாம்பாய், விரலாய், வளைமுறியாய்,
வெண்குடையாம், தண்கோடல் வீந்து.

தெளிவுரை

"தோழியே! இவ்வூரில் உள்ளவர் மழைத்துளிகள் காணப்படும் இப்பொழுதைக் கார்ப்பருவம் அன்று என்று கூறுகின்றனர். அது சரியானதா, தவறானதா என்று நான் அறியேன். ஆயின், குளிர்ச்சி பெற்ற வெண்காந்தளில் இம்மழையால் முதலில் வளமான துடுப்பைப்போல் அரும்பு தோன்றியது. பின்பு அரும்பு பாம்பைப் போல் நீண்டது; பின்பு கைவிரல்களைப் போன்று இதழ்களைக் கொண்டது; அடுத்து மேலும் வளையும் தளிர் இதழ்கள் கீழ்முகமாய் மடிய வெண்மையான குடை போன்று காணப்பட்டன. இத்தகைய நிலைகளைக் கொண்ட காந்தள் கார்ப்பருவம் என்பதை வலியுறுத்துகிறது. அங்ஙனம் இருக்க இப்பருவத்தைக் கார்ப் பருவம் அன்று என்பது பொருந்துமா?" எனத் தோழியைத் தலைவி வினவினாள்.

கருத்து

வெண்காந்தளின் மலர் அரும்பி, முதிர்ந்து, விரிந்து, பிறகு அதன் இதழ் மடியும் இப்பருவத்தைக் கார் காலம் அன்று என்பது எவ்வாறு?

சொற்பொருள்

1. உகவும் - மகிழ்வோடு காணப்படும்; கார் - கார்ப்பருவம்.
2. தகவு - நேர்மையானது (உண்மை); ஓரேன் - அறியேன்.
3. வண்துடுப்பாய் - வளவிய துடுப்புப்போல (அரும்பி); பாம்பாய் - பாம்பினைப் போன்று (அரும்பு நீளப்பெற்று); விரலாய் - விரல்கள் போல் (விரிந்து); வளைமுறியாய் - வளைகின்ற தளிர்கள் போன்று (இதழ்களைக்கொண்டு).
4. வெண்குடையாம் - (இதழ்கள் மடிவுற்று) வெண்மையான குடையைப் போல; தண்கோடல் - குளிர்ந்த வெண்காந்தள்; வீந்து - கீழ்நோக்கி மடிந்து. (எனவே, கார் என்று கூறுவது தகவே.)

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 108 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவம் அன்றென்று வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் ஆற்றாது சொல்லியது.

கூற்று விளக்கம்

'இது கார்ப்பருவம் அன்று' என்று தோழி கூறினாள். அவ்வாறு கூறிய தோழியிடம் தலைவி பொறாதவளாய்ச் சொல்லியது.

கண்ணுள வாயின், முலைஅல்லை, காணலாம்
எண்ணுள வாயின், இறவாவால் – எண்ணுளவா
அன்றொழிய, நோய்மொழிச்சார் வாகா(து); உரும்உடைவான்
ஒன்றொழிய, நோய்செய்த ஆறு.

தெளிவுரை

“தோழியே! இடியோடு கூடிப் பெய்யும் இம்மழை, காமத்தால் உண்டாகும் பத்துத் துன்பங்களுள் சாக்காடு என்னும் ஒன்றைத் தவிர, மற்றைய ஒன்பது வகைத் துன்பங்களையும் எனக்குத் தருகின்றது. இம்மழையால் பூத்த முல்லைச்செடிகள் கண்ணில்லாமையால்தான் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன. நீ அம்முல்லையைப் போன்றவள் அல்லள். உனக்குக் கண்கள் இருக்கின்றன. உனக்குக் கண்கள் இருப்பது மெய்யானால், நீ சிரிப்பதை விட்டு என் துன்பத்தைக் காணலாம். இத்தனை நாளில் வருவேன் எனக் காதலர் குறிப்பிட்டுச் சென்ற நாள்கணக்கு தவறாதிருக்க இஃது அந்தக் கார்ப்பருவம் அன்று என்றால் மழையானது இங்ஙனம் எல்லையின்றித் தொடர்ந்து பெய்யாது. ஆதலால், நான் அடைந்த இத்துன்பம் நீங்குமாறு நீ கூறும் சொல், என்னை ஆற்றுவிக்க நின் உள்ளத்தினின்று வெளிப்பட்டவையேயன்றி எனக்குப் பற்றுக்கோடாய் இருக்க மாட்டா” என்றாள், தலைவி.

கருத்து

முல்லைக்கொடிகள் சிரிப்பனபோலப் பூத்துள்ளன; இது கார் காலமே!

குறிப்பு

காதலர் பிரிவினால் ஏற்படும் பத்துத் துன்பங்களுள் சாவைத் தவிர மற்ற ஒன்பது துன்பங்கள்: அன்பொடு பார்த்தல், உளங்கொண்டு பார்த்தல், புணர்ச்சி வேட்கை, உறக்கம் ஒழிதல், உடல் மெலிதல், உணர்வு ஒழிதல், நாணம் அழிதல், வாய்விட்டு அரற்றல், மயக்கம் உறுதல்.

சொற்பொருள்

1. **கண் உளவாயின்** - (உனக்கு) கண்கள் இருப்பது (உண்மையானால்); **முலை அல்லை** - முல்லை அல்லை - நீ அம்முல்லையைப் போன்றவள் அல்லள் (ஆகலின், உனக்குக் கண்கள் இருக்க வேண்டும்); **காணலாம்** - (என் துயரை) நீ காணலாம்.
2. **எண்** - (காதலர் இத்தனை நாள்களில் வருவேன் என்று குறித்துச் சென்ற நாள்) கணக்கு; **உளவாயின்** - (தவறாதிருக்க இஃது அப்பருவம் அல்லாது) இருக்குமானால்; **இறவாவா** - (இம்மழை) எல்லை கடந்து தொடர்ந்து பெய்ய மாட்டா; **ஆல்** - ஆதலின்.

3. உரும் உடைவான் - இடியோடு கூடிப் பெய்யும் இம்மழை.
4. ஒன்றொழிய - சாக்காடு என்னும் ஒன்றைத் தவிர; நோய் - மற்றத் துன்பங்களையெல்லாம்; செய்த - உண்டாக்கிய; ஆறு - வழியினை (முல்லை கண்ணில்லாமையால் அறியவில்லை).
3. நோய் ஒழிய - என் துன்பங்கள் நீங்கும்படி; மொழி - நீ சொல்லும் மொழி.

2-3.எண் உளவா அன்று - நீ என்னை நினைத்துச் சொல்வதல்லால்; சார்வு ஆகா - எனக்குப் பற்றுக்கோடு ஆகா.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 118 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்தும் தோழிக்கு, தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியதும் அக்காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி அதற்கு எதிராய்க் கலங்கிச் சொல்லியது.

> கார்தோன்றிப் பூவுற்ற காந்தள் முகைவிளக்குப்
> பீர்தோன்றித் தூண்டுவாள் மெல்விரல்போல்; – நீர்தோன்றி,
> தன்பருவம் செய்தது கானம்; தடங்கண்ணாய்!
> என்பருவம் அன்(று)என்றி, இன்று.

தெளிவுரை

"*அகன்ற கண்களைக் கொண்ட தோழியே! வீட்டிலுள்ள விளக்கு பீர்க்க மலரின் பொன் நிறத்தோடு எரிகிறது; அதனைத் தூண்டி நன்கு எரியச் செய்பவளது மென்மையான விரலைப் போன்று காந்தள் அரும்புகள், கார்த்திகை மலர்களின்மீது பொருந்தி பூத்து நிற்கின்றன. மழையாலே முல்லை நிலம்*

முழுவதும் தனக்குரிய கார்ப்பருவத் தோற்றத்தைக்கொண்டு விளங்குகின்றது. அங்ஙனமிருக்க, தலைவர் திரும்பி வருவதாய்ச் சொன்ன கார்ப்பருவம் இஃது அன்று என்று நீ எவ்வாறு கூறுகின்றாய்" என்று தோழியை நோக்கித் தலைவி வினவினாள்.

கருத்து

காந்தளும் தோன்றியும் மலர்ந்து, மழை கொட்டும் இப்பருவத்தைக் கார் காலம் அன்று என்று நீ எவ்வாறு கூறுகிறாய்?

சொற்பொருள்

1. கார் - கார் காலம்; பூவுற்ற - பூத்த; காந்தள் முகை - காந்தள் மொட்டுகள்; விளக்கு - (வீட்டிலுள்ள) விளக்கு.
2. பீர்தோன்றி - (மழுங்கி எறிதலான்) பீர்க்கம் பூவின் நிறம் பெற்றுத் தோன்றியதால்; தூண்டுவாள் - திரியைத் தூண்டுபவள்; தோன்றிப் பூ - கார்த்திகைப் பூக்களின் (மீதே பொருந்தி நிற்கின்றன).
3. தன் பருவம் - தனக்குரிய கார்ப்பருவம்; தடங்கண் - அகன்ற கண்.
4. என் - யாது கருதி; பருவம் அன்று - கார்ப்பருவம் அன்று; என்றி - என்று சொல்கிறாய்; இன்று - இப்பொழுதினை. (கானம் தன் பருவம் செய்தது; இன்று பருவம் அன்று என்றி; ஏன்?)

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 99 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்திய தோழிக்கு, தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி அதற்கு எதிராய்க் கலங்கிச் சொல்லியது.

பொன்வாளால் காடில் கருவரை போர்த்தாலும்
என்வாளா என்றி, இலங்கெயிற்றாய்! – என்வாள்போல்
வாள்இழந்த கண்,தோள் வனப்பிழந்த; மெல்விரலும்
நாள்இழந்த, எண்மிக்கு நைந்து.

தெளிவுரை

"வெண்மையான பற்களைக் கொண்ட தோழியே! பொன் போன்ற வெயிலின் ஒளியால் காடுகள் வெந்து வெற்றுத்தரையுடன் காணப்பட்ட பெரிய மலைகள், இப்பொழுது பெய்கின்ற மழையால் மரம், செடி, கொடிகளால் தளிர்த்து மூடப்பட்டிருக்கின்றன. என்ன பயன்? 'இது கார் காலம் அன்று' என்று கூறுகின்றாய்; என் மேனி ஒளி கெட்டதுபோலவே என் கண்களும் ஒளி இழந்தன. தலைவனைப் பிரிந்த நாள்களின் எண்ணிக்கை மிகுதலால் என் மென்மையான விரல்களும் நாள்களை எண்ணித் தேய்கின்றன. என் தோள்களும் அழகை இழந்துவிட்டன" என்கிறாள் தலைவி, தோழியிடம்.

கருத்து

கார் காலம் தொடங்கிவிட்டது; தலைவன் வாராததால் என் மேனி ஒளி கெட்டது; அவன் பிரிந்துள்ள நாள்களை எண்ணி எண்ணிக் கைவிரல்கள் தேய்ந்து விட்டன.

குறிப்பு

தலைவன் வரவிருக்கும் நாள்களைச் சுவரில் கோடிட்டு எண்ணி வருதல் உண்டு என்னும் குறிப்புக் கிட்டுகிறது. (கோடிட்டு வந்ததால் கைவிரல்கள் தேய்ந்துவிட்டன).

சொற்பொருள்

1. பொன் வாள் ஆல் - பொன் போன்ற வெயில் ஒளியாலே (வெந்து); காடு இல் - மரம் செடி கொடிகள் இல்லாது (வெறுந்தரையாய்க் காணப்பட்ட); கருவரை - கரிய பெரிய மலைகள்; போர்த்தாலும் - (இப்பொழுது மழை பெய்து) பசுமையால் மூடப்பட்டிருந்தாலும்.
2. என் வாளா - என்ன பயன்? என்றி - இது கார் காலம் அன்று என்கிறாய்; இலங்கு - (வெண்மையாய்) விளங்குகின்ற; எயிற்றாய் - பற்களைக் கொண்டவளே!; என் வாள்போல் - என் (மேனியிலுள்ள) ஒளி (கெட்டுள்ளதுபோல).

3. வாள் இழந்த - ஒளி இழந்தன; கண் தோள் - கண்ணும் தோளும்; வனப்பு - அழகு.
4. நாள் இழந்த - இழந்த நாள்களை; எண்மிக்கு - பலமுறையும் எண்ணி; நைந்து - தேய்ந்தன.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 103 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்தின தோழிக்குத் தலைமகள் பருவமே யென்றழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் அன்று என்று தோழி உரைக்க, தலைவி அது கார் காலமே எனக் கூறித் தலைவன் வாராமை கருதி வருந்திச் சொல்லியது.

ஒருவந்தம் அன்றால், உறைமுதிரா நீரால்;
கருமம்தான் கண்டழிவு கொல்லோ? – பருவந்தான்
பட்டின்றே என்றி; பணைத்தோளாய்! கண்ணீரால்
அட்டினேன், ஆவி அதற்கு.

தெளிவுரை

“மூங்கில் போன்ற தோள்களைக் கொண்ட தோழியே! இது கார்ப்பருவம் என்பது உறுதியானது. ‘காலமல்லாக் காலத்தில் பெய்த மழைத்துளிகள் இவை; பருவம் அல்லாத ஒன்றைப் பார்த்துப் பருவம் என்று மயங்குவதோ! கார்ப்பருவம் தொடங்கவே இல்லை’ என்று பலவகையாய்க் கூறி என்னைத் தேற்றுகிறாய். நான் அந்தப் பருவமல்லாப் பருவத்திற்கு என் கண்ணீரையே நீராய்க்கொண்டு என் உயிரையே தாரை வார்த்துக் கொடுக்கிறேன்.”

கருத்து

இது கார்ப்பருவமே! நீயோ அன்று என்று கூறுகிறாய். நீ கூறுவதுபோல இது காலமல்லாக் காலமாயிருந்தாலும் இக்காலத்திற்கு என் கண்ணீரையே நீராய்க்கொண்டு என் உயிரைத் தாரை வார்த்துத் தந்துவிடுகிறேன்.

(கார் காலம் வந்துவிட்டது; நீ அன்று என்று சொன்னாலும் என் உயிர் நிற்காது.)

சொற்பொருள்

1. ஒருவந்தம் அன்றால் - இது கார்ப்பருவம் என்பது உறுதி அல்லதாம்; உறை - மழைத்துளி; முதிரா நீரால் - முதிர்ச்சி பெறாத தன்மையால்.
2. கருமம்தான் - உன் செயல்; கண்டழிவு கொல்லோ - பருவமல்லாத பருவத்தைக் கண்டு அழிவதா? பருவம்தான் - கார்ப்பருவம் என்பது.
3. பட்டின்று - வரவே இல்லை; என்றி - என்று சொல்லி (என்னைத் தேற்றுகிறாய்); பணைத் தோளாய் - மூங்கில் போன்ற தோள்களைக் கொண்டவளே; கண்ணீரால் - என் கண்ணீரையே நீராய்க்கொண்டு.
4. அட்டினேன் - தாரை வார்த்துக் கொடுத்தேன்; அதற்கு - பருவமல்லாத அப்பருவத்திற்கு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 120 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

பருவமன்றென்று வற்புறுத்தும் தோழிக்கு, தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி, அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி அதற்கு எதிராய்க் கலங்கிச் சொல்லியது.

பீடிலார் என்பார்கள் காணார்கொல்? வெங்கதிரால்
கோடெலாம் பொன்னாய்க் கொழுங்கடுக்கை, – காடெலாம்
அத்தம் கதிரோன் மறைவதன்முன், வண்டொடுதேன்
துத்தம் அறையும் தொடர்ந்து.

தெளிவுரை

"என் தோழியே! சூரியன் வெப்பம் மிக்க கதிர்களுடன் கூடி மேற்கு மலையில் மறைந்தான். மாலையில் வளமை வாய்ந்த கொன்றை மரங்களின் கொம்புகளிலெல்லாம் பொன் போன்ற பூக்கள் பூத்தன. முல்லைக்காடுகள் எங்கும் வண்டுகளும் தேனீக்களும் ஒன்றுகூடித் 'துத்தம்' என்னும் பண்ணினைப் பாடுகின்றன. இவையெல்லாம் கார்ப்பருவ அடையாளங்கள் அல்லவா? கார்ப்பருவத்தை இவ்வூரார் அறிய மாட்டாரரா?" என்று தலைவி தோழியிடம் வினவினாள்.

கருத்து

கார்ப்பருவ அடையாளங்களைக் கண்டும் இது கார்ப்பருவம் அன்று என்று கூறுபவர் உண்மையை உணராரோ?

சொற்பொருள்

1. பீடிலார் - (கார்ப்பருவம் அன்று என்று கூறும்) பெருமையில்லாத (இவ்வூரார்); காணார்கொல்? - இதைக் கார்ப்பருவம் என்று அறிய மாட்டார்களா?; வெம் கதிரால் - வெம்மையான கதிரவனின் கதிர்களால்.
2. கோடு எலாம் – கொம்புகளிலெல்லாம்; பொன்னாய் – பொன் போன்ற (பூக்கள் நிரம்பப்பெற்று); கொழும் கடுக்கை - வளப்பம் பொருந்திய கொன்றை மரங்கள் (நிறைந்த); காடு எலாம் - முல்லைநிலப் பகுதிகள் எல்லாம்.
3. அத்தம் - அத்தமன (மேற்கு) மலை; கதிரோன் - சூரியன்; வண்டொடு தேன் - வண்டுகளோடு தேனீக்களும்.
4. துத்தம் - துத்தம் என்னும் பண்ணினை; அறையும் – ஒலிக்கும்; தொடர்ந்து – சேர்ந்து.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 106 **கணிமேதாவியார்**

திணை : முல்லை

கூற்று

வற்புறுத்துந் தோழிக்குத் தலைமகள் வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார் காலம் தொடங்கியும் அக்காலத்தில் வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வரவில்லையே என்று தலைவி வருந்தியிருந்தாள். தோழி அது கார் காலம் அன்று என்று சொல்ல, தலைவி அதற்கு எதிராய்க் கலங்கிச் சொல்லியது.

என்னரே, ஏற்ற துணைப்பிரிந்தார்? ஆற்றென்பார்
அன்னரே ஆவர், அவரவர்க்கு – முன்னரே
வந்(து),ஆரம் தேம்கா, வருமுல்லை, சேர்தீந்தேன்
கந்தாரம் பாடும், களித்து.

தெளிவுரை

“தோழியே! முன்னமே சந்தனச் சோலைகளிலும், தேன் மிகுந்த சோலைகளில் வளர்கின்ற முல்லைச்செடிகளிலும் தங்கியுள்ள இனிய ஒலியைக் கொண்ட தேன் வண்டுகள் கூடி மகிழ்ந்து, ‘காந்தாரம்’ என்னும் பண்ணை இசைக்கின்றன. இவ் வேளையில் காதலியரைப் பிரிந்திருப்பவர் மிகுந்த கொடியவர்! மேலும், அங்ஙனம் பிரிந்து வருந்தும் காதலியரிடம் ‘பிரிவை ஆற்றியிரு’ என்று கூறுபவர், பிரிந்து சென்ற காதலரைப் போன்ற கொடியவரே. எனவே, என்னை வற்புறுத்தி ஆற்றுவிக்கும் நீயும் கொடியவள்” என்று தலைவி குறிப்பாய்த் தோழியிடம் சொன்னாள்.

கருத்து

கார் காலத்தில் காதலனைப் பிரிந்து வருந்தும் காதலியை ஆற்றி யிருக்குமாறு கூறுபவர் கொடியவரே.

குறிப்பு

தேன் வண்டுகளின் ஒலி காந்தாரம் என்னும் பண்ணினைப் பாடுவது போன்றிருந்தது.

சொற்பொருள்

1. என்னரே - எத்தகைய கொடியவர் அவர்; ஏற்ற - தம்மையே துணையாய் ஏற்றுக்கொண்டுள்ள; துணை - காதலியரை; பிரிந்தார் - பிரிந்து சென்ற காதலர்; ஆற்று என்பார் - பொறுத்திரு என்று சொல்பவர்கள் (ஏற்ற துணை பிரிந்தார் ஆற்றென்பார் அன்னரே).
2. அன்னரே ஆவர் - காதலியைப் பிரிந்து சென்ற காதலரைப் போன்ற கொடியவரே ஆவர்; அவர்க்கு – (காதலரைப் பிரிந்து வாழும்) காதலியர்க்கு; முன்னரே – எனக்கு முன்பாகவே.
3. வந்து - சேர்ந்து; ஆரம் - சந்தனச் சோலை; தேம் கா - தேன் மிகுந்த பொழில்; வரு - வளர்கின்ற; முல்லை - முல்லைச்செடிகளும்; சேர் - தங்கியுள்ள; தீம் தேன் - இனிய ஒலியைக் கொண்ட தேன் வண்டுகள்.
4. கந்தாரம் - காந்தாரம் என்னும் பண்ணினை; களித்து - மகிழ்ச்சி கொண்டு.

தோழி கூற்று

குறுந்தொகை 277 **ஓரிற்பிச்சையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்த வழி, அவன் குறித்த பருவ வரவு, தோழி அறிவரைக் கண்டு வினாயது.

(அறிவர் - கணியர்போல முக்காலமும் உணர்ந்து கூறவல்ல அறிவினைக் கொண்ட சான்றோர்.)

கூற்று விளக்கம்

தலைவன் குறித்துச் சென்ற பருவம் எப்போது தொடங்கும் என்று தோழி அறிவரை வினாவியது.

ஆசுஇல் தெருவின் நாய்இல் வியன்கடைச்
செந்நெல் அமலை வெண்மை வெள்இழுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி,
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்

சேமச் செப்பில் பெறீஇயரோ, நீயே
'மின்னிடை நடுங்கும் கடைப்பெயல் வாடை,
எக்கால் வருவது?' என்றி,
அக்கால் வருவர்,எம் காத லோரே.

தெளிவுரை

"அறிவரே! மின்னல்போலும் இடையினையுடைய என் தலைவியை நடுங்கச்செய்வதும், மழை முடிவு பெறும் காலத் திற்குப் பின் தோன்றுவதுமான வாடைக் காலம் எப்போது தொடங்கும் எனக் கூறுங்கள். அக்காலத்திலேதான் எம் தலைவர் திரும்பி வருவாரா! நீங்கள் சொல்வீர்களானால், குற்றமற்ற குடிகள் வாழும் தெருவில் நாயில்லாத அகன்ற இல்லத்தின் வாயிலிலே, மிகவும் வெண்மையான நெய்யுடன் கலந்து செந்நெல்லால் ஆகிய சோற்றுருண்டையை பிச்சை யாகப் பெற்று வயிறு நிரம்ப உண்பீர்! பனிக்காலத்திற்குரிய விரும்பத்தக்க வெந்நீரை, நீரைச் சேமித்து வைக்கும் செப்பில் பெறுவீர்!" என்று தோழி அறிவரிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற வாடை வீசும் பருவம் எப்பொழுது தொடங்கும்? அறிவரே! சொல்வீராயின் உமக்கு வயிறு நிறைய உணவு கிடைக்கும்.

விளக்கம்

தலைவன் வாடை வீசும் பருவத்தில் வருவதாய்க் கூறிச் சென்றான். அப்பருவம் எப்பொழுது தொடங்கும் என்று அறியும் பொருட்டுத் தோழி அறிவரை வினவினாள்.

குறிப்பு

முற்காலத்தில், இருபுறமும் கணுவுள்ள பெரிய மூங்கில் குழாய்களில் துளையிட்டு, அதில் வெந்நீரை ஊற்றி வைத்துத் துளையை மூடி, சூடு குறையாமல் இருக்கச் செய்துள்ளனர். (சேமம் - பாதுகாவல்; செப்பு - குப்பி அல்லது குவளை.) இதனால் அது சேமச் செப்பு எனப்பட்டது. இஃது இன்றைய Flask என்பதற்கு ஒப்பாகும்.

அறிவர் எனப்படுவோர் ஒரு நாளைக்கு ஒருவேளை மட்டும் ஓரில்லத்தில் பிச்சையெடுத்து உண்டுவந்துள்ளனர் எனத் தெரிகிறது. அறிவர் பெறும் உணவை, 'ஓரிற்பிச்சை' என்று சிறப்பித்தமையால் இச் செய்யுளை இயற்றிய புலவர், 'ஓரிற்பிச்சையார்' என்று பெயர் பெற்றார். இவர் இயற்பெயர் தெரிந்திலது.

சொற்பொருள்

1. ஆசு - குற்றம்; இல் - இல்லாத; வியன்கடை - அகன்ற வாயில்.
2. அமலை - (சோற்றுத்) திரள்; இழுது - நெய்.
3. ஆர மாந்தி - நிரம்ப உண்டு.
4. அற்சிரம் - முன்பனிக்காலம்; வெய்ய - விரும்பத்தக்க.
5. சேமச் செப்பு - சேர்த்து வைக்கும் செப்பு; பெறீஇயரோ - பெறுவீர்.
6. மின் இடை - மின்னல் போன்று நுண்ணிய இடை; கடைப்பெயல் - மழைக் காலத்தின் முடிவு வேளை.
7. எக்கால் - எப்பொழுது; என்றி - என்று சொல்லுக.
8. அக்கால் - அக்காலத்தில்.

தோழி கூற்று

குறுந்தொகை 317 **மதுரைக் கண்டரதத்தனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவிடைக் கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. (வற்புறுத்தியது - விரைவில் வருவார் என உறுதிபடக் கூறுவது.)

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்தே ஆற்றாமை மிக்க தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

புரிமட மரையான் கருநரை நல்ஏறு
தீம்புளி நெல்லி மாந்தி, அயலது
தேன்பாய் மாமலர் நடுங்க வெய்துஉயிர்த்து,
ஓங்குமலைப் பைஞ்சுனை பருகும் நாடன்
நம்மைவிட்டு அமையுமோ மற்றே, கைம்மிக
வடபுல வாடைக்கு அழிமழை
தென்புலம் படரும் தண்பனி நாளே?

தெளிவுரை

விரும்பத்தக்க அழகமைந்த காட்டு மானின் கருமை கலந்த வெண் மயிரைக் கொண்ட ஆண்மான், இனிய புளிப்புள்ள நெல்லிக்கனிகளை உண்டு, அருகே உயர்ந்த மலையில் உள்ள பசிய சுனை நீரை நாடிச் செல்லும். அங்கு நீரில் பரவியிருந்த பூக்களைத் தன் மூச்சுக் காற்றினால் ஒதுக்கி நீர் உண்ணும். இத்தகைய மலைநாட்டுக்குரியவன், நம் தலைவன்.

வடதிசையிலிருந்து மிகுதியாய் வீசுகின்ற வாடைக்காற்றுக்கு அழிந்த மேகம் தென்திசை நோக்கிப் படர்கின்ற இத்தண்ணிய பனிப்பருவத்தில் நம் தலைவன் நம்மைப் பிரிந்து தனித்துத் தங்குவானா? (பிரிந்து இரான்; வருவான் எனத் தோழி வலியுறுத்திக் கூறுகிறாள்.)

கருத்து

வாடை வீசும் குளிர் காலத்தில் தலைவன் பிரிந்திரான்; விரைவில் வருவான்.

விளக்கம்

நெல்லிக்கனியை உண்டு நீர் குடித்தால் இன்சுவை உண்டாகும்.

நீர் மேல் பரவியுள்ள பூக்களைத் தம் மூச்சுக் காற்றால் விலக்கி, விலங்குகள் நீர் அருந்துவது இயல்பு.

குறிப்பு

பாலை நிலத்தில் நெல்லிக்கனியை உண்ட ஆண்மான் அக்காயினது இனிமை தோன்றக் குறிஞ்சி நிலப் பைஞ்சுனையில் பெருமூச்சு விட்டு நீருண்ணும். அதுபோலத் தலைவனும் பிரிந்து சென்று வெளியிடத்தே ஈட்டிய பொருளுடன் இல்லம் வந்து தலைவியின் இன்பம் பெறுவான் என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. புரிமட மரையான் - விரும்பத்தக்க அழகமைந்த காட்டுமான்; கருநரை - கருமையில் வெண் மயிர் கலந்த; நல்ஏறு - நல்ல ஆண்.

2. தீம்புளி - இனிய புளிப்புள்ள; நெல்லி - நெல்லிக்கனி; மாந்தி - உண்டு; அயலது - அருகேயுள்ள.
3. தேன்பாய் - தேன் ஒழுகுகின்ற; மாமலர் - பெரிய மலர்கள்; நடுங்க - அசைய; வெய்து உயிர்த்து - வெப்பமான பெருமூச்சு விட்டு.
4. ஓங்குமலை - உயர்ந்த மலை; பைஞ்சுனை - பசிய நீர்ச்சுனை; பருகும் - நீர் அருந்தும்.
5. அமையுமோ? - இருப்பானோ?; கைம்மிக - மிகுதியாய் வீசுகின்ற.
6. வடபுலம் - வடதிசை; வாடை - வாடைக்காற்று; அழிமழை - அழிந்து சிதறுகின்ற மேகம்.
7. தென்புலம் - தென்திசை; படரும் - நகரும்; தண்பனி நாள் - குளிர்ச்சியான பனிக்காலம்.

தலைவி கூற்று

நற்றிணை 193 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை ஆற்றாளாகிய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் இன்னும் வாராததால் வருந்தியிருந்த தலைவியைப் பிரிவின் வருத்தத்தோடு வாடைக்காற்றும் சேர்ந்து வருத்திய தால் அவள் புலம்பிக் கூறியது.

அட்டரக்கு உருவின் வட்டுமுகை ஈங்கைத்
துய்த்தலைப் புதுமலர்த் துளிதலைக் கலாவ,
நிறைநீர்ப் புனிற்றுப் புலம்துழைஇ ஆனாய்,
இரும்புறம் தழூஉம் பெருந்தண் வாடை!
நினக்குத் தீதுஅறிந் தன்றோ இலமே;
பணைத்தோள் எல்வளை ஞெகிழ்த்த எம்காதலர்
அருஞ்செயல் பொருட்பிணிப் பிரிந்தன ராக,
யாரும்இல் ஒருசிறை இருந்து,
பேர்அஞர் உறுவியை வருத்தா தீமே!

தெளிவுரை

"குளிர்ச்சி பொருந்திய வாடைக்காற்றே! உருக்கிய அரக்குப் போன்ற சிவந்த நிறங்கொண்ட வட்டமான மொட்டினைக் கொண்ட ஈங்கையின் பஞ்சுபோல் தலையைக் கொண்ட புதிய மலரில் ஒட்டியிருக்கும் பனித்துளியைத் தழுவுகிறாய். அதனுடன் புதிதாகப் பெய்திருக்கும் மழையினால் நீர் மிக்கிருக்கும் நிலங்களில் ஊடுருவுகிறாய். அங்கும் தங்காமல் என் உடலில் வந்து மோதித் தாக்குகின்றாய். உனக்கு ஒருபோதும் நான் தீங்கு நினைத்ததில்லை. இருந்தும் என்னை வருத்துகின்றாய். பருத்த என் தோள்களில் விளங்கும் ஒளி பொருந்திய வளை நெகிழுமாறு என் காதலன் பொருளீட்டும் எண்ணத்தால் பிணிக்கப்பட்டு என்னைப் பிரிந்து சென்றுள்ளான். இந்நிலையில் யாரும் துணையற்றவளாய்த் தனியே வாடும் என்னையும் வருத்து கின்றனையே! என் செய்வேன்?" எனக் குளிரை அள்ளித் தெளிக்கும் வாடைக் காற்றை நோக்கித் தலைவி கூறுகிறாள்.

கருத்து

வாடைக்காற்றே! காதலனைப் பிரிந்து தனித்திருக்கும் என்னைக் கொடுமைப்படுத்துகிறாயே! இது தகுமா?

விளக்கம்

வாடைக்காற்று பனித் துளியோடும் மழைநீரோடும் சேர்ந்து மிகுந்த குளிர் எங்கும் வீசுவதால் காதலனைப் பிரிந்திருக்கும் தலைவி பெரிதும் வருத்தமுற்று, வாடையை நோக்கி, "உனக்கு நான் ஒரு துன்பமும் செய்ததில்லையே! அவ்வாறிருக்க யாரும் துணையின்றித் தனித்திருக்கும் என்மீது மோதிக் கொடுமைப் படுத்தலாமா?" எனக் கேட்டு ஏங்குகிறாள்.

குறிப்பு

வாடையே! மலர்களையும் நிலங்களையும் குளிர்விக்கிறாய்; என்னை மட்டும் ஏன் வெதுப்புகிறாய்? இது என்ன நியாயம்?

சொற்பொருள்

1. அட்டரக்கு - உருக்கிய அரக்கு; உரு - நிறம்; வட்டு - வட்டம்; முகை - அரும்பு; ஈங்கை - ஈங்கை மரம்.

2. துய் - பஞ்சு; துளி - பனித்துளி; கலாவ - கலந்து.
3. நிறைநீர் - நீர் நிறைந்த; புனிற்றுப்புலம் - தேங்கி நிற்கும் வயற்புறம்; துழைஇ - படிந்து, ஊடுருவி.
4. இரும்புறம் - முதுகு; தழூஉம் - மோதி வீசும்.
5. அறிந்தன்றோ இலம் - நினைத்ததில்லை.
6. பணை - பருத்த; எல்வளை - ஒளி பொருந்திய வளையல்; ஞெகிழ்த்த - நெகிழ்வித்த.
7. பொருட்பிணி - பொருளீட்டும் எண்ணத்தால் கட்டுண்டு.
8. ஒரு சிறை - ஓர் இடத்தே.
9. பேர் அஞர் - பெருந்துன்பம்; உறுவியை - அடைந்திருப்பவளை.

தலைவி கூற்று

அகநானூறு 163 **கழார்க்கீரன் எயிற்றியார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள், ஆற்றாமைமீதூரச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனின் பிரிவாற்றாது தலைவி வருந்தியதைக் கண்ட தோழி தேறுதல் கூறினாள். ஆயினும், துன்பத்தால் மெலிந்த தலைவி தன் ஆற்றாமையை வாடைக்காற்றினை முன்னிறுத்திக் கூறியது.

விண்அதிர்பு தலைஇய, விரவுமலர் குழைய,
தண்மழை பொழிந்த தாழ்பெயல் கடைநாள்,
எமியம் ஆக, துனிஉளம் கூர,
சென்றோர் உள்ளிச் சில்வளை நெகிழ,
பெருநசை உள்ளமொடு, வருதிசை நோக்கி,
விளியும் எவ்வமொடு, 'அளியள்' என்னாது,
களிறுஉயிர்த் தன்ன, கண்அழி துவலை
முளரி கரியும் முன்பனிப் பானாள்,
குன்றுநெகிழ்பு அன்ன, குளிர்கொள் வாடை!
எனக்கே வந்தனை போறி! புனல்கால்

அயிர்இடு குப்பையின் நெஞ்சுநெகிழ்ந்து அவிழ,
கொடியோர் சென்ற தேஎத்து, மடியாது
இனையை ஆகிச் செல்மதி;
வினைவிதுப் புறுநர் உள்ளலும் உண்டே!

தெளிவுரை

மலர்களின் எழில் கெடுமாறு வானத்திலிருந்து இடி முழக்கத் தோடு குளிர்ச்சியான மழை பெய்த கூதிர்ப்பருவத்து இறுதிக் காலத்தில் வெறுப்பு மிகுமாறு எம் தலைவர் என்னை விட்டுப் பிரிந்து சென்றார். அவரை நினைத்து ஏங்குதலால் என் வளையல்கள் நெகிழ்ந்து வீழ, இறத்தற்குக் காரணமாகிய பிரிவுத் துன்பத்தை எம் தலைவர் சிறிதும் கருதவில்லை. யானை பெருமூச்சு விட்டாற் போன்று பனி பொருந்திய வாடைக்காற்று வீசும் நீர்த்துளிகளால் தாமரை மலரும் கரிந்துவிடுகிறது. இத்தகைய முன்பனிக்காலத்தே நள்ளிரவில் மலையையும் நடுங்கச்செய்யும் குளிர் கொண்ட வாடைக்காற்றே!

நீ என்னை வருத்துதற்கென்றே வந்தாய் போலும்! நீர் ஓடும் வாய்க்காலில் நுண்மணல் மேடு கரைந்து அழிதல் போன்று என் நெஞ்சமும் நிலைகுலைந்து நெகிழ்கிறது. வாடையே! எம் தலைவர் சென்றுள்ள திசையை நோக்கிச் செல். நீ அவரைக் கண்டால் அவர் எம்மை எண்ணித் திரும்பி வருதலும் கூடும்.

கருத்து

வாடைக் காற்றே! நீ தலைவர் இருக்கும் திசையில் சென்று வீசு. என் துன்பம் உணர்ந்து உடனே திரும்புவார்.

விளக்கம்

"மலையை நெகிழச்செய்வதுபோலக் குளிர் கொண்ட வாடைக் காற்றே! கார்ப்பருவக் கடைசி நாளில், என்னைத் தனியே விட்டுத் தலைவர் பிரிந்து சென்றார். அவர் வருவதை எதிர்பார்த்து, இறந்து போதலை ஒத்த துன்பத்தோடு இருக்கின்ற என்னை, இரங்கத்தக்கவள் என்று கருதாமல், யானை மூச்சு விடுதல்போல வீசி வரும் பனித்துளிகளால் தாமரை கரிந்துவிடும் முன்பனிக்காலத்து நள்ளிரவில், என்னை நீயும் வருத்த

வந்திருக்கிறாய்! என் நெஞ்சு நெகிழ்ந்து இளகும்படி கொடியோராகிய தலைவர் சென்றுள்ள தேயத்திற்கும் சோம்பலின்றி இதுபோலவே நீ செல்; அதனால் பொருளீட்டுவதில் மயக்கம் கொண்டு சென்றவர் என்னை நினைக்கும் வாய்ப்பும் உண்டாகும் அன்றோ?" என்கிறாள், தலைவி. வாடையை முன்னிறுத்தித் தலைவி தோழியிடம் தன் ஆற்றாமையை இவ்வாறு கூறுகிறாள்.

சொற்பொருள்

1. விண்அதிர்பு - வானம் அதிர்தல்; தலைஇய - மழை பொழிதல்; விரவுமலர் - பல வகையான மலர்கள்; குழைய - அழகு கெட.
2. தாழ்பெயல் - குறைந்த பெயலைக் கொண்ட; கடைநாள் - கூதிர்ப் பருவக் கடைசிக் காலம்.
3. எமியம் ஆக - நான் தனியே இருக்க; துனிஉளம் கூர - மனத்தே வெறுப்பு மிக.
4. உள்ளி - நினைந்து; நெகிழ - கழன்று விழ.
5. பெருநசை - பெரிய விருப்பம்; வருதிசை - தலைவன் வரும் திசையை.
6. விளிதல் - இறத்தல்; விளியும் - இறந்து போதலையொத்த; எவ்வம் - துன்பம்.
7. உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்; துவலை - பனித்துளி.
8. முளரி - தாமரை; பானாள் - நள்ளிரவு.
10. போறி! - போலும்!; புனல்கால் - நீர் ஓடும் வாய்க்காலில்.
11. அயிர்இடு குப்பை - நுண்மணலால் ஆகிய மேடு; அவிழ - இளக.
12. கொடியோர் - தலைவர்; தேஎம் - தேயம்; மடியாது - சோம்பலின்றி.
13. இனையை ஆகி - இன்ன தன்மை கொண்டு; செல்மதி - செய்க.
14. வினை - (பொருளீட்டும்) தொழில்; விதுப்பு - பெருவேட்கை; உறுநர் - உடையவர்; உள்ளல் - (என்னை) நினைத்தல்.

தலைவி கூற்று

அகநானூறு 235 **கழார்க் கீரன்எயிற்றியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள், ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டுதற்காகத் தலைவன் பிரிந்து சென்றான். பிரிவைத் தாங்க இயலாது வருந்திய தலைவியின் உடல் மெலிந்தது. அது கண்ட தோழி தலைவியைத் தேற்றினாள். அப்போது தலைவி தன் ஆற்றாமை குறித்துத் தோழியிடம் கூறியது.

அம்ம– வாழி, தோழி!– பொருள்புரிந்து
உள்ளார் கொல்லோ, காதலர்? உள்ளியும்,
சிறந்த செய்தியின் மறந்தனர் கொல்லோ
பயன்நிலம் குழைய வீசி, பெயல்முனிந்து,
விண்டு முன்னிய கொண்டல் மாமழை
மங்குல் அற்கமொடு பொங்குபு துளிப்ப,
வாடையொடு நிவந்த ஆய்இதழ்த் தோன்றி
சுடர்கொள் அகலில் சுருங்குபிணி அவிழ,
சுரிமுகிழ் முகண்டைப் பொதிஅவிழ் வான்பூ
விசும்புஅணி மீனின் பசும்புதல் அணிய,
களவன் மண்அளைச் செறிய, அகல்வயல்
கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ
மாரிஅம் குருகின் ஈரிய குரங்க,
நனிகடுஞ் சிவப்பொடு நாமம் தோற்றி,
பனிகடி கொண்ட பண்புஇல் வாடை
மருளின் மாலையொடு அருள்இன்றி நலிய,
‘நுதல்இறை கொண்ட அயல்அறி பசலையொடு
தொல்நலம் சிதையச் சாஅய்,
என்னள்கொல் அளியள்?’ என்னா தோரே.

தெளிவுரை

"தோழி! பொருள் தேடுதலைக் கருதி, நம்மைப் பிரிந்து சென்ற தலைவர் முழுமையாய் மறந்தனரோ என்று எண்ணி அஞ்சுகின்றேன். கரிய மேகம் முதலில் பயன்தரும் நிலங்கள் தளிர்க்குமாறு பெய்து, பின்னர்ப் பெய்தலை வெறுத்து மலையைச் சார்ந்த பகுதியில் தங்கித் தூவலைச் செய்கிறது. வாடைக்காற்று வீசுதலால் செங்காந்தள் மலரின் சுருங்கிய அரும்புகள் சுடர் கொண்ட அகல் விளக்குகள் போன்று பொலிவுற்றன. சுருண்ட அரும்புகளைக் கொண்ட முசுண்டைச் செடியின் வெண்மையான மலர்கள் வானை அழகுறுத்தும் மீன்களைப் போலப் பசிய புதர்களை அழகுறுத்துகின்றன; நண்டுகள் வளைகளில் சென்று தங்குகின்றன. வயலில் கிளைத்து விரிந்த கரும்பின் திரண்ட காம்பினைக் கொண்ட பெரிய வெண்ணிறப்பூ, மழையில் நனைந்த நாரையைப் போன்று வளைந்து தோன்றுகின்றது. பனி தங்கிய நற்பண்பில்லாத வாடைக்காற்று, மயக்கும் மாலைப்பொழுதுடன் கூடி இரக்கமின்றி வருத்துகிறது. அயலார் அறியும்படி என் நெற்றியில் உள்ள பசலை, மேனியின் பழைய அழகு கெடுமாறு செய்கிறது. இந் நிலையில் தலைவர், 'இவள் என்ன ஆனாளோ?' என்று நினைக்காதவராயுள்ளார்."

கருத்து

தலைவன் பொருளையே பெரிதென்று எண்ணி, வாடைக் காற்றில் நாம் மெலிந்து நலிவதைச் சிறிதும் நினைந்திலரே!

விளக்கம்

"தோழி! வாழி! நான் சொல்வதைக் கேள். பண்பில்லாத வாடைக் காற்று, மயக்கும் மாலைப்பொழுதோடு சேர்ந்து அருளின்றி என்னைத் துன்புறுத்துகின்றது. என் நுதல் பசப் பெய்தி மேனி மெலிவுறுகிறது. 'நம் தலைவி இரங்கத்தக்கவள்; என்ன நிலையில் உள்ளாளோ?' என்று தலைவர் நினைக்க மாட்டாரோ? பொருள் தேடுதலைக் கருதி நம்மை முற்றிலும் மறந்துவிட்டாரோ?" என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

குறிப்பு

வாடைக்காற்றின் தன்மையால் வயல்கள், கரும்புகள், பூக்கள், பறவைகள் போன்றவை அழகு பெறுகின்றன. தலைவியோ நடுங்கி, அச்சமுற்று வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. பொருள் புரிந்து - பொருள் தேடுதலையே விரும்பி.
2. உள்ளுதல் - நினைத்தல்.
3. சிறந்த செய்தியின் - செய்யும் தொழில் மிகுதியால்.
4. பயன் நிலம் - பயன் தரும் நிலம்; குழைய - நெகிழ; முனிந்து - வெறுத்து.
5. விண்டு முன்னிய - மலையைச் சேர்ந்த; கொண்டல் - மேகம்.
6. மங்குல் - இரவு; அற்கமொடு - தங்குதலுற்று; பொங்குபு - பொங்கி.
7. நிவந்த - உயர்ந்த; தோன்றி - செங்காந்தள்.
8. அகல் - அகல் விளக்கு; சுருங்குபிணி அவிழ - சுருங்கிய அரும்பு விரிய.
9. சுரிமுகிழ் - சுரிந்த அரும்பு; முசுண்டை - ஒரு வகைக் கொடி; பொதி அவிழ் - கட்டவிழ்ந்த; வான்பூ - பெரிய பூ.
10. மீன் - உடுக்கள்; பசும் புதல் - பசிய புதர்; அணிய - அழகு செய்யும்.
11. களவன் - நண்டு; அளை - வளை.
12. கணைக்கால் - திரண்ட காம்பு; வான்பூ - வெண்மை நிறப் பூ.
13. மாரிஅம் குருகின் - மழையில் நனைந்த நாரையைப் போல; ஈரிய - ஈரம் கொண்டனவாய்; குரங்க - வளைந்திருக்க.
14. சிவப்பு - சினம்; நாமம் - அச்சம்.
15. பனிகடி - பனி தங்கிய.
16. மருளின் மாலை - மயக்கம் தரும் மாலை; நலிய - வருத்த.
17. இறை - தங்குதல்; அயல்அறி - அயலோரால் அறியப்படும்.
18. நலம் - அழகு; சிதைய - அழிய; சாஅய் - மெலிந்து.
19. என்னள்கொல்? - என்ன ஆயினளோ?; என்னாதோர் - என்று நினையாதவர்.

தலைவி கூற்று

அகநானூறு 243 **கொடியூர்கிழார் மகனார் நெய்தல் தத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள், 'ஆற்றேன்' என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் திரும்பாததால் தலைவி வருந்தினாள். அப்போது, தலைவன் வரும்வரை ஆற்றி யிருக்குமாறு கூறிய தோழியை நோக்கித் தன் ஆற்றாமையை வெளிப் படுத்தித் தலைவி கூறியது.

அவரை ஆய்மலர் உதிர, துவரின
வாங்குதுளைத் துகிரின் ஈங்கை பூப்ப,
இறங்குபோது அவிழ்ந்த ஈர்ம்புதல் பகன்றைக்
கறங்குநுண் துவலையின் ஊருழை அணிய,
பெயல்நீர் புதுவரல் தவிர, சினைநேர்பு
பீள்விரிந்து இறைஞ்சிய பிறங்குகதிர்க் கழனி
நெல்ஒலி பாசவல் துழைஇ, கல்லெனக்
கடிதுவந்து இறுத்த கண்இல் வாடை!
'நெடிதுவந் தனை'என நில்லாது, ஏகிப்
பலபுலந்து உறையும் துணைஇல் வாழ்க்கை
நம்வலத் தன்மை கூறி, அவர்நிலை
அறியுநம் ஆயின், நன்றுமன் தில்ல;
பனிவார் கண்ணேம் ஆகி, இனிஅது,
நமக்கே எவ்வம் ஆகின்று,
அனைத்தால் தோழி!நம் தொல்வினைப் பயனே.

தெளிவுரை

தோழி! இது பனிக்காலம். அவரைக்கொடியில் அழகிய மலர்கள் பூத்து உதிர்கின்றன. சிவந்த வளைந்த துளையினைக் கொண்ட பவளம் போல இண்டைச்செடி பூக்கின்றது. ஊருக்கு அருகே மாலை நேரத்தில் நுண்ணிய மழைத்துளியுடன் வரும்

வாடைக்காற்றால் குளிர்ச்சி பொருந்திய புதரில் பகன்றை மலர் பூத்து அழகு தருகின்றது. புதிதாய் மழை பெய்வதும் நின்று விட்டது. கருக் கொண்ட கதிர் தோன்றி வளைந்து சாய்ந்த நெற்பயிர்களைக் கொண்ட வயலில், பசிய பள்ளங்களைத் துழாவி, 'கல்' என்னும் ஒலியோடு இரக்கமற்ற வாடைக்காற்று வந்து நெடுநேரமாய் வீசுகிறது.

இவ்வாடைக்காற்று தலைவன் உள்ள இடத்திற்குச் சென்று வீசி, 'நீ வந்து நெடுங்காலம் தாழ்த்திவிட்டாய்' என்று இடித்துக் கூற வேண்டும். துணையில்லாமல், தனியே வருந்தும் நம் துன்பத்தை அவருக்குச் சொல்ல வேண்டும். மேலும், அவர் நிலையை அறிந்து வந்து கூறுமாயின் பெரிதும் நன்றாம்.

ஆனால், இப்பொழுது அவ்வாடைக் காற்று, நீர் ஒழுகும் கண்களைக் கொண்ட நமக்கே துன்பம் தருகின்றது. இது நம் பழ வினைப் பயன் போலும்' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் இருக்குமிடம் சென்று நம் துன்பத்தைக் கூற வேண்டிய வாடைக் காற்று, அதனைச் செய்யாது, நம்மையே துன்புறுத்துகிறது.

விளக்கம்

"தோழி! வாடைக்காற்று இரக்கமின்றி வந்து நம்மை வருத்துகிறது. இது, தலைவன் உள்ள இடத்திற்குச் சென்று, 'நீ நெடிது காலம் தாழ்த்தினாய்' என்று சொல்லி, நம் ஆற்றாத்தன்மையை எடுத்துச் சொல்லி அவன் நிலையை ஆராயுமானால் நல்லது. ஆனால், அவ்வாடைக் காற்றோ நம்மை நீரொழுகும் கண்களைக் கொண்டவர்களாக்கி நமக்கே துன்பம் தருகிறது. இது நம் பழ வினைப் பயன் போலும்" எனத் தலைவி உளம் மெலிந்து வருந்துகின்றாள்.

சொற்பொருள்

1. ஆய்மலர் - அழகிய மலர்; துவர் - சிவப்பு; துவரின - செந்நிறம் கொண்ட.
2. வாங்குதல் - வளைதல்; துகிர் - பவளம்; ஈங்கை - இண்டஞ் செடி.

3. இறங்குபோது - ஞாயிறு இறங்கும் (படும்) பொழுது; பகன்றை - ஒரு வகைக் கொடி.
4. கறங்குதல் - ஒலித்தல்; ஊர்உழை - ஊர் அருகே; அணிய - அழகு பெற.
5. பெயல்நீர் - மழை; சினை நேர்பு - கிளைத்தல் பொருந்தி.
6. பீள் - கரு; இறைஞ்சிய - வளைந்த; பிறங்குதல் - விளங்குதல்; கழனி - வயல்.
7. பாசவல் - பசு அவல் - பசிய பள்ளம்; கல் என - 'கல்' என்ற ஒலியுடன்.
8. கடிது - விரைந்து; இறுத்த - தங்கிய; கண்இல் - இரக்கமில்லாத.
9. நெடிது வந்தனை என - நீ நெடுங்காலம் தாழ்த்தினை என்று; நில்லாது - இங்கு நிற்காது; ஏகி - சென்று.
10. பலபுலந்து - பலவற்றையும் வெறுத்து.
11. நம் வலத் தன்மை - எமது துன்ப நிலை; வலம் - வலி; அவர் - தலைவர்.
13. பனிவார் - நீர் ஒழுகும்; அது - அவ்வாடைக்காற்று.
14. எவ்வம் - துன்பம்.
15. அனைத்து - அனைத்தும்; தொல்வினை - பழவினை.

தலைவி கூற்று

அகநானூறு 273 **ஔவையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் தலைமகள் அறிவு மயங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைப் பிரிந்து தொழிலின்பொருட்டுச் சென்றான். மீண்டுவரக் காலம் நீட்டித்தது. அதனால் வருந்திய தலைவி தன் நெஞ்சிற்குக் கூறுவாளாய்த் தோழி கேட்பச் சொல்லியது.

விசும்புவிசைத்து எறிந்த கூதளங் கோதையின்,
பசுங்கால் வெண்குருகு வாப்பறை வளைஇ,
ஆர்கலி வளவயின் போதொடு பரப்ப,

புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்,
நலம்கவர் பசலை நலியவும், நம்துயர்
அறியார் கொல்லோ, தாமே? அறியினும்,
நம்மனத்து அன்ன மென்மை இன்மையின்,
நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ?
யாங்குஎன உணர்கோ, யானே? வீங்குபு
தலைவரம்பு அறியாத் தகைவரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத்து உயவுத்திரள் நீடி,
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை,
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பி,
புலவர் புகழ்ந்த நாண்இல் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி,
அலர்அரும்பு ஊழ்ப்பவும், வாரா தோரே.

தெளிவுரை

“முடிவின் எல்லை இதுதான் என்று அறியவும் இயலாத தன்மையுடன் வாடைக்காற்றும் வீசுகிறது. அந்தக் காற்றுடனே கூடி, முலையிடைத் தோன்றிய நோயும் இளமுளை வளர்வது போல நாளுக்கு நாள் வளரலாயிற்று. தளர்ந்த என் நெஞ்சத் திடத்தே தோன்றிய வருத்தம் காரணமாய், அந்த முளை, திரண்ட அடி மரத்தைக் கொண்ட மரமாகவும் வளர்ந்தது. ஊரோர் எடுத்த அம்பல் அதன் அழகிய கிளைகளாய்ப் பரவி விளங்கிற்று. தாங்க இயலாத காதல் என்னும் தளிர்களைப் பரப்பிப் புலவர்கள் புகழ்ந்துரைத்த நாணமும் இல்லாத ஒரு பெருமரமாகவும் ஆகிவிட்டது. நிலத்தின் எல்லை எங்கணுமே கவிழ்ந்து நிழல் செய்து, அலராகிய அரும்புகளைத் தோன்றச் செய்தும் விட்டது. இந்நிலையினுங்கூட, அவர் நம்மிடத்தே வாராதவராயினார்.

“பசிய காலினைக் கொண்ட வெள்ளாங்குருகுகள், ஆகாயத்தை நோக்கி வேகமாய் எறியப்பட்ட கூதாளி மாலை யினைப் போல, வரிசையாய் வளைந்து பறந்து செல்கின்றன. அவை வளமிகுந்த நீர் நிலையில் மிகுதியான ஆரவாரத்துடனே அங்குள்ள மலர்களுடன் கலந்து பரவி அமர்ந்தன. விளை

நிலங்கள், கதிர்களை ஈன்று முடிந்து பனிக்காலமும் தோன்றியது. அதனாலே, நம் நலத்தினைக் கவர்ந்து கொள்ளும் பசலை நோயும் படர்ந்து நம்மை வருத்துகின்றது. இருந்தும், நம் துயரத்தை அவர் அறியமாட்டாரரோ?

"அவர் அறிந்திருந்தாலும், நம் உள்ளத்தைப் போன்ற மென்மையான தன்மை அவரிடத்தே இல்லாததனால், நாமிருக்கும் இந்த உலகத்தையே நினையாதிருக்கின்றாரோ? நான் என்னவென்று உணர்ந்து ஆற்றியிருப்பேன்?" என்று பிரிவின்கண் தலைவி அறிவு மயங்கிச் சொன்னாள்.

கருத்து

வாடைக் காற்று மிகுதியாய் வீசும் இக்காலத்திலும் அவர் வந்தாரிலர்; நம் அழகைப் பசலை சிதைத்தது. நம் துயரை அறியும் மென்மையான மனம் அவரிடமில்லை.

விளக்கம்

"முலை விளங்கும் மார்பகத்தே தோன்றிய வேட்கைநோய் முளை முளைத்துத் திரண்ட அடிமரமாய் நீண்டது; அஃது 'அம்பல்' ஆகிய கிளையை விரித்தது. அது தாங்க இயலாத காதல் என்னும் தளிர்களை ஈன்றது. நாணம் இல்லாத பெருமரமாகவும் அது வளர்ந்து அலர்களாகிய (பழிச்சொற் களாகிய) மலர்களைச் சொரியவும் தொடங்கிவிட்ட இந்நிலை யிலும் தலைவர் வரவில்லை.

பனிக்காலத்தில் ஏற்படும் பசலை நோயால் நாம் படும் துயரத்தை அவர் அறிய மாட்டாரா? அறிந்திருப்பினும் நம்மைப் போன்ற மென்மையான மனம் அவருக்கு இல்லையாதலின் பெண்கள் இயல்பினை அவர் அறிந்திலர் போலும். நான் என்னவென உணர்ந்து ஆற்றியிருப்பேன்" என்று தலைவி தோழியிடம் அறிவு மயங்கிக் கூறினாள்.

சொற்பொருள்

1. விசும்பு - வானம்; விசைத்து - வேகமாய்; கூதளம் - ஒரு வகை மலர்; கோதை - மாலை.

2. குருகு - வெள்ளாங்குருகு (கொக்கு); வாப்பறை - தாவும் இறகு; வளைஇ - வளைத்து.
3. ஆர்கலி - கடல்; வளவயின் - வளம் பொருந்திய கடற்பக்கத்தில்; போது - நாள்காலை; பரப்ப - பரவி அமர.
4. புலம் - விளைநிலம்; புனிறு - (கதிர்களை) ஈன்ற அணிமை; அற்சிரம் - முன்பனிக்காலம்.
5. நலியவும் - வருத்தவும்.
7. அன்ன - போன்ற.
8. உலகம் - உலகத்து இயல்பு; உள்ளார் கொல்லோ? - நினைக்க மாட்டாரோ?
9. வீங்குபு - மிகுந்து.
10. தலைவரம்பு - முடிவு எல்லை; தகை - தன்மை; வாடை - வாடைக்காற்று.
11. நோய் - வேட்கை நோய்; இளமுளை - இளைய முளை.
12. அசைவு - தளர்ச்சி; உயவு - வருத்தம்; திரள் - அடிமரம்; நீடி - நீண்டு.
13. அம்பல் - பழிச்சொல்; அம்சினை - அழகிய கிளை.
14. ஆரா - அமையாத, நீங்காத; தளிர் - தளிர்கள்.
15. நாண்இல் - நாணம் இல்லாத.
16. நிலவரை - நிலத்தின் எல்லை (எல்லாம்); நிழற்றி - கவிழ்ந்து, நிழல் செய்து.
17. அரும்பு - மலர் அரும்பு; ஊழ்ப்பவும் - மலரவும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 103 **வாயிலான் தேவன்**

திணை : நெய்தல்

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கூதிர்ப்பருவம் தொடங்கிய பின்பும் தலைவன் வாராமையால் துன்புற்றிருக்கும் தலைவி, தோழியை நோக்கி, 'நம்மை வருத்தும் வாடைக் காலத்திலும் தலைவர் வருவார் என அறியேன். இனியும் பிரிவுத் துன்பத்தை என்னால் பொறுத்துக்கொண்டிருக்க இயலாது' என்று கூறியது.

கடும்புனல் தொடுத்த நடுங்குஅஞர் அள்ளல்,
கவிர்இதழ் அன்ன தூவிச் செவ்வாய்,
இரைதேர் நாரைக்கு எவ்வம் ஆகத்
தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்
வாரார் போல்வர், நம் காதலர்;
வாழேன் போல்வல் தோழி! யானே.

தெளிவுரை

"*மிகுந்த தண்ணீர் சேர்ந்து, அஞ்சும்படியாகச் சேறு குவிந்து கிடக்கிறது. அச்சேற்றில் முள்முருங்கைப்பூவின் இதழ் போன்ற மெல்லிய சிறகினையும் சிவந்த அலகினையும் கொண்ட நாரை, தனக்குரிய இரையாகிய மீனைப் தேடிக்கொண்டிருக்கும். அந் நாரைக்குத் துன்பம் உண்டாகுமாறு மழைத்துளிகளைத் தூவிய படி துயரம் மிகுந்த வாடைக்காற்று வீசும் கூதிர்க்காலமும் வந்தது. இக்காலத்திலும் நம் தலைவர் திரும்பி வருவார் என அறியேன்; பிரிவுத் துயரால் இனியும் நான் உயிர் வாழேன்.*"

கருத்து

வாடைக் காலம் தொடங்குவதற்கு முன்பே வந்திருக்க வேண்டியவர், அது தொடங்கிய பின்னரும் வரவில்லையே எனத் தலைவி கலங்குகிறாள்.

விளக்கம்

"*என்னுடன் தாம் சேர்ந்திருத்தற்குரிய இவ்வாடைக்காலத் திலும் தலைவர் மீண்டிலர். வாடைக் காற்றின் துயர் பொறுத்தற் கரியதாய் உள்ளது. இனியும் உயிரை வைத்துக்கொண்டிருக்கும் ஆற்றல் என்னிடம் இல்லை.*"

சொற்பொருள்

1. கடும்புனல் - மிகுந்த தண்ணீர்; தொடுத்த - சேர்க்கப்பட்ட; அஞர் - துன்பம்; அள்ளல் - சேறு.
2. கவிர் - முள் முருங்கைப் பூ; தூவி - சிறகு; செவ்வாய் - சிவந்த அலகு.
3. எவ்வம் - துன்பம்.
4. தூஉம் - தூவுகின்ற; துவலை - மழைத்துளி; கூர் - மிகுதி; வாடை - வாடைக்காலம்.

5. வாரார் - வரமாட்டார்.
7. வாழேன் - உயிர் வாழேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 110 **கிள்ளிமங்கலங்கிழார்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு அழிந்த தலைமகள் தோழிக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

"வாடைக்காற்று வருத்தும் இப்பருவத்திலும் வாராத நம் தலைவர் இனி வந்து என்ன பயன்? அவர் வருவதற்குள் நான் இறந்துபடுவேன்" எனத் தலைவி தன் வருத்த மிகுதியைத் தோழியிடம் சொல்லியது.

வாரார் ஆயினும், வரினும், அவர்நமக்கு
யார்ஆ கியரோ? தோழி! நீர
நீலப் பைம்போது உளரி, புதல
பீலி ஒண்பொறிக் கருவிளை ஆட்டி,
நுண்முள் ஈங்கைச் செவ்அரும்பு ஊழ்த்த
வண்ணத் துய்ம்மலர் உதிர, தண்ணென்று
இன்னாது எறிதரும் வாடையொடு
என்ஆ யினள்கொல் என்னா தோரே?

தெளிவுரை

"தோழி! குளிர்ச்சியோடு துன்பமும் நேருமாறு வீசுகின்ற வாடைக்காற்று, நீர்நிலைகளிலுள்ள பசிய நீல மலர்களின் மொட்டுகளை மலரச்செய்கிறது; புதர்களில் மயிற்பீலியின் ஒளி பொருந்திய கண்களைப் போல உள்ள கருவிளை மலர்களை அசைக்கிறது; நுண்ணிய முள்ளைக் கொண்ட ஈங்கையின் அரும்பு மலர்ந்து சிவந்த நிறத்தையும் பஞ்சுபோலும் பகுதியினையும் கொண்ட மலர்களை உதிர்க்கிறது. இவ்வாடைக் காற்றின் குளிரில், 'இவள் என்ன நிலையை அடைந்தாளோ'

என்று நினையாத தலைவர் இனி வாராவிடின் என்ன, வந்தால்தான் என்ன? அதனால் நமக்கு என்ன பயன்? (அவர் வருமுன் நான் இறந்துபடுவேன்)" என்று தலைவி தோழியிடம் தன் துன்பமிகுதியைக் கூறுகிறாள்.

கருத்து

'தலைவர் வாடைக்காலத்திலும் வரவில்லை. அவர் வருமுன் என் உயிர் நீங்கிவிடும்; அதன்பின் அவர் வந்தால் என்ன, வாராவிட்டால் என்ன? நேரப்போவது ஒன்றுமில்லை எனத் தலைவி வருத்தத்தின் எல்லையிலே சென்று நின்று சொல்கிறாள்.

குறிப்பு

வாடைக்காற்றின் செயல் படிப்படியாய் வருணிக்கப்பட்டுள்ளது. மலராத மொட்டை மலர்த்துகிறது; மலர்ந்துள்ள பூவை அசைக்கிறது; முதிர்ந்த பூவை உதிர்க்கிறது.

சொற்பொருள்

2. யாராகியரோ? - என்ன உறவு கொண்டவர்; நீர - நீர் நிலையில்.
3. பைம்போது - பசிய மொட்டு; உளரி - கோதி; புதல - புதர்களில்.
4. பீலி - மயில்தோகை; ஒண்பொறி - ஒளி பொருந்திய கண்; ஆட்டி - அலைத்து.
5. ஊழ்த்த - மலர்ந்த.
6. துய் - பஞ்சுபோலும் பகுதி; தண்ணென்று - குளிர்ச்சியோடு.
7. எறிதரும் - வீசும்.
8. என்னாதோரே? - என்று நினைக்காதவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 35 **கழார்க்கீரன் எயிற்றியார்**

திணை : மருதம்

கூற்று

பிரிவிடை மெலிந்த கிழத்தி தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததால் மிகவும் வருந்திய தலைவியிடம் தோழி, ‘நீ ஆற்றாதிருப்பது நன்றன்று’ என்று சொன்னாள். அதற்கு, தலைவி, ‘தலைவன் பிரியும்போது உடம்பட்ட என் கண்கள் இப்போது நாணமின்றி அழுகின்றன; அதற்கு நான் என்ன செய்வேன்?’ என வருந்திச் சொல்லியது.

நாண்இல மன்ற,எம் கண்ணே நாள்நேர்பு,
சினைப்பசும் பாம்பின் சூல்முதிர்ப்பு அன்ன,
கனைத்த கரும்பின் கூம்புபொதி அவிழ
நுண்உறை அழிதுளி தலைஇய
தண்வரல் வாடையும், பிரிந்திசினோர்க்கு அழலே.

தெளிவுரை

“தலைவன் தான் பிரிந்திருக்கும் நாள் இத்தனை என்று கூறித் தெளிவித்துப் பிரிந்த நாளன்று இக்கண்கள் அவன் பிரிவுக்கு உடம்பட்டிருந்தன. கருக்கொண்ட பச்சைப்பாம்பின் முதிர்ந்த சூலினைப் போல, பருத்த கரும்பினது கூம்பு போன்ற அரும்புகள் மலரும்படியாகச் சிறுதுளிகளைத் தூவி மழை பெய்யத் தொடங்கிவிட்டது; அதனுடன் குளிர்ச்சி தருகின்ற வாடைக் காற்றும் வீசுகின்றது; இக்காலத்திலும் தான் சொன்னபடி திரும்பி வாராத தலைவனின் பொருட்டு என் கண்கள் அழுகின்றன. அதனால் அவை நிச்சயமாய் நாணமற்றவை.”

கருத்து

அவர் பிரியும்போது தடுக்காத கண்கள் வாடை வீசும் இப்பொழுது அழுவது நாணமற்ற செயல்.

சொற்பொருள்

1. நாண் - நாணம்; மன்ற - உறுதியாய்; நாள் - தலைவன் பிரிந்த நாள்; நேர்பு - உடம்பட்டு.
2. சினை - கரு; பசும் பாம்பு - பச்சைப்பாம்பு; சூல் முதிர்ப்பு - கரு முதிர்தல்.
3. கனைத்த - பருத்த; கூம்பு - பூ மொட்டு; பொதி அவிழ - முறுக்கு அவிழ.
4. உறை - மழைத்துளி; அழிதுளி - அழிகின்ற துளிகள்; தலைஇய - கலந்திருக்கும்.
5. வாடை - வாடைக்காற்று; அழல் - அழுதல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 457 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

பருவ வரவின்கண் ஆற்றுவிக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

குறித்த பருவத்தில் தலைவன் வாராதபோது தலைவி பொறுக்காதவள் ஆனாள். அப்போது தன்னைத் தேற்றிய தோழியிடம் தலைவி சொல்லியது.

பெய்பனி நலிய உய்தல் செல்லாது
குருகினம் நரலும் பிரிவரும் காலைத்
துறந்து,அமை கல்லார் காதலர்
மறந்து,அமை கல்லாதுஎன் மடங்கெழு நெஞ்சே!

தெளிவுரை

“*கார் காலம் முடியும் தறுவாயில் பனி பெய்யத் தொடங்கியது. தாங்க இயலாத குருகினங்கள் நடுங்கு குரலோடு ஒலித்துக் கொண்டிருக்கும். காதலர் பிரிந்திருப்பதற்கு அரியதான*

இக்கூதிர்ப்பருவத்தில் காதலர் நம்மைப் பிரிந்து தனியாய்த் தங்கியிருக்க மாட்டார். எனினும், என் அறியாமை மிக்க நெஞ்சம் அவரை மறந்திருக்க இயலாமல் சோர்கின்றதே."

கருத்து

காதலர் தாம் சொன்னதை மறந்து கூதிர்க்காலத்தே வெளியே தங்க மாட்டார்; ஆனால், என் நெஞ்சம் மறக்க இயலாமல் சோர்கிறதே.

சொற்பொருள்

1. நலிய - துன்புறுத்த; உய்தல் செல்லாது - பொறுத்திருத்தல் ஆற்றாது.
2. நரலும் – நடுங்கு குரலோடு ஒலிக்கும்; பிரிவரும் காலை – பிரிந்திருப் பதற்கு அரிதான கூதிர்ப்பருவத்தில்.
3. அமைகல்லார் - தங்கியிருக்க மாட்டார்.
4. மறந்து அமைகல்லாது – மறக்க இயலாமல்; மடம் கெழு நெஞ்சம் - மடமை பொருந்திய நெஞ்சம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 197 **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

திணை : நெய்தல்

கூற்று

பருவ வரவின்கண் வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

குறித்த பருவத்தே தலைவர் வாராதபோது, 'வருந்தாதே! தலைவர் வந்து விடுவார்' என்று தோழி தலைவியிடம் சொன்னாள். 'என்னைக் கொல்ல வருவதுபோலக் கூதிர்க்காலம் வந்துவிட்டது. நான் எவ்வாறு வருந்தா திருக்க இயலும்?' எனத் தலைவி தோழியிடம் கூறியது.

யாதுசெய் வாம்கொல் தோழி! நோதக
நீர்எதிர் கருவிய கார்எதிர் கிளைமழை
ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய
கூதிர் உருவின் கூற்றம்
காதலர்ப் பிரிந்த எற்குறித்து வருமே.

தெளிவுரை

"தோழி! நீரை ஏற்றுக்கொண்ட கார் காலம் நான் வருத்த மடையுமாறு இடி, மின்னல் முதலிய தொகுதிகளுடன் கிளைத்துப் பல இடங்களிலும் மழையைக் கொட்டுகிறது. மேலும், அஃது ஊதைக்காற்றின் குளிர்ச்சியோடு கூடிக் கலந்து மயங்கிக் கூதிர்க்காலம் என்னும் உருவத்தைக் கொண்ட கூற்றுவனாய், காதலரைப் பிரிந்திருக்கும் என்னைக் கொல்ல வருகிறது. நான் என்ன செய்வேன்?"

கருத்து

கார் காலம் முடிந்து கூதிர்க்காலம் தொடங்கிவிட்டது; காதலர் இன்னும் வரவில்லை. நான் என்ன செய்வேன்?

குறிப்பு

'கழிந்த கார்ப்பருவம் அறிவைத் தடுமாறச் செய்தது; வந்துள்ள கூதிர்ப் பருவமோ உயிரைக் கொல்கிறது. நான் எவ்வாறு உய்ய இயலும்?' என்பது தலைவியின் துயரக் குரல்.

சொற்பொருள்

1. நோதக - வருத்தம் அடைய.
2. கருவிய - இடி, மின்னல் முதலியவற்றுடன்; கிளைமழை - பல இடங்களிலும் கிளைத்துப் பெய்யும் மழை.
3. ஊதை - ஊதற்காற்று, குளிரோடு நடுக்கமுறச் செய்யும் காற்று; பேதுறுதல் - அறிவு கலங்குதல்.
4. கூதிர் - கூதிர்க்காலம்.
5. எற்குறித்து - என்னைக் குறித்து.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 456 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

குறித்த பருவம் வரவும் தலைமகன் வந்திலனாக ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற கூதிர்ப்பருவம் தொடங்கியது. ஆனால், அவன் வரவில்லை. அப்போது பொறுமை இழந்த தலைவி தோழியிடம் சொல்லியது.

உள்ளார் கொல்லோ தோழி வெள்இதழ்ப்
பகல்மதி உருவில் பகன்றை மாமலர்
வெண்கொடி ஈங்கைப் பைம்புதல் அணியும்
அரும்பனி அளைஇய கூதிர்
ஒருங்குஇவண் உறைதல் தெளித்துஅகன் றோரே!

தெளிவுரை

“தோழி! பனிக்காலத்தில் பூக்கும் பகன்றைப்பூ பெரியது; வெண்மையான இதழ்களைக் கொண்டது; பகலில் தோன்றும் நிலாப் போல வட்ட வடிவும் மங்கிய வெண்மையும் கொண்டது. அது வெள்ளைக் கொடிகளைக் கொண்ட ஈங்கையின் பச்சைப் புதரில் படர்ந்து மலர்ந்து அப்புதருக்கு அழகூட்டும். தாங்குதற் கரிய பனியோடு கூடிய கூதிர்ப்பருவத்திலே நம்மோடும் இங்கு வந்து தங்கியிருப்பதாய் நம் காதலர் உறுதி கூறிச் சென்றார். தாம் சொல்லிச் சென்ற உறுதிமொழியையும் நம் துயரையும் அவர் நினைக்கவே மாட்டாரோ?” என்று தலைவி கூறினாள்.

கருத்து

பனியோடு கூடிய கூதிர்ப்பருவத்தில் நம்மோடு இருப்பதாய்க் கூறிய நம் காதலர் நம்மை அறவே மறந்தாரோ?

சொற்பொருள்

1. **உள்ளார் - நினையார்; வெள் இதழ் - வெண்மையான இதழ்.**

2. பகல் மதி - பகற்காலத்தே தோன்றும் நிலா; பகன்றை - ஒருவகைக் கொடி.
3. பைம்புதல் - பசுமையோடு தோன்றும் புதர்.
4. அளைஇய - கலந்த; கூதிர் - வாடைக்காலம்; இவண் உறைதல் - இங்கே வந்து தங்குதல்; தெளித்து - நம்பச்செய்து.

தோழி கூற்று

குறுந்தொகை 380 **கருவூர்க் கதப்பிள்ளை**

திணை : பாலை

கூற்று

பனிப்பருவம் குறித்துப் பிரிந்தான், தலைமகன்; பிரிய, பருவ வரவின்கண் வேறுபடுவாளாயினும், ‘கதுமென ஆற்றுவிப்பது அரிது’ என்னும் கருத்தினளாய், கூதிர்ப்பருவத்து, தலைமகள் கேட்பத் தனது ஆற்றாமை விளங்கத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் முன்பனிப்பருவத்தே வருவதாய்க் கூறிச் சென்றான். கூதிர்ப் பருவத்தின் இறுதிக் காலம் தொடங்கியதும் தோழியின் கவலை மிகுதி யானது; முன்பனிப்பருவம் தொடங்கும்போது தலைவி மிகவும் வருந்துவளே எனக் கருதி, அவர் வாராதிருப்பினும் பொறுத்தற்குரிய மனப்பக்குவத்தை உண்டாக்கிடத் தோழி கூறியது. (கூதிர்ப்பருவம் - முன்பனிப்பருவத்திற்கு முன் அமையும் பருவம்.)

விசும்புகண் புதையப் பாஅய், வேந்தர்
வென்றுஎறி முரசின் நன்பல முழங்கி,
பெயல்ஆ னாதே, வானம்; காதலர்
நனிசேய் நாட்டர்; நம்உன் னலரே;
யாங்குச்செய் வாம்கொல் தோழி! ஈங்கைய
வண்ணத் துய்ம்மலர் உதிர,
முன்னர்த் தோன்றும் பனிக்கடு நாளே!

தெளிவுரை

தலைவியே! மேகம் வானத்தை மூடி எங்கும் பரந்து நிற்கின்றது. அரசர்கள் பகைவரை வென்று அறைகின்ற வெற்றி முரசினைப் போல இடி நன்றாய்ப் பலமுறை முழங்குகின்றது. நீங்காது மழையும் பெய்யத் தொடங்கிவிட்டது. கார் காலத்தில் பூக்கும் இயல்பினதான வண்ணத் துய்யினைக் கொண்ட ஈங்கை மலர்களும் மலர்ந்து உதிரத் தொடங்கிவிட்டன. ஆதலால், கார் காலம் முடிந்து பனிக்காலமும் தொடங்கவிருக்கிறது. மிகத் தொலைவில் இருக்கும் நாட்டிலுள்ள நம் தலைவரும் நம்மை நினைத்திலர் (மறந்தனர்). இனி, முன்பனிக்காலம் தொடங்கினால் நாம் என்ன செய்வோம்?" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் தான் மீண்டும் வருவதாய்க் கூறிய காலத்தில் வாராவிட்டால் நாம் என்ன செய்வோம்? (வரவு நீட்டிப்பினும் ஆற்றியிருக்க வேண்டுமென்பதைக் குறிப்பாற்கூறியது.)

குறிப்பு

ஈங்கை - இஃது ஒரு வகைக் கொடி. இதன் மலர்கள் கூதிர்ப்பருவத்தில் அரும்பி மலரும்; முன்பனிக்காலத்தில் யாவும் உதிர்ந்துவிடும்; அகவிதழில் நீண்டிருக்கும் தாதுகள் பஞ்சு போன்று 'துய்' என்றிருக்கும். (துய் - மென்மை)

சொற்பொருள்

1. விசும்பு - ஆகாயம்; கண் - இடம்; புதைய - மறைய; பாஅய் - பரவி.
2. நன்பல - நன்றாகப் பலமுறை; முழங்கி - இடித்து.
3. பெயல் ஆனாது - விடாது மழை பெய்யத் தொடங்கிவிட்டது.
4. நனி - மிகவும்; சேய் - தொலைவு; உன்னுதல் - நினைத்தல்.
5. யாங்குச் செய்வாம் - என்ன செய்வோம்?; ஈங்கை - ஒரு வகைக் கொடி.
6. வண்ணத்துய்ம்மலர் - அழகிய துய்யினைக் கொண்ட மலர்; துய் - மென்மை.
7. முன்னர்த் தோன்றும் - இனிமேல் தொடங்கவிருக்கும்; பனிக்கடு நாள் - குளிர் நிறைந்த கொடுமையான காலம்.

தலைவி கூற்று

நற்றிணை 281 **கழார்க்கீரன் எயிற்றியார்**

திணை : பாலை

கூற்று

வன்பொறை எதிர் அழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தான் குறித்த காலத்தில், பிரிந்த தலைவன் வரவில்லை. அதனால் தலைவி மிகவும் ஆற்றாளாயினாள். அவளிடம் 'பொறுத்திரு' என்று தோழி சொன்னாள். அதற்குத் தலைவி மிகவும் வருந்திக் கூறியது.

மாசுஇல் மரத்த பலிஉண் காக்கை
வளிபொரு நெடுஞ்சினை தளியொடு தூங்கி,
வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளும்
நல்வகை மிகுபலிக் கொடையோடு உகுக்கும்
அடங்காச் சொன்றி, அறாஅ யாணர்
விடக்குடைப் பெருஞ்சோறு உள்ளுவன இருப்ப,
மழைஅமைந்து உற்ற மால்இருள் நடுநாள்,
தாம்நம் உழையர் ஆகவும், நாம்நம்
பனிக்கடு மையின், நனிபெரிது அழுங்கி,
துஞ்சாம் ஆகலும் அறிவோர்
அன்பிலர் தோழி! நம்காத லோரே.

தெளிவுரை

"தோழி! மாசற்ற மரத்தில் அமர்ந்தபடியே மக்கள் இடுகின்ற பலிச்சோற்றை உண்ணும் காக்கை, காற்று மோதும் நெடிய கிளையிலிருந்து தன்மேல் விழுகின்ற மழைத்துளியோடு அசைந்து கொண்டிருக்கும். அக்காக்கை அங்கிருந்தபடியே வெல்லுகின்ற போர் வலிமையினைக் கொண்ட சோழரது கழார் என்னும் நகரத்தில், மக்கள் அழகிய பல ஊன் துண்டங்களையும் கலந்து இடுகின்ற அளவில்லாத பெருஞ்சோற்றுத்திரளை எண்ணிக் கொண்டிருக்கும். மழை பெய்து உண்டான மயக்கத்தைத் தரும் இருள் பரந்த நடு இரவில், தலைவன் நம் அருகிலே இருந்த போதும், நாம் பனியின் கொடுமையால் மிகவும் வருந்தித்

தூங்காதவராய் இருந்தோம். இதனை அவர் அறிவார்; ஆயினும், அவர் இப்போது வந்தார் இலர்! அவர் நம்மிடம் அன்பில்லாதவரே ஆவார்."

கருத்து

தலைவன் உடனிருந்தபோது (பனிக்குளிரில்) நான் உறங்காதிருந்ததை அவர் அறிவார். அவர் அருகே இல்லாத இப்போது நான் உறங்க இயலுமா? இன்னும் வந்து சேராத அவர் அன்பில்லாதவரே!

விளக்கம்

'தோழி! மழை மிகப்பெய்த காலத்து நள்ளிரவில் தலைவன் நம்மோடிருந்தும் பனி மிகுதியால் நாம் உறங்காமல் இருந்ததை அவர் நன்கு அறிவார். அவ்வாறிருந்தும் இப்போது அவர் நம்மைப் பிரிந்திருப்பது அவர்க்கு நம்மிடம் அன்பில்லை என்பதனையே காட்டுகிறது. அவ்வாறிருக்க, அவரை அன்பு கொண்டவர் என்றும், அவர் பிரிவை ஆற்றியிருக்க வேண்டும் என்றும் நீ வற்புறுத்துவது எனக்கு வியப்பைத் தருகிறது' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

இறைச்சி

பலியுண் காக்கை, கழார் நகரிலே ஊனுடன் கிடைக்கும் பெருஞ் சோற்றுத் திரளை விரும்பியிருப்பதுபோல, நானும் அவருடன் கூடி வாழ்தலுக்காகக் காத்துள்ளேன்.

சொற்பொருள்

1. மாசு - குற்றம்; மரத்த - மரத்தில் தங்கியுள்ள; பலி - மக்கள் தெய்வத் திற்காக இடும் பலி உணவு.
2. வளி - காற்று; பொருதல் - மோதுதல், அலைத்தல்; சினை - கிளை; தளி - மழைத்துளி; தூங்கி - அசைந்து.
3. கழாஅர் - சோழர்களின் துறைமுக நகரம்.
4. நல்வகை மிகுபலிக் கொடை - பச்சை ஊனும் பசிய நிணமும் கலந்த சோற்றை மிக்க அளவில் கொடுக்கும் பலிக்கொடை; உகுத்தல் - சிந்துதல், சொரிதல்.
5. அடங்கா - அளவில்லாத; சொன்றி - சோறு; அறாஅ - நீங்காத.
6. விடக்கு - ஊன், இறைச்சி; பெருஞ்சோறு - மிக்க சோறு; உள்ளுவன - நினைத்துக்கொண்டு.

7. மழை - மழை மேகம்; மால் - மயக்கம்.
8. தாம் - தலைவர்; உழையர் - உடனிருப்பவர்.
9. கடுமை - மிகுதி; நனி - மிகவும்; அழுங்கி - வருந்தி.
10. துஞ்சுதல் - உறங்குதல்; துஞ்சாம் ஆகலும் - துயில் கொள்ளோம் ஆகவும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 68 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பிரிவிடைக் கிழத்தி மெலிந்து கூறியது.

கூற்று விளக்கம்

பொருளீட்டச் சென்ற தலைவன் முன்பனிப் பருவத்தும் வாராமையால் மிகவும் வருந்திய தலைவி, தனது ஆற்றாமையைத் தோழியிடம் கூறியது.

பூழ்க்கால் அன்ன செங்கால் உழுந்தின்
ஊழ்ப்படு முதுகாய் உழைஇனம் கவரும்
அரும்பனி அச்சிரம் தீர்க்கும்
மருந்துபிறிது இல்லை;அவர் மணந்த மார்பே.

தெளிவுரை

"தோழி! குறும்பூழ்ப்பறவையின் காலைப் போன்ற சிவந்த தாளினைக் கொண்ட உழுந்தின் நன்கு முதிர்ந்த காய்களை மான் கூட்டம் கவர்ந்து தின்னும். தாங்குதற்கரிய பனி பெய்யும் முன்பனிக்காலமும் தொடங்கியது. இக்காலத்தில் தலைவன் பிரிவால் நான் படும் துன்பத்தைத் தீர்க்கும் மருந்து நான் மகிழ்ந்து தழுவிய அவர் மார்பேயன்றி வேறன்று."

கருத்து

தலைவன் முன்பனிக்காலத்தில் பிரிந்துள்ளதால் நேரிட்டுள்ள பிரிவு நோய்க்கு மருந்து, அவர் மார்பைத் தழுவிக்கொள்ளுதலேயன்றி வேறன்று; ஆயினும், அவர் வந்திலரே!

விளக்கம்

'உழுந்தின் முதிர்காயை மானினம் கவர்ந்துண்ணும் முன்பனிப் பருவத்தில் என் நோய் தீர்க்கும் மருந்து அவர் மார்பேயன்றிப் பிறிதில்லையாயினும் அவர் வந்திலரே! எங்ஙனம் ஆற்றியிருப் பேன்?' என வருந்தித் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. பூழ் - குறும்பூழ்ப்பறவை, காடை; கால் - உழுந்தின் தாள்.
2. ஊழ்ப்படு - நன்கு முதிர்ந்த; முதுகாய் - முற்றிய காய்; உழை இனம் - மான் கூட்டம்.
3. அச்சிரம் - முன்பனிக்காலம்.
4. மணந்த - (முன்பு மகிழ்ந்து) தழுவிய.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 464 **பேயனார்**

திணை : முல்லை

கூற்று

வரைந்த அணுமைக்கண்ணே பிரிந்த தலைமகன் குறித்த பருவம் வந்துழி, 'இதனை மறந்தார்' என்ற தலைமகட்குத் தோழி, 'வரைவதற்கு முன்பு அவரன்புடைமை இதுவாகாலான் மறத்தல் கூடாது' எனச் சொல்லி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

திருமணம் முடிந்த சில நாள்களிலேயே தலைவன் பிரிந்தான். அவன் குறித்துச் சென்ற கார்ப்பருவம் தொடங்கியும் அவன் வரவில்லை. தலைவி, 'என்னை மறந்தார் தலைவர்' என்று வருந்தினாள். தோழி, அவன் திருமணத்திற்கு முன்பு காட்டிய அன்பினைச் சுட்டி, அத்தகையவர் வாராதிருக்க மாட்டார் என்று கூறி வற்புறுத்தித் தேற்றியது.

கண்எனக் கருவிளை மலரப் பொன்என
இவர்கொடிப் பீரம், இரும்புதல் மலரும்
அற்சிரம் மறக்குநர் அல்லர்,நின்
நல்தோள் மருவரற்கு உலமரு வோரே.

தெளிவுரை

"*தலைவி! மிகுந்த காதல் கொண்டு உன் நல்ல தோள்களைத் தழுவுதற்காகப் பற்பல துயரங்களையும் ஏற்றவர், உன் காதலர். உன் கண் போன்ற கருவிளைப் பூக்கள் எங்கும் மலரவும், படர் கொடியான பீர்க்கிலே பொன் என்று சொல்லத்தகும் பூக்கள் பெரிய புதலிடத்தே மலர்ந்து தோன்றவும் விளங்குகின்ற இம் முன்பனிக்காலத்தினை அவரால் ஒருபோதும் மறக்க இயலாது.*"

கருத்து

கண்போலக் கருவிளையும், பொன்போலப் பீர்க்கும் மலர்ந்துள்ள இம் முன்பனிக்காலத்தில் தலைவன் வந்து சேர்வான்; கலங்காதிரு.

விளக்கம்

"*களவுக்காலத்தே உன்னைத் தழுவிப் பெறும் இன்பத்தின் பொருட்டாகப் பல இடையூறுகளையும் பொருட்படுத்தாது வந்த அவரது காதல் மிகுதியை நினைத்துப் பார். அத்தகைய அன்பினைக் கொண்டவர் உன்னை ஒருபோதும் மறவார்; காலந்தாழ்த்தாமல் விரைவில் திரும்புவார்" என்று தோழி தலைவியிடம் உறுதி கூறினாள்.*

சொற்பொருள்

1. கருவிளை - கருவிளை மலர்.
2. இவர்தல் - படர்தல்; பீரம் - பீர்க்கு; இரும்புதல் - பெரிய புதர்.
3. அற்சிரம் - முன்பனிக்காலம்.
4. மருவரல் - மருவுதல், அணைதல்; உலமருவோர் - சுழலுவோர், துடிப்பவர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 82 **கடுவன் மள்ளனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பருவங்கண்டு அழிந்த தலைமகள், 'வருவர்' என்று வற்புறுத்தும் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற போது, 'முன்பனிக்காலத்துக்கு முன் வந்து சேர்வன்' என்று கூறிச் சென்றான், தலைவன். அவன் அவ்வாறு வாராததால் தலைவி மிக வருத்தம் கொண்டாள். அதைக் கண்டு, 'துயரை ஆற்றியிரு' என்று சொன்ன தோழியிடம் தலைவி கூறியது.

வார்உறு வணர்கதுப்பு உளரி, புறஞ்சேர்பு,
'அழாஅல்' என்றுநம் அழுதகண் துடைப்பார்;
யார்ஆ குவர்கொல்? தோழி! சாரல்
பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகால்
கொழுங்கொடி அவரை பூக்கும்
அரும்பனி அச்சிரம் வாரா தோரே.

தெளிவுரை

"தோழி! மலைப்பக்கத்திலேயுள்ள பெரிய தினைப்புனத்துக் குரிய குறவன், சிறு தினையை அரிந்தான். அதன் மறுகாலில் கொழுமையான அவரைக்கொடி வளர்ந்து பூத்திருக்கிறது. பொறுத்தற்கரிய குளிரைக் கொண்ட இந்த முன்பனிக்காலத் திலும் அவர் திரும்பி வரவில்லை. முன்பு நீளமான என் நெளிந்த கூந்தலை வகிர்ந்து கொடுத்து, (அது, பிரிதலைக் குறித்து அவர் செய்யும் செயல் என்றுணர்ந்த நான் அழ,) என் முதுகை அணைத்துக் கொண்டு, 'அழாதே' என்று என் அழுத கண்களைத் தம் கைகளால் துடைப்பார். இப்பொழுது எப்படி இருக்கின்றாரோ?"

கருத்து

முன்பனிக்காலத்தில் என் முதுகை அணைத்துத் துயர் துடைக்கத் தலைவர் வந்திலரே.

விளக்கம்

பிரிவதற்கு முன்பு, அவன் பிரிவனோ என ஐயுற்று வருந்திய தலைவியின் வருத்தமிகுதியை உணர்ந்து, அவளைத் தேற்றித் தெளிவித்து, 'அவரை பூக்கும் முன்' வந்துவிடுவேன் என்று கூறிச் சென்றான், தலைவன். அவரை பூத்த பின்னரும் அவன் வரவில்லை. அதனால், அவன் தன்னை மறந்தானோ எனத் தலைவி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. வார் - நீளம்; வணர் - சுருள், நெளிவு; கதுப்பு - கூந்தல்; உளரி - வகிர்ந்து; புறம்சேர்பு - முதுகை அணைத்து.
2. அழாஅல் - அழாதே.
3. யார் ஆகுவர் ? - எப்படி இருக்கின்றாரோ?
4. மறுகால் - பயிரை அறுத்தபின் அந்த அடிக்கட்டை மறுமுறை பயிராதல்.
5. கொழுங்கொடி - செழிப்பான கொடி.
6. அரும்பனி - தாங்குதற்கரிய குளிர்; அச்சிரம் - முன்பனிக் காலம்; வாராதோர் - வந்து சேராதவர்.

தலைவி கூற்று

அகநானூறு 183 **கருவூர்க் கலிங்கத்தார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் குறித்த பருவ வரவு கண்டு, தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டும்பொருட்டுப் பிரிந்து சென்ற தலைவன் தான் கார்ப் பருவத்தின் தொடக்கத்தே திரும்புவதாகக் கூறிச் சென்றான். கார்ப்பருவம் தொடங்கியும் தலைவன் திரும்பாமையால் தலைவி வருந்தித் தோழியை நோக்கிக் கூறியது.

'குவளை உண்கண் கலுழவும், திருந்திழைத்
திதலை அல்குல் அவ்வரி வாடவும்,
அத்தம்ஆர் அழுவம் நத்துறந்து அருளார்
சென்றுசேண் இடையர் ஆயினும், நன்றும்
நீடலர் என்றி—தோழி!' பாடுஆன்று—
பனித்துறைப் பெருங்கடல் இறந்து,நீர் பருகி,
குவவுத்திரை அருந்து கொள்ளைய குடக்குஏர்பு,
வயவுப்பிடி இனத்தின் வயின்வயின் தோன்றி,
இருங்கிளைக் கொண்மூ ஒருங்குடன் துவன்றி,
காலை வந்தன்றால் காரே— மாலைக்
குளிர்கொள் பிடவின் கூர்முகை அலரி
வண்டுவாய் திறக்கும் தண்டா நாற்றம்
கூதிர் அற்சிரத்து ஊதை தூற்ற,
பனிஅலைக் கலங்கிய நெஞ்சமொடு
வருந்துவம் அல்லமோ, பிரிந்திசினோர் திறத்தே?

தெளிவுரை

தலைவி தோழியை நோக்கி, 'தோழி! தலைவர் பிரிந்து சென்று விட்ட இக்காலத்தில், நான் ஆறுதல் கொள்வதற்காக, 'குவளை மலர் போன்ற மையுண்ட உன் கண்கள் கண்ணீர் சிந்துகின்றன; திருத்திய அணிகலன்களையும் தேமலையும் கொண்ட உன் அல்குலின் வரிகள் பொலிவிழந்தன. உன் காதலர் உன்னைப் பிரிந்து கருணையின்றி அரிய வழிகளைக் கொண்ட பரந்த பாலை நிலத்தைக் கடந்து சென்று நெடுந்தொலைவில் உள்ள நாட்டில் உள்ளார். ஆயினும், அங்கு அவர் நெடுநாள் தங்க மாட்டார்' என்று கூறுகிறாய்.

"பெரிய மேகக் கூட்டங்கள், வளைந்த அலைகளையும் குளிர்ந்த துறையினையும் கொண்ட பெரிய கடலிலே படிந்து, மிகுதியாய் நீரினைப் பருகி மேற்குத்திசையில் வான் உயர எழுந்தன. அங்குக் கருவுற்ற பெண்யானைக்கூட்டம்போல அங்கங்குச் சேர்ந்து நின்று, பிறகு அனைத்தும் ஒன்றாய்க் கூடி, இடியுடன் மழை பெய்யும் கார் காலம் இன்று காலைதான் தொடங்கியதுபோலத் தோற்றமளித்தன.

"ஆனால், இன்று மாலையிலேயே கூதிர், முன்பனி ஆகிய காலங்களுக்குரிய பிடவின் குளிர்ச்சி மிக்க கூர்மையான அரும்பு களின் இதழ்களை வண்டுகள் திறக்க அவற்றின் மணத்தை வாடைக்காற்று எங்கும் பரப்புகிறது; குளிரும் வாட்டுகிறது. அந்த நேரத்தில் தலைவன் இல்லாத் தனிமையினால் மனங்கலங்கி வருந்த நேருமே! அதற்கு என் செய்வேன்?" என்று கூறினாள்.

கருத்து

கார் காலமும் கூதிர்க்காலமும் முடிவுற்று, முன்பனிக்காலம் தொடங்கிய நிலையிலும் அவர் வந்து சேரவில்லையே!

விளக்கம்

"தோழி! தலைவர் அருளில்லாதவராய் நம்மைத் துறந்து அருநெறிகளைக் கொண்ட பாலை நிலத்தைக் கடந்து சேய்மை நாட்டில் உள்ளாராயினும் அங்கிருந்து தாமதியாது வருவார் என்கிறாய்.

"மேகங்கள் கடலிற்சென்று நீர் பருகி, மேற்கே எழுந்து, சூலுற்ற பெண்யானைகள்போலக் கூட்டங்கூட்டமாய்க் குவிந்து, இடியொடு மழை பெய்யும் கார் காலம் இன்று காலைதான் தொடங்கியதுபோலத் தோன்றியது.

ஆனால், இந்த மாலையிலேயே கூதிர், முன்பனி ஆகிய காலத் துக்குரிய பிடவ மலரின் மணத்தினை வாடைக்காற்று பரப்பத் தொடங்கி விட்டது; பனியும் நடுக்குகிறது. இந்நிலையில் பிரிந்து சென்ற தலைவரை நினைந்து கலங்கி, வருந்தாமல் என்ன செய்ய இயலும்?"

குறிப்பு

'கார் காலத்தில் திரும்பிவிடுவதாய்த் தலைவர் கூறிச் சென்றார். அப்பருவம் முடிவுற்றது; கூதிர், முன்பனிக்காலம் ஆகியவற்றுக்குரிய பிடவம் மலர்ந்து மணம் வீசுகிறது; ஆயினும், இன்னும் அவர் வரவில்லையே' என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. கலுழ்தல் - நீர் சொரிதல்; திருந்திழை - திருத்தமான அணிகலன்.

2. திதலை - தேமல்; அவ்வரி - அழகிய வரி.
3. அத்தம் - அரிய வழி; அழுவம் - பாலை வழி.
4. சேண் இடையர் - தொலைவில் உள்ளார்.
5. நீடலர் - காலம் நீட்டிக்க மாட்டார்; பாடுஆன்று - ஒலிமிக்கு.
6. இறந்து - படிந்து.
7. குவவுத்திரை - குவிகின்ற கடல் அலை; கொள்ளைய - திரண்டு; குடக்கு - மேற்கு; ஏர்பு - எழுந்து.
8. வயவுப்பிடி - கருவுற்ற பெண்யானை; வயின்வயின் - இடந்தோறும், அங்கங்கே.
9. இருங்கிளை - பெரிய கூட்டம்; கொண்மூ - மேகம்; துவன்றி - நெருங்கி (துவன்றல் - நெருங்கல், குவிதல்).
10. காலை வந்தன்று - இன்று காலையில்தான் தொடங்கியது (போல் தோன்றியது); கார் - கார்ப் பருவம்; மாலை - (ஆனால், இப்போது இந்த) மாலை நேரத்திலேயே.
11. பிடவம் - ஒரு வகைச் செடி; கூர்முகை - கூரிய அரும்பு; அலரி - மலரும்படி.
12. தண்டா - நீங்காத; நாற்றம் - மணம்.
13. கூதிர் - கூதிர்க்காலம்; அற்சிரம் - முன்பனிக்காலம்; ஊதை - வாடைக் காற்று; தூற்ற - பரப்ப.
14. பனிஅலை - பனி வருத்த; கலங்கிய - வருந்திய.
15. பிரிந்திசினோர் - பிரிந்து சென்ற தலைவர்.

தோழி கூற்று

குறுந்தொகை 338 பெருங்குன்றூர் கிழார்

திணை : பாலை

கூற்று

பிரிவிடைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து சென்றமையால் வருந்தியிருந்த தலைவியை நோக்கி, ‘இதோ தலைவன் வந்துவிட்டான்’ என்று கூறித் தோழி ஆற்றுவித்தது.

திரிமருப்பு இரலை அண்ணல் நல்ஏறு
அரிமடப் பிணையோடு அல்குநிழல் அசைஇ,
வீததை வியல்அரில் துஞ்சி, பொழுதுசெல,
செழும்பயறு கறிக்கும் புன்கண் மாலை,
பின்பனிக் கடைநாள், தண்பனி அச்சிரம்
வந்தன்று, பெருவிறல் தேரே – பணைத்தோள்
விளங்குநகர் அடங்கிய கற்பின்
நலம்கேழ் அரிவை புலம்புஅசா விடவே.

தெளிவுரை

“மூங்கிலைப் போன்ற தோளினைப் பெற்று, சிறந்து விளங்குகின்ற வீட்டிலேயே அடங்கியிருக்கும் அழகு பொருந்திய கற்பினைக் கொண்ட தலைவியே! உன் துன்பம் நீங்கும்படி, தலைவன் வந்து விட்டான்.

“முறுக்கேறிய கொம்புகளைக் கொண்ட இரலை மான்களுள் தலைமைத் தன்மை பொருந்திய நல்ல ஆண்மான், மென்மையும் இளமையும் கொண்ட தன் பெண்மானோடு, தாம் தங்குதற்குரிய மர நிழலிலே தங்கியிருக்கும்; மலர்கள் நெருங்கியிருக்கின்ற அகன்ற புதரிலே படுத்துத் தூங்கும்; பொழுது கழிந்தமை கண்டு உடனே எழுந்து சென்று, செழுமையான பயிற்றம் பயிரைக் கடித்துத் தின்னும். துன்பத்தைத் தரும் மாலைக்காலத்தையும் பனி பெய்யும் நடு யாமத்தையும் கொண்ட பின்பனிக்காலமும் தொடங்கியது; தலைவனுடைய தேரும் வந்துவிட்டது.”

கருத்து

பின்பனிக்காலமும் வந்தது; தலைவனின் தேரும் வந்துவிடும்; வருந்தாதே!

விளக்கம்

‘கலைமான் பிணையோடு மர நிழலிலே தங்கும்; பெரிய புதரிலே தூங்கும்; பொழுது கழிந்ததும் பயிற்றம் பயிரைக் கடித்துத் தின்னும். இத்தகைய மாலைப்பொழுதில், பனி நிறைந்த பின்பனிக்காலத்தில், நம் தலைவனின் தேர் வந்துவிட்டது; வருந்தாதே’ எனக் கூறித் தலைவியைத் தோழி தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. திரி - முறுக்கேறிய; மருப்பு - கொம்பு; இரலை - மான்; அண்ணல் - தலைமைத் தன்மை பொருந்திய; ஏறு - ஆண்.
2. அரி மடம் - மென்மையும் இளமையும் கொண்ட; பிணை - பெண் மான்; அல்குதல் - தங்குதல்; அசைஇ - தங்கி.
3. வீ ததை - மலர்கள் நெருங்கிய; வியல் அரில் - அகலமான புதர்; துஞ்சி - தூங்கி; பொழுதுசெல - பொழுது சென்ற மாலை.
4. பயறு - பயற்றஞ்செடி; கறிக்கும் - கடிக்கும்.
5. கடை நாள் - நடு யாமம்; அச்சிரம் - பின்பனிக்காலம்.
6. வந்தன்று - வந்தது; விறல் - வெற்றி; பணை - மூங்கில், பருத்த.
7. நகர் - வீடு.
8. நலம் - அழகு; கேழ் - பொருந்திய; அசாவிட - நீங்கும்வண்ணம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 64 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் குறிப்பிட்டுச் சென்ற பருவம் தொடங்கியது. தோழி அதனைத் தலைவிக்குக் காட்டி, ‘தலைவன் இனி வருவான்’ என்னும் நம்பிக்கை ஏற்படும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது.

பேணாய் இதன்திறத்(து) என்றாலும் பேணாதே
நாண்ஆய நல்வளையாய்! நாண்இன்மை – காணாய்
எரிசிதறி விட்டன்ன ஈர்முருக்(கு); ஈடில்
பொரிசிதறி விட்டன்ன புன்கு.

தெளிவுரை

“தலைவியே! நீ இவ்வாறு துன்பமடைவதிலிருந்து நீங்கி உன்னைக் காத்துக்கொள் என்று கூறினாலும், அவ்வாறு

செய்யாமல் துன்புறுகிறாய். நல்ல வளையலணிந்தவளே! தீயைச் சிதறவிட்டாற் போல் முருக்க மரங்கள் பூத்துள்ளன. கனமில்லாத நெற்பொறிகளைச் சிதறிவிட்டாற்போலப் புன்க மரங்கள் மலர்ந்துள்ளன. ஆதலால், நீ துன்பங்கொள்வது நாணமிக்கது என்பதையும், அவர் சொல்லிச் சென்ற வேனிற்பருவம் தொடங்கியது என்பதையும் உணர்ந்து துன்பப்படுவதை நீக்கு" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

வேனில் தொடங்கியது; வேந்தன் வருவான்; அறியாமையை அகற்று.

சொற்பொருள்

1. பேணாய் - காத்துக்கொள்வாய்.
2. நாண்ஆய - வெட்கமுறுவதற்குக் காரணமான; காணாய் - கண்டு.
3. எரி - நெருப்பு; ஈர் - குளிர்ந்த; முருக்கு - முருக்க மரங்கள்; ஈடு இல் - பளு (கனம்) இல்லாத.
4. புன்கு - புன்க மரம்.

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 66 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் குறிப்பிட்டுச் சென்ற பருவம் தொடங்கியது. தோழி அதனைத் தலைவிக்குக் காட்டி, 'தலைவன் இனி வருவான்' என நம்பிக்கை ஏற்படும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது.

வல்வரும் காணாய் வயங்கி முருக்கெல்லாம்
செல்வர் சிறார்க்குப்பொற் கொல்லர்போல் – நல்ல
பவளக் கொழுந்தின்மேல் பொன்தாலி பாஅய்த்
திகழக்கான் றிட்டன தேர்ந்து

தெளிவுரை

"பொற்கொல்லர் செல்வர்களின் புதல்வர்களுக்கு ஐம்படைத் தாலி செய்யும்போது பொன்னின்மேல் பவளத்தினைப் பதித்து வைத்ததுபோல முருக்க மரங்களில் பொன்னிறப் புறவிதழ்களின் மேல் சிவந்த நிறமுள்ள அகவிதழ்களைக் கொண்ட பூக்கள் பூத்துள்ளன. ஆதலால், இது வேனிற்காலம் என்பதை அறிவாய். எனவே, பிரிந்து சென்ற தலைவன் விரைவில் வருவான்; வருந்த வேண்டா" என்று தோழி தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

வேனில் தொடங்கியது; தலைவன் விரைந்து வருவான்.

விளக்கம்

நல்ல மலர்ச்சியின்போது முருக்க மலரின் புறவிதழ் மஞ்சள் நிறம் பெறும்; அதன்மேல் சிவந்த அகவிதழ் தோன்றும். ஆதலால், பொற்கொல்லர் செல்வச் சிறுவர்க்கு ஐம்படைத் தாலி செய்யும்போது பொன்னின்மேல் பவளத் துண்டினை வைத்ததுபோல முருக்க மரத்தில் பூப்பூத்தது என்றார்.

குறிப்பு

'பொற்கொல்லர்' என்னும் தொடர் இச்செய்யுளில்தான் முதன்முதலில் ஆளப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரையில் 'பொற் கொல்லர் ஆயிரம் பேரை' என அமைந்துள்ளது. 'பொன்செய் கொல்லர்' எனச் சிலப்பதிகாரத்திலும் (5:31), மணிமேகலையிலும் (28:36), 'பொன்செய் கொல்லன்' என நற்றிணையிலும் (394:3) ஆளப்பட்டுள்ளன. முதன்முதலில் இப்பாடலில்தான் 'பொன் தாலி' என்னும் தொடர் இடம் பெற்றுள்ளது.

சொற்பொருள்

1. வல் வரும் - விரைவில் வருவான்; வயங்கி - விளக்கத்தோடு கூடியன வாய்; முருக்கு எல்லாம் - முருக்க மரங்கள் எல்லாம்.
3. பாஅய் - பாய் - பதித்து வைத்தாற்போல.
4. திகழ - காணும்படியாக; கான்றிட்டன - வெளிவிட்டன (மலர்ந்தன).

தோழி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 63 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

தலைமகளைத் தோழி பருவங்காட்டி வற்புறீஇயது.

கூற்று விளக்கம்

பிரிந்து சென்ற தலைவன் தான் திரும்பி வருவதாய்க் குறிப்பிட்டுச் சென்ற பருவம் தொடங்கியது. தோழி அதனைத் தலைவிக்குக் காட்டி, 'தலைவன் இனி வருவான்' என நம்பிக்கை ஏற்படும் வகையில் வற்புறுத்திச் சொல்லியது.

எரிநிற நீள்பிண்டி இணர்இனம் எல்லாம்
வரிநிற நீள்வண்டர் பாடப் – புரிநிறநீள்
பொன்னணிந்த கோங்கம்; புணர்முலையாய்! பூந்தொடித்தோள்
என்அணிந்த ஈடில் பசப்பு.

தெளிவுரை

"நெருங்கிய கொங்கைகளைக் கொண்ட தலைவியே! அசோக மரங்கள் நீண்ட தீயைப் போன்ற நிறத்துடன் கூடிய மலர்க் கொத்துகளைக் கொண்டுள்ளன. அழகிய வண்டுகள் 'இளி' எனும் இசையைப் பாடி மொய்க்குமாறு கோங்க மரங் களெல்லாம் அழகிய பெரிய பொன்போன்ற மலர்களைப் பெற்றுள்ளன. ஆனால், அழகிய வளையலை அணிந்த உன் தோள் மட்டும் தகுதியற்ற பசலை நிறத்தைப் பெற்றிருப்பதேன்?" எனத் தோழி தலைவியிடம் வினவினாள்.

கருத்து

வேனில் தொடக்கத்தின் அடையாளமாய் அசோகு, கோங்கு ஆகிய மலர்கள் பூத்துள்ளன. அதனால் தலைவன் விரைவில் வந்து சேர்வான்.

சொற்பொருள்

1. எரி - தீ; பிண்டி - அசோகம்; இணர் - பூங்கொத்து.
2. வரிநிற - கோடுகளுடன் கூடிய அழகிய; நீள் பாட - நீட்டிப் பாடும் இளியென்னும் பண்ணினைப் பாடிக்கொண்டு; புரிநிறம் - விருப்பப் படுகின்ற நிறம்.

3. பொன் - பொன் போன்ற மலர்; கோங்கம் - கோங்க மரம்.
4. ஈடில் - தகுதியில்லாத; பசப்பு - பசலை நிறம்.

தோழி கூற்று

அகநானூறு 25 **ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டு அழிந்த தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

பொருள் ஈட்டச் சென்ற தலைவன், தலைவியிடம் இளவேனிற் பருவத்தில் மீண்டு வருவதாய்க் கூறிச் சென்றான். அப்பருவம் தொடங்கிய பின்பும் தலைவன் வாராமையால் தலைவி பிரிவு ஆற்றாது வருந்தினாள். அது கண்ட தோழி, 'குறித்த பருவம் கடந்தாலும், தலைவன் தன் பிழைக்கு வருந்தியவனாய் விரைந்து வருவான்; அவன் வரும்துணையும் ஆற்றியிரு' எனத் தலைவியை வற்புறுத்திக் கூறியது.

'நெடுங்கரைக் கான்யாற்றுக் கடும்புனல் சாஅய,
அவிர்அறல் கொண்ட விரவுமணல் அகன்துறைத்
தண்கயம் நண்ணிய பொழில்தொறும், காஞ்சிப்
பைந்தாது அணிந்த போதுமலி எக்கர்,
வதுவை நாற்றம் புதுவது கஞல,
மாநனை கொழுதிய மணிநிற இருங்குயில்
படுநா விளியால் நடுநின்று அல்கலும்
உரைப்ப போல, ஊழ்கொள்பு கூவ,
இனச்சிதர் உகுத்த இலவத்து ஆங்கண்,
சினைப்பூங் கோங்கின் நுண்தாது பகர்நர்
பவளச் செப்பில் பொன்சொரிந் தன்ன,
இகழுநர் இகழா இளநாள் அமையம்
செய்தோர் மன்ற குறி'என, நீநின்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப
வாரா மையின் புலந்த நெஞ்சமொடு,
நோவல், குறுமகள்! நோயியர்என் உயிர்!என,

மெல்லிய இனிய கூறி, வல்லே
வருவர் வாழி– தோழி! – பொருநர்
செல்சமம் கடந்த வில்கெழு தடக்கைப்
பொதியிற் செல்வன், பொலந்தேர்த் திதியன்,
இன்இசை இயத்தின் கறங்கும்
கல்மிசை அருவிய காடுஇறந் தோரே.

தெளிவுரை

"தலைவி! வாழி! நெடிய கரைகளைக்கொண்ட காட்டாற்றின் வேகமிக்க பெருவெள்ளம் வற்றிவிட்டது; அகன்ற நீர்த் துறைகள், நீர் குறைவுற்று அற்றற்று ஓடுவதால், வரிவரியாய் அமைந்த பரந்த மணலைக் கொண்டனவாயின; அத்துறையிடத்தேயுள்ள குளிர்ந்த மடுக்கள் பொருந்திய சோலைகளில் உள்ள மணல்மேடு களில் அழகிய தாதுக்களைக் கொண்ட பூக்கள் உதிர்ந்து கிடக்கின்றன; அம்மணல்மேடுகளும், புது மணம் பரப்பிக் கொண்டிருக்கின்றன; மாவின் அரும்புகளைக் கோதிய நீலமணி யின் நிறத்தினை ஒத்த கருங்குயில்கள், இனிய தம் நாவினால் நாள்தோறும் சில கூறுவனபோலத் தம்முள் பிணங்கிய காதலர்களை அழைத்து, நடு நிலைமையில் நின்று அறம் கூறுவது போல, மாறி மாறிக் கூவுகின்றன; பூக்கள் நிறைந்த கோங்க மரத்தின் கிளைகளின் மீது வண்டுக் கூட்டம் அவற்றின் நுண்ணிய பூந்துகள்களை உதிர்க்கும்; அவ்வாறு உதிர்ந்த பூந்துகள்கள் அவ்விடத்திருந்த இலவம் பூக்கள்மீது கிடப்பது, பொன் விற்பவர் பவளச்செப்பில் பொன் பொடியைச் சொரிந்து வைத்தாற்போன்று தோன்றும்.

"பிரிவால் அடையும் துன்பங்களைப் புறக்கணித்துப் பிரிபவரும் பிரிந்திருக்க இயலாத இளவேனிற்பருவத்தையன்றோ தலைவர், தாம் மீண்டும் வரும் பருவமாய் உறுதிபடக் குறித்துச் சென்றார். அப்பருவம் தொடங்கியும் அவர் வாராமையால் மையுண்ட உன் கண்கள் நீர் வார்ந்து துளிப்ப வெறுப்புற்ற உள்ளத்தோடு வருந்துகின்றாய். நீ வருந்தற்க.

எதிர்த்து வரும் போரிலே பகைவரை வென்று அவரைக் கொன்றொழித்த வெற்றிச்சிறப்பு கொண்ட விற்படை பொருந்திய பெரிய கையினைக் கொண்டவன், திதியன். பொதியில்

மலைக்குரிய செல்வன்; அவன் பொன்னாலான தேரினையுடையவன்; அவனது இனிய வெற்றிமுரசினைப் போல ஒலிக்கும் மலைவீழ் அருவிகளைக் கொண்ட காட்டினைக் கடந்து பொருளீட்டச் சென்றுள்ள நம் தலைவர், 'இளையாளே! நீ உனக்கு இத்துன்பம் நேருமாறு செய்த என் உயிர் தன் தவற்றை உணர்ந்து வருந்தட்டும்' என, மென்மை வாய்ந்த இனிய சொற்களைக் கூறிக்கொண்டு விரைந்து வருவார். (எனவே, அதுகாறும் ஆற்றியிரு.)

கருத்து

தலைவர் குறித்துச் சென்ற இளவேனிற்பருவம் தொடங்கிவிட்டது; இனிய சொற்களைக் கூறிக்கொண்டு இன்றே வருவார்; வருந்தாதே.

விளக்கம்

"தலைவியே! தலைவர் தாம் திரும்பி வரும் காலமாய் இளவேனிற் காலத்தைக் குறித்துச் சென்றார். அது தொடங்கியும் அவர் வாராமையால், வெறுப்புற்ற மனத்தோடு வருந்தாதே! காடுகளைக் கடந்து சென்றவராகிய தலைவர், 'இளையோளே! பிரிந்திருக்கும் இத்துன்பத்தைச் செய்த என் உயிர் வருந்தட்டும்!' என்று இனியன கூறி, விரைந்து வருவார்" என்று சொல்லித் தோழி தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துகிறாள்.

உவமை

கோங்க மரத்தில் வண்டுகள் உதிர்த்த தாதுப்பொடிகள் இலவ மலரில் சிந்தியிருப்பது, பவளச்செப்பில் பொன்பொடிகளை இட்டு வைத்தாற்போலத் தோன்றுகிறது. (இலவ மலர் - பவளச் செப்பு; கோங்கின் தாது - பொற்பொடி).

குறிப்பு

திதியன் என்பான் பொதிய மலைக்குரியவன். போர் வீரனாவான் அவன்; சிறந்த தேர்ப்படையைக் கொண்டிருந்தான்.

சொற்பொருள்

1. கான்யாறு - காட்டாறு; கடும்புனல் - வேகம் மிக்க நீர்; சாஅய - சாய - வற்றிவிட.

2. அவிர் - விளங்குகின்ற; அறல் - ஆற்றுநீர் அற்ற காலத்து வரி வரியாய் அமையும் மணல்; விரவுதல் - பொருந்துதல்.
3. கயம் - குளம், மடு; நண்ணுதல் - கிட்டல், பொருந்தல்; காஞ்சி - ஒரு வகை மரம்.
4. பைந்தாது - பசிய பூந்துகள்; போதுமலி - பூக்கள் மிகவும் (உதிர்ந் துள்ள); எக்கர் - மணல்மேடு.
5. வதுவை நாற்றம் - புது மண நாற்றம் (இளவேனிற்பொழுதில் சோலை களில் உள்ள மணல்மேடுகளில் புதுமணக் காதலர்கள் விளையாடுத லால் அவர்களிடமிருந்து உதிர்ந்த பூக்களால் மணல் புதுமணம் பெறுகிறது); கஞலுதல் - மிகுதல்.
6. மாநனை - மா மரத்தின் தாது (மொட்டு); கொழுதிய - கோதிய; மணி - நீலமணி (ஒத்த); இருங்குயில் - கரிய குயில்.
7. படுநா - ஒலிக்கும் நா; விளியால் - கூவுதலால்; நடுநின்று - நடுநிலை மேவி; அல்கலும் - நாள்தோறும்.
8. உரைப்ப - கூறுவன; ஊழ்கொள்பு - (சில கூறுவனபோல) முறை கொண்டு. (ஊடினீர் எல்லாம் கூடுமின், என்று குயில் சாற்ற - சிலப்பதிகாரம்).
9. இனச்சிதர் - வண்டுக்கூட்டம் (சிதர் - வண்டு); உகுத்த - உதிர்த்த; இலவம் - இலவ மரம்.
10. கோங்கு - கோங்க மரம்; பகர்நர் - விற்போர்.
11. செப்பு - சிமிழ்; பொன் - பொற்பொடி.
12. இகழுநர் இகழா - இகழ்ந்து பிரிவோடும் பிரிய ஒண்ணாத (இயலாத); இளநாள் அமையம் - இளவேனிற்காலம்.
13. குறி - தாம் மீண்டு வரும் காலமாய்க் குறித்தது; செய்தோர் - உறுதிபடச் சொன்னார்; என - என்று.
14. பைதல் - துன்பம்; பனிவார்பு - நீர் வார்ந்து; உறைப்ப - துளிப்ப.
15. புலந்த - வருந்திய; நெஞ்சமொடு - உள்ளத்தோடு.
16. நோவல் - வருந்தாதே; குறுமகள் - இளையோளே; நோயியர் என் உயிர் - என் உயிர் வருந்தட்டும்.
17. வல்லே - விரைவாய்.
18. பொருநர் - பகைவர்.
19. செல்சமம் - எதிர்ந்து வரும் போரினை; கடந்த - வென்ற; கெழு - பொருந்திய; தட - பெரிய.

20. பொதியில் - பொதியமலை; செல்வன் - தலைவன்; பொலம் தேர் - பொன் தேர்; திதியன் - பொதியமலைத் தலைவன்.
21. இயம் - வாச்சியம்; கறங்கும் - ஒலிக்கும்.
22. கல்மிசை - மலை மேல் (உச்சி).

தோழி கூற்று

அகநானூறு 69 **உமட்டூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்**

திணை : பாலை

கூற்று

'பொருள்வயிற்பிரிந்து நீட்டித்தான், தலைமகன்' எனக் கவன்ற தலைமகட்கு, 'வருவர்' என்பதுபடச் சொல்லித் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

பொருள் தேடும்பொருட்டுப் பிரிந்த தலைவன் குறித்த காலத்தில் மீண்டு வராது காலம் நீட்டித்தான் என்று வருந்திய தலைவியிடம் தோழி, 'உன் மார்பில் துயிலும் இனிய துயிலை மறந்து சிறிதளவும் அங்கே காலம் நீட்டித்திரார்; விரைந்து வருவார்' எனக் கூறி ஆற்றுவித்தாள்.

ஆய்நலம் தொலைந்த மேனியும், மாமலர்த்
தகைவனப்பு இழந்த கண்ணும், வகைஇல
வண்ணம் வாடிய வரியும், நோக்கி,
ஆழல் ஆன்றிசின் நீயே. உரிதினின்
ஈதல் இன்பம் வெஃகி, மேவரச்
செய்பொருள் திறவர் ஆகி, புல்இலைப்
பராரை நெல்லி அம்புளித் திரள்காய்
கான மடமரைக் கணநிரை கவரும்
வேனில் அத்தம் என்னாது, ஏமுற்று,
விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்
பொன்புனை திகிரி திரிதரக் குறைத்த
அறைஇறந்து அகன்றனர் ஆயினும், எனையதூஉம்
நீடலர்– வாழி! தோழி! – ஆடுஇயல்

மடமயில் ஒழித்த பீலி வார்ந்து,தம்
சிலைமாண் வல்வில் சுற்றி, பலமாண்
அன்புடைக் கையர் அரண்பல நூறி,
நன்கலம் தரூஉம் வயவர் பெருமகன்
சுடர்மணிப் பெரும்பூண் ஆஅய் கானத்துத்
தலைநாள் அலரி நாறும்நின்
அலர்முலை ஆகத்து இன்துயில் மறந்தே.

தெளிவுரை

"அழகிய அணிகளை உடைய தலைவியே! தலைவன் பிரிவால் அழகு தொலைந்த மேனியையும், மலர் போன்று திகழ்ந்து வனப் பிழந்த கண்களையும், மழுங்கியுள்ள தேமலையும் நோக்கி அழாதே! அமைதியடைக.

"நம் தலைவர் ஈத்துவக்கும் இன்பம் பெறுதற்காகப் பொருள் தேடும் முயற்சி மேற்கொண்டு பிரிந்துள்ளார்.

"அவர் சென்ற வெம்மையான வழியில் நெல்லி மரத்தின் புளித்த காய்களை மான்கூட்டங்கள் உணவாய்க் கவர்ந்து தின்னும்.

"வேனிற்காலத்துக் கடுவழி என்று கருதாமல் வடநாட்டவரான மோரியர் தென்திசை வந்து, பகைவரை வெல்லத் தம் தேரின் சக்கரம் எளிதாய்ச் செல்வதற்காகக் குன்றுகளைப் பிளந்த கரடுமுரடான வழியில் தலைவர் சென்றுள்ளார்.

"ஆயினும், அம்பும் வில்லும் உடைய வீரர்கள் பகைவர் நாட்டை அழித்துக் கொணரும் அணிகலன்களைப் பாணர்களுக்குப் பரிசிலாய்த் தரும் ஆய் என்பானது நாட்டில் தலைநாளில் மலருகின்ற மலரின் மணம்போல நறுமணம் வீசுகின்ற பரந்த அடிப்பகுதியினைக் கொண்ட முலை பொருந்திய உன் மார்பில் துயிலும் இனிய தூக்கத்தை மறந்து அங்கேயே தங்கியிராமல் விரைவில் வருவார்."

கருத்து

மணக்கும் உன் மார்பில் இளவேனிற்காலத்தில் துயிலும் தூக்கத்தைத் தலைவர் மறக்க மாட்டார்; ஆதலின், விரைவில் வருவார்.

விளக்கம்

"தலைவி! அழகு தொலைந்த உடம்பினையும், மலர்போலத் திகழ்ந்து அழகிழந்த கண்களையும், அழகு வாடின திதலையை யும் நோக்கி நீ அழாதே! கடுவழி என்று கருதாமல், மோரியர் தம் தேரின் சக்கரம் தடையின்றிச் செல்வதற்காக மலைகளை உடைத்து வழியமைத்துக் கொண்டனர். அத்தகைய மலை களைக் கடந்து தலைவர் பொருளீட்டுதற்குச் சென்றுள்ளார்; ஆயினும், ஆய் என்பானின் காட்டில் தலைநாள் பூத்த அலரியைப் போல மணம் வீசுகின்ற அடி பரந்த உன் முலை பொருந்திய மார்பில் துயிலும் இனிய துயிலை மறந்து சில நாள்கூட அங்கே நீட்டித்திரார்; விரைந்து வருவார்" என்று கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

குறிப்பு

1. மோரியர், வடநாட்டில் பாடலிபுரத்திலிருந்து ஆண்ட மௌரிய மன்னர்கள். மோகூர் மன்னன் பழையன், கோசர்க்குப் பணியாமையால் கோசர்க்குப் படைத்துணையாய் மோரியர் வந்தனர்.

இம்மன்னர்கள், தென்திசையில் சென்றபோது வானளாவ உயர்ந்து நின்றதொரு மலையைத் தமது தேர்ச்சக்கரம் தடையின்றிச் செல்லும் பொருட்டு உடைத்து வழியமைத்துக்கொண்டனர் என்பது வரலாறு.

2. ஆய் அண்டிரன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். கேட்டார்க்கு இல்லையென்னாது ஈந்து சிறப்புற்றவன். கொங்கு நாட்டாரோடு போர் செய்து அவரைப் புறங்காட்டி ஓடச்செய்தவன்.

சொற்பொருள்

1. ஆய்நலம் - ஆராய்ந்து காண்பதற்குரிய அழகு; மாமலர் - கரிய மலர்.
2. தகைவனப்பு - சிறந்த அழகு; வகைஇல - முன்னைய இயல்பு இல்லாவாய.
3. வண்ணம் - அழகு; வரி - திதலை.
4. ஆழல் - அழாதே; ஆன்றிசின் - அமைக, அமைதி கொள்; உரிதினின் - ஈதலால்.
5. ஈதல் இன்பம் - ஈத்துவக்கும் இன்பம்; வெஃகி - விரும்பி; மேவர - அது வந்துற.

6. செய்பொருள் - ஈட்டும் பொருளில்; திறவர் - விருப்புள்ளவர்; புல்இலை - சிறிய இலை.
7. பராரை - பருத்த அடிமரம்; நெல்லி - நெல்லி மரத்தின்; அம்புளி - இனிய புளிப்பு; திரள்காய் - திரண்ட காய்.
8. கணநிரை - மிக்க கூட்டம்; கவரும் - தின்னும்.
9. வேனில் அத்தம் என்னாது - வெம்மை மிக்க நெறி என்று கருதாது; ஏமுற்று - மயக்கமுற்று.
10. இயல்தேர் - செல்லும் தேர்; மோரியர் - வடநாட்டு அரச மரபினர்.
11. பொன்புனை திகிரி - பொன்னால் செய்யப்பட்ட தேர்ச்சக்கரம்; திரிதர - (தடையின்றிச்) செல்ல, இயங்க.
12. குறைத்த அறை - வெட்டி (நெறியாக்கிய) குன்றம்; அகன்றன ராயினும் - கடந்து சென்றாராயினும்.
13. நீடலர் - காலம் தாழ்த்தி இருக்க மாட்டார்; ஆடுஇயல் - ஆடும் தன்மை வாய்ந்த.
14. மடமயில் - இளமயில்; ஒழித்த - நீக்கிய; பீலி - தோகை; வார்ந்து - உரித்து.
15. சிலைமாண் - ஓசை மிக்க; வல்வில் - வலிய வில்; பலமாண் - பல வகையாய் மாட்சியுற்ற.
16. அம்புடைக் கையர் - அம்புடைய கையராய்; அரண்பல - கோட்டைகள் பலவற்றை; நூறி - அழித்து.
17. நன்கலம் - நல்ல அணிகலன்கள்; தரூஉம் - கொண்டுவரும்; வயவர் பெருமகன் - வீரர்கள் பெருமானாகிய.
18. சுடர்மணி - சுடரும் மணிகள் (பதித்த); பெரும்பூண் - பெரிய பூணினை (அணிந்த); ஆஅய் - வள்ளல்களுள் ஒருவன்; கானத்து - காட்டில்.
19. தலைநாள் அலரி - அன்றலர்ந்த மலரென; நாறும் - மணக்கும்.
20. அலர்முலை - பரந்த முலை; ஆகம் - மார்பு; இன்துயில் - இனிய உறக்கம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 338 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழி, ‘இக்காலத்தே பிரிந்தார்’ எனத் தலைமகள் இரங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்தபோது, ‘இந்தப் பருவத்தில் பிரிந்துவிட்டாரே’ என்று தலைவி இரங்கிச் சொல்லியது.

அம்ம வாழி தோழி! சாரல்
இலையில் மலர்ந்த ஓங்குநிலை இலவம்
மலையுறு தீயின் சுரமுதல் தோன்றும்
பிரிவரும் காலையும் பிரிதல்
அரிதுவல் லுநர்நம் காத லோரே.

தெளிவுரை

“*மலைச்சாரலில் இலையின்றி மலர்ந்துள்ள உயர்ந்த தோற்றம் கொண்ட இலவ மரம், மலையில் பற்றி எரியும் தீப் போலத் தோற்றமளிக்கும். இந்த இளவேனிற்காலம் காதலர்கள் பிரிய முடியாத காலம். அத்தகைய காலத்திலும் பிரிந்து செல் வதில் நம் காதலர் பெரிதும் வல்லவராயிருக்கின்றார்.*”

கருத்து

பிரிந்திருப்போர் கூடும் காலமாகிய இளவேனில் காலத்தில் தலைவர் பிரிந்து சென்றுள்ளார். காலமல்லாக் காலத்தில் தலைவர் பிரிந்து சென்றுள்ளார்.

சொற்பொருள்

1. சாரல் – மலைச்சாரல்.
2. இலை இல் மலர்ந்த - இலையில்லாதனவாய் மலர்ந்த; இலவம் - இலவ மரம்.
3. மலையுறு தீயின் – மலையில் பற்றி எரியும் தீப்போல.
4. பிரிவரும் காலை - பிரிதற்கரியதான இளவேனிற்காலம்.
5. வல்லுநர் – திறமையவர்.

தோழி கூற்று

கலித்தொகை 27 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

தலைமகன் குறித்துப் பிரிந்த இளவேனில் வரவின்கண், 'எம்மையோ மறக்க; இக்காலத்து, இவ்வூரின்கண், தாம் விளையாடும் விளையாட்டும் மறந்தாரோ?' எனச் சொல்லி ஆற்றாளாய தலைவிக்குத் தோழி தலைவன் வரவுணர்ந்து, கழியுவகையால் கூறியது.

கூற்று விளக்கம்

இளவேனிற்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாய்க் கூறிச் சென்ற தலைவன், அப்பருவம் தொடங்கியும் வந்தானில்லை. தலைவி தோழியிடம், 'தலைவன் நம்மை மறந்துவிட்டானோ?' என்று சொல்லி ஆற்றாளாயினாள். அப்போது தலைவன் வந்துவிட்டதை அறிந்து தோழி மிக்க உவகையுடன் தலைவியிடத்தில் சொல்லியது.

தரவு

ஈதலில் குறைகாட்டாது, அறன்அறிந்து ஒழுகிய
தீதிலான் செல்வம்போல், தீங்கரை மரம்நந்தப்
பேதுறு மடமொழிப் பிணைஎழில் மான்நோக்கின்,
மாதரார் முறுவல்போல் மணமௌவல் முகைஊழ்ப்பக்
காதலர்ப் புணர்ந்தவர் கதுப்புப்போல், கழல்குபு
தாதொடும் தளிரொடும், தண்ணறல் தகைபெறப்
பேதையோன் வினைவாங்கப் பீடிலா அரசன்நாட்டு,
ஏதிலான் படைபோல, இறுத்தந்தது, இளவேனில்.

தாழிசை

நிலம்பூத்த மரமிசை நிமிர்புஆலும் குயில்எள்ள,
நலம்பூத்த நிறம்சாய; நம்மையோ மறந்தைக்க;
கலம்பூத்த அணியவர் காரிகை மகிழ்செய்யப்
புலம்பூத்துப் புகழ்புஆனாக் கூடலும் உள்ளார்கொல்?

கல்மிசை மயில்ஆலக் கறங்கிஊர் அலர்தூற்றத்
தொன்னலம் நனிசாய; நம்மையோ மறந்தைக்க

ஒன்னாதார்க் கடந்தடூஉம், உரவுநீர் மாகொன்ற,
வென்வேலான் குன்றின்மேல் விளையாட்டும் விரும்பார்கொல்?

மையெழில் மலர்உண்கண் மருவூட்டி மகிழ்கொள்ளப்
பொய்யினால் புரிவுண்ட நம்மையோ மறந்தைக்க;
தைஇய மகளிர்தம் ஆயமோடு அமர்ந்தாடும்
வையைவார் உயர்எக்கர் நுகர்ச்சியும் உள்ளார்கொல்?

எனவாங்கு–

சுரிதகம்

நோய்மலி நெஞ்சமோடு இனையல், தோழி!
நாம்இல்லாப் புலம்பாயின், நடுக்கம்செய் பொழுதாயின்,
காமவேள் விழவாயின், 'கலங்குவள் பெரிது'என
ஏமுறு கடுந்திண்தேர் கடவி,
நாம்அமர் காதலர் துணைதந்தார், விரைந்தே.

தெளிவுரை

"கொடுத்தலில் சிறிதும் குறைகாட்டாது, அறநெறிகளை நன்கு உணர்ந்து, யாருக்கும் தீமை செய்யாதவனுடைய செல்வம் தினந்தோறும் பெருகுவதுபோல ஆற்றின் இருகரைகளிலும் மரங்கள் தழைத்தன. கேட்போர் மயங்குமாறு பேசுகின்ற இனிய பேச்சினையும், அழகிய மான்பிணையின் மருண்ட பார்வையினையும் கொண்ட காதல் மகளிரின் பற்கள்போல மணமுள்ள முல்லை அரும்புகள் எங்ஙனும் அரும்பியுள்ளன. குளிர்ச்சி பெற்ற கருமணல் மகரந்தப் பொடிகளாலும் தளிர்களாலும் அழகு பெற்றுக் காதலரைக் கூடித் திளைத்த மகளிரின் கூந்தலைப்போல அழகு பெற்றுள்ளது. அறிவில்லாத அமைச்சனின் திறனற்ற செயலால் பெருமை அழிந்த அரசனுடைய நாட்டில் எளிதாய்ப் பகையரசன் படைகள் வந்து தங்குவது போல இளவேனிற்காலமும் வந்து சேர்ந்துள்ளது.

"நிலம் பொலிவு பெற விளங்கும் மரங்களில் உள்ள குயில்கள் நம்மை எள்ளி நகையாடுவனபோலக் கூவுகின்றன. நன்மை தரும் நமது நிறம் அழியுமாறு நம்மைத் தலைவர் மறந்து போய்விட்டாரோ? அழகிய அணிகலன்களை அணிந்த மங்கையரின் அழகு அவருக்கு மனமகிழ்ச்சியை ஊட்டும்போதாவது தம் அறிவு

பொலிவு பெற்று, எம்மிடம் பெற்ற புகழ் மிகுந்த கலவியை அவர் நினைக்க மாட்டாரோ? நினைந்தால் அவர் வருவாரன்றோ?

"நம் சாயல் நீங்கியமை கண்டு, நம்மைக் கேலி செய்வனபோல் மலைமேலிருந்து மயில்கள் ஆரவாரத்துடன் ஆடுகின்றன. ஊராரும் அலர் தூற்றுகின்றனர். நம் இயற்கைநலம் கெடும் படியாக நம் தலைவர் நம்மை மறந்துவிட்டாரோ? பகைவர்மேல் படையெடுத்து வெற்றி கொள்பவன், முருகன். கடல் நடுவே மாமரமாகி மறைந்து நின்ற சூரனை வெற்றிவேலால் எறிந்து கொன்றவன் அவன். திருப்பரங்குன்றின் மேல் அம்முருகனுக்கு நடைபெறும் விழாவினைக் காண அவர் விரும்பமாட்டாரா? விரும்பினால் வருவாரன்றோ?'

"மை தீட்டப்பட்ட மலர் போன்ற கண்களிலே மயக்கத்தை ஊட்டி, நாம் மகிழ்ச்சி கொள்ளும்படியாக நம்மைப் பொய்யாக மருவியவர் நம்மை மறந்துவிட்டாரோ? கோலம் செய்த மகளிர் தம் தோழியருடன் வையை ஆற்றின் உயர்ந்த இடுமணலிடத்தே அமர்ந்து ஆடுகின்ற நுகர்ச்சியையும் நினையாரோ? நினைக்கில் வருவாரன்றோ?" இவ்வாறு தலைவி தோழியிடம் சொல்லிக் கலங்கினாள்.

கலங்கிய தலைவியை நோக்கி, "துன்புற்ற மனத்தோடு விளங்கும் என் தலைவியே! நீ இனி வருந்த வேண்டியதில்லை. நாம் இல்லாத் தனிமையில் அவர் வருந்துவார்; காலமோ பிரிந்தார்க்கு நடுக்கம் செய்யும் இளவேனிற் காலம். இப்போது காமவேளுக்கு விழா நடைபெறும். ஆதலால், நம் காதலி 'நாம் இல்லாது பெரிதும் கலங்குவாள்' என்று எண்ணிய தலைவர், வலிமை கொண்ட தேரின் மீதேறி விரைந்து வந்துகொண்டிருக் கிறார். நாம் விரும்பும் காதலர் விரைவில் நமக்குத் துணையாய் இருப்பார்" என்று கூறித் தோழி தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

இளவேனிற்காலத்தில் திரும்பி வந்துவிடுவதாய்க் கூறிச் சென்ற தலைவன், அக்காலம் தொடங்கிய பின்னரும் வாராததால் தலைவி பெருந் துன்பத்தில் ஆழ்ந்து, தன் வருத்தத்தைத் தோழியிடம் சொல்கிறாள்.

கலங்கிய தலைவியை நோக்கித் தோழி, தலைவர் தமது வலிமை கொண்ட தேரின்மீதேறி விரைந்து வந்துகொண்டிருப்பதைக் கூறி மகிழ்விக்கிறாள்.

சொற்பொருள்

2. தீம் கரை - இனிய நீரைக் கொண்ட ஆற்றங்கரை; நந்த - தழைக்க.
3. பேதுறு - கேட்டார் அறிவை மயக்கும், மனத்தைப் பேதலிக்கச் செய்யும்; பிணை - மான் இணை.
4. மெளவல் - முல்லை; முகை - அரும்பு; ஊழ்ப்ப - மலர.
5. கதுப்பு - கூந்தல்; கழல்குபு - கழன்று உதிர்ந்த.
6. தாது - பூந்தாது; தண் - குளிர்ந்த; அறல் - கருமணல்; தகை - அழகு.
7. பேதை - அறிவில்லாதவன்; வினை - செயல்; பீடு - பெருமை.
8. ஏதிலான் - பகைவன்; இறுத்தந்தது - இறுத்தது - தங்கிற்று.
9. நிலம் பூத்த - நிலத்துக்கு அழகு தரும்; நிமிர்பு - மேட்டிமை, இறுமாப்பு; எள்ள - பரிகசிக்க.
10. நலம் பூத்த - நன்மை தரும் அழகு; சாய - அழகிய; மறந்தைக்க - மறந்தாரோ.
11. கலம் பூத்த - அணிகலன்களால் அழகு பெற்ற; காரிகை - அழகு.
12. புலம் பூத்த - அறிவு மிக்க; புகழ்பு ஆனா - புகழ்ச்சி மிக்க; கூடல் - கலவி; உள்ளார்கொல் - நினைக்க மாட்டாரோ?
13. கல் - மலை; கறங்கி - ஆரவாரித்து; அலர் தூற்ற - பழிச்சொல் கூற.
14. தொன்னலம் - இயற்கை அழகு.
15. ஒன்னாதார் - பகைவர்; அடூஉம் - அழிக்கும்; உரவு நீர் - கடல்; மா - மாமரம்; கொன்ற - அழித்த.
16. வென்வேலான் - முருகன்; குன்று - திருப்பரங்குன்றம்; மருவூட்டி - மருவுதல் ஊட்டி.
18. புரிவுண்ட - பிணிக்கப்பட்ட, அன்பு கொண்ட.
19. தைஇய - ஆடை அணிகளால் அணி செய்துகொண்ட; ஆயம் - கூட்டம்; அமர் - விருப்பம்.
20. வார் - நீர்; எக்கர் - மணல்மேடு.
22. நோய் மலி - துன்பம் மிகுந்த; இனையல் - வருந்தாதே.
23. புலம்பு - தனிமை.
24. காமவேள் - மன்மதன்.
25. கடவி - செலுத்தி.

தோழி கூற்று

கலித்தொகை 28 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

இளவேனில் வரவின்கண் ஆற்றாத தலைமகள் தூதுவிடக் கருதித் தோழி, 'அவர் பிரிந்திருத்தலை நம்மினுந் தாம் வல்லரல்லர்' எனச் சொல்லி வற்புறுத்தியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரியும்போது இளவேனிற்காலத்தில் வந்து விடுவதாய்க் கூறிச் சென்றான்; ஆனால், அவ்வாறு வரவில்லை; அதனால், ஆற்றாத வளாயின தலைவி, தலைவனுக்குத் தூதனுப்பக் கருதினாள். அப்போது தோழி தலைவியை நோக்கி, 'உன்னைவிடப் பிரிவைத் தாங்கிக்கொள்ளும் வலிமை இல்லாதவர், அவர். அதனால், இப்பொழுதே வந்து சேர்வார்; வருந்தாதே' என்று வற்புறுத்தித் தேறுதல் கூறியது.

தரவு

'பாடல்சால் சிறப்பின் சினையவும், சுனையவும்,
நாடினர் கொயல்வேண்டா, நயந்துதாம் கொடுப்பபோல்,
தோடுஅவிழ் கமழ்கண்ணி தையுபு புனைவார்கண்
தோடுஉறத் தாழ்ந்து, துறைதுறை கவின்பெறச்
செய்யவள் அணிஅகலத்து ஆரமொடு அணிகொள்பு,
தொய்யகம் தாழ்ந்த கதுப்புப்போல் துவர்மணல்
வையைவார் அவிர்அறல், இடைபோழும் பொழுதினான்;

தாழிசை

விரிந்துஆனா மலராயின், விளித்துஆலும் குயிலாயின்,
பிரிந்துஉள்ளார் அவராயின், பேதுறூஉம் பொழுதாயின்,
அரும்படர் அவலநோய் ஆற்றுவள் என்னாது
வருந்தநோய் மிகுமாயின், வணங்குஇறை அளிஎன்னோ?

புதலவை மலராயின், பொங்கரின் வண்டாயின்,
அயலதை அலராயின், அகன்றுஉள்ளார் அவராயின்,
மதலைஇல் நெஞ்சொடு மதன்இலள் என்னாது
நுதல்ஊரும் பசப்பாயின் – நுணங்குஇறை! அளிஎன்னோ?

தோயின அறலாயின், சுரும்பார்க்கும் சினையாயின்,
மாவின தளிராயின், மறந்துஉள்ளார் அவராயின்,
பூஎழில் இழந்தகண் புலம்புகொண்டு அமையாது
பாயல்நோய் மிகுமாயின் – பைந்தொடி! அளிஎன்னோ?'

எனவாங்கு–

சுரிதகம்

ஆயிழாய்! ஆங்கனம் உரையாதி; சேயார்க்கு
நாம்தூது மொழிந்தனம் விடல்வேண்டா; நம்மினும்
தாம்பிரிந்து உறைதல் ஆற்றலர்,
பரிந்துஎவன் செய்தி – வருகுவர் விரைந்தே?

தெளிவுரை

"இதழ் விரிந்து மணம் கமழும் தலைக்கண்ணியைச் சூடிய இளமகளிர் பாடுதற் சிறப்பமைந்த சுனைப்பூக்களையும் கிளைப் பூக்களையும் கொய்ய அலைந்துகொண்டிருக்க வேண்டாம். 'இதோ! மணமலர்களை நாங்களே வந்து உங்களுக்கு வழங்கு கின்றோம்' என்று சொல்வனபோல வையையாற்றின் இரு கரைகளிலும் மரக்கிளைகள் தொகுதிதொகுதியாய்த் தாழ்ந்து மலர்க்கொத்துகளுடன் துறைதோறும் அழகாக விளங்கு கின்றன. ஆற்றின் இடையிடையே தோன்றும் செந்நிறமான மணல்திட்டுகள், கன்னியர் தம் தலைகளில் தலைக்கோலம் சூடியிருப்பது போன்று காட்சியளிக்கின்றன. தொய்யில் எழுதப் பட்ட திருமகளின் மார்பிலே விளங்கும் முத்தாரம்போல ஆற்றுநீர், அறல் மணலை ஊடறுத்துச் சென்றுகொண்டிருக் கிறது. இத்தகைய பொலிவுடன் இளவேனிற்பொழுது வந்து விட்டது.

"பணிவுடன் விளங்கும் முன்கையைக் கொண்ட தோழியே! மலர்கள் பூத்து இதழ் விரிந்து நிற்கின்றன; குயில்கள் காதலன் புடன் தம் இணையைக் கூவி அழைக்கின்றன. நம் தலைவர் மட்டும் இவ்வேளையிலும் நம்மைப் பிரிந்திருக்கின்றார். காமம், தனித்திருப்போரை மயக்கும் காலம் இது. இவளால் இந் நோயைப் பொறுத்துக் கொள்ள இயலுமோ அன்றி இறந்து

படுவளோ என்று நீயும் வருந்தியிருக்கிறாய். இந்நிலையில் அவர் எனக்குச் செய்யும் அருள் இதுதானோ?' என்று தலைவி இளவேனில் தொடங்கியதை அறிந்து கலங்குகிறாள்.

"நுண்ணிய வளையல் அணிந்துள்ள தோழியே! புதர்கள் மலர்களால் நிறைந்துள்ளன. சோலைகளில் வண்டுகள் மலர் களை ஊதுகின்றன; ஊரார் அலர் தூற்றுகின்றனர். காதலரோ தொலைவிலே உள்ளார். பற்றுக்கோடு இல்லாது வலிமையற்று இருக்கிறாள் என்று கருதாது நெற்றியிலே பசப்பும் படர்கின்றது. அவர் எனக்குச் செய்யும் அருள் இதுதானோ?'

"பசிய வளையல்களை அணிந்த தோழியே! ஆற்றிலே கருமணல் தோய்ந்துள்ளது. கிளைகளில் வண்டினங்கள் ஆரவாரம் செய்கின்றன; மாமரங்கள் இளந்தளிர்களைத் தோற்று விக்கின்றன; அவரோ என்னை மறந்துள்ளார். பூப்போன்ற என் கண்கள் அழகை இழந்து தனிமைத் துன்பத்தால் வருந்தியுள்ளன; என் காமநோயோ மிகுதியாகின்றது. அவர் எனக்குச் செய்யும் அருள் இதுதானோ?' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

இவற்றைக் கேட்கப் பொறாத தோழி, "ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்த தலைவியே! நீ இவ்வாறு பேசாதே. தொலைவிலுள்ள தலைவருக்கு நம் வருத்தத்தைக் கூறித் தூது எதுவுமே அனுப்ப வேண்டியதில்லை. அவர் நம்மினும் பிரிவைப் பொறுத்திட இயலாதவர்; நீ வருந்தாதே; அவர் விரைவில் வந்து சேர்வார்' " என்று சொல்லித் தலைவியை ஆற்றுவிக்கிறாள்.

கருத்து

தலைவிக்குப் பிரிவுத்துன்பம் மிகுகிறது; நெற்றியில் பசலை படர்கிறது. அவள் உறக்கமின்றி வருந்துகிறாள். தலைவன் உரிய காலத்தில் வந்து சேராமையால் அவள் தான் இறந்துபட நேருமோ என அஞ்சுகிறாள். அவள் நிலை கண்ட தோழி, தலைவியிடம், 'நீ இவ்வாறு வருந்தி உரையாதே! இளவேனிற்பொழுது தொடங்கிவிட்டது; அவர் விரைவில் வந்துவிடுவார்' என்று கூறித் தேற்றுகிறாள்.

சொற்பொருள்

1. **சால் சிறப்பு - பாடுதற்கு அமைந்த பெரிய சிறப்பு.**

3. தோடு அவிழ் - இதழ் விரிந்த; கண்ணி - மாலை; தையுபு - தொடுத்து.
4. தோடுஉற - தொகுதியாய்.
5. செய்யவள் - திருமகள்; ஆரம் - முத்தாரம்.
6. தொய்யகம் - தலைக்கோலம் என்னும் அணி; துவர்மணல் - சிவந்த மணல் திட்டு.
7. வையை வார் - வையை ஆற்றில் படிந்துள்ள; அவிர் அறல் - ஒளி வீசும் கருமணல்; இடைபோழும் - இடையிலே பிளந்து செல்லும்.
8. ஆலும் - கூவும்.
9. பேதுறுதல் - அறிவு கலங்குதல், மயங்குதல்.
10. அவல நோய் - துயர்மிகும் காமநோய்.
11. இறை - முன்கை.
12. புதலவை - புதர்களிடத்தில்; பொங்கர் - சோலை.
13. அயல் - அயலார்.
14. மதலை - சார்ந்து நிற்பதற்குரியது, பற்றுக்கோடு; மதன் - வலிமை, ஆற்றல்.
15. நுணங்குதல் - துவளல், நுண்மை; இறை - முன்கை.
16. சுரும்பு - வண்டு; ஆர்க்கும் - ஒலிக்கும், ஆரவாரிக்கும்.
17. மா - மாமரம்.
18. புலம்பு - தனிமை.
19. பாயல் - படுக்கை.
21. சேய்மை - தொலைவு.
23. ஆற்றலர் - ஆற்றல் இல்லாதவர்.
24. பரிந்து - வருந்தி.

தோழி கூற்று

கலித்தொகை 29 **பாலைபாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பருவவரவின்கண் ஆற்றாத தலைமகளைத் தோழி வற்புறுப்ப, வன்புறை எதிரழிந்தாட்குத் தோழி, அவன் வரவுணர்ந்து கழியுவகையாற் கூறியது.

(வன்புறை எதிர் அழிதல் - வற்புறுத்தியதை மறுத்து வருந்துதல்.)

கூற்று விளக்கம்

தலைவன் இளவேனிற்பருவத்தில் வாராதது கண்டு ஆற்றாள் ஆயின தலைவியிடம், 'அவன் வருவன்' என்று தோழி வற்புறுத்திச் சொல்லி வருந்தாதிருக்குமாறு கூறினாள். தலைவி தோழியின் பேச்சினை மறுத்துரைத்தாள். அச்சமயத்தில் தலைவன் வந்துவிடவே தோழி பெருமகிழ்ச்சியோடு கூறியது.

தரவு

'தொல்லெழில் வரைத்தன்றி வயவுநோய் நலிதலின்,
அல்லாந்தார் அலவுற ஈன்றவள் கிடக்கைபோல்,
பல்பயம் உதவிய பசுமைதீர் அகல்ஞாலம்
புல்லிய புனிறுஒரீஇப் புதுநலம் ஏர்தர,
வளையவர் வண்டல்போல், வார்மணல் வடுக்கொள,
இளையவர் ஐம்பால்போல், எக்கர்போழ்ந்து அறல்வார,
மாஈன்ற தளிர்மிசை, மாயவள் திதலைபோல்,
ஆயிதழ்ப் பன்மலர் ஐயகொங்கு உறைத்தர,
மேதக இளவேனில் இறுத்தந்த பொழுதின்கண்;

தாழிசை

சேயார்கண் சென்றஎன் நெஞ்சினைச் சின்மொழி!
நீகூறும் வரைத்தன்றி, நிறுப்பென்மன்? கைநீவி,
வாய்விரிபு பனிஏற்ற விரவுப்பன் மலர்தீண்டி,
நோய்சேர்ந்த வைகலான், வாடைவந்து அலைத்தரூஉம்;

போழ்துஉள்ளார் துறந்தார்கண் புரிவாடும் கொள்கையைச்
சூழ்புஆங்கே, சுடரிழாய், கரப்பென்மன்! கைநீவி?

வீழ்கதிர் விடுத்தபூ விருந்துண்ணும் இருந்தும்பி
யாழ்கொண்ட இமிழிசை இயன்மாலை அலைத்தரூஉம்;

தொடிநிலை நெகிழ்த்தார்கண் தோயும்என் ஆருயிர்,
வடுநீங்கு கிளவியாய்! வலிப்பென்மன்? வலிப்பவும்,
நெடுநிலாத் திறந்துண்ண நிரைஇதழ் வாய்விட்ட
கடிமலர் கமழ்நாற்றம், கங்குல்வந்து அலைத்தரூஉம்;

எனவாங்கு–

சுரிதகம்

வருந்தினை வதிந்தநின் வளைநீங்கச் சேய்நாட்டுப்
பிரிந்துசெய் பொருட்பிணி பின்நோக்காது ஏகி,நம்
அருந்துயர் களைஞர் வந்தனர் –
திருந்துஎயிறு இலங்கும்நின் தேமொழி படர்ந்தே.

தெளிவுரை

தன் இளமைக்காலத்து அழகு குன்றுமாறு, கருவுற்ற பெண்ணொருத்தியைப் பேறுகால நோய் வருத்திற்று. உறவினர்கள் கவலையுற்றனர். அவர்கள் வருத்தமெலாம் நீங்குமாறு அப் பெண் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். (மசக்கை நோயால் வருந்திய பெண், உற்றார் மகிழ ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்து மகிழ்வூட்டியதுபோல,) பசுமை நீங்கியிருந்த வயல்கள் இப்போது பல்வேறு விளைபொருள்களை ஈந்து எங்கும் புதுமை பொங்குமாறு பல்வகைப் பயன்களைத் தந்து காட்சியளிக்கின்றன. வளையலணிந்த இளமகளிர் வண்டலிழைத்து விளையாடியது போல, ஆற்று மணலில் நீர் சென்ற வடுக்கள் (பாதைகள்) தோன்றுகின்றன. இளம்பெண்கள் தலைவாரிக்கொள்ளும் போது வகிடு எடுத்திருப்பதுபோலக் கருமணல் மேடுகளினூடே நீர் அறுத்துக்கொண்டு ஓடுகிறது. (கூந்தல், கருமணல்; வகிடு, அம்மணலை ஊடறுத்துச் செல்லும் நீர்). மாமை நிறம் கொண்ட பெண்களின் மேனியில் உள்ள தேமல்போல, மாந்தளிர்மீது பல்வகை மலர்களின் மகரந்தத் தூள்கள் உதிர்ந்து கிடக்கின்றன. இவ்வாறாய் இளவேனில் தோற்றம் கொண்டுள்ளது. அது வேளை தலைவி தோழியிடம் கூறுகிறாள்:

"சுருங்கப் பேசும் திறன் கொண்ட தோழி! தொலை நாட்டுக்குச் சென்றவரை எண்ணி வருந்தும் என் மனத்தை நீ சொல்வதைவிட மிகுதியாகவே நான் கட்டுப்படுத்துகிறேன். பிரிந்தோரை வருத்தும் இளவேனிற்காலம் இது. மாலை நேரத்தில் பூத்திருக்கும் பல்வகை மலர்களிலும் படிந்திருக்கும் பனித்துளிகளில் படர்ந்து வந்து வீசுகின்ற வாடைக்காற்று என்னைத் துன்புறுத்தி என் கட்டுப்பாட்டினை உடைக்கிறதே! நான் என்ன செய்வேன்?

"ஒளிவீசும் அணிகலன்களைக் கொண்ட தோழியே! இளவேனிற் காலத்தை நினையாமல் என்னையும் மறந்து வாழ்கின்றார், தலைவர். நான் மெலிவதைப் பிறர் அறியா வண்ணம் மறைக்க வேண்டும் என்று பெரிதும் முயல்கிறேன். மலர்களில் தேனை உண்ணவரும் வண்டுகளின் யாழிசை போன்ற ஆரவாரிப்பைக் கொண்ட மாலைக் காலம் தோன்றி என் முயற்சியைத் தோல்வியுறச் செய்கிறதே! நான் என்ன செய்வேன்?

"குற்றமற்ற சொற்களைப் பேசும் என் இனிய தோழியே! காதல் தந்து என் கைவளை நெகிழ்த்தவரை என் உயிர் நாடுகின்றது. அந்த உணர்வைத் தடுக்க முயல்கின்றேன். இரவு நேரத்தில், நிலவு பொழியும் பொழுதில், வண்டுகள் மலர்களின் வாயைத் திறத்தலால் இதழ் விரிந்து எழும் மணம் என்னைத் துன்புறுத்தி என் முயற்சியைத் தடுக்கிறதே! நான் என்ன செய்வேன்?" என்று தலைவி கூற அதனைக் கேட்ட தோழி கூறுகிறாள்:

"தலைவியே! நீ இவ்வாறெல்லாம் கூறி வருந்துகின்றாய். உன் கை வளைகள் கழலுமாறு தலைவர் தொலைதூரத்திலுள்ள நாட்டுக்குப் பின்விளைவை எண்ணாமல் பிரிந்து சென்றவர் தாம் என்றாலும் தம் பொருள் தேடும் முயற்சியை மேலும் தொடராமல் நிறுத்தி விட்டார். திருத்தமான உன் எயிற்றிடையே தோன்றும் தேன் போன்ற மொழிகளை நினைந்து உன் துன்பத்தினை நீக்க இதோ வந்துவிட்டார். இனியும் நீ துன்புறாது மகிழ்க" என்று கூறித் தோழி தலைவியை மகிழ்விக்கிறாள்.

கருத்து

"தலைவன் வாராதிருப்பதைப் பொறுத்திருக்கவே நினைக்கிறேன். ஆனாலும், பனித்துளிகளைச் சுமந்து பல மலர்களின்மீது படர்ந்து வரும் வாடைக்காற்றும், பூக்களில் தேனுண்டு வண்டுகள் ஆரவாரம் செய்யும் மாலைக்காலமும், நெடிய நிலவைக் கொண்ட இரவுக்காலமும் என்னைப் மிகவும் வருத்துகின்றனவே. என் செய்வேன்?'' எனக் கூறித் தலைவி வருந்துகிறாள். தலைவன் திரும்பிவிட்டான் என்னும் செய்தியை அவளிடம் கூறித் தோழி தேற்றுகிறாள்.

குறிப்பு

தலைவி தன் மனத்தைக் கட்டுப்படுத்தியதும், உடல் மெலிவைப் பிறர்க்குத் தெரியாமல் மறைத்ததும், உணர்வை மீட்டதும் தான் ஆற்றியிருக்க அவள் மேற்கொண்ட முயற்சிகள். வாடையும், வண்டுகளின் ஆரவாரிப்பும், மலர் மணமும் அவளை ஆற்றியிருக்க இயலாதவாறு செய்கின்றன. இதனைக் கூறி அவள் வருந்துவதே வன்புறை எதிரழிதல்.

சொற்பொருள்

1. தொல்எழில் - முன்னைப் பேரழகு; வரைத்தன்றி - அளவின்றி, எல்லையின்றி; வயவு நோய் - பேறு கால வலி.
2. அல்லாந்தார் - கவலையுற்ற உறவினர்; அலவு - வருத்தம், மனத்தடுமாற்றம்.
3. பயம் - பயன்; ஞாலம் - உலகம்.
4. புல்லிய - பொருந்திய; புனிறு - தூய்மைக் குறைபாடு; ஒரீஇ - நீங்கி; ஏர் - அழகு.
5. வளையவர் - வளையலணிந்த பெண்கள்; வண்டல் - மகளிர் விளையாட்டு.
6. ஐம்பால் - மகளிர் தம் கூந்தலை ஐவகையாய்ப் புனைதல்; எக்கர் - மணல்மேடு; போழ்தல் - பிளத்தல்.
7. மா - மாமரம்; மாயவள் - மாமை நிறம் கொண்டவள்; திதலை - தேமல்.
8. ஐய - வியக்கத்தக்க; கொங்கு - தாது; உறைத்தர - உதிர்ந்திருக்க.
9. மேதக - பெருமை பொருந்திய; இறுத்தந்தது - வந்துவிட்டது.
10. சேயார் - நெடுந்தொலைவில் இருப்பவர்.
11. கை நீவி - கை கடந்து.
12. விரிபு - விரிந்து; விரவு - விரவிக் கிடக்கும்; பன் - பல.

13. வைகல் - பொழுது; அலைத் தரூஉம் - வருத்தத்தைத் தரும்.
14. போழ்து - பொழுது, இளவேனிற்காலம்; புரிவாடும் கொள்கை - மேனி வாடும் கோட்பாடு.
15. கரப்பென் - மறைப்பேன்.
16. விடுத்தபூ - அலர்த்தின பூ.
17. இமிழ்தல் - ஒலித்தல்.
18. தோயும் - பொருந்தும்.
19. வடு - குற்றம்; கிளவி - பேச்சு; வலிப்பென் - தடுத்து நிறுத்துவன்.
20. வாய்விட்ட - மலர்ந்த.
21. கடி - மணம்.
25. களைஞர் - நீக்குதற்பொருட்டு.
26. எயிறு - பல்; தேமொழி- இனிய பேச்சு; படர்தல் - நினைத்தல்.

தோழி கூற்று

கலித்தொகை 32 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

காலவரவு கண்டு ஆற்றாளாயினவிடத்துத் தோழி, காலத்தை நோக்கி, 'அழகிதாகச் செய்தாய் வந்து' எனச் சொல்லி, தலைமகளுக்கு, 'நம் காதலர் வருகின்றார்' எனச் சொல்லி வந்த தூது காண் இது; நாம் விருந்தயர்கம்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் வருவதாய்ச் சொல்லிச் சென்ற இளவேனிற்பருவம் தொடங்கியது; ஆயினும் அவன் வரவில்லை. தலைவி ஆற்றாளாகி வருந்துகின்றாள். தோழியோ, "இந்த இளவேனிற்காலம் உலகை அழகுபடுத்த வந்துள்ளது. அதே வேளை இது, தான் விரைவில் வரவிருப்பதை உனக்கு எடுத்துரைக்கத் தலைவன் அனுப்பிய தூதும் ஆகும். இனிய செய்தியைக் கூற வந்துள்ள இந்த இளவேனிலுக்கு நாம் விருந்து கொடுப்போம்" என்று, தலைவியை ஆற்றுவிக்கச் சொல்லியது.

எஃகுஇடை தொட்ட,கார்க் கவின்பெற்ற ஐம்பால்போல்—
மையற விளங்கிய, துவர்மணல் அது;அது
ஐதாக நெறித்தன்ன அறல்அவிர் நீள்ஐம்பால்
அணிநகை இடையிட்ட ஈகைஅம் கண்ணிபோல்
பிணிநெகிழ் அலர்வேங்கை விரிந்தபூ நெறிகொளத்
துணிநீரால், தூய்மதி நாளால், அணிபெற—
ஈன்றவள் திதலைபோல் ஈர்பெய்யும் தளிரொடும்,
ஆன்றவர் அடக்கம்போல், அலர்செல்லாச் சினையொடும்,
வல்லவர் யாழ்போல, வண்டுஆர்க்கும் புதலொடும்,
நல்லவர் நுடக்கம்போல், நயம்வந்த கொம்பொடும்,
உணர்ந்தவர் ஈகைபோல், இணர்ஊழ்த்த மரத்தொடும்;
புணர்ந்தவர் முயக்கம்போல், புரிவுற்ற கொடியொடும்—
நயந்தார்க்கோ நல்லைமன், இளவேனில் எம்போல!
பசந்தவர் பைதல்நோய், பகைஎனத் தணித்து,நம்
இன்னுயிர் செய்யும் மருந்தாகிப் பின்னிய
காதலர்— எயிறுஏய்க்கும் தண்அருவி நறுமுல்லைப்
போதுஆரக் கொள்ளும் கமழ்குரற்கு என்னும்—
தூதுவந் தன்றே, தோழி!
துயர்அறு கிளவியொடு; அயர்ந்திகம் விருந்தே.

தெளிவுரை

கத்தரியால் ஒழுங்காய்க் கத்தரிக்கப்பட்டு, கார்மேகத்தின் அழகினைப் பெற்றுள்ள மகளிரின் கூந்தலைப் போல், நீர் வடிந்து போன ஆற்றில் நெளிநெளியான கருமணல் படிந்து கிடக்கிறது. ஐம்பாலாய் வகுக்கப்பட்ட அழகிய கருங்கூந்தலில் ஒளி படைத்த அணிகலன்களை அணிவித்து, அவற்றினிடையே பொன்னால் செய்த அழகிய கண்ணியை இட்டு வைத்தாற்போல, ஆற்றின் கருமணல் மீது பல்வகையான பூக்களுடன் வேங்கைப்பூவும் கலந்து பரவிக் கிடக்கின்றது.

புதல்வனை ஈன்றவளது வயிற்றின்மேலுள்ள தேமல்போல நெய்ப்பினைக் கொண்ட பளபளப்பான தளிர்கள் மரங்களில் துளிர்த்துள்ளன; அறிவாற் பெரியவர் தம் காரியம் முடிதற்குரிய காலம் வரும்வரை காத்திருப்பதுபோலக் கிளைகளில் அரும்புகள் மலரக் காத்துக்கொண்டிருக்கின்றன; மீட்டவல்லவரது யாழிசை

போல, புதர்களில் வண்டுகள் ஆரவாரிக்கின்றன; ஆடல்வல்ல மகளிர்தம் கூத்துப் போல, மரக்கிளைகள் அழகியவாய் அசைந்து கொண்டிருக்கின்றன; ஈகையின் சிறப்பை உணர்ந்தவர் அள்ளி அள்ளிக் கொடுப்பதுபோல மரங்கள் மலர்களைக் கொத்துக் கொத்தாய் மலரச்செய்கின்றன; அன்பு கொண்ட காதலர் தம்முள் கூடித் தழுவியிருத்தல்போல, கொடிகள் எல்லாம் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இங்ஙனம் காட்சி யளிக்கும் இளவேனிற் காலத்தைக் காணுகின்ற தலைவி, "இளவேனிலே! எம்மை விரும்பியோர்க்கு யாம் நல்லோரா யிருத்தல்போல, நீயும் உன் வரவை விரும்பியிருந்தார்க்கு நல்லையாக உள்ளாயோ" எனத் தலைவனைப் பிரிந்துள்ள தனக்கு அப்பருவம் துன்பம் தருவதாய் வருந்திக் கூறுகிறாள்.

இவ்வாறு, தலைவி வருந்திக் கூறியதைக் கேட்ட தோழி, "என் தலைவியே! இளவேனிற் காலத்தே, குளிர்ந்த அருவிகளின் கரைகளிலே, மகளிர் பல்லினை ஒத்து முல்லைப் பூக்கள் அரும்பி யுள்ளன. அவை மகளிரிடம், 'எம்மைக் கொய்து மணங்கமழும் உம் கூந்தலில் அணிந்துகொள்ளுங்கள்' என்று கூறுவனபோல உள்ளன. அதுவுமன்றி பசந்துவரும் காமநோயைத் தமக்குப் பகை என்று கருதி ஓட்டுபவர், நம் தலைவர். நம் இனிய உயிரை வாழ்விக்கும் மருந்தினைப்போல, இனிய மொழிகளைக் கூறிக் கொண்டே, அவரது தூதாய் இளவேனில் வந்துள்ளது. ஆதலின், இந்த இளவேனிலுக்கு விருந்து படைப்போம், வா" என்றாள்.

கருத்து

தலைவன் வாராததனால் வருந்தியிருக்கும் தலைவியிடம் தோழி, "தலைவன் வருகையை அறிவிக்கும் தூதுவனாய் இளவேனில் தொடங்கி யுள்ளது. நற்செய்தியினைக் கொண்டுவந்துள்ள இத்தூதுவனுக்கு விருந்து படைத்து நன்றி சொல்வோம், வா" என்று கூறி ஆற்றுவிக்கிறாள்.

சொற்பொருள்

1. எஃகு - எஃகினாலான கத்தரி; கார் - கார்மேகம்; ஐம்பால் - ஐவகையாய்ப் புனைதலுடைய மகளிர் கூந்தல்.
2. மை - மேகம்; மை அற - மேகம் மழை பெய்யாமையினாலே; துவர் மணல் - புலர்ந்த மணல்.

3. ஐது - அழகு; நெறித்தன்ன - பிடித்துவிட்டாற் போன்ற.
4. ஈகை - பொன்; அம் - அழகிய; கண்ணி - தலைமேல் சூடப்படும் மாலை.
5. பிணி நெகிழ் - முறுக்கு அவிழ்ந்து; அலர் - மலர்ந்த; நெறி - மணம்.
6. துணிநீர் - தெளிந்த நீர்; தூய்மதி நாள் - தூய மதியைக் கொண்ட நாள்.
7. ஈன்றவள் - மகவைப் பெற்றவள்; திதலை - தேமல்; ஈர் பெய்யும் - நெய்ப்பினைக் கொண்ட (பளபளப்பான).
8. ஆன்றவர் - அறிவிற்சிறந்தவர்; அலர் செல்லா - மலர்தல் இல்லாத.
9. வல்லவர் - (யாழ் மீட்டும்) வல்லமை கொண்டவர்; ஆர்க்கும் - ஆரவாரிக்கும்; புதல் - புதர்.
10. நல்லவர் - (ஆடல் வல்ல) மகளிர்; நுடக்கம் - ஆட்டம், கூத்து; நயம் வந்த - விரும்பத்தக்க.
11. உணர்ந்தவர் - ஈகையின் சிறப்பை உணர்ந்தவர், பொருள் நிலையாமையை உணர்ந்தவர்; இணர் - பூங்கொத்து; ஊழ்த்த - ஈன்ற, மலர்வித்த.
12. புணர்ந்தவர் - (காதலால்) கூடியவர்; முயக்கம் - தழுவுதல்; புரிவுற்ற - பின்னிப்பிணைந்த.
13. நயந்தார் - விரும்பியோர்; நல்லை - நல்லதாய் இருக்கிறாய்.
14. பசந்தவர் - பசலை நோய் உற்றவர்; பைதல் நோய் - வருத்தம் தரும் நோய், காமநோய்.
16. எயிறு - பல்; தண் அருவி - குளிர்ந்த அருவி.
17. ஆர - மிக; குரல் - கூந்தல்.
18. வந்தன்று - வந்துள்ளது.
19. கிளவி - பேச்சு, மொழி; அயர்ந்தீகம் - விருந்து ஏற்றுப் போற்றுவோம்.

தோழி கூற்று

கலித்தொகை 33 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பருவ வரவின்கண் வன்புறை எதிரழிந்து ஆற்றாளாயினாளைத் தோழி தலைமகனது வரவுணர்ந்து கூறி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

பிரிந்த தலைவன் 'வருவேன்' என்று கூறிச்சென்ற இளவேனிற்பருவம் தொடங்கியது. அவன் வாராததால் தலைவி ஆற்றாளாயினள். அவன் 'வருவன்' என்று தோழி வற்புறுத்திக் கூறியும் தலைவி அவள் கூற்றை ஏற்காது மறுத்துக் கூறினாள். அப்போது தலைவன் வரவுணர்ந்து தோழி அதனைத் தலைவியிடம் கூறி ஆற்றுவித்தது.

தரவு

'வீறுசால் ஞாலத்து வியல்அணி காணிய
யாறுகண் விழித்தபோல், கயம்நந்திக் கவின்பெற,
மணிபுரை வயங்கலுள் துப்புஎறிந் தவைபோலப்
பிணிவிடும் முருக்கிதழ் அணிகயத்து உதிர்ந்துஉகத்
துணிகயம் நிழல்நோக்கித் துதைபுஉடன் வண்டுஆர்ப்ப,
மணிபோல அரும்புஊழ்த்து, மரமெல்லாம் அலர்வேயக்
காதலர்ப் புணர்ந்தவர் கவவுக்கை நெகிழாது,
தாதுஅவிழ் வேனிலோ வந்தன்று; வாரார்,நம்
போதுஎழில் உண்கண் புலம்ப நீத்தவர்!

தாழிசை

எரிஉரு உறழ, இலவம் மலரப்,
பொரிஉரு உறழப் புன்குபூ உதிர,
புதுமலர்க் கோங்கம் பொன்னெனத் தாதுஊழ்ப்ப,
தமியார்ப் புறத்துஎறிந்து எள்ளி, முனியவந்து,
ஆர்ப்பது போலும் பொழுது;எண்ணி அந்நலம்
போர்ப்பது போலும் பசப்பு.

நொந்து நகுவனபோல் நந்தின, கொம்பு;நைந்துள்ளி
உகுவது போலும்,என் நெஞ்சு; எள்ளித்

தொகுபுஉடன் ஆடுவ போலும்,மயில்; கையில்
உகுவன போலும், வளை;என் கண்போல்
இகுபுஅறல் வாரும் பருவத்தும் வாரார்;
மிகுவது போலும்,இந் நோய்.

நரம்பின் தீங்குரல் நிறுக்கும் குழல்போல்
இரங்குஇசை மிஞிறொடு தும்பிதாது ஊதத்
தூதுஅவர் விடுதரார் துறப்பார்கொல்?; நோதக
இருங்குயில் ஆலும் அரோ'

எனவாங்கு–

சுரிதகம்

புரிந்துநீ எள்ளும் குயிலையும், அவரையும் புலவாதி.
நீல்இதழ் உண்கணாய்! நெறிகூந்தல் பிணிவிட,
நாள்வரை நிறுத்துத்தாம் சொல்லிய பொய்அன்றி,
மாலைதாழ் வியன்மார்பர் துணைதந்தார்–
கால்உறழ் கடுந்திண்தேர் கடவினர் விரைந்தே.

தெளிவுரை

"பெருமை பொருந்திய உலகெங்கும் விரிந்துள்ள அழகைக் காண, ஆறு கண் விழித்துப் பார்ப்பதுபோல, குளங்கள் பூக்களால் நிறைந்து அழகு பெற்றுள்ளன. பளிங்கு ஒக்கும் கண்ணாடிக்குள் பவளங்கள் அழுத்தப்பெற்றுத் தோன்றினாற் போல, அரும்பிவிழும் முருக்கம்பூவின் இதழ்கள் குளத்தில் விழுந்து கிடக்கின்றன. தெளிந்த நீர் கொண்ட குளங்களின் கரைகளில் மரங்கள் நிறைந்திருக்கின்றன; அம்மரங்களில் குலுங்கும் மலர்களின் நிழல்கள் நீரினுள் தோன்றுகின்றன; அவற்றைப் புதியனவாய்ப் பூத்துள்ள பூக்கள் என்று மயங்கிய வண்டினம், நீரைச் சூழ்ந்து வட்டமிட்டு ஆரவாரித்துக் கொண்டுள்ளன; அரும்புகள் அலர்ந்து மரங்களெல்லாம் பூக்களால் வேயப்பட்டுள்ளனபோலக் காட்சியளிக்கின்றன. ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டுள்ள கைகள் நெகிழ்ந்திடாமல் காதலர் பற்றிக் கொண்டுள்ளனர். இவ்வாறு, இளவேனில் பொழுது தோன்றியுள்ளதாயினும் பிரிந்த என் காதலர் இன்னும் வந்து சேர்ந்திலர். மலர் போன்ற அழகுடன் விளங்கும் மைதீட்டப்

பட்ட என் கண்கள் அழுது புலம்புமாறு அவர் என்னை விட்டுப் பிரிந்துள்ளாரே" எனத் தலைவி இளவேனிற்பொழுது தொடங் கியது கண்டு காதலன் பிரிவை ஆற்ற இயலாதவளாய் வருந்தி யிருக்கிறாள்.

இவ்வாறு வருந்தியிருக்கும் தலைவி, தோழியை நோக்கி, "தோழி! இளவேனிற்காலத்தில் நெருப்பின் உருவை ஒப்ப பூக்களை இலவ மரங்கள் தோற்றுவிக்கின்றன; பொரியின் உருவை ஒப்பப் புன்க மரங்கள் பூக்களை உதிர்க்கின்றன; புதிய மலர்களைக் கொண்டுள்ள கோங்க மரங்கள் பொன்னிறத் தாதுகளை உதிர்க்கின்றன. தனித்திருப்பாரை வெறுத்து ஒதுக்கி, எள்ளி நகையாடி, அலர் தூற்றி ஆரவாரிப்பதுபோல இளவேனிலும் வந்து சேர்ந்துள்ளது. இதனை எண்ணி, என் அழகு அழிவதை மறைத்துக் காப்பதுபோல, பசலை என் உடல் முழுதும் மூடிக் காத்துக் கிடக்கின்றது.

"முன்பு மலர் சூடிச் செல்லும் என்னைக் கண்டு பூவின்றியிருந்த மரக்கொம்புகள் வருந்தின. இப்போது இளவேனில் தொடங்கி யதும் பூத்துள்ள கொம்புகள் பூ அணியாது வருந்தியுள்ள என்னைக் கண்டு சிரிக்கின்றன. இதனைக் கண்டு உருகிவிடுவது போல (நிலை குலைந்து) என் நெஞ்சம் அழுகின்றது. பூக்கள் நிறைந்த அக்கிளைகள் அசையும்போது அவற்றுடன் சேர்ந்து அவற்றில் வீற்றிருக்கும் மயில்களும் என்னை எள்ளி நகையாடு வதுபோல ஆடுகின்றன. பிரிவால் உடல் மெலிந்துள்ள என் கைகளிலுள்ள வளையல்கள் கழன்று விழுகின்றன. என் கண்கள் கண்ணீர்த் துளிகளைச் சிந்தியிருப்பனபோல, இளவேனிற் காலத்து மேகங்கள் மழையைத் தூறிக்கொண்டே இருக் கின்றன.'

"வங்கியம் என்னும் இசைக்கருவியில் எழுப்பப்படும் இனிய இசையைப் போல ஒலிக்கும் மிஞிறு என்னும் ஒருவகை வண்டு களின் ஒலியோடு இணைந்து தும்பிகளும் தாது ஊதிப் பாடிக் கொண்டுள்ளன. என்னை மேலும் வருத்துவனபோலக் கருங் குயில்களும் கூவுகின்றன. நான் இந்த அளவு வருந்திக்கொண்டி ருக்கும் நிலையில் அவர், 'விரைவில் வருவேன்' எனத் தூதுகூட அனுப்பவில்லை. அவர் என்னை மறந்தாரோ? என்னை விட்டு

முற்றிலும் நீங்கிவிடுவாரோ?' என்று தலைவி தோழியிடம் கூறி வருந்துகின்றாள்.

இவ்வாறு தலைவி வருந்திக் கூறுவதைக் கேட்ட தோழி, "நீலமலர் மைதீட்டிக்கொண்டுள்ளது போன்ற அழகிய கண்களைக் கொண்ட தலைவியே! குயிலையும் அவரையும் வெறுக்காதே! செறிந்து நிற்கும் உன் கூந்தல் நெகிழ்ந்திடும்வண்ணம் இன்பம் தருதற்கு அவர் விரைவில் வருவார். முன்னர் நம்மிடம் சொல்லிச் சென்றவாறு, தாம் திரும்புகின்ற நாளை மறவாமல் நினைந்து, மாலையணிந்த மார்புடனே, தம் வலிய தேரைக் காற்றைப்போல் விரைந்து செலுத்தி வந்துகொண்டிருப்பதை நீயும் காண்க" என்று கூறி, தலைவன் வருகையைச் சுட்டித் தலைவியைத் தோழி மகிழ்விக்கிறாள்.

கருத்து

தலைவி தோழியிடம் இளவேனிற்காலம் தொடங்கியிருப்பதைப் பலவாறாய்க் கூறுகிறாள்; இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாய்க் கூறிச் சென்ற தன் தலைவன் இன்னும் வரவில்லையே என்று கூறி ஏக்கமுற்று வருந்துகிறாள். அவ்வண்ணம் கூறிய தலைவியை நோக்கித் தோழி, தலைவன் தான் திரும்புவதாய்ச் சொன்ன நாளை மறவாமல் நினைந்து, தன் வலிய தேரைக் காற்றைப் போல் விரைந்து செலுத்திக்கொண்டு வருவதைக் கூறித் தலைவியை மகிழ்விக்கிறாள்.

சொற்பொருள்

1. வீறுசால் - பெருமை பொருந்திய; வியல் - பெருமை; அணி - அழகு.
2. யாறு - ஆறு; கயம் - குளம்; நந்தி - (பூக்களால்) நிறைந்து; கவின் - அழகு.
3. மணி - பளிங்கு; புரை - ஒக்கும்; வயங்கல் - கண்ணாடி; துப்பு - பவளம்.
4. பிணிவிடும் - கட்டு அவிழும், மலரும்; முருக்கு - முருக்க மரம்; உக - சிந்த.
5. துணி - தெளிவு; துதைபுஉடன் - நெருக்கமுடன், மிகுதியாய்; ஆர்ப்ப - ஒலிக்க.
6. ஊழ்த்தல் - மலர்தல்; அலர் - பூ; வேய்தல் - சூடுதல், மூடுதல்.

7. கவவுக்கை - ஒருவரையொருவர் தழுவிக் கொண்டுள்ள கைகள், தழுவிய கைகள்; நெகிழாது - பிரியாது, விலகாது.
8. வந்தன்று - வந்து சேர்ந்துள்ளது.
9. போது - மலர்; புலம்ப - வருந்த; நீத்தவர் - பிரிந்தவர்.
10. எரி - நெருப்பு; உறழ - ஒப்ப; இலவம் - இலவ மரம்.
11. உறழ - போல; புன்கு - புன்க மரம்.
12. கோங்கம் - கோங்கு மரம்; தாது - பூந்துகள்.
13. தமியார் - (காதலரைப் பிரிந்து) தனித்திருப்பவர்; புறத்து எறிந்து - வெறுத்து ஒதுக்கி; முனிதல் - வெறுத்தல்.
14. பொழுது - இளவேனிற்காலம்.
15. பசப்பு - பசலை.
16. நொந்து - வருந்தி; நகுதல் - சிரித்தல்; நந்தின - (மலர்களால்) நிறைந்தன; நைந்து - வருந்தி.
17. உகுதல் - நிலைகுலைதல், வீழ்தல்.
18. தொகுபு - சேர்ந்து, கூடி.
19. வளை - வளையல்.
20. இகுதல் - சொரிதல்; அறல் வாரும் பருவம் - நீர் ஒழுகும் பொழுது, இளவேனிற்காலம்.
22. குழல் - பெருவங்கியம் எனும் இசைக்கருவி.
23. மிஞிறு - தேன் வண்டு; மிஞிறு, தும்பி ஆகியன வண்டின் வகைகள்.
24. விடுதரார் - விடுக்கவில்லை.
25. இரும் - கரிய; ஆலும் - கூவும்.
27. புரிந்து - மனம் வேறுபட்டு; புலவாதி - வெறுத்துப் பேசாதே.
28. நீல் - நீலமலர்; நெறி - திரண்ட, பின்னிய; பிணிவிட - பின்னுதல் நீங்க.
29. நாள் வரை நிறுத்த - தாம் வருவதாய்ச் சொல்லிய நாளினை நினைத்து; தாம் சொல்லிய பொய்யன்றி - தாம் சொல்லியது பொய்த்துவிடாமல்.
30. வியன் - அகன்ற; மார்பர் - மார்பினைக் கொண்டவர்; துணை தருதல் - விரைந்து வருதல்.
31. கால் - காற்று; கடவி - செலுத்தி.

தோழி கூற்று

கலித்தொகை 34 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டு வன்புறை எதிரழிந்து ஆற்றாளாய தலைமகளுக்குத் தோழி, அவன் வரவுணர்ந்து கழியுவகையால் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற இளவேனிற்காலம் தொடங்கியது; ஆனால், அவன் வரவில்லை. ஆற்றாது வருந்திய தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி வற்புறுத்தியபோது தலைவி அவள் பேச்சை மறுத்துத் தன்னால் ஆற்றியிருக்க இயலவில்லை எனக் கூறினாள். அவ்வேளை, தலைவன் வரவுணர்ந்து தோழி தலைவியிடம் மிக்க உவகையோடு கூறியது.

தரவு

'மன்னுயிர் ஏம்உற, மலர்ஞாலம் புரவுஈன்று,
பல்நீரால் கால்புனல் பரந்துஊட்டி இறந்தபின்,
சில்நீரால் அறல்வார, அகல்யாறு கவின்பெற,
முன்ஒன்று தமக்குஆற்றி, முயன்றவர் இறுதிக்கண்
பின்ஒன்று பெயர்த்துஆற்றும் பீடுடை யாளர்போல்,
பல்மலர் சினைஉகச் சுரும்புஇமிர்ந்து வண்டுஆர்ப்ப,
இன்அமர் இளவேனில் இறுத்தந்த பொழுதினான்—

தாழிசை

விரிகாஞ்சித் தாதாடி இருங்குயில் விளிப்பவும்,
பிரிவஞ்சாது அவர்தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்,
கரிபொய்த்தான் கீழ்இருந்த மரம்போலக் கவின்வாடி,
எரிபொத்தி, என்நெஞ்சம் சுடுமாயின், எவன்செய்கோ?

பொறைதளர் கொம்பின்மேல் சிதர்இனம் இறைகொள,
நிறைதளராது அவர்தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்,
முறைதளர்ந்த மன்னவன்கீழ்க் குடிபோலக் கலங்குபு
பொறைதளர்பு பனிவாரும் கண்ணாயின் எவன்செய்கோ?

தளையவிழ்பூஞ் சினைச்சுரும்பு யாழ்போல இசைப்பவும்,
கொளைதளராது அவர்தீமை மறைப்பென்மன்; மறைப்பவும்,
கிளைஅழிய வாழ்பவன் ஆக்கம்போல் புல்லென்று,
வளையானா நெகிழ்போடும் தோளாயின் எவன்செய்கோ?
எனவாங்கு–

சுரிதகம்

நின்உள்நோய் நீஉரைத்து அலமரல்; எல்லா!நாம்
எண்ணிய நாள்வரை இறவாது, காதலர்
பண்ணிய மாவினர் புகுதந்தார்–
கண்ணுறு பூசல் கைகளைந் தாங்கே.

தெளிவுரை

நிலைபெற்றுள்ள உலக உயிர்கள் பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்னும் பெருநோக்கோடு ஆறுகள், பரவிப் பாய்ந்து நீரைத் தந்து வந்தன. அவ்வாறுகளில் இப்போது நீர் குறைந்த தால் மணல் தோன்றுமாறு நீர் ஓடிக்கொண்டிருக்கிறது. முன்னர் ஆறு தந்த வெள்ளத்தை உண்ட மரங்கள் பூத்துக் குலுங்கி வண்டுகள் சூழ நிற்கின்றன. கிளைகளிலுள்ள மலர்கள் நீர் குறைந்த ஆற்றில் உள்ள மணல்மேடுகளில் உதிர்ந்து பரவி ஆற்றுக்கு அழகு சேர்க்கின்றன. இக்காட்சி, செல்வம் நிறையப் பெற்றிருந்த ஒருவர் தனக்கு உதவியதை அவர் செல்வம் குறையப் பெற்றுத் துன்புற்றபோது நன்றியுடன் உதவுகின்ற பெருமை வாய்ந்தோர் செயலை ஒத்திருந்தது. இவ்வாறாய் விருப்பம் தரும் இனிய இளவேனில் பருவம் தொடங்கியது.

இந்நிலையில் இன்னும் தன் கணவன் வரவில்லையே என்று வருந்தியிருந்த தலைவி ஆற்றியிருத்தல் வேண்டும் எனத் தோழி வற்புறுத்துகிறாள். அதனை ஏற்க இயலாத தலைவி தோழியை நோக்கி, " 'தோழி! இளவேனில் தொடங்கியதும் காஞ்சி மரத்தின் பூந்தாதுகளை அளைந்து கருங்குயில் கூவுகிறது. தனித்திருக்கும் எனக்கு அது துன்பத்தைத் தருகிறது. இவ்வாறு பிரிவுத் துன்பத்தைத் தந்தவரின் கொடுமையை மறைக்கத்தான் முயல் கின்றேன்; இயலவில்லையே! ஒரு மரத்தின் கீழே பொய் சாட்சி சொன்னவன் நிற்கும்போது, அம்மரம் பட்டுப்போய் அழகு

கெடுவதுபோல, அவர் பிரிவு என் நெஞ்சினைச் சுட்டெரிக்கின்றதே. என் செய்வேன்?

"சுமையைத் தாங்க இயலாதவாறு நிறைந்திருக்கும் மலர்களில் தேனுண்ணும் வண்டுகள் ஆரவாரிக்கின்றன. இக்காட்சியினைக் கண்டு களிக்க இயலாதவாறு பிரிவுத்துயர் என்னை வருத்துகிறதே! பிரிந்து சென்ற அவர் எனக்குத் தந்துள்ள இத்துயரைப் பொறுமை நீங்காது மறைக்கத்தான் முயல்கிறேன்; இயலவில்லையே! நெறி தவறி ஆட்சி செய்யும் மன்னவன்கீழ் உள்ள மக்கள் கலங்குவதுபோல என் கண்கள் கலங்கி நீரைச் சொரிகின்றனவே! என் செய்வேன்?

"பூங்கொம்புகளில் முறுக்கவிழ்ந்து மலர்ந்துள்ள மலர்களில் வண்டுகள் தேனுண்டு யாழிசைபோல் ஒலிக்கின்றன. தலைவனைப் பிரிந்துள்ள எனக்கு இஃது இன்பத்தைத் தாராது துன்பத்தையே செய்கிறது. ஆற்றியிருக்க வேண்டும் என்னும் கொள்கைப்படி அவர் தீமையை மறைக்கத்தான் முயல்கிறேன்; இயலவில்லையே! சுற்றத்தை அழித்து வாழ நினைப்பவன் செல்வம் கெட்டொழிவதுபோல, என் தோள்கள் மெலிவதால் வளையல்கள் கழன்று விழுகின்றனவே! என் செய்வேன்? என்று கூறினாள்.

இதனைக் கேட்ட தோழி, "என் தலைவியே! உன் உள்ளத்து நோயையெல்லாம் இவ்வாறு சொல்லிச்சொல்லி ஏன் வருந்துகிறாய்? கண்களில் தோன்றும் துன்பத்தைக் கைகள் தாமே சென்று நீக்குவதுபோல, தலைவர் உன் துன்பங்களை நீக்கக் குறித்த நாளில் குதிரைமேலேறி வந்து நிற்கவிருப்பதை நீயே பார்ப்பாய்" என்று தலைவியைத் தேற்றினாள்.

கருத்து

தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற இளவேனிற்காலம் தொடங்கிய பின்னும் அவன் வாராததை எண்ணித் தலைவி வருந்தியிருக்கிறாள். தோழி, தலைவியை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துகிறாள். தலைவியோ, 'மரங்கள் மலர்களால் நிறைந்திருக்கின்றன; கரிய குயில்கள் கூவுகின்றன; வண்டினங்கள் யாழ்போல இசைக்கின்றன. இந்நிலையில் அவனை மறக்க முயன்றாலும் இயலவில்லையே' எனத் தோழியிடம்

கூறுகிறாள். அவ்வாறு கூறும் தலைவியிடம், 'தலைவன் குறித்த காலத்திலேயே வந்துகொண்டிருக்கிறான்; ஆதலால், வருந்தாதே' என்று கூறித் தலைவியைத் தோழி மகிழ்விக்கிறாள்.

குறிப்பு

ஆறு தந்த நீரால் பூக்களைத் தோற்றுவித்த மரங்கள், ஆற்றில் நீர் குறைந்தபோது பூக்களை ஆற்றுத்திட்டுகளில் உதிர்த்து ஆற்றினை அழகு செய்கின்றன. இக்காட்சி, ஒருவரால் நன்மை பெற்று உயர்ந்தவர், உதவியர் நலிவுறும்போது நன்றி மறவாது அவர்க்கு உதவி செய்யும் பெருந்தன்மையைப் புலப்படுத்துகிறது.

ஆற்றுநீரைக் குடித்த மரம் பூக்களைத் தோற்றுவித்துத் தான் அழகு பெறுகின்றது. ஆற்றில் நீர் குறையும்போது பூக்களை ஆற்றுக்குக் கொடுத்து அதற்கு அழகு சேர்க்கின்றது. பெருமையுடையோர் பண்பு இத்தகையதே!

சொற்பொருள்

1. மன்உயிர் - நிலைபெற்ற உயிர்கள்; ஏம்உற - இன்புற; புரவுஈன்று - பாதுகாத்து.
2. பல் நீரால் - பெருகிய நீரால் (ஆறுகளால்); பரந்து - பரவி; இறந்த பின் - நீர் வற்றிய பின்.
3. சில் நீரால் - குறைந்த நீரால் (கால்வாய்களால்); அறல்வார - மணல் தோன்ற.
4. ஆற்றி - செய்து.
5. பீடுடையாளர் - பெருமை பெற்றவர்.
6. சினைஉக - கிளைகளிலிருந்து கீழே விழ; சுரும்பு, வண்டு - இவை வண்டினங்கள்; இமிர்தல், ஆர்த்தல் - ஒலித்தல்.
7. இன் அமர் - இனிய விருப்பம்; இறுத்தந்த - வந்து சேர்ந்த.
10. கரி - சாட்சி; கரி பொய்த்தான் - பொய்ச்சாட்சி சொன்னவன்.
12. பொறைதளர் - மலர்ப்பாரம் தாங்காது தளரும்; சிதரினம் - வண்டுக் கூட்டம்; இறை கொள - தேன் உண்ண.
13. நிறை தளராது - பொறுமையைக் கைவிடாமல்.
14. முறை தளர்ந்த - ஆட்சி முறையிலிருந்து தவறிய; கலங்குபு - கலக்கமடையும்.
15. பொறை தளர்பு - பொறுமை நீங்கி; பனி வாரும் - கண்ணீர் சிந்தும்.
16. தளையவிழ் - மொட்டுக்கட்டு நீங்கிய.
17. கொளை - கொள்கை, ஒழுக்கம்.

18. கிளை - உறவினர், சுற்றம்; ஆக்கம் - செல்வம்.
19. வளைஆனா - வளையல் நிற்காது.
21. அலமரல் - வருந்தாதே; எல்லா - தோழி.
22. நாள் வரை - நாளின் எல்லை; இறவாது - கடவாது, தவறாது.
23. பண்ணிய - பூட்டிய; மா - குதிரை; புகுதந்தார் - வந்து சேர்ந்தார்.
24. கண்உறு - கண்ணுக்கு நேர்ந்த; பூசல் - துன்பம்; கை களைந் தாங்கு - கை நீக்கியதுபோல.

தோழி கூற்று

கலித்தொகை 35 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள், 'இக்காலம் அல்லவோ அவர் வருதும் எனச் சொன்ன காலம்' என வன்புறை எதிர் அழிந்தாளை, 'நீ துனி கொள்ளல்; அவர் வந்தார்' எனத் தலைமகன் வரவுணர்ந்து, தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் வந்துவிடுவான் என்று தோழி வற்புறுத்திக் கூறினாள்; அது கேட்ட தலைவி, 'இக்காலந்தானே அவர் வருவேன் எனச் சொன்ன காலம்; இக்காலத்தில் அவர் வரவில்லையே' என எதிரழிந்து மொழிந்தாளைத் தோழி, 'நீ வருந்தாதே; அவர் வந்துவிட்டார்' எனத் தலைவன் வந்தது கண்டு கூறித் தலைவியை ஆற்றுவித்தது.

தரவு

'மடிஇலான் செல்வம்போல் மரன்நந்த, அச்செல்வம்
படிஉண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞிறுஆர்ப்ப,
மாயவள் மேனிபோல் தளிர்ஈன, அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுஉக,
மலர்தாய பொழில்நண்ணி மணிநீர், கயம்நிற்ப
அலர்தாய துறைநண்ணி அயிர்வரித்து அறல்வார,
நனிஎள்ளும் குயில்நோக்கி இனைபுஉகு நெஞ்சத்தால்,
துறந்துஉள்ளார் அவர்,'எனத் துனிகொள்ளல் எல்லா!நீ.

தாழிசை

வண்ணவண்டு இமிர்ந்து,ஆனா வையைவார் உயர்எக்கர்த்
தண்அருவி நறுமுல்லைத் தாதுஉண்ணும் பொழுதன்றோ–
கண்நிலா நீர்மல்கக் கவவி,நாம் விடுத்தக்கால்
ஒண்ணுதால்! நமக்குஅவர் 'வருதும்'என்று உரைத்ததை?

மல்கிய துருத்தியுள் மகிழ்துணைப் புணர்ந்துஅவர்,
வில்லவன் விழவினுள், விளையாடும் பொழுதன்றோ–
'வலன்ஆக வினை'என்று வணங்கி,நாம் விடுத்தக்கால்,
ஒளிஇழாய்! நமக்குஅவர் 'வருதும்'என்று உரைத்ததை?

நிலன்நாவில் திரிதரூஉம் நீள்மாடக் கூடலார்
புலன்நாவில் பிறந்தசொல் புதிதுஉண்ணும் பொழுதன்றோ
பலநாடு நெஞ்சினேம் பரிந்து,நாம் விடுத்தக்கால்,
சுடர்இழாய்! நமக்குஅவர் 'வருதும்'என்று உரைத்ததை?

எனவாங்கு–

சுரிதகம்

உள்ளுதொ றுடையும்நின் உயவுநோய்க்கு உயிர்ப்பாகி,
எள்அறு காதலர் இயைதந்தார், புள்இயல்
காமர் கடுந்திண்தேர்ப் பொருப்பன்
வாய்மை அன்ன வைகலொடு புணர்ந்தே.

தெளிவுரை

"தலைவி! சோம்பல் இல்லாதவனுடைய செல்வம் பெருகுவது போல மரங்களெல்லாம் மிகுதியாய்ப் பூத்துள்ளன. தாம் ஒரு வேலையும் செய்யாது, செல்வத்தைத் தேடியுள்ளோரை நாடிச் சென்று கேட்டுப் பெற்று அனுபவிப்பதைப் போல, வண்டுகள் மரக்கொம்புகளில் தேனை உண்டு ஆரவாரிக்கின்றன. மாந்தளிர் போன்ற நிறம் கொண்டவளின் உடம்புபோல மரங்கள் தளிர்களைத் தோற்றுவித்துள்ளன. அவள் மேனியில் அங்கங்கே தோன்றும் தேமலைப் போன்று தளிர்களின்மீது மகரந்தப் பொடிகள் உதிர்ந்து கிடக்கின்றன. மலர்கள் பரந்துள்ள சோலைகளுக்கு அருகில் பளிங்குபோலும் தெளிந்த நீர் கொண்ட குளங்கள் விளங்குகின்றன. பூக்கள் பரவிக் கிடக்கும் நீர்த்துறைகளை அணுகி நுண்ணிய மணலைக் கோலமிட்டுச்

செல்வதுபோல நீர் ஓடிக்கொண்டிருக்கிறது. குயில்கள் தலைவரைப் பிரிந்திருக்கும் நம்மைப் பார்த்துப் பரிகசிப்பன போலக் கூவுகின்றன. அதனைக் கேட்டு வருந்தி, தலைவர் நம்மைக் கைவிட்டாரோ, நினைக்க மாட்டாரோ என்றெல்லாம் உடைந்த மனத்தோடு வெறுத்து மொழியாதே" என்று தோழி தலைவியிடம் வற்புறுத்திக் கூறினாள்.

வற்புறுத்தும் தோழி சொல்லை மறுத்து வருந்திய தலைவி தோழியை நோக்கி, 'ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்டவளே! அடக்கி வைத்தும் நிற்காமல் பெருகிய கண்ணீரோடு அவரைத் தழுவி நாம் விடை கொடுத்தபோது, அவர் தாம் மீண்டும் இளவேனிற்காலத்தில் வந்துவிடுவதாய்க் கூறினாரன்றோ? வையையாற்றின் உயர்ந்த இருகரைகளிலும் குளிர்ந்த அருவி நீர்போல நறுமண முல்லைகள் மலர்ந்துள்ளன. அம்மலர்களில் பல நிற வண்டுகள் மகரந்தப்பொடியைச் சுவைக்கும். இஃது இளவேனிற்காலம் அன்றோ?'

"ஒளி வீசும் அணிகலன்களை உடையவளே! 'நீயிர் மேற்கொண்டுள்ள செயல் வெற்றி பெறுக' என்று அவரை வணங்கி விடை கொடுத்தபோது, தாம் மீண்டும் திரும்பி வருவதாய் அவர் குறிப்பிட்டுக் கூறிய காலம் இளவேனிற் காலத்தை அன்றோ? வையை ஆற்றில் நீர் நிறைந்த ஆற்றிடைக் குறையில் காதலனும் காதலியுமாய்க் கூடி இணைகளாய் மன்மதன் விழாவைக் கொண்டாடி விளையாடும் இஃது இளவேனிற்காலம் அன்றோ?'

விளங்குகின்ற அணிகலன்களை உடையவளே! 'இறந்து படுவோமா ஆற்றியிருப்போமா' என்று பலவற்றையும் ஆராய்ந்து நாம் வருந்தி வழியனுப்பியபோது அவர் மீண்டும் வருவதாய்க் குறிப்பிட்டுக் கூறிய காலம் இவ்விளவேனிற் காலத்தை அன்றோ? நிலத்திலுள்ளார் புகழும் நீண்ட மாடங்களைக் கொண்ட மதுரையிலுள்ள அறிவிற்சிறந்த சான்றோர் நாவில் புதிதாய்த் தோன்றும் கருத்துகளை அறிந்து மகிழ்வது இவ்விளவேனிற்காலத்தில் அன்றோ? அக்காலம் தொடங்கியும் இன்னும் அவர் வந்து சேரவில்லையே! நான் எவ்வாறு வருந்தாமல் இருக்க இயலும்?' என்று தலைவி, தோழி ஆற்றியிருக்குமாறு சொல்லியதை மறுத்துக் கூறினாள்.

தான் வற்புறுத்தியும் ஆற்றாது எதிரழிந்த தலைவியை நோக்கி, "தலைவியே! நினைக்குந்தோறும் நெஞ்சை வருத்தும் காமநோயை நீக்க அவர் வந்தால்தான் இயலும் என்பதை நானும் அறிவேன். பறவையின் வேகத்தைவிட வேகமாய்ச் செல்லும் தேரையுடைய பாண்டியனைப் போல, சொன்ன சொல் தவறாத பண்பினரான நம் தலைவர், நம்மிடத்தில் கூறியவாறு இதோ, இன்று வந்து கொண்டிருப்பதைப் பார்த்து மகிழ்ச்சி கொள்" என்று தோழி கூறினாள்.

கருத்து

தலைவன் தலைவியைப் பிரிந்து தான் விரும்பிய செயலை மேற்கொள்ளச் சென்றபோது இளவேனிற்காலத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்றான். இளவேனில் தொடங்கியும் தலைவன் வாராதது கண்டு தலைவி வருந்தினாள். தோழி அவளை ஆற்றியிருக்குமாறு கூறினாள். தலைவியோ இளவேனிற் காலத்தில் நடைபெறுவனவற்றைச் சுட்டிக்காட்டி, தோழி வற்புறுத்தியதனை ஏற்காது மறுத்துப் பேசினாள். அப்போது தோழி, 'நம் தலைவன் பாண்டியனைப் போலச் சொன்ன சொல் தவறாத பண்பினன்; நம்மிடம் கூறிச் சென்றவாறு இதோ இப்போது வந்துகொண்டிருக்கிறான்' எனக் கூறித் தலைவியைத் தேற்றுவிக்கிறாள்.

சொற்பொருள்

1. மடி - சோம்பல்; நந்த - தழைக்க.
2. படி உண்பார் - உழைக்காமல் பிறரிடம் பெற்று உண்பவர்; நுகர்ச்சி - அனுபவித்தல்; சினை - கிளை; மிஞிறு - வண்டு; ஆர்ப்ப - ஒலிப்ப.
3. மாயவள் - மாமை நிறம் கொண்டவள்; ஈன - துளிர்க்க, தோற்றுவிக்க.
4. தாய - பரவிய; மிசை - மேலே; தாது - பூந்தாது.
5. மணிநீர் - பளிங்குபோல் நீரைக் கொண்ட; கயம் - குளம்.
6. அயிர் - நுண்மணல்; வரித்து - அழகு செய்து; அறல்வார - நீர் ஓட.
7. நனி - மிகவும்; எள்ளும் - பரிகசிக்கும்; இனைபுஉகு - வருத்தி, கெட்டழிய.
8. உள்ளார் - நினையார்; துனி - வெறுப்பு; எல்லா - தோழி.
9. வண்ணம் - நிறம்; இமிர்தல் - ஆரவாரித்தல்; ஆனா - இன்பம் அமையாத; எக்கர் - மணல்மேடு.
11. கண்நிலா - கண்ணில் (அடக்கி வைத்தும்) நிற்காமல்; மல்க - பெருக; கவவி - தழுவி.

12. வருதும் - வருவேன்; உரைத்ததை - உரைத்தது.
13. மல்கிய - பெருகிய; துருத்தி - ஆற்றிடைக் குறை.
14. வில்லவன் - கரும்பு வில்லினைக் கொண்ட மன்மதன்.
15. வலன்ஆக வினை - மேற்கொண்ட செயலில் வெற்றி கிட்டட்டும்.
17. நிலன்நாவில் - உலக மக்கள் நாவில்; கூடலார் - மதுரை மாநகரில் உள்ளார்.
18. புலன் நாவில் - புலவர்கள் கொண்ட நாவில்; புதிது உண்ணும் - புதிதாய்த் தோன்றும் கருத்துகளை அறிந்து மகிழும்.
19. பல நாடு - பலவாறு எண்ணி எண்ணி; பரிந்து - இரங்கி, அன்பு கொண்டு.
22. உயவு நோய் - வருத்தம் மிக்க காம நோய்; உயிர்ப்பு - பெருமூச்சு.
23. இயை தந்தார் - வந்து சேர்ந்து கூடினார்; புள்இயல் - பறவையின் இயல்பு (விரைந்து).
24. காமர் - விருப்பம்; பொருப்பன் - தலைவன், பாண்டியன்.
25. வாய்மை அன்ன - சொன்ன சொல் தவறாமைபோல; வைகல் - நாள்; புணர்தல் - சேர்தல்.

தோழி கூற்று

கலித்தொகை 36 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

காலங்கண்டு ஆற்றாத தலைமகளது நிலைமை கண்டு, ஆற்றாத தோழி, தான் ஆற்றாளாய், அவட்குக் கூறியது.

கூற்று விளக்கம்

இளவேனிற்பருவத்தில் தான் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற தலைவன் வாராமையால் தலைவி ஆற்றாதிருந்தாள். தலைவியின் நிலை கண்டு தோழி வருந்தித் தன் வருத்தத்தைத் தலைவியிடம் கூறியது.

கொடுமிடல் நாஞ்சிலான் தார்போல், மராஅத்து,
நெடுமிசைச் சூழும் மயில்ஆலும் சீர,
வடிநரம்பு இசைப்பபோல், வண்டொடு சுரும்புஆர்ப்பத்
தொடிமகள் முரற்சிபோல் தும்பிவந்து இமிர்தர,
இயன்எழீஇ யவைபோல, எவ்வாயும் இம்எனக்

கயன்அணி பொதும்பருள் கடிமலர்த் தேன்ஊத,
மலர்ஆய்ந்து வயின்வயின் விளிப்பபோல் மரன்ஊழ்ப்ப,
இருங்குயில் ஆலப் பெருந்துறை கவின்பெறக்
குழவி வேனில் விழவுஎதிர் கொள்ளும்
சீரார் செவ்வியும், வந்தன்று;
வாரார் தோழி!நம் காத லோரே.

பாஅய்ப் பாஅய்ப் பசந்தன்று; நுதல்;
சாஅய்ச் சாஅய் நெகிழ்ந்தன, தோள்.

நனிஅறல் வாரும் பொழுதுஎன, வெய்ய!
பனிஅறல் வாரும், என்கண்;

மலையிடைப் போயினர் வரல்நசைஇ, நோயொடு
முலையிடைக் கனலும்,என் நெஞ்சு.

காதலின் பிரிந்தார் கொல்லோ? வறிது,ஓர்
தூதொடு மறந்தார் கொல்லோ? நோதகக்
காதலர் காதலும் காண்பாம் கொல்லோ?
துறந்தவர் ஆண்டாண்டு உறைகுவர் கொல்லோ? யாவது?
'நீளிடைப் படுதலும் ஒல்லும்; யாழநின்,
வாள்இடைப் படுத்த வயங்குஈர் ஓதி!
நாள்அணி சிதைத்தலும் உண்டு'என நயவந்து,
கேள்வி அந்தணர் கடவும்
வேள்வி ஆவியின் உயிர்க்கும்,என் நெஞ்சே.

தெளிவுரை

"வளைவினையும் வலிமையையும் கொண்ட கலப்பைப் படையுடைய பலதேவன் கழுத்தில் மாலையணிந்திருப்பது போல வெண்கடம்ப மரத்தின் உச்சியிலிருந்து மயில்கள் ஆடுகின்றன. நரம்பு நன்கு முறுக்கப்பட்ட யாழிலிருந்து தோன்றும் இசைபோல வண்டுகளும் சுரும்புகளும் ஆரவாரிக்கின்றன; வளையலணிந்த விறலியின் இசையைப் போலத் தும்பிகள் ஒலிக்கின்றன; இசைக்கருவிகள் சேர்ந்தொலிப்பன போல 'இம்' எனும் ஒலி எங்கும் எழுகிறது. குளங்களால் அழகு பெற்ற சோலைகளில் உள்ள மணமுள்ள மலர்களில் வண்டுகள்

மொய்க்கின்றன; மலர்சூட உரியவரைத் தம் மணத்தாலே தம்மிடத்திற்கு வருமாறு அழைப்பனபோல ஆங்காங்கே மரங் களில் உள்ள மலர்கள் மலர்ந்து அசைகின்றன; கருங்குயில்கள் கூவுகின்றன; நீர்த்துறைகள் எல்லாம் பூக்களால் அழகு பெற்றுப் பொலிகின்றன. காமன் விழா நடைபெறும் இளவேனிலும் சீர்பெறத் தொடங்கிவிட்டது. ஆனால், இப்பருவத்தில் வந்து சேர்ந்துவிடுவதாய்ச் சொல்லிச் சென்ற காதலர் வந்து சேர வில்லை. அதனால், என் நெற்றியில் சிறிது சிறிதாய்ப் பரவிக் கொண்டிருந்த பசலை என் நெற்றி முழுவதும் பரவிவிட்டது. என் தோள்கள் சற்றே மெலியத் தொடங்கி இப்போது முழுவதுமாய் மெலிந்துவிட்டன. நீர் ஒழுகுவதைப் போல் என் கண்கள் நீரைச் சொரிகின்றன. மலைகளுக்கிடையே சென்ற என் தலைவர் வரவேண்டும் என்று விரும்பி, என் முலைகளுக்கிடையேயுள்ள நெஞ்சம் காமநோயால் கனன்றுகொண்டிருக்கிறது. நம் காதலை விரும்பாமல் அவர் பிரிந்துவிட்டாரோ? நம்மை எண்ணி ஒரு தூது அனுப்பவும் மறந்தாரோ? நான் உயிரோடிருந்து அவர் அன்பைக் காண்பேனோ? பிரிந்து சென்றவர் அங்கேயே தங்கிவிடுவாரோ? எதுதான் நடக்கும் என்று தோன்றவில்லை" எனத் தலைவி தோழியிடம் வருந்திக் கூறினாள்.

புலம்பிய தலைவியை நோக்கி, "தலைவியே! நெடுந்தூரம் சென்றுள்ள தலைவர் அவர் செயல் முடியும்வரை பிரிந்திருக்க நேரிடும். கத்தரிகை கொண்டு அழகுறக் கத்தரித்த உன் கூந்தல் தலைவர் வாராமையால் அழகொழிந்து நாள்தோறும் சிதைந்து காணப்படுகிறது. கேள்விச்செல்வத்தால் சிறந்த அந்தணர்கள் விருப்புடன் செய்யும் யாகத்தில் எழும் புகைபோல என் நெஞ்சம் வெப்பப் பெருமூச்சு விடுகிறது" என்று கூறித் தோழி தலைவி யின் நிலை கண்டு வருந்தியதோடு தலைவியை ஆற்றியிருக்கு மாறும் கூறினாள்.

கருத்து

"காமவேள் விழாக் கொண்டாடப்படும் இளவேனிற்பருவம் தொடங்கியது. இளவேனிலுக்கான அறிகுறிகள் எங்கும் தென்படுகின்றன. இப்பருவத்தில் வருவதாய்க் கூறிச் சென்ற தலைவர் இன்னும் வரவில்லை. என் நெஞ்சு வேகிறது" என்கிறாள், தலைவி. அது கேட்ட தோழி, "என்

நெஞ்சும் அந்தணர் செய்யும் யாகத்தில் எழும் புகைபோலப் பெருமூச்சு விட்டு வருந்துகிறது" எனக் கூறித் தலைவியை ஆற்றியிருக்குமாறு கேட்டுக்கொள்கிறாள்.

சொற்பொருள்

1. கொடு - வளைந்த; மிடல் - வலிமை; நாஞ்சில் - கலப்பை; நாஞ்சிலான் - கலப்பைப்படையையுடைய பலதேவன்; மராஅம் - வெண்கடம்ப மரம்.
2. நெடுமிசை - உயர்ந்த உச்சி; ஆலும் - ஆடும்; *சீர* - *சீ*ருடன்.
3. வடிநரம்பு – முறுக்கிய நரம்பினைக் கொண்ட யாழ்; ஆர்ப்ப - ஒலிப்ப.
4. தொடிமகள் - வளையலணிந்த விறலி; முரற்சி - இசை; இமிர்தல் - ஒலித்தல்.
5. இயன் - இயம் - வாச்சியம்; எழீஇயவைபோல - எழுந்ததுபோல; எவ்வாயும் - எவ்விடத்திலும்.
6. கயன் - கயம் - குளம்; பொதும்பர் - சோலை; தேன் - வண்டு.
7. வயின் வயின் - இடந்தோறும்; மரன் - மரம்; ஊழ்ப்ப - மலர.
8. ஆல - கூவ; கவின் - அழகு.
9. குழவி வேனில் - இளவேனில்.
10. செவ்வி - பருவம், காலம்.
12. பாஅய் - பரவி.
13. சாஅய் - மெலிந்து.
15. வாரும் - ஒழுகும்.
17. கனலும் - வேகும்.
21. ஆண்டாண்டு - எப்பொழுதும்; யாவது? - என்ன நேருமோ?
22. நீள் இடை - நீண்ட இடைவெளிக்கு அப்பால் உள்ள ஊர்; ஒல்லும் - முடியும்.
23. வாள் - கத்தரிகை; வயங்குதல் - விளங்குதல்; ஈர் - நெய்ப்பு.
24. நாள் - ஒவ்வொரு நாளும்; அணி - அழகு; நயவந்து - விருப்புடன்.
25. கேள்வி - கேள்வி அறிவு; கடவும் - செய்யும்.
26. வேள்வி ஆவி - யாகத்தில் எழும் புகை; உயிர்க்கும் - பெருமூச்சு விடும்.

தோழி கூற்று

கலித்தொகை 150 **நல்லந்துவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பொருள்வயிற் பிரிந்த தலைமகனை நினைந்து ஆற்றாத தலைமகளைத் தோழி ஆற்றுவித்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருளீட்டுவதற்காகத் தலைவியைப் பிரிந்து சென்றுள்ளான். தலைவனை நினைந்து ஆற்றாத தலைவியைத் தோழி ஆற்றுவித்தது.

அயம்திகழ் நறுங்கொன்றை அலங்கல்அம் தெரியலான்
இயங்குஎயில் எயப்பிறந்த எரிபோல, எவ்வாயும்,
கனைகதிர் தெறுதலின், கடுத்துஎழுந்த காம்புத்தீ
மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்குஅழல்
மயங்குஅதர் மறுகலின், மலைதலைக் கொண்டென,
விசும்புஉற நிவந்துஅழலும், விலங்குஅரு, வெஞ்சுரம்—

இறந்துதாம் எண்ணிய எய்தல் வேட்கையால்,
அறம்துறந்து— ஆயிழாய்!— ஆக்கத்தில் பிரிந்தவர்
பிறங்குநீர் சடைக்கரந்தான் அணிஅன்ன நின்நிறம்
பசந்து,நீ இனையையாய், நீத்தலும், நீப்பவோ?

கரிகாய்ந்த கவலைத்தாய்க் கல்காய்ந்த காட்டகம்,
'வெருவந்த ஆறு' என்னார், விழுப்பொருட்கு, அகன்றவர்,
உருவஏற்று ஊர்தியான் ஒள்அணிநக் கன்ன,நின்
உருஇழந்து இனையையாய், உள்ளலும் உள்ளுபவோ?

கொதித்துஉராய்க் குன்றுஇவர்ந்து கொடிக்கொண்ட கோடையால்,
'ஒதுக்குஅரிய நெறி'என்னார், ஒண்பொருட்கு அகன்றவர்,
புதுத்திங்கள் கண்ணியான் பொன்பூண்ஞான்று அன்ன,நின்
கதுப்புஉலரும் கவினையாய்க் காண்டலும் காண்பவோ?

ஆங்கு—
அரும்பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல, ஒருங்குஅவர்

பொய்யார் ஆகுதல் தெளிந்தனம்—
மையீர் ஓதி மடமொழி யோயே!

தெளிவுரை

"கொன்றை மாலையை அணிந்துள்ளவன் சிவபெருமான். அவன் முப்புரங்களை அம்பால் எய்தபோது எழுந்த தீயைப் போன்று கதிரவனது வெயில் எங்கும் எரிக்கும். மூங்கில்கள் ஒன்றோடொன்று உராய்வதால் எழுந்த காட்டுத் தீ மலைச் சாரல் எங்கும் பரந்து, வானத்தைச் சென்று முட்டுவதுபோன்று, வெம்மையைப் பரப்பும். பாதைகளும் அங்கங்கே பிரிந்து மயங்க வைக்கும். இத்தகைய கடத்தற்கு அரிதான வழியைக் கடந்து நம் தலைவர் பொருளீட்டச் சென்றுள்ளார்.

"அவர் தாம் எண்ணிய பொருளை அடையும் விருப்பத்தால், அறத்தினும் பொருளே சிறந்தது என்னும் கருத்தோடு அறநெறிக்கு மாறாய்ச் சென்றுள்ளார். இருந்தாலும், கங்கை ஆற்றைத் தன் சடையில் அடக்கிய சிவபெருமான் கழுத்தின் நிறம் போன்ற உன் மாமை நிறம் மாறிப் பசலை பாய்ந்து நீ வருந்தும்படி உன்னை அவர் கைவிட்டுவிடுவாரோ? (கைவிட மாட்டார்.)

"கரிந்து கிடக்கும் கொதிக்கும் பாறைகள் உள்ள பின்னிய வழிகளைக் கொண்ட பாலை நிலத்தில் அச்சமுறாமல் சிறந்த பொருளைத் தேடப் பிரிந்து சென்ற தலைவர், காளையை ஊர்தியாய்க் கொண்ட சிவனின் செம்மேனி போன்ற உன் அழகை இழந்து நீ வருந்துமாறு கைவிட்டுவிடுவாரோ? (மாட்டார்.)

"கதிரவன் கீழ்த்திசையில் தோன்றிக் கொதிக்கும் கதிரைப் பரப்பி மிகுதியான வெப்பத்தைத் தரும் கோடைக்காலத்தில் செல்லுதற்கரிய வழியில், பொருள் கருதிச் சென்றுள்ள நம் தலைவர், பிறை சூடிய சிவபெருமான் பூண்டிருக்கும் அழகிய பூணான அரவம்போல நீண்டு தாழ்ந்த உனது கூந்தல் காய்ந்து கிடக்கும் காட்சியைக் காணவும் எண்ணுவாரோ? (மாட்டார்.)

"அதனால், கரிய நிறமும் குளிர்ச்சியும் வாய்ந்த கூந்தலையும் மடமொழியையும் கொண்ட தலைவியே! வழிபடுவோர் அரிதிற்பெறும் பெருங்கடவுளாகிய, ஆதிரை நாளுக்குரிய

சிவபெருமானது அழகை ஒப்ப மலரும் மிக்க குளிர்ச்சியைக் கொண்ட சண்பகம் பருவம் பொய்க்காது மலர்வதைப் போலத் தலைவரும் பொய்க்க மாட்டார் என்று உறுதியாய்த் தெரிந்து கொண்டோம். அதனால் ஆற்றியிருக்க வேண்டும்" என்று தோழி ஆறுதல் கூறினாள்.

கருத்து

பொருள்வயிற்பிரிந்த தலைவன் இளவேனிற்காலம் தொடங்குமுன்னே திரும்பிவிடுவதாய்க் கூறிச் சென்றான். இளவேனிற்பருவம் தொடங்கிய நிலையிலும் வரவில்லையே என்று தலைவி ஏக்கங்கொண்டு வருந்தினாள். அவள் வருத்தம் நீங்குமாறு அவள் தோழி ஆறுதல் கூறினாள்.

விளக்கம்

"தலைவியே! சிவபெருமானின் கழுத்து நிறம் போன்ற உன் மாமை நிறம் பசலை பரந்து அழகிழக்குமாறு தலைவர் கைவிட மாட்டார்; அச்சிவபெருமானின் மேனி போன்ற உன் சிவந்த மேனி அழகிழக்கும்படி தலைவர் தம் நெஞ்சாலும் நினைக்க மாட்டார்; அச்சிவபெருமான் அணியாய்ப் பூண்டிருக்கும் அரவம் போன்று நீண்டு தாழ்ந்து தொங்கும் உன் கூந்தல் உலர்ந்து காய விட்டு விடுவாரா? மாட்டார்.

"தோழி! சிவபெருமானின் மிளிரும் அழகினை ஒப்ப மலரும் சண்பக மலர், பருவம் தப்பாது மலர்வதுபோல, நம் தலைவரும் அவர் கூறிய பருவம் தவறாமல் வந்துவிடுவார்" என்று கூறித் தலைவியைத் தோழி ஆற்றுவிக்கிறாள். (சண்பகம் இளவேனிற் கால மலர்.)

சொற்பொருள்

1. அயம் - நீர்நிலை; கொன்றை - கொன்றைப்பூக்கள்; அலங்கல் - அசையும்; தெரியல் - மாலை.
2. இயங்குதல் - நகருதல்; எயில் - கோட்டை; எய - அம்பு எய்ய; எரி - தீ; எவ்வாயும் - எவ்விடத்தும்.
3. கனை - மிகுதியான; தெறுதல் - சுடுதல்; கடுத்து - சினந்து; காம்பு - மூங்கில்.
4. அழல் - நெருப்பு, வெம்மை.
5. மயங்குஅதர் - மயங்க வைக்கும் வழி; மறுகலின் - திரிதலால்.

6. விசும்பு - வானம்; நிவந்து - உயர்ந்து; அழலும் - எரியும்; விலங்கு அரு - கடத்தற்கரிய.
7. எண்ணிய எய்தல் - தேட நினைத்த பொருள் கிடைத்தல்; வேட்கை - விருப்பம்.
8. ஆக்கம் - செல்வம்.
9. கரந்தான் - மறைத்தவன் (கங்கையைச் சடையிலே மறைத்துள்ள சிவபெருமான்)
10. இனையையாய் - வருந்தும்படியாக; நீத்தல் - விடுதல்.
11. கரிகாய்ந்து - கரிந்து கிடக்கும்.
12. வெருவந்த - அச்சம்; விழுப்பொருள் - பெருமை பொருந்திய பொருள்.
13. ஏற்று ஊர்தியான் - காளையை ஊர்தியாய் கொண்ட சிவபெருமான்.
14. உள்ளுபவோ? - நினைப்பாரா?
15. உராய் - பரவி; இவர்ந்து - ஏறி.
16. ஒதுக்கு அரிய - செல்லுதற்கு அரிய.
17. புதுத் திங்கள் - மூன்றாம் பிறை; கண்ணியான் - தலையிலே அணியாய்க் கொண்ட சிவபெருமான்; (சிவனின்) பொன் பூண் - அழகிய ஆபரணமான அரவம்; ஞான்று அன்ன - தொங்குதல் போன்ற.
18. கதுப்பு - கூந்தல்; கவின் - அழகு.
20. ஆதிரையான் - திருவாதிரை நாளுக்குரிய சிவன்.
21. சண்பகம் - ஒரு வகை மலர்.
22. மை ஈர் ஓதி - கரிய குளிர்ந்த கூந்தல்.

தலைவி கூற்று

நற்றிணை 97 **மாறன் வழுதி**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் அவன் குறித்துச் சென்ற இளவேனிற்பருவத்தில் திரும்பவில்லை. அதனால் வருந்திய தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

அழுந்துபடு விழுப்புண் வழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத்து எஃகுஎறிந் தாங்குப்
பிரிவில புலம்பி நுவலும் குயிலினும்
தேறுநீர் கெழீஇய யாறுநனி கொடிதே;
அதனினும் கொடியள் தானே மதனின்
துய்த்தலை இதழ பைங்குருக் கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளீ ரோஎன
வண்டுசூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை உழவர் தனிமட மகளே.

தெளிவுரை

“தோழி! நீண்ட காலத்திற்கு முன்பு மார்பில் ஏற்பட்டு ஆறாதுள்ள ஆழமான அகன்ற துன்பமிக்க புண்ணில் மறுபடியும் வேலைச் செலுத்தியதுபோல, என் அருகிலிருந்து பிரியாதவாறு குயில் கூவிக்கொண்டிருக்கிறது. அக்குயிலின் குரலைக்காட்டிலும் தெளிந்த நீரை மிகுதியாய்க் கொண்டு ஓடுகின்ற ஆறு இன்னும் கொடியதாய்த் தோன்றுகிறது. நீர்ப்பாங்கான இடத்திலே உள்ள உழவர் மகள், அழகிய பஞ்சு போன்ற புறவிதழ்களைக் கொண்ட குருக்கத்தி மலருடன் சேர்ந்த பித்திகை மலரைத் தட்டி லிட்டு, வண்டுகள் சூழத் தன் கையில் ஏந்தியபடி, ‘பூக்கள் வாங்க வில்லையா, பூக்கள்’ என்று கூவியபடி விற்றுத் திரிகின்றாள். இவ்விளமகள் முன்பு நான் கூறியவற்றைக்காட்டிலும் கொடிய

வளாய் இருக்கிறாள்! இந்நிலையில் நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?" என்று தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

கருத்து

குயில் கூவும் இளவேனிற்பருவத்திலும் தலைவன் வரவில்லை. நான் எப்படி ஆற்றியிருக்க இயலும்?

விளக்கம்

"இளவேனில் தொடங்கிவிட்டது; குயில் இடைவிடாது கூவுகிறது; குளிர்ச்சியாய் உள்ள ஆற்றுநீர், பெருக்கெடுத்து ஓடுகிறது; உழவர் மகள் குருக்கத்திப்பூவை விற்றுச் செல்கிறாள். பிரிந்திருப்போர்க்கு இம்மூன்றும் ஒன்றினொன்று மிகவும் துன்பம் தருவன. இவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு நான் எப்படி ஆற்றியிருக்க இயலும்?" என்று தலைவி தன்னை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழியிடம் கேட்கிறாள்.

குறிப்பு

குயில் கூவுதல் வேனிற்காலம் தொடங்கிவிட்டதை அறிவிக்கும்; பிரிந்திருக்கும் காதலர்க்குத் துன்பம் தரும்.

குருக்கத்திக்கொடி பசுமையான இலைகளைக் கொண்டது. இதன் பூ தலைப் பகுதியில் பஞ்சு போன்ற இதழ்களைக் கொண்டது; மெல்லிய தன்மையது.

தலைவன் அருகிலில்லாததால், சிறுமி, பூ விற்றுச் செல்லும்போது அதனை வாங்கி அணிய இயலவில்லையே எனத் தலைவி ஏங்குகிறாள்.

சொற்பொருள்

1. அழுந்துபடு - ஆழமாய்ப் பதிந்த; வழும்பு - புண்; புலரா - ஆறாதுள்ள.
2. எவ்வம் - துன்பம்; எஃகு - வேல்.
3. பிரிவில - பிரிதல் இல்லாத குயில் (காதலன் பிரிந்ததால்); புலம்பி நுவலும் - வருந்திக் கூவும்.
4. தேறு நீர் - தெளிந்த நீர்; கெழீஇய - பொருந்திய; நனி - மிகவும்.
5. மதன் - அழகு.
6. துய்த்தலை இதழ - தலைப்பகுதியில் பஞ்சு போன்ற இதழ்களைக் கொண்ட பூ; பைங்குருக்கத்தி - பசிய குருக்கத்திக்கொடி.

7. பித்திகை - பித்திகை மலர்; விரவு - கலந்து; கொள்ளீர் - வாங்குங்கள்.
8. வட்டி - பூந்தட்டு.
9. தண்டலை - குளிர்ச்சியான; மடமகள் - உழவர் குல இளைய மகள்.

தலைவி கூற்று

நற்றிணை 118 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாய தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற பருவத்தில் வந்து சேரவில்லை. குயில்கள் கூவுவதைக் கேட்டும், தெருவில் மெல்லிய பாதிரி மலரை விற்றுச் செல்லும் பெண்ணைக் கண்டும் தன் நெஞ்சம் மிகவும் வருந்துவதைத் தலைவி கூறியது.

அடைகரை மாஅத்து அலங்குசினை பொலியத்
தளிர்கவின் எய்திய தண்நறும் பொதும்பில்,
சேவலொடு கெழீஇய செங்கண் இருங்குயில்
புகன்றுஎதிர் ஆலும் பூமலி காலையும்,
'அகன்றோர் மன்றநம் மறந்திசி னோர்'என,
இணர்உறுபு உடைவதன் தலையும் புணர்வினை
ஓவ மாக்கள் ஒள்அரக்கு ஊட்டிய
துகிலிகை அன்ன, துய்த்தலைப் பாதிரி
வால்இதழ் அலரி வண்டுபட ஏந்திப்
புதுமலர் தெருவுதொறு நுவலும்
நொதுமலாட்டிக்கு நோம்என் நெஞ்சே!

தெளிவுரை

"ஆற்றங்கரையில் மாமரங்களின் நெருங்கிய கிளைகளி லெல்லாம் தளிர்கள் தோன்றியுள்ளன. குளிர்ச்சியும் மணமும்

கொண்ட சோலையில் சிவந்த கண்களைக் கொண்ட கரிய பெண்குயில் தன் சேவலோடு இணைந்து விருப்பம் நிறைந்த குரலில் கூவிக் கொண்டிருக்கிறது. நம்மைப் பிரிந்து சென்ற தலைவர், பூக்கள் மலிந்திருக்கும் இந்த இளவேனிற்காலத்திலும் நம்மை முற்றிலும் மறந்திருக்கிறாரே என்று வருந்துகிறேன். மேலும், தொழில்திறம் மிக்க ஓவியர் ஒள்ளிய அரக்கினில் தோய்த்தெடுத்த தூரிகையைப் போலத் தோன்றும் பாதிரி மலர்கள் மலர்ந்துள்ளன. தலையில் நுண்ணிய பஞ்சினைக் கொண்ட வெண்மையான அப்பாதிரி மலர்களை வண்டுகள் மொய்க்கும்படி தட்டினிலேந்திச் சுமந்து, தெருத்தோறும் விலை கூறி விற்றுவரும் பெண்ணை நோக்கும் போதெல்லாம் என் நெஞ்சு நோகின்றது. இந்நிலையில் நான் எங்ஙனம் ஆற்றியிருக்க இயலும்" எனத் தலைவி மனம் நொந்து கூறினாள்.

கருத்து

இளவேனில் தொடங்கிவிட்டது; தலைவரோ இன்னும் வரவில்லை.

விளக்கம்

“தலைவர் தாம் திரும்பி வருவதாய்க் கூறிச் சென்ற பருவம் தொடங்கிவிட்டது. ஆயினும், அவர் இன்னும் வரவில்லை. மாமரங்களில் குயில்கள் கூவிக்கொண்டுள்ளன. மலர்ந்துள்ள பாதிரி மலர்களை வீதியில் விலை கூறி விற்கின்றனர். இந்த இளவேனிலிலும் வாராத அவர், நம்மை முற்றிலும் மறந்து விட்டாரோ" என்று கூறித் தலைவி பெரிதும் வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. அடை கரை - ஆற்றங்கரை; மா - மா மரம்; அலங்குசினை - அசையும் கிளை; பொலிய - அழகு பெற.
2. கவின் - அழகு; பொதும்பு - சோலை.
3. கெழீஇய - இணைந்திருக்கும்; இருங்குயில் - கரிய குயில்.
4. புகன்று எதிர் ஆலும் - ஒன்றையொன்று விரும்பி எதிரெதிர் இருந்து கூவி மகிழும்; மலிதல் - நிறைதல்; காலை - இளவேனிற்பருவம்.
5. அகன்றோர் - பிரிந்து சென்றார்; மறந்திசினோர் - மறந்திருக்கின்றார்.

6. இணர் - பூங்கொத்து; உறுபு - காய்ந்து; உடைவதன் தலையும் - உதிரும் முதுவேனிற்பருவத்தும்; புணர்வினை - மேற்கொண்ட செயல் குறித்து.
7. ஓவ மாக்கள் - ஓவியர்; அரக்கு - செவ்வரக்கின் குழம்பில்; ஊட்டிய - தோய்த்த.
8. துகிலிகை - தூரிகை; துய்த்தலைப் பாதிரி - தலையிலே துய்யினைக் கொண்ட பாதிரியின்.
9. வால் இதழ் - வெண்மையான இதழ்; அலரி - பூ; வண்டுபட - வண்டு மொய்க்க; ஏந்தி - தட்டில் ஏந்தி.
10. நுவலும் - விற்கும்.
11. நொதுமலாட்டி - அயலவளாகிய பூ விற்கும் பெண்; நோம் - வருந்தும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 24 **பரணர்**

திணை : முல்லை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாகிய கிழத்தி உரைத்தது

கூற்று விளக்கம்

இன்ன பருவத்தே மீண்டு வருவேன் என்று சொல்லிச் சென்ற தலைவன் அப்பருவம் தொடங்கியும் அவன் வாராதது கண்ட தலைவி ஆற்றாமல் சொல்லியது.

கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்ஐ இன்றியும் கழிவது கொல்லோ?
ஆற்றுஅயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழைய, கொடியோர் நாவே,
காதலர் அகல, கல்லென் றவ்வே.

தெளிவுரை

"சூரிய அடிமரத்தைக் கொண்ட வேம்பின் ஒளிமிக்க பூக்களின் புதுவரவு, என் தலைவன் என்னுடன் இல்லாமலே கழிந்து விடுமோ? என் காதலர் என்னை விட்டுப் பிரிந்ததால் கொடிய நாக்கினைக் கொண்ட ஊர் மக்கள் 'கல்' என்னும் ஆரவாரத்துடன் பழிச்சொற்கள் பேசுகின்றனர். அதனால், ஆற்றங் கரையில் ஓங்கி வளர்ந்துள்ள வெண்ணிறக் கிளைகளைக் கொண்ட அத்தி மரத்தின் பழுத்து விழுந்த ஒரு பழம் ஏழு (பல) நண்டுகளால் பற்றப்பட்டுச் சிதைவுற்றதுபோல நான் குழைவுற்றுள்ளேன்."

கருத்து

தலைவன் குறித்துச் சென்ற இளவேனிற்பருவம் தொடங்கியும் வரவில்லை. அதனால் மெலிவுற்ற என்னைக் கண்டு ஊரார் பழிச்சொல் கூறுகின்றனர்.

விளக்கம்

"தலைவன் கூறிச் சென்ற இளவேனிற்பருவம் தொடங்கியும் அவன் வரவில்லை. பூத்துள்ள வேப்பம் பூக்கள் அவனின்றியே கழிகின்றன. நண்டுகளால் மிதிக்கப்பட்ட அத்திப்பழம்போல நான் குழைவுற்றுள்ளேன். கொடியோர் அலர் தூற்றுகின்றனர்" என்பது தலைவியின் துன்பக்குரல்.

குறிப்பு

வேம்பு இளவேனிற்காலத்தில் மலர்வது. தலைவன் மீண்டும் வருவதாய்ச் சொல்லிச் சென்ற காலம் அதுவே. அப்பருவம் தொடங்கியும் அவன் வரவில்லை.

நண்டுகள் தம் கால்களால் பற்றிச் சிறுகச் சிறுகச் சிதைத்தலால் உருவழிந்து விடும் பழம்போல அலர்ச்சொற்களால் அவள் உள்ளமும் புண்பட்டுச் சிதைந்தது.

சொற்பொருள்

1. கால் - அடிமரம்; ஒண்பூ - ஒளிமிக்க பூக்கள்; யாணர் - புதுவரவு.
2. என் ஐ - என் தலைவன்.

3. அயல் - அருகேயுள்ள கரை; கோடு - கிளை; அதவம் - அத்தி மரம்.
4. எழு - ஏழு (பல); குளிறு - நண்டு.
5. குழைதல் - சிதைதல்; நா - சொல்.
6. கல் என்று - 'கல்' என்னும் ஒலியுடன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 192 **கச்சிப்பேட்டு நன்னாகையார்**

திணை : பாலை

கூற்று

பிரிவிடை வற்புறுத்த வன்புறை எதிரழிந்து கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்திருந்த காலத்தில், 'அவர் வருவர்; வருந்தற்க' என்று தோழி கூறி ஆற்றுவிப்பத் தலைவி, 'இளவேனிற்பருவத்தும் அவர் வாராமையால் தனித்திருக்கும் நான் எங்ஙனம் வருந்தாதிருப்பது?' எனத் தோழி சொல்லை மறுத்துக் கூறியது.

'ஈங்கே வருவர் இனையல் அவர்'என
அழாஅற்கோ இனியே? நோய்நொந்து உறைவி!
மின்னின் தூவி இருங்குயில் பொன்னின்
உரைதிகழ் கட்டளை கடுப்ப மாச்சினை
நறுந்தாது கொழுதும் பொழுதும்
வறுங்குரற் கூந்தல் தைவரு வேனே.

தெளிவுரை

"பொன்னிறப் பூந்தாது படிதலால், மின்னும் சிறகைக் கொண்ட கருங்குயில், பொன்னை உரைத்துப் பார்க்கும் கட்டளைக்கல்போல் தோன்றும். அவ்வாறு மாமரக்கிளையில் பூத்த மலர்களில் உள்ள நறுமண மகரந்தப்பொடியைக் குயில்கள் கோதும் இளவேனிற் காலத்திலும் அவர் வாராததால், பூச் சூடாத வறிய கொத்தான எனது கூந்தலை நானே தடவிக்

கொண்டு இருக்கிறேன். இப்பொழுது, 'துன்புற்றிருக்கும் தலைவியே! இதோ அவர் வந்து விடுவார்; வருந்தாதே' என நான் அழாதிருப்பதற்காகத் தோழியே! நீ என்னை வற்புறுத்துகிறாய். நான் எவ்வாறு அழாதிருக்க இயலும்?" என்று தலைவி, 'வருந்தற்க' எனத் தோழி சொன்ன சொல்லை மறுத்துக் கூறியது.

கருத்து

மாம்பூக்களின் மகரந்தங்களைக் குயில் கோதும் இளவேனிற்பருவத்தும் அவர் வரவில்லையே? நான் எவ்வாறு பொறுத்திருப்பேன்?

விளக்கம்

தலைவன் பிரிந்திருக்கும்போது, தனியே இருக்கும் மகளிர் பூச்சூடார்; அலங்கரித்துக்கொள்ளார். 'என் கூந்தலைத் தலைவன் கோதி மகிழ வேண்டியிருக்க, நானே என் வறுங் கூந்தலைத் தடவித் துன்புற வேண்டியதாயிற்று' என்று தோழி யிடம் தலைவி கூறுகிறாள்.

குறிப்பு

'குயில் மாவின் நறுந்தாதைக் குடையும் பொழுது' என்றமையால் இளவேனிற்காலம் என்பது புலப்படுகிறது.

மாம்பூவின் தாதிற்குப் பொன்னும், கட்டளைக்கல்லுக்குக் குயிலும் உவமை.

சொற்பொருள்

1. இனையல் - வருந்தாதே; அவர் - தலைவர்.
2. அழாஅற்கோ - அழாதே; உறைவி - இருப்பவளே.
3. மின்னின் - பளபளப்பான, மின்னுகின்ற; தூவி - சிறகு; பொன்னின் உரை - பொன்னினை உரைத்ததால் ஏற்பட்ட பொடி.
4. திகழ் - காணப்படுகின்ற; கட்டளை - பொன்னை உரைத்துப் பார்க்கும் கல்; மாச்சினை - மாமரத்தின் கிளை.
5. தாது - மகரந்தம்; கொழுதும் - கோதுகின்ற; பொழுது - இளவேனிற் காலம்.
6. வறுங்குரல் - வறிய கொத்தான; தை வருவேன் - தடவிக் கொண் டிருக்கிறேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 254 **பார்காப்பான்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டு வற்புறுத்தும் தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன இளவேனிற்பருவம் தொடங்கியும் அவன் வாராததால் வருந்தியிருந்த தலைவியைப் பொறுத் திருக்குமாறு வற்புறுத்திய தோழியிடம் தலைவி கூறியது.

இலைஇல் அம்சினை இனவண்டு ஆர்ப்ப,
முலைஏர் மென்முகை அவிழ்ந்த கோங்கின்
தலைஅலர் வந்தன; வாரா தோழி!
துயில்இன் கங்குல் துயில்அவர் மறந்தனர்;
பயில்நறுங் கதுப்பின் பாயலும் உள்ளார்;
'செய்பொருள் தரல்நசைஇச் சென்றோர்
எய்தின ரால்'என, வரூஉம் தூதே.

தெளிவுரை

"தோழி! கோங்க மரத்தின் இலைகள் இல்லாத அழகிய கிளை களில் வண்டினம் மொய்த்து ஆரவாரிக்கும்படியாக முலைக் காம்பைப் போல அழகுடன் மலர்ந்த முதன் முதலாகப் பூக்கும் மலர்கள் தோன்றியுள்ளன. (இஃது இளவேனிற்காலம் தொடங்கி யிருப்பதை அறிவிக்கிறது.) இருந்தும், நம் தலைவர் இன்னும் வரவில்லை. தூங்குதற்குரிய இனிய இரவு நேரத்தில் என்னுடன் சேர்ந்து தூங்குவதை மறந்துவிட்டார். பல காலம் உடனிருந்து பழகிய என் கூந்தல் பாயையும் அவர் நினைக்கவில்லை. பொருளைத் தேடிக் கொண்டுவர விரும்பிச் சென்ற தலைவர், 'இதோ வந்துவிட்டார்' என்று சொல்லிக் கொண்டு தூதர் எவரும் வரவில்லை. (நான் வருந்தாமல் என் செய்வேன்?)"

கருத்து

கோங்கு மலர்ந்து இளவேனிற்காலம் தொடங்கிவிட்டது; தலைவர் என்னை மறந்துவிட்டார் போலும்! அதனால்தான் அவரிடமிருந்து செய்தி எதுவும் வரவில்லை.

விளக்கம்

"தலைவர் திரும்பி வருவதாய்ச் சொல்லிச் சென்ற இளவேனிற் காலம் தொடங்கிவிட்டது. கோங்க மரத்தில் முதன் முதலாகப் பூக்கும் மலர்கள் தோன்றிவிட்டன. பொருளைத் தேடிச் சென்றவர் திரும்பி வருவதாய் ஒரு செய்தியும் இல்லை. அவர் என்னை மறந்துவிட்டார். அதனால்தான் அவர் தாம் வரும் செய்தியை முன்கூட்டிச் சொல்லியனுப்பவில்லை. இந்நிலையில் நான் வருந்தாமல் என் செய்வது?" என்பது தலைவியின் கூற்று.

கோங்க மலர்கள் தோன்றின; தலைவனின் தூது வரவில்லை.

குறிப்பு

கோங்க மரம் இளவேனிற்காலத்தில் மலரும்; மங்கையர்களின் முகிழ்த்த மார்புக்குக் கோங்க மலர் உவமையாய்க் கூறப்படுகிறது.

சொற்பொருள்

1. இலை இல் - இலை இல்லாத; சினை - கிளை; இன வண்டு - வண்டுக் கூட்டம்; ஆர்ப்ப - ஒலிக்க.
2. முலைஏர் - முலையினை ஒத்த தோற்றம் கொண்டதும் அழகுள்ளதுமான; கோங்கு - ஒரு வகை மரம், இளவேனிற் காலத்தில் பூப்பது.
3. தலைஅலர் - முதன்முதலாகப் பூக்கும் பூக்கள்; வாரா - தூது வரவில்லை.
4. இன்கங்குல் - இனிய இரவு; துயில் - தூக்கம்.
5. பயில்நறும் கதுப்பு - பலகாலும் உடனிருந்து பழகிய மணமுள்ள கூந்தல்; கதுப்பின் பாயல் - கூந்தலைப் பாயாகக் கொண்டு தூங்குவது.
6. செய்பொருள் - பொருளைத் தேடி; தரல் - கொண்டுவர; நசைஇ - விரும்பி.
7. எய்தினர் - வந்துகொண்டிருக்கிறார்; தூது - செய்தி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 341 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
குயிற்பெடை இன்குரல் அகவ
அயிர்க்கேழ் நுண்ணறல் நுடங்கும் பொழுதே.

தெளிவுரை

"பெட்டைக் குயில் தன் இனிய குரலெடுத்துக் கூவியழைக் கிறது. காற்றாலே நுண்மணல் தூவி அலைக்கப்பெற்றுக் குவிகிறது. இத்தகைய இளவேனிலும் தொடங்கியது; நம் காதலரோ தாம் சொன்னபடி வந்தாரிலர். (அதை நினைந்து நினைந்து என் மனம் வருந்துகிறது)" எனத் தலைவி வருந்திக் கூறுகிறாள்.

கருத்து

இளவேனில் தொடங்கியது; காதலர் வாராததை நினைந்து நெஞ்சம் வெதும்புகிறது.

சொற்பொருள்

1. தான் வந்தன்று - அவர் சொன்ன பருவம் தொடங்கிவிட்டது.
2. பெடை - பெண் பறவை; அகவ - கூவுதல்.
3. அயிர்க் கேழ் நுண்ணறல் - கருமணல் கெழுமிய நுண்ணிய நீர்; நுடங்கும் - குவியும்; பொழுது - காலம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 342 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
சுரும்புகளித்து ஆலும் இருஞ்சினைக்
கருங்கால் நுணவம் கமழும் பொழுதே.

தெளிவுரை

"பெரிய கிளைகளுடன் கரிய அடி மரம் கொண்ட நுணாவின் மலர்கள் மணங்கமழ்ந்திருக்கும். சுரும்பினம் மதுவுண்டு களித்து, வானத்தே பறந்து ஆடியபடியிருக்கும். இளவேனிற்பொழுது இப்போது தொடங்கிவிட்டது; அவர்தான் இன்னும் வர வில்லை."

கருத்து

இளவேனில் தொடங்கியது; நுணாவும் பூத்தது; அவரைக் காணோம்.

குறிப்பு

நுணா மரம் வேனிற்காலத்தில் பூக்கும்.

விளக்கம்

மலர்களில் படிந்து வண்டு தேனுண்ணும் காலம் தொடங்கி விட்டது; நான் படிந்து இன்புறுமாறு தலைவனின் மலர்ந்த மார்பைப் பெறும் காலம் இன்னும் வரவில்லை.

சொற்பொருள்

1. அவர் - காதலர்; தான் - இளவேனில் பொழுது; வந்தன்றே - வந்தது.

2. சுரும்பு - வண்டினம்; ஆலும் - ஆடும்; இருஞ்சினை - பெரிய கிளை.
3. கருங்கால் - கரிய அடிமரம்; நுணவம் - நுணா மரம்; கமழும் - மணக்கும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 343 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
திணிநிலைக் கோங்கம் பயந்த
அணிமிகு கொழுமுகை உடையும் பொழுதே.

தெளிவுரை

"செறிவான அடிமரத்தைக் கொண்ட கோங்க மரங்களின் அழகு மிக்க கொழுவிய மொட்டு மலரும் காலம் தொடங்கியது; அவரோ இன்னும் வரவில்லை."

கருத்து

கோங்கு மலரும் இளவேனில் தொடங்கிவிட்டது; அவர் வரவில்லை.

குறிப்பு

இளவேனிலில் கோங்கு மலரும்.

சொற்பொருள்

2. திணிநிலை - செறிவான தன்மை; கோங்கம் - கோங்க மரம்; பயந்த - தோற்றுவித்த.
3. அணிமிகு - அழகு மிகுந்த; கொழுமுகை - கொழுவிய மொட்டு; உடைதல் - முறுக்குவிடுதல், மலரும் காலம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 344 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
நறும்பூங் குரவம் பயந்த
செய்யாப் பாவை கொய்யும் பொழுதே.

தெளிவுரை

"நறுமணம் உடைய பூக்களைக் கொண்ட குரவமரம் கையால் செய்யப்படாத பாவை போன்ற பூக்களைத் தோற்றுவித்தது. அவற்றைக் கொய்யும் பருவமான இளவேனிலும் தொடங்கி விட்டது; அப்பருவத்தில் வருவதாய்ச் சொன்ன அவர் மட்டும் இன்னும் வரவில்லை."

கருத்து

பாவை போன்ற குரவம் பூவைக் கொய்து அணியும் இளவேனில் பருவம் தொடங்கிவிட்டது. அவர் இன்னும் வரவில்லை.

குறிப்பு

விளையாட்டுப்பாவை கையால் செய்யப்படுவது; பாவை போன்றுள்ள குரவம் பூ, மரத்தில் பூப்பது; அதனால் அது செய்யாப் பாவை எனப்பட்டது. குரவம் பூ இளவேனிலில் மலர்வது.

சொற்பொருள்

2. குரவம் - குரவ மரம்; பயந்த - பூத்த.
3. செய்யாப் பாவை - கையால் செய்யப்படாத பாவை போன்றுள்ள குரவ மலர்; பொழுது - குரவம் பூக்கும் இளவேனிற்பருவம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 345 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
புதுப்பூ அதிரல் தாஅய்க்
கதுப்புஅறல் அணியும் காமர் பொழுதே!

தெளிவுரை

"*புனலிக்கொடி புதிய பூக்களை உதிர்த்துப் பரப்பி, நில மகளின் கூந்தலாகிய கருமணலை அழகுறுத்தும் அழகான இளவேனிற்பொழுது தொடங்கிவிட்டது; அவர்தான் இன்னும் வரவில்லை.*"

கருத்து

இளவேனிற்கால அதிரல் பூக்கிறது; அவர் இன்னும் வரவில்லை.

குறிப்பு

'அதிரல் பூ கருமணல்மீது பரவியிருப்பது நிலமகளின் கூந்தலை அழகு செய்வதுபோலத் தோன்றுகிறது. ஆனால், என் கூந்தலில் அதை அணிவித்து அழகு பார்க்க நம் காதலர் இன்னும் வந்திலர்' எனத் தலைவி வருந்துகிறாள். (அதிரல் பூ இளவேனிற்காலத்தில் பூப்பது.)

சொற்பொருள்

2. அதிரல் - புனலிக் கொடி; தாஅய் - பரவி.
3. கதுப்புஅறல் - கூந்தல் போன்ற கருமணல்; அணியும் - அழகு செய்யும்; காமர் - விருப்பத்தை எழுப்பும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 346 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக்கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
அம்சினைப் பாதிரி அலர்ந்தெனச்
செங்கண் இருங்குயில் அறையும் பொழுதே.

தெளிவுரை

"*அழகான கிளைகளைக் கொண்ட பாதிரி மரம் பூத்துக் குலுங்க, அதன் மேலிருந்தபடி சிவந்த கண்களைக் கொண்ட கருங்குயில்கள் இளவேனிலின் வரவினைக் கூவித் தெரிவிக்கின்றன. காதலர் சொன்ன பருவம் தொடங்கிவிட்டது; ஆனால், அவரோ இன்னும் வரவில்லை.*"

கருத்து

இளவேனிற்பருவமோ பிழையாது வந்தது. காதலரோ சொல் பிழைத்தார்.

குறிப்பு

இளவேனிலில் பாதிரி பூக்கும். பாதிரியின் மணம் பிரிந்தோர் உள்ளத்தில் காம உணர்வினைத் தூண்டிவிடும். இந்த உணர்வால்தான் காதலி, குயில் கூவுகிறது என்று சொல்லாமல் 'அறைகிறது' என்கிறாள்.

சொற்பொருள்

2. அம்சினை - அழகிய கிளை; பாதிரி - பாதிரி மரம்; அலர்தல் - மலர்தல்.
3. இருங்குயில் - கருங்குயில்; அறையும் - கூவும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 348 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக் கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
எழில்தகை இளமுலை பொலியப்
பொரிப்பூம் புன்கின் முறிதிமிர் பொழுதே.

தெளிவுரை

"எழில் தன்மையெலாம் ஒருங்கே பொருந்திய இளமை வாய்ந்த என் முலைகள் பொலிவு பெற, பொரிபோலும் பூக்களைக் கொண்ட புன்கின் தளிர்களை அணிந்துகொள்ள வேண்டிய காலமும் தொடங்கிவிட்டது; ஆனால், அவர் இன்னும் வரவில்லையே!"

கருத்து

இளவேனில் தொடங்கிவிட்டது; அவர் இன்னும் வரவில்லையே!

குறிப்பு

பிற மகளிர் தம் இளமுலை, மேலும் பொலியப் புன்கின் தளிர்களைத் தம் முலைகளில் அப்பிக்கொண்டு தம் காதலரோடு கூடிக் களித்திருக்கும் இளவேனிலைக் காணும் தலைவி, தலைவன் இன்னும் வாராமையால் தான் அத்தகு இன்பத்தினை இழந்திருக்கும் நிலையினை எண்ணி வருந்துகிறாள்.

சொற்பொருள்

2. எழில் தகை - எழில் தன்மை.
3. பொரிப் பூம் புன்கு - பொரிபோலும் பூக்களைக் கொண்ட புன்க மரம்; முறி - தளிர்; திமிர்தல் - (முலையில்) சாந்தின்மீது அப்பிக் கொள்ளுதல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 347 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக் கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கிவிட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
வலஞ்சுரி மராஅம் வேய்ந்து,நம்
மணங்கமழ் தண்பொழில் மலரும் பொழுதே.

தெளிவுரை

“வலமாய்ச் சுழிந்து தோன்றும் பூக்களைக் கொண்டது மரா மரம். அது, தன் மேற்புறத்தை மலர்களால் வேய்ந்துகொண்டு அழகுடன் விளங்குகிறது. அதனால் நம்முடைய குளிர்ச்சி பொருந்திய மலர்ச் சோலையெங்கும் மணம் கமழ்ந்துகொண்டிருக்கிறது. இத்தகைய இளவேனிற்பொழுதும் இதோ தொடங்கி விட்டது; அவரோ இன்னும் வரவில்லையே!”

கருத்து

மராமரம் பூத்து மணங்கமழும் இளவேனிற்பருவம் தொடங்கியதை அவர் இன்னும் உணரவில்லையோ!

குறிப்பு

தலைவியோ மலர் சூடாமலிருக்கிறாள். ஆனால், பொழிலோ மலர்க் குவையால் தன்னை அழகுபடுத்தி மூடிக்கொண்டிருக்கிறது. இதனைக் காணும் தலைவி மனம் வருந்துகிறாள். (மராம் இளவேனிலில் பூக்கும்.)

சொற்பொருள்

2. வலஞ்சுரி - வலம்புரிச்சங்குபோல வலப்புறமாய் வளைந்து மலரும் பூ; மராம் – மரா மரம், வெண்கடப்ப மரம்; வேய்ந்து – மலர்களால் தம் மேற்புறத்தை நிரப்பி.
3. தண்பொழில் – குளிர்ச்சி பொருந்திய சோலை; பொழுது – கார் காலம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 349 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக் கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கிவிட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
பொரிகால் மாஞ்சினை புதைய
எரிகால் இளந்தளிர் ஈனும் பொழுதே.

தெளிவுரை

“பொரிந்த அடிமரத்தைக் கொண்ட மாமரம், தன் கிளைகள் மறையுமாறு, நெருப்பைப் போல ஒளியுமிழும் இளந்தளிர் களை ஈன்றுள்ள இளவேனிற்பருவம் வந்துவிட்டது; ஆனால், காதலரோ வரவில்லை.”

கருத்து

மாமரங்களில் தளிர் தோன்றும் இளவேனிற்காலத்திலும் அவர் வந்திலர்.

குறிப்பு

மாமரத்தில் கிளை தெரியாதவாறு இளந்தளிர்கள் அரும்பி மறைக் கின்றன; தலைவன் பிரிந்ததால் தலைவியின் மாமை நிறம் தோன்றாதவாறு

பசலை படர்ந்து மறைக்கின்றது. (இளவேனிலில் மாமரத்தில் தளிர் தோன்றும்.)

சொற்பொருள்

1. தான் - கார் காலம்; வந்தன்று - தொடங்கிவிட்டது.
2. பொரிகால் - பொரிந்த அடிமரம்; மாஞ்சினை - மா+சினை - மாமரத்தின் கிளை; புதைய - மறையுமாறு.
3. எரிகால் - நெருப்பைப் போல் ஒளி உமிழும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 350 **ஓதலாந்தையார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிந்துழிக் குறித்த பருவம் வரக் கண்ட தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன பருவம் தொடங்கி விட்டது; ஆனால், அவன் வரவில்லை; அப்போது தலைவி வருந்திச் சொல்லியது.

அவரோ வாரார் தான்வந் தன்றே
வேம்பின் ஒண்பூ உறைப்பத்
தேம்படு கிளவியவர் தெளிக்கும் பொழுதே.

தெளிவுரை

"வேப்ப மரத்தின் ஒளி பொருந்திய பூக்கள் மழைத்துளிபோல் உதிர்ந்து மண்ணில் படியும். அதனைக் காட்டி இனிமை ததும்பும் சொற்களாலே காதலன், ஊடியிருக்கும் தன் காதலியைத் தெளி வித்துக் கூடி மகிழ்வன். இத்தகைய இளவேனில் தொடங்கியும், காதலன் இன்னும் வந்து சேரவில்லை."

கருத்து

வேம்பு பூக்கும் இளவேனில் தோன்றியும் காதலர் தோன்றினார் இலர்.

சொற்பொருள்

2. வேம்பு - வேப்ப மரம்; ஒண்பூ - ஒளி கொண்ட பூக்கள்; உறைப்ப - உதிர்ந்து படிய.
3. தேம்படு கிளவி - தேன் போன்ற இனிமையான பேச்சு.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 31 **மாறன் பொறையனார்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் இளவேனிற்பருவத்தில் திரும்பி வருவதாய்க் கூறிப் பிரிந்து சென்றான். அவ்வாறு அவன் திரும்பவில்லையே என்று வருந்திய தலைவி தோழியிடம் சொல்லியது.

உதிரம் துவரிய வேங்கை உகிர்போல்
எதிரி முருக்கரும்ப ஈர்ந்தண்கார் நீங்க, –எதிருநர்க்(கு)
இன்பம் பயந்த இளவேனில் காண்தொறும்
துன்பம் கலந்தழியும் நெஞ்சு.

தெளிவுரை

"இரத்தத்தை உறிஞ்சிய புலியின் குருதி தோய்ந்த நகம் போல முள் முருக்க மரங்கள் தமக்குரிய பருவத்தில் சிவந்த அரும்புகளைத் தோற்றுவித்துள்ளன. குளிர்ந்த மேகங்கள் வானத்தினின்றும் விலகி விட்டன; தலைவனும் தலைவியுமாய் எதிர்ப்பட்டுக் கூடியவர்க்குப் பேரின்பத்தைத் தரும் இளவேனிற் காலத்தைக் காணும் போதெல்லாம் என் மனம் துன்பப்பட்டு வருந்துகின்றது" எனத் தோழியிடம் தலைவி கூறி வருந்துகிறாள்.

கருத்து

இளவேனில் தொடங்கிவிட்டது; ஆனால், தலைவன் இன்னும் வரவில்லை.

சொற்பொருள்

1. உதிரம் - குருதி; துவரிய - படிந்து உலர்ந்த; வேங்கை - புலி; உகிர் - நகம்.
2. எதிரி - பருவத்தோடு பொருந்தி; முருக்க - முருக்க மரங்கள்; ஈர்ந் தண்கார் - மிகவும் குளிர்ந்த மேகங்கள்; நீங்க - விலகிவிட; எதிருநர்க்கு - (காதலனும் காதலியுமாய்) எதிர்ப்பட்டுக் கூடியவர்க்கு.
3. காண்தொறும் - காணும்போதெல்லாம்.
4. அழியும் - வருந்தும்.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 13 **கண்ணஞ்சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி, தான் திரும்பி வருவதாய்த் தலைவன் சொன்ன காலம் தொடங்கியும் அவன் வாராததைக் கண்டு வருந்தித் தோழியிடம் கூறியது.

ஓங்கு குருந்தோ(டு) அரும்பீன்று பாங்கர்
மராஅ மலர்ந்தன தோன்றி விராஅய்க்
கலந்தனர் சென்றார் வலந்தசொல் எல்லாம்
பொலந்தொடீஇ பொய்த்த குயில்.

தெளிவுரை

பொன் வளையல்களையணிந்த தோழியே! மராமரங்கள் பக்கத்தே நிற்கும் குருந்த மரங்களோடு கூடி, மொட்டுகளை வெளியிட்டுப் பூக்கச் செய்துள்ளன. நம்முடன் கூடியிருந்த

தலைவன் நம்மைப் பிரிந்து சென்றபோது சொல்லிய உறுதி மொழிகளையெல்லாம் வேனிற்பருவம் தொடங்கியதால் குயில்கள் கூவிப் பொய்யாக்கிவிட்டன.

கருத்து

தலைவன் வேனிற்காலத்தில் திரும்புவதாய் உறுதி கூறிச் சென்றான்; வேனிற்காலம் தொடங்கிவிட்டதைக் குயில்கள் கூவித் தெரிவிக்கின்றன. குயிற் குரல் தலைவன் சொற்களைப் பொய்யாக்கிவிட்டது.

சொற்பொருள்

1. ஓங்கு - உயர்ந்திருக்கும்; குருந்து - குருந்த மரங்கள்; பாங்கர் - பக்கத்தே.
2. மராஅ - மராமரம்; தோன்றி - நமக்கு எதிரே தோன்றி; விராஅய் - நம்முடன் நட்புக்கொண்டு.
3. கலந்தனர் - கூடினராய்; வலந்த - சொல்லிய.
4. பொலம் - பொன்; தொடி - வளையல்; பொய்த்த - பொய்யாக்கி விட்டது.

தலைவி கூற்று

திணைமொழி ஐம்பது 14 **கண்ணஞ் சேந்தனார்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டழிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி, தலைவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன காலம் தொடங்கியும் அவன் வாராததைக் கண்டு வருந்தித் தோழியிடம் கூறியது.

புன்கு பொரிமலரும் பூந்தண் பொழில்எல்லாம்
செங்கண் குயில்அக வும்போழ்து கண்டும்
பொருள்நசை உள்ளம் துரப்பத் துறந்தார்
வரும்நசை பார்க்கும்என் நெஞ்சு.

தெளிவுரை

அழகிய குளிர்ச்சி பொருந்திய சோலைகளிலெல்லாம் புன்க மரங்கள் பொரிபோலப் பூத்துள்ளன. சிவந்த கண்களைக் கொண்ட குயில்கள் வேனிற்காலம் தொடங்கியதைக் கூவி உணர்த்துகின்றன. அதை அறிந்தும், பொருள் தேடும் விருப்பி னாலே உள்ளம் செலுத்த நம்மைப் பிரிந்து சென்ற என் காதலர் வரவை எதிர்பார்த்து நிற்கிறது, என் நெஞ்சு.

கருத்து

தலைவன் தான் குறித்த வேனிற்காலத்தில் வாராததால் தலைவியின் நெஞ்சம் அவன்மீது வெறுப்புக்கொள்ளாது அவன் வருவதனையே எதிர்பார்த்து நின்றது.

குறிப்பு

தலைவன், 'பொருள் நசையால்' பிரிந்து சென்றான்; தலைவியின் நெஞ்சமோ அவன் 'வருவான்' என்னும் நசையோடு எதிர்பார்த்திருக்கிறது.

சொற்பொருள்

1. பொரிமலரும் - பொரி போல மலரும்; பூ - அழகிய; தண் - குளிர்ந்த; பொழில் - சோலை.
2. அகவும் - கூவியழைக்கும்; போழ்து - வேனிற்காலம்.
3. நசை - விருப்பம்; துரப்ப - (நம்மை விட்டுச்) செல்லும்படி செய்ய; துறந்தார் - பிரிந்து சென்றவர்.
4. வரும் - வருகின்ற.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 67 **கணிமேதாவியார்**

திணை : பாலை

கூற்று

பருவங்கண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தான் வருவதாய்க் குறிப்பிட்டுச் சொன்ன வேனிற்பருவம் தொடங்கியதைக் கண்டு வருந்திய தலைவி தன் தோழியைப் பார்த்துக் கூறியது.

வெறுக்கைக்குச் சென்றார் விளங்கிழாய்! தோன்றார்
பொறுக்களன் றால்பொறுக்க லாமோ – ஒறுப்பபோல்
பொன்னுள் உறுபவளம் போன்ற புணர்முருக்கம்
என்னுள் உறுநோய் பெரிது.

தெளிவுரை

“ஒளிமிக்க அணிகலன்களைக் கொண்ட தோழியே! செறிவான முருக்க மரங்கள் என்னைத் துன்புறுத்துவனபோலப் பொன்னுள் வைத்த பவளத்தினைப் போன்று மலர்ந்துள்ளன. அவற்றால் என் உள்ளத்தில் பொருந்திய துக்கம் மிகுந்துள்ளது. பொருள் தேடச் சென்ற தலைவன் வேனிற்பருவம் தொடங்கியும் திரும்பி வரவில்லை. இத்தகைய நிலையில் என்னைப் பார்த்து நீ, ‘பொறுத்துக்கொள்’ என்றால் பொறுத்துக்கொள்ள இயலுமோ?” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

வேனில் தொடங்கியது; வேண்டியவர் இன்னும் வரவில்லை. பொறுத்திருப்பது எப்படி?

விளக்கம்

முருக்கம் பூவின் புறவிதழ் இளம் மஞ்சள் நிறமும் உள்ளிதழ்கள் செந்நிறமும் கொண்டவை. எனவே, முருக்க மலர் ‘பொன்னுள் உறுபவளம்’ போலத் தோன்றுகிறது.

சொற்பொருள்

1. வெறுக்கைக்கு - பொருள் தேடும் பொருட்டு; விளங்குஇழாய் - ஒளி மிக்க அணிகலன்களையுடையவளே!; தோன்றார் - காணப்பெற வில்லை.
2. பொறுக்க - ஆற்றியிரு, பொறுத்திருப்பாய்; ஒறுத்தல் - வருத்தல், தண்டித்தல்.
3. பொன்னுள் உறுபவளம் - பொன்னுள் வைக்கப்பட்ட பவளம்; புணர்முருக்கம் - நெருங்கிய முருக்க மலர்கள்.
4. என் உள் - என் உள்ளத்திலே; உறு - உற்ற; நோய் - துன்பம், வருத்தம்.

தலைவி கூற்று

அகநானூறு 37 — **விற்றூற்று மூதெயினனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகள் தோழிக்கு வன்புறை எதிர் அழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்த பருவத்தில் திரும்பி வாராமையால் தலைவி பிரிவாற்றாது வருந்தினாள். தோழி தேறுதல் உரை கூறினாள். தலைவி அதனை ஏற்காது தோழி கூறியதை மறுத்துக் கூறியது.

மறந்துஅவண் அமையார் ஆயினும் கறங்குஇசைக்
கங்குல் ஓதைக் கலிமகிழ் உழவர்
பொங்கழி முகந்த தாஇல் நுண்துகள்
மங்குல் வானின், மாதிரம் மறைப்ப,
வைகுபுலர் விடியல் வைபெயர்த்து ஆட்டி
தொழிற்செருக்கு அனந்தர் வீட எழில்தகை
வளியொடு சினைஇய வண்தளிர் மாஅத்துக்
கிளிபோல் காய கிளைத்துணர் வடித்துப்
புளிப்பதன் அமைத்த புதுக்குட மலிர்நிறை
வெயில்வெரிந் நிறுத்த பயில்இதழ்ப் பசுங்குடைக்

கயம்மண்டு பகட்டின் பருகி காண்வரக்
கொள்ளொடு பயறு பால்விரைஇ வெள்ளிக்
கோல்வரைந் தன்ன வால்அவிழ் மிதவை
வாங்குகை தடுத்த பின்றை ஓங்கிய
பருதிஅம் குப்பை சுற்றி, பகல்செல,
மருத மரநிழல் எருதொடு வதியும்
காமர் வேனில் மன்இது
மாண்நலம் நுகரும் துணைஉடை யோர்க்கே.

தெளிவுரை

“இரவு நீங்கிய வைகறைப்பொழுதில் மிக்க களிப்புடன் உழவர்கள் ஆள்களை வேலைக்கழைப்பர். இருள் புலர்கின்ற அவ்விடியலில் களத்திலுள்ள நெற்கட்டுகளை அவிழ்த்துப் பரப்பிக் காளைகளைவிட்டுப் போரடித்து, வைக்கோலை நீக்கிவிட்டு நெல்லைக் குவித்துத் தூற்றுவர். அப்பொழுது எழும் நுண்ணிய கூளங்கள், முகில்களைப் போலத் திசைகளை மறைக்கும். அவ்வுழவர்கள் காற்றால் அசையும் தளிர் உடைய கிளைகளைக் கொண்ட மாமரத்தில் கிளி வடிவில் காய்த்துள்ள காய்களைக் கொத்தாய்ப் பறித்து அவற்றைப் புதுக் குடத்திலிட்டு, புளிக்கும் பதத்தில் செய்த கள்ளைப் பசிய பனைஓலைக் குடைகளில் ஊற்றி, குளத்தில் நீர் மண்டும் எருமைக்கடாக் களைப் போலக் குடிப்பர். மேலும், கொள்ளையும் பயற்றையும் பாலுடன் கலந்து புளிப்புத் தன்மை கொண்ட கூழ் செய்வர். வெள்ளிக்கம்பி போன்று ஒழுகும் தன்மை கொண்ட அக்கூழினைப் போதுமென்ற அளவு குடித்ததும் கையால் தடுத்து நிறுத்துவர். பிறகு, சூரியனைப் போல வட்ட வடிவிலுள்ள நெற்குவியலைக் குதிர்களாய்ப் பாதுகாப்புடன் சுற்றி வைப்பர். இவ்வேலைகள் முடிந்ததும் மருத மர நிழலில் மாடுகளுடன் ஓய்வாகத் தங்குவர். இத்தகைய இளவேனிற்காலம் துணையுடனிருந்து நலத்தை அனுபவிப்பவர்க்கு மிகவும் நல்லது. நமக்கு என்ன பயன்?”

கருத்து

இனிய தலைவர் திரும்பி வாராததால் இளவேனில் நலனை இழந்திருக் கிறோம்.

விளக்கம்

"உழவர் தூற்றாப் பொலியைத் தூற்றி, தொழில் செய்த களைப்பு நீங்கப் புதுக்குடத்திலுள்ள கூழை வேண்டுமளவு பருகுவர்; நெல்லைக் குதிராகச் சுற்றிப் பாதுகாப்புச் செய்த பிறகு மருதமர நிழலில் எருதுகளோடு ஒய்வாய்த் தங்குவர். அழகிய இந்த இளவேனிற்காலம் துணையோடிருப்பவர்க்கு இனிய காலம்; நமக்கோ பயனின்றிக் கழிகின்றது" எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. மறந்து அவண் அமையார் - மறந்து அங்கே தங்கியிரார்; கறங்கு இசை - ஒலிக்கும் ஒலி.
2. கங்குல் - வைகறை; ஓதை - (ஆள்களை அழைக்கும்) ஆரவாரம்; கலிமகிழ் - மிக்க களிப்புற்ற.
3. பொங்கழி - தூற்றாப்பொலி (தூற்றா நெல்); தாஇல் - வலிமையில்லாத; துகள் - நுண்ணிய கூளங்கள்.
4. மங்குல் வானம் - இருண்ட மேகம்; மாதிரம் - திசை.
5. வைகுபுலர் - இருள் விடிகின்ற; வை - வைக்கோல்; பெயர்த்து - பிரித்து; ஆட்டி - (கடா விட்டுக்) கலக்கி.
6. தொழிற்செருக்கு - கடா விடுதல் தொழிலால் ஏற்பட்ட செருக்கு; அனந்தர் - மயக்கம்; வீட - நீங்க; எழில்தகை - அழகினால் மேன்மையுற்ற.
7. வளி - காற்று; சினை - கிளை; வண்மை - வளம்; மா - மா மரம்.
8. கிளைத்துணர் - கிளைக் கொத்துகளிலிருந்து; வடித்து - கிள்ளி யெடுத்து, பறித்து.
9. புளிப்பதன் - புளிக்கும் தன்மை; அமைத்த - அமையுமாறு; புதுக்குட மலிர் - புதுக் குடங்களில் மிகப் பெய்து; நிறை - சாரம் - வடித்தெடுத்த பகுதி.
10. வெயில் வெரிந் நிறுத்த - வெயிலில் முதுகுப்புறம் தோன்ற நட்ட (வெரிந் - முதுகு); பயில்இதழ் - மிக்க (பனந்) தோடுகளைக் கொண்ட; பசுங்குடை - பசுமையான பனையோலைக்குடை.
11. கயம் - குளம்; மண்டுதல் - நிரம்பக் குடித்தல்.
12. கொள் - ஒரு வகைப் பயறு; விரைஇ - கலந்து; வெள்ளிக்கோல் - வெள்ளிக்கம்பி.

13. வரைந்தன்ன - (ஒரே அளவாய்) நறுக்கி வைத்தாற்போன்ற; வால் அவிழ் - வெள்ளிய உணவு; மிதவை - கஞ்சி.
14. வாங்குகை தடுத்த பின்றை - வளைந்து உண்ணும் கை போதும் என்று தடுத்த பிறகு; ஓங்கிய - உயர்ந்த.
15. பருதி அம் குப்பை - வட்டமாய்க் குவிக்கப்பட்ட அழகிய குவியலை (பரிதி - வட்டம்); சுற்றி - கூடாய்க் குதிராய்ச் சுற்றி.
16. வதியும் - தங்கும்.
17. காமர் - விருப்பம்.
17-18. நலத்தையனுபவிக்கும் துணையுடையோர்க்கு இளவேனில் நல்லது.

தலைவி கூற்று

அகநானூறு 97 **மாமூலனார்**

திணை : பாலை

கூற்று

வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பொருள்வயிற்பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் திரும்பாது காலம் தாழ்த்தியது கண்ட தலைவி மிகவும் வருந்தினாள். தலைவன் வரும்வரை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழியை நோக்கித் தலைவி கூறியது.

'கள்ளிஅம் காட்ட புள்ளிஅம் பொறிக்கலை
வறன்உறல் அம்கோடு உதிர, வலம்கடந்து,
புலவுப்புலி துறந்த கலவுக்கழி கடுமுடை,
இரவுக்குறும்பு அலற நூறி, நிரைபகுத்து,
இருங்கல் முடுக்கர்த் திற்றி கெண்டும்
கொலைவில் ஆடவர் போல, பலவுடன்
பெருந்தலை எருவையொடு பருந்துவந்து இருக்கும்
அருஞ்சுரம் இறந்த கொடியோர்க்கு அல்கலும்,
இருங்கழை இறும்பின் ஆய்ந்துகொண்டு அறுத்த
நுணங்குகண் சிறுகோல் வணங்குஇறை மகளிரொடு
அகவுநர்ப் புரந்த அன்பின், கழல்தொடி,

நறவுமகிழ் இருக்கை, நன்னன் வேண்மான்
வயலை வேலி வியலூர் அன்ன,நின்
அலர்முலை ஆகம் புலம்ப, பலநினைந்து,
ஆழல் என்றி– தோழி! யாழஎன்
கண்பனி நிறுத்தல் எளிதோ– குரவுமலர்ந்து,
அற்சிரம் நீங்கிய அரும்பத வேனில்
அறல்அவிர் வார்மணல் அகல்யாற்று அடைகரை,
துறைஅணி மருதமொடு இகல்கொள ஓங்கி,
கலிழ்தளிர் அணிந்த இருஞ்சினை மாஅத்து
இணர்ததை புதுப்பூ நிரைத்த பொங்கர்,
புகைபுரை அம்மஞ்சு ஊர,
நுகர்குயில் அகவும் குரல்கேட் போர்க்கே.

தெளிவுரை

“தோழி! கள்ளிக்காட்டிலே, புள்ளிகளைக் கொண்ட கலை மானை, அதன் வறட்சியுற்ற அழகிய கொம்புகள் உதிருமாறு புலால் விரும்பும் புலி துரத்திக் கொன்று தின்னும். அது கைவிட்டுச் சென்ற மூட்டுவாய் கிழிந்த கடுமையான நாற்றத்தைக் கொண்ட தசைகள் காட்டுவழியில் கிடக்கும். அத்தசையைத் தின்னக் கழுகுகளும், பருந்துகளும் சூழ்ந்திடும்.

“இரவு நேரத்தில் காட்டரணில் உள்ளவர்களை அவர்கள் அலறுமாறு கொன்று, பசுக்களைக் கவர்ந்து வருவதோடு, இறைச்சியைத் தின்னும் வெட்சி வீரர் திரிவதைப் போல, பெரிய தலையைக் கொண்ட கழுகுகளோடு பருந்துகள் பலவும் சுற்றித் திரியும். அத்தகைய அரிய காட்டுவழியே அருளில்லாது நம் தலைவர் சென்றுள்ளார்.

“நன்னன் வேண்மான் என்பவன் வீரக்கழல் அணிந்தவன்; கள்ளுண்டு மகிழும் இருக்கையை உடையவன்; வளைந்த முன் கையில், மூங்கில் காட்டில் அறுத்த சிறிய கணுக்களைக் கொண்ட மூங்கிலை ஏந்தி வரும் விறலியரோடு பாணர்களையும் பாதுகாக்கும் அன்பினைக் கொண்டவன். அவனுடைய வியலூர் வயலைக்கொடி பொருந்திய வேலிகளைக் கொண்டது.

அவ்வியலூரைப் போன்ற அழகிய உன் மார்பகங்கள் பொலிவிழக்குமாறு தலைவனை நினைந்து தனிமையில் அழுது கொண்டிராதே' எனத் தோழியே நீ என்னைத் தேற்றுகின்றாய்.

"குரா மலர் மலர்கின்ற முன்பனிக்காலம் நீங்கி, இளவேனிற் காலம் வந்துற்றது. அறல் விளங்கும் நீண்ட மணலைக் கொண்ட அகன்ற ஆற்றங்கரையில், அணி செய்யும் மருத மரங்கள் உயர்ந்து நிற்க, தளிர்களால் அழகு செய்யப்பட்ட பெரிய கிளைகளைக் கொண்ட மாமரங்களின் சிறிய கொம்புகளிலே வெண்ணிற முகில்கள் தவழ்ந்து கொண்டிருக்கும். அச்சோலைகளில் குயில்கள் கூவிக்கொண்டிருக்கின்றன. அக்குரலைக் கேட்டுத் தனித்திருக்கும் என்னால் அழாமல் இருக்க இயலுமோ? (நீயே கூறு.)"

கருத்து

இளவேனிற்காலம் தொடங்கியும் இன்னும் தலைவர் வரவில்லையே!

விளக்கம்

"தோழி! புலி, கலைமானை அடித்துத் தின்றுவிட்டுப் போட்டுச் சென்ற தசையைச் சூழ்ந்து, கழுகுகளும் பருந்துகளும் கொத்தும் காட்டுவழியில் தலைவர் சென்றுள்ளார். தோழியே! தனித்திருக்கும் என்னைப் பார்த்து, 'உன் மார்பகம் அழகிழக்கும் படியாக அழாதே' என்கிறாய்! பனிக்காலம் நீங்கி வேனில் தொடங்கிவிட்டது. பூக்கள் நிறைந்த மாமரத்தின் மரக்கொம்பு களில் மேகம் தவழ, அவ்வின்பத்தை அனுபவிக்கும் குயில்கள் கூவிக்கொண்டிருக்கின்றன. அக்குரலைக் கேட்கும் என்னால் அழாதிருக்க இயலுமா? நீயே சொல்" என்று தலைவி, தோழியை நோக்கிக் கேட்டாள்.

சொற்பொருள்

1. கள்ளி - கள்ளிச்செடி; கலை - ஆண்மான்.
2. வறன்உறல் கோடு - வற்றிய மான் கொம்பு; கோடு - கொம்பு; வலம்கடந்து - கொன்று அழித்து.
3. புலவு - புலால் நாற்றம்; துறந்த - விட்டுச்சென்ற; கலவுக்கழி - மூட்டுவாய் ஒழிந்த; கடுமுடை - கடிய முடைநாற்றம்.

4. குறும்பு - அரண்; நூறி - அழித்து; நிரைபகுத்து - தாம் கொண்டுவந்த பசுக்களைப் பிரித்துக்கொண்டு.
5. முடுக்கர் - முடுக்கு; திற்றி கெண்டும் - தசையினை அறுத்துத் தின்னும்.
6. ஆடவர்போல - வெட்சி வீரர் போல.
7. எருவை - கழுகு; இருக்கும் - பறந்து திரியும்.
8. சுரம் - காடு; அல்கலும் - நாள்தோறும்.
9. கழை - மூங்கில்; இறும்பு - சிறு காடு.
10. நுணங்குகண் - சிறிய கணு; வணங்குஇறை - வளைந்த முன்கை.
11. அகவுநர் - பாடும் பாணர்; புரந்த - பாதுகாத்த.
12. நறவு - கள்; நன்னன் வேண்மான் - அரசருள் ஒருவன்.
13. வயலை - ஒரு வகைக் கொடி; வியலூர் - நன்னனின் ஊர்.
14. ஆகம் - மார்பு; புலம்ப - வருந்த.
15. ஆழல் என்றி - அழாதே என்கிறாய்; யாழ - தோழி!
16. குரவு - குரவ மரம்.
17. அற்சிரம் - முன்பனிக்காலம்; வேனில் - வேனிற்காலம்.
18. வார் - நீண்ட.
19. துறைஅணி - துறையை அழகு செய்யும்; மருதம் - மருத மரம்; இகல் - மாறுபாடு; ஓங்கி - வளர்ந்து.
20. கலிழ் - (அழகு) ஒழுகும், (கலிழ்தல் - ஒழுகுதல்); இருஞ்சினை - பெரிய கிளை; மா - மா மரம்.
21. இணர்ததை - பூங்கொத்து நெருங்கிய; பொங்கர் - சோலை.
22. புரை - ஒத்த; மஞ்சு - மேகம்; ஊர - பரவ.
23. அகவும் - கூவும்.

தலைவி கூற்று

அகநானூறு 229 **மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளை வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள், வன்புறை எதிரழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

கார்ப்பருவத்தே திரும்பி வருவதாய்க் கூறிப் பொருளீட்டச் சென்ற தலைவன் உரிய காலத்தில் திரும்பி வாராததால் வருந்தியிருந்த தலைவியை ஆற்றியிருக்குமாறு தோழி கூறினாள்; 'கார்ப்பருவம் முடிந்து வேனிற் பருவத்தும் அவர் வரவில்லையென்றால் நான் எவ்வாறு ஆற்றியிருப்பேன்' எனத் தலைவி வருந்திக் கூறியது.

பகல்செய் பல்கதிர்ப் பருதிஅம் செல்வன்
அகல்வாய் வானத்து ஆழி போழ்ந்தென,
நீர்அற வறந்த நிரம்பா நீள்இடை,
கயந்தலைக் குழவிக் கவிஉகிர் மடப்பிடி
குளகுமறுத்து உயங்கிய மருங்குல் பலஉடன்
பாழ்ஊர்க் குரம்பையின் தோன்றும் ஆங்கண்,
நெடுஞ்சேண் இடைய குன்றம் போகி,
பொய்வ லாளர் முயன்றுசெய் பெரும்பொருள்
நம்இன்று ஆயினும் முடிக, வல்லென,
பெருந்துனி மேவல், நல்கூர் குறுமகள்!—
நோய்மலிந்து உகுத்த நொசிவரல் சில்நீர்
பல்இதழ் மழைக்கண் பாவை மாய்ப்ப,
பொன்ஏர் பசலை ஊர்தர, பொறிவரி
நல்மா மேனி தொலைதல் நோக்கி,
இனையல் என்றி; தோழி! சினைய
பாசரும்பு ஈன்ற செம்முகை முருக்கினப்
போதுஅவிழ் அலரி கொழுதி, தாதுஅருந்து,
அம்தளிர் மாஅத்து அலங்கல் மீமிசை,
செங்கண் இருங்குயில் நயவரக் கூஉம்
இன்இள வேனிலும் வாரார்,
'இன்னே வருதும்' எனத்தெளிந் தோரே.

தெளிவுரை

"பகலைத் தோற்றுவிக்கும் பல கதிர்களைக் கொண்ட ஞாயிற்றுச் சக்கரம் அகன்ற வானத்தை அறுத்துச் செல்வதால் (வெப்பமிக்கு) எங்கும் நீரில்லாது நிலம் வறண்டுள்ளது. செல்லத் தொலையாத நீண்ட வழியிலே, மெல்லிய தலையினைக் கொண்ட தன் கன்று உண்ண வேண்டும் என்பதற்காகக் குவிந்த நகத்தினைக் கொண்ட இளைய பெண்யானை தான் உண்ணாமல் தழையுணவை மறுத்து நிற்கும். அதனால் வாடிய உறுப்புகளோடு நிற்கும் அந்த யானை, பாழடைந்த ஊரில் ஒரு குடிசை நிற்பதுபோலத் தோன்றும். அத்தகைய இடங்களைக் கொண்ட நெடிய தொலைதூரத்திலுள்ள குன்றுகளைத் தாண்டி, பொய் பேசுதலில் வல்லவராகிய நம் தலைவர் பெரும் பொருள் தேடச் சென்றுள்ளார். அவர் முயற்சியுடன் ஈட்டும் பொருள் நாம் இல்லாமல் (இறந்து) விட்டாலும் அவருக்குக் கை கூடட்டும் என்று, 'மகப்பேற்றிற்காக மிகவும் வருந்தி வாடிய வர்க்குப் பெறுதற்கரிய மகளாக வாய்த்த தலைவியே! நீ துன்பம் கொள்ளாதே' என்கிறாய்.

"வருத்த மிகுதியால் என் கண் உதிர்த்த நுண்ணிய சிறிய கண்ணீர், பல இதழ்களைக் கொண்ட தாமரை மலர் போன்ற குளிர்ச்சி பொருந்திய என் கண்ணில் உள்ள கருமணியை மறைக்கிறது. பொன்னையொத்த பசலை பரக்க, புள்ளித் தேமலைக் கொண்ட நல்ல சிறந்த என் மேனியின் அழகு தொலை கிறது. தோழியே! அதனை நோக்கியும், 'நீ வருந்தாதிரு' " என்று என்னைத் தேற்றுகிறாய்.

"தோழி! போதுகள் விரிந்த முருக்க மரத்தின் அழகிய மலர்களைக் கிண்டி, அவற்றின் பொடிகளையுண்டு அழகிய தளிர்களைக் கொண்ட மா மரத்தின் அசையும் கிளைகளின் உச்சியிலிருந்து, சிவந்த கண்ணினைக் கொண்ட கருங்குயில் இனிமை தோன்றக் கூவும் இளவேனிற் காலம் இது. கார்ப் பருவத்திலேயே வந்து விடுவேன் என்று நம்மிடம் உறுதியாய்க் கூறிச் சென்ற காதலர், இன்னும் வந்திலரே! நான் எப்படிப் பொறுத்திருக்க இயலும்?" என்று தலைவி தோழியைக் கேட்கிறாள்.

கருத்து

தலைவன் கார்ப்பருவத்திலேயே வருவதாய்க் கூறியிருந்தும் இளவேனிலிலும் வரவில்லையே.

விளக்கம்

"தோழி! பொய்யுரை கூறுவதில் வல்ல நம் தலைவர் பல மலைகளைக் கடந்து சென்று முயன்று ஈட்டுகின்ற பொருள், 'நாம் இல்லையாயினும் விரைந்து கைகூடட்டும்' என மிகுந்த வெறுப்புத் தோன்றப் பேசாதே! உன் மேனி அழகு கெடுதல் நோக்கி மனம் அழியாதே என்று தேற்றுகிறாய். ஆனால், 'இப்பொழுதே வருவேன்' என்று சொல்லிச் சென்ற தலைவர், இனிய இளவேனிற் காலத்திலும் வரவில்லையே; நான் எவ்வாறு ஆற்றியிருக்க இயலும்?" எனத் தலைவி தோழியிடம் கூறி வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. பருதி - சூரியன்.
2. அகல்வாய் - அகன்ற இடம்; ஆழி - சக்கரம்; போழ்தல் - அறுத்துச் செல்லுதல்.
3. வறந்த - வறட்சியைக் கொண்ட.
4. கயந்தலை - சிறிய தலை; குழவி - கன்று; கவிஉகிர் - கவிந்த நகம்.
5. குளகு - தழையுணவு; உயங்கிய - வற்றிய; மருங்குல் - உடம்பு.
6. குரம்பை - குடிசை.
8. பொய்வலாளர் - பொய் பேசுவதில் வல்லவர் (இங்குத் தலைவனைக் குறித்தது).
9. நம் இன்று ஆயினும் - நாம் இல்லாது போயினும் (நாம் இறந்து பட்டாலும்).
10. துனி - வெறுப்பு; மேவல் - கொள்ளாதே; நல்கூர் - மகப்பேற்றிற்காக மிகவும் வருந்தி வாடியவர்; குறுமகள் - இளைய மகள், தலைவி.
11. நோய் - துன்பம்; மலிந்து - மிகுந்து; உகுத்த - சிந்திய; நொசி - நுண்ணிய; சில்நீர் - கண்ணீர்.
12. பாவை - கண்மணி; மாய்ப்ப - மறைக்க, நீர் பெருக.
13. ஏர் - ஒத்த; ஊர்தர - பரந்திட; பொறிவரி - புள்ளிகளாகிய தேமல்.
14. மா - அழகிய; தொலைதல் - அழகு கெடுதல்.
15. இனையல் - வருந்தாதே; என்றி - என்கிறாய்; சினை - கிளை.

16. பாசரும்பு - அழகிய அரும்பு; முருக்கு - முருக்க மரம்.
17. போதுஅவிழ் - போதுகள் விரிந்த மலர்; அலரி - தேன் துகள்; கொழுதி - குடைந்து.
18. மா - மா மரம்; அலங்கல் - அசைதல்; மீமிசை - உச்சியில்.
19. இருங்குயில் - கரிய குயில்; நயவர - இனிமை தோன்ற; கூஉம் - கூவும்.
21. இன்னே வருதும் - இப்பொழுதிலே வருவேன்; தெளிந்தோர் - தெளிவாய் உரைத்த தலைவர்.

தலைவி கூற்று

அகநானூறு 277 **கருவூர் நன்மார்பனார்**

திணை : பாலை

கூற்று

தலைமகன் பிரிவின்கண், தலைமகள் தோழிக்குப் பருவம் கண்டு, அழிந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், தலைவியைப் பிரிந்து பொருள் ஈட்டச் சென்றான். குறித்த பருவத்தில் அவன் திரும்பி வாராததால் வருந்திய தலைவி தோழியை நோக்கிக் கூறியது.

தண்கதிர் மண்டிலம் அவிர்அறச் சாஅய்ப்
பகல்அழி தோற்றம் போலப் பையென,
நுதல்ஒளி கரப்பவும், ஆள்வினை தருமார்,
தவல்இல் உள்ளமொடு எஃகுதுணை ஆக,
கடையல்அம் குரல வாள்வரி உழுவை
பேழ்வாய்ப் பிணவின் விழுப்பசி நோனாது,
இரும்பனஞ் செறும்பின் அன்ன பரூஉமயிர்,
சிறுகண், பன்றி வருதிறம் பார்க்கும்,
அத்தம்ஆர் அழுவத்து ஆங்கண் நனந்தலை,
பொத்துடை மரத்த புகர்படு நீழல்,
ஆறுசெல் வம்பலர் அசையுநர் இருக்கும்,

ஈரம்இல், வெஞ்சுரம் இறந்தோர் நம்வயின்
வாரா அளவை– ஆயிழை!– கூர்வாய்
அழல்அகைந் தன்ன காமர் துதைமயிர்
மனைஉறை கோழி மறனுடைச் சேவல்
போர்புரி எருத்தம் போலக் கஞலிய
பொங்குஅழல் முருக்கின் ஒண்குரல் மாந்தி,
சிதர்சிதர்ந்து உகுத்த செவ்வி வேனில்
வந்தன்று அம்ம, தானே
வாரார் தோழி!நம் காத லோரே!

தெளிவுரை

"ஆய்ந்தெடுத்த அணிகளை அணிந்துள்ள தோழியே! குளிர்ச்சியான கதிர்களைக் கொண்ட நிலவின் ஒளி பகற் பொழுதில் மெல்ல மெல்லக் குன்றி மழுங்குவது போன்று நம் நெற்றியில் ஒளி குறைந்த பிறகும் தலைவர் பொருளீட்டும் வகையில் ஊக்கத்தோடு கையில் வேலேந்திச் சென்றுவிட்டார். அவர் செல்லும் காட்டு வழியில், தயிர் கடைவது போன்ற ஒலியைப் புலி எழுப்பும். பிளந்த வாயைக் கொண்ட தன் பெண்புலி பசித்துக் கிடப்பதைப் பார்க்கப் பொறாமல் இரை தேடி வரப் புறப்பட்ட ஒளி பொருந்திய வரிகளைக் கொண்ட ஆண்புலி கரிய பனஞ்சிராய்ப்புப் போன்ற தடித்த மயிரினையும் சிறிய கண்ணையும் கொண்ட காட்டுப்பன்றி வருவதை எதிர் பார்த்துக் காத்திருக்கும். அக்காட்டில் பொந்தினைக் கொண்ட மரங்களின் புள்ளிபட்ட நிழலில் வழிப்பயணிகள் தங்கி இளைப்பாறுவர். கூரிய வாயினையும், தீ கொழுந்துவிட்டு எரிந்தாற் போன்ற அழகிய செறிந்த மயிர்ச்சிறகையும் கொண்டிருக்கும் வீட்டுக் கோழிச்சேவல் தன் பகையான சேவலொடு போர் செய்யும்போது கிளர்ந்தெழும் அதன் கழுத்தைப்போன்று முருக்க மரத்தின் செந்நிற மலர்க் கொத்துகள் பூக்கும். அவற்றில் உள்ள தேனையுண்டு வண்டினம் களித்து மகிழும். இவ்வாறாக இளவேனில் தொடங்கியும், நம் தலைவர் இன்னும் வரவில்லையே" என்று தலைவி கூறுகிறாள்.

கருத்து

இளவேனில் தொடங்கியது; அப்பொழுதில் வருவதாய்க் கூறிய தலைவர் இன்னும் வரவில்லை.

விளக்கம்

"ஆயிழை! நம் நுதல் ஒளி மழுங்கியது. பொருளீட்டும் முயற்சியினை மேற்கொண்ட தலைவன் காட்டுவழியில் சென்றுள்ளான். அவன் தான் திரும்பி வருவதாய்ச் சொன்ன இளவேனில் தொடங்கிவிட்டது; காதலர் இன்னும் வரவில்லை; நாம் என்ன செய்வோம்?" என்று தலைவி வருந்திக் கூறுகிறாள்.

சொற்பொருள்

1. தண்கதிர் மண்டிலம் - குளிர்ந்த நிலவு மண்டிலம்; அவிர்அற - ஒளி குறைய; சாஅய் - மெலிவுற்று.
2. பையென - மெதுவாய்.
3. நுதல் - நெற்றி; கரப்ப - மறைய; ஆள்வினை தருமார் - முயற்சி மேற்கொண்டு.
4. தவல்இல் - குற்றமற்ற; எஃகு - வேல்.
5. கடையல் - தயிர் கடைதல்; வாள்வரி - ஒளி பொருந்திய வரிகளைக் கொண்ட.
6. பேழ்வாய் - பிளந்த வாய்; பிணவு - பெண்புலி; விழுப்பசி - மிகுந்த பசி; நோனாது - பொறுத்திடாது.
7. பனஞ்செறும்பு - பனஞ்சிராய்ப்பு; பரூஉமயிர் - தடித்த மயிர்.
8. பன்றி - காட்டுப்பன்றி.
10. புகர்படு - புள்ளிபட்ட, புள்ளிகளைப் போலத் தோன்றும்.
11. வம்பலர் - புதியவர்; அசையுநர் - தங்கி.
14. அழல்அகைந்தன்ன - கொழுந்துவிட்டெரிந்த தீ; காமர் - விருப்பம்; துதைமயிர் - சிறந்த மயிர்.
15. மறனுடை - வீரம் மிக்க.
16. எருத்தம் - கழுத்து.
17. முருக்கு - முருக்க மரம்; ஒண்குரல் - ஒள்ளிய பூங்கொத்து; மாந்தி - உண்டு.
18. சிதர்சிதர்ந்து - பூந்தாது சிதறுமாறு (சிதர் - பூந்தாது) ; உகுத்த - சிந்திய.

தலைவி கூற்று

அகநானூறு 341 **ஆவூர் மூலங்கிழார்**

திணை : பாலை

கூற்று

பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பொருள்வயிற் பிரிந்து சென்றிருந்த போழ்தில், மிகவும் வருந்தியிருந்த தலைவி, அவன் வரவேண்டிய பருவம் தொடங்கியும் வாராமை கண்டு தோழியிடம் தன் ஆற்றாமையைக் கூறியது.

உய்தகைஇன்றால்– தோழி! பைபய–
கோங்கும் கொய்குழை உற்றன; குயிலும்
தேம்பாய் மாஅத்து ஓங்குசினை விளிக்கும்;
நாடுஆர் காவிரிக் கோடுதோய் மலிர்நிறைக்
கழைஅழி நீத்தம் சாஅய வழிநாள்,
மழைகழிந் தன்ன, மாக்கால் மயங்குஅறல்,
பதவுமேயல் அருந்து துளங்குஇமில் நல்ஏறு,
மதவுடை நாக்கொடு அசைவீடப் பருகி,
குறுங்கால் காஞ்சிக் கோதை மெல்இணர்ப்
பொன்தகை நுண்தாது உறைப்ப, தொக்குஉடன்,
குப்பை வார்மணல் எக்கர்த் துஞ்சும்,
யாணர் வேனில் மன்இது–
மாண்நலம் நுகரும் துணைஉடை யோர்க்கே?

தெளிவுரை

“தோழி! கொய்யப்பெறும் தளிர்கள் கோங்க மரங்களில் தளிர்த்துள்ளன. தேன் வழியும் மாமரத்தின் உயர்ந்த கிளைகளில் இருந்து குயில்களும் கூவுகின்றன.

“நாடுகள் நிறைவு பெறுதற்கேதுவாய் நீர்வளத்தைத் தரும் காவிரியில் ஓடக்கோலும் மறையும்படி கரை புரண்டு பெருகிய வெள்ளமும் குறைந்தது. பெருமழையும் பெய்யாது கழிய, பெரிய வாய்க்கால்களில் தங்கிய நீரைத் தளர்ச்சி நீங்கக் குடித்து,

அருகிலுள்ள அருகம்புல்லை மேய்கின்றன, காளைகள். அக்காளைகளின் அழகிய திமில்கள்மீது சிறிய அடியினைக் கொண்ட காஞ்சி மரத்தின் மாலை போன்ற மெல்லிய பூங்கொத்துகளிலிருந்து பூந்தாதுகள் உதிர, அவை மணலில் நெருங்கிக் குவிந்திருக்கும் மேடுகளில் துயிலும். இத்தகைய வேனிற்காலம், துணையினைப் பக்கத்தில் கொண்டவர்க்குச் சிறந்த இன்பத்தைத் தரும்; ஆனால், துணையைப் பிரிந்துள்ள எனக்கு இப்பருவத்தால் உய்வில்லையே! (என் செய்வது?)" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'துணை உடையோர்க்கு இன்பம் நல்கும் இளவேனில், துணையைப் பிரிந்திருக்கும் எனக்கு எவ்விதப் பயனையும் தாராது.'

விளக்கம்

"தோழி! கோங்க மரங்களில் தளிர்கள் தோன்றியுள்ளன; குயிலும் கூவுகிறது; காளைகள் வாய்க்காலில் நீர் பருகி, காஞ்சி மரத்தின் நுண்ணிய பூந்துகள் தம் உடம்பின்மேல் படிய மணல் மேட்டில் துயில்கின்றன. இத்தகைய வேனிற்காலம், இன்பம் நுகர்வதற்கு ஏற்ற துணையினை அருகில் கொண்டவர்க்கு நல்ல பருவமாகும். துணையைப் பிரிந்திருக்கும் நமக்கு என்ன பயன்? நமக்கு உய்வு இல்லையே!" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. உய்தகை - உய்தல், உய்யும் வகை; பைபய - மெல்ல மெல்ல.
2. கோங்கு - கோங்க மரம்; கொய்குழை - கொய்யப்பெறும் தளிர்கள்; உற்றன - தளிர்த்தன.
3. தேம்பாய் - தேன் வழியும்; மாஅத்து - மாமரத்தில்; ஓங்குசினை - உயர்ந்த கிளை; விளிக்கும் - கூவும்.
4. நாடுஆர் - நாடு நிறைவு பெற; கோடு - (காவிரிக்) கரை; மலிர்தல் - பெருகுதல்.
5. கழை - மூங்கில், ஓடக்கோல்; அழிதல் - மறைதல்; நீத்தம் - வெள்ளம்; சாஅய - குறைய; வழிநாள் - பிற்றை நாள்.

6. மாக்கால் - பெரிய வாய்க்கால்; மயங்குஅறல் - தங்கிய நீர்.
7. பதவு - புல்; துளங்குதல் - அசைதல்; இமில் - திமில், எருதின் முதுகுத் திரள்; ஏறு - காளை.
8. மதவுடை நாக்கு - வலிமையினைக் கொண்ட நாக்கு; அசைவீட - தளர்ச்சி நீங்க.
9. குறுங்கால் - குறுகிய அடிமரம்; காஞ்சி - காஞ்சி மரம்; கோதை - மாலை.
10. பொன்தகை - பொன் போன்ற; உறைப்ப - உதிர்த்திட; தொக்கு உடன் - ஒருங்கு கூடி.
11. வார்மணல் - நெடிய மணல்; எக்கர் - மேடு; துஞ்சும் - தூங்கும்.
12. யாணர் வேனில் - அழகிய வேனிற்பருவம்.

திருக்குறள், அதிகாரம் 123 பொழுதுகண்டு இரங்கல்

தலைவி கூற்று

திருக்குறள் 1221 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

பொழுதொடு புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

காதலனைப் பிரிந்திருக்கும் திருமணம் கொண்டுள்ள காதலி, மாலைப் பொழுதை வெறுத்துச் சொல்லியது.

மாலையோ அல்லை மணந்தார் உயிர்உண்ணும்
வேலை,நீ வாழி பொழுது.

தெளிவுரை

மாலைப் பொழுதே! திருமணம் கொண்டு காதலரைப் பிரிந்திருக்கும் மகளிர்க்கு நீ இனிக்கும் பொழுதாய் இல்லை; அவர் உயிரை வாங்கும் கொடிய வேலாய் விளங்குகிறாய். நீ வாழ்க!

கருத்து

காதலரைப் பிரிந்திருக்கும் மகளிர்க்கு மாலை நேரம், அவர் உயிரை வாங்கும் வேலாய் உள்ளது.

விளக்கம்

மாலைப் பொழுது பொதுவில் இனிய பொழுது. அதுவே, காதலரோடு கூடியிருக்கும் மகளிர்க்கு இனிமை மேலும் கூடியதாய் இருக்கும்; பிரிந்திருக்கும் மகளிர்க்கோ கொல்லும் வேல்போலக் கொடுமை செய்வதாய் இருக்கும்.

குறிப்பு

மாலை கூடினார்க்குக் குளிர்ச்சி; கூடாது பிரிந்திருப்போர்க்கோ வெய்யது.

சொற்பொருள்

2. வாழி பொழுது - மாலையே! நீ மக்கள் வாழ்த்தும் ஒரு பொழுது.
1. மணந்தார் உயிர் உண்ணும் வேலை - (ஆனால் நீ) திருமணம் செய்து கணவரைப் பிரிந்திருக்கும் மகளிர் உயிர் வாங்கும் கொடிய வேலாய் விளங்குகின்றாய்; மாலையோ அல்லை - (அதனால் அம்மகளிர்க்கு) நீ இனிய மாலைப் பொழுதாய் இல்லை.

தலைவி கூற்று

திருக்குறள் 1222 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

தன்னுட்கையாற்றை அதன்மேல் இட்டுச் சொல்லியது. (கையாறு - செயலற்ற நிலை; அதன்மேல் - மாலைப்பொழுதின் மீது.)

கூற்று விளக்கம்

தலைவி மனம் தளர்ந்து எய்திய வருத்தத்தை மாலைப்பொழுதின் மேல் ஏற்றிச் சொல்லியது.

புன்கண்ணை வாழி மருள்மாலை! எம்கேள்போல்
வன்கண்ண தோ,நின் துணை?

தெளிவுரை

பகலும் இரவும் கூடி மயங்கியுள்ள மாலைப் பொழுதே! நீயும் என்னைப்போல் ஒளி குன்றி, வருத்தமடைந்துள்ளாய்! நீ வாழ்க! என்னுடைய துணைவரைப்போல உன்னுடைய துணையும் அன்பற்றதாயுள்ளதோ? சொல்.

கருத்து

மாலையே! நீ மயங்கி இருப்பது ஏன்? உன் துணை உன்னிடம் அன்பு காட்டவில்லையோ?

விளக்கம்

மாலைப் பொழுது பகலும் இரவும் தம்முள் கலந்து ஒளி குறைந்திருக்கும். தலைவன் பிரிவால் தலைவி சோர்வடைந்திருக் கிறாள். ஆதலால் தலைவி மாலைப் பொழுதை நோக்கி (என்னைப் போல் நீயும் ஒளியிழந்திருக்கிறாயே!) என் துணைவரைப்போல் உன் துணையும் உன்னிடம் அன்பு செலுத்தாது கொடுமை செய்கிறதோ என்று கேட்கிறாள்.

குறிப்பு

தலைவனோடு சேர்ந்திருந்தபோது தலைவி ஒளியுடன் பகலைப் போன்றிருந்தாள். அவன் பிரிந்தபோது அவள் ஒளிகுன்றிச் சோர்வடைந் திருப்பதுபோல, பகலும் ஒளி குறைந்து மாலையாய்த் தோன்றுகிறது.

சொற்பொருள்

1. மருள் மாலை - மயங்கியுள்ள மாலைப் பொழுதே!; வாழி - வாழ்க!; புன்கண்ணை - (நீயும் ஒளியிழந்து) வருத்தமுற்றுள்ளாய்; எம்கேள் போல் - என்னுடைய துணைவரைப்போல்.
2. இன்துணை - உன்னுடைய துணையும்; வன்கண்ணதோ? - அன்பு செலுத்தாது கொடுமை செய்கிறதோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1223 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததால் வருந்தியிருந்த தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழிக்கு, 'மாலை என்னை வருத்துகின்றதே; நான் என் செய்வேன்?' எனத் தலைவி கூறியது.

பனிஅரும்பிப் பைதல்கொள் மாலை துனிஅரும்பித்
துன்பம் வளர வரும்.

தெளிவுரை

கணவன் அருகிருந்தபோது குளிர்ச்சி தோன்றப் பசந்து வந்த மாலைப் பொழுது, இப்போது வெறுப்பும் துன்பமும் மேன் மேலும் வளருமாறு செய்கின்றது.

கருத்து

கணவன் அருகிருந்தபோது இன்பத்தை வளர்த்த மாலைப் பொழுது, அவன் பிரிந்துள்ள இப்போது என் துன்பத்தை வளர்க்கிறது.

விளக்கம்

'கணவன் அருகிருந்தபோது மாலைநேரக் குளிர்ச்சியும் வெளிறிய (பசலை) நிறமும் என் இன்பத்தை மேலும் பெருக்கின. கணவன் அருகிலில்லாத இப்போதோ வெறுப்பை வளர்த்து என் துன்பத்தை மிகுதியாக்குகின்றன. இவற்றைத் தாங்கி நான் எப்படி ஆற்றியிருக்க முடியும்?' என்று, தலைவி தோழிக்குக் கூறினாள்.

குறிப்பு

மாலை நேரம் ஒன்றே; ஒருவரின் மனநிலைக்கேற்ப இன்பத்தைக் கூட்டு கிறது; அல்லது துன்பத்தை வளர்க்கிறது.

சொற்பொருள்

1. பனி அரும்பி - (காதலரோடு அருகிருந்த போதேல்லாம் குளிர்ச்சி தோன்றி; பைதல்கொள் மாலை - பசந்து வந்தது மாலை; துனி அரும்பி - (பிரிந்திருக்கும் இப்போது) வெறுப்புத் தோன்றுமாறு.
2. துன்பம் வளர வரும் - என் துன்பத்தை மேலும் மேலும் வளரச் செய்கிறது.

தலைவி கூற்று

திருக்குறள் 1224 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததால் வருந்தியிருந்த தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழிக்கு, 'மாலை என்னை வருத்துகின்றதே; நான் என் செய்வேன்?' எனத் தலைவி கூறியது.

காதலர் இல்வழி மாலை கொலைக்களத்(து)
ஏதிலர் போல வரும்.

தெளிவுரை

காதலர் இல்லாத நேரமாய்ப் பார்த்து மாலைப் பொழுது கொலைக்களத்துப் பகைவர்போல எனக்குத் துன்பமிழைக்கப் பாய்ந்து வருகிறது.

கருத்து

கொலைக்களத்துப் பகைவர்போல மாலை கொடுமை செய்கிறது.

குறிப்பு

தலைவன் அருகிலில்லாதபோது தோன்றும் மாலை, படைத்தலைவன் இல்லாத களத்தில் எதிரி நுழைவது போன்றுள்ளது.

சொற்பொருள்

1. காதலர் இல்வழி - காதலர் அருகில் இல்லாதபோது; மாலை - மாலைப் பொழுது; கொலைக்களத்து - கொலைக் களத்தில்.
2. ஏதிலர் போல - பகைவர்போல; வரும் - வருகின்றது.

தலைவி கூற்று

திருக்குறள் 1225 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

ஆற்றல் வேண்டுமென்ற தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்ததால் வருந்தியிருந்த தலைவியை ஆற்றியிருக்குமாறு கூறிய தோழிக்கு, 'மாலை என்னை வருத்துகின்றதே; நான் என் செய்வேன்?' எனத் தலைவி கூறியது.

காலைக்குச் செய்தநன்(று) என்கொல்; எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

தெளிவுரை

காலைப்பொழுதிற்கு நான் செய்த நன்மை என்ன? மாலைப் பொழுதுக்கு நான் செய்த தீங்கு என்ன? மாலைப்பொழுது என்னை ஏன் இவ்வாறு வாட்டுகிறது?

கருத்து

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு, மாலைப்பொழுது காதல் மயக்கத்தைப் பெருக்கி வருத்தும்.

விளக்கம்

'தலைவன் கூடியிருக்கும்போது தலைவிக்கு இரவு முடிந்து காலை தோன்றிவிடக் கூடாதே என்ற அச்சம் இருக்கும். அவன்

இல்லாத இப்போதோ துன்பக் கடலைக் கடந்து ஏறும் கரையாகக் காலை வரவை எதிர்நோக்கியிருக்கிறாள். தலைவனிருந்த போது குளிர்ச்சியின் எல்லைக்கு இட்டுச் சென்ற மாலை, இப்போதோ கொதிப்பின் கொடுமுடியாய்த் திகழ்கிறது. காலைக்கு நன்றும் மாலைக்குத் தீதும் நான் ஏதும் செய்ய வில்லையே! அவ்வாறிருக்க இந்த மாற்றம் ஏன்?' என்று கூறித் தலைவி வருந்துகிறாள்.

குறிப்பு

எப்போதும் ஒரே நிலையிலிருக்க வேண்டிய காலை, மாலைப் பொழுதுகள், தலைவன் பிரிவின்போது மாறித் தோன்றுகின்றன.

காலையும் மாலையும் தலைவன் கூடியபொழுதுபோல இல்லாமல், இப்போது வேறுபட்டு வருகின்றன.

சொற்பொருள்

1. காலைக்கு - காலைப் பொழுதுக்கு; நான் செய்த நன்று என்? - நான் செய்த நன்மை யாதோ?
2. மாலைக்கு செய்த பகை எவன்? - மாலைக்குச் செய்த தீமை என்னவோ?

தலைவி கூற்று

திருக்குறள் 1226 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

இன்று, இன்னையாகின்ற நீ, அன்று அவர் பிரிவுக்கு உடம்பட்டது என்னை? என்றாட்குச் சொல்லியது.

(இன்னையாகின்ற - இந்நிலையிலிருக்கின்ற; என்னை - ஏன்?)

கூற்று விளக்கம்

'தலைவன் பிரிவால் இன்று இவ்வாறு நிலைகுலைந்திருக்கும் நீ, அன்று அவன் பிரிவதற்கு உடன்பட்டது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி சொல்லியது.

மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத
காலை அறிந்த(து) இலேன்.

தெளிவுரை

முன்பெல்லாம் எனக்கு இன்பம் செய்து மகிழ்வித்த மாலைப் பொழுது, இன்று பகையாய் மாறித் துன்பம் செய்வதைத் தலைவன் பிரிதற்குமுன் நான் அறியவில்லை.

கருத்து

தலைவன் பிரிவில் மாலை என்னை வருத்தும் என்பதை நான் அறியாததால், அவன் பிரிவுக்கு உடன்பட்டேன்.

விளக்கம்

மாலைப் பொழுது இவ்வளவு துன்பம் தருமென்று என் தலைவனோடு கூடியிருந்தபோது எனக்குத் தெரியாமல் போய் விட்டது; அதனால் அவன் பிரிவுக்கு உடன்பட்டேன்.

குறிப்பு

பிரிந்திருப்பவர்க்கு மாலைப்பொழுது பெருந்துன்பம்.

சொற்பொருள்

1. மாலை - மாலைப்பொழுது; நோய் செய்தல் - துன்பம் தரும் என்பதை; மணந்தார் - கூடியிருந்த தலைவன்.

1-2. அகலாத காலை - பிரியாத காலத்து; அறிந்தது இலேன் - நான் அறியவில்லை.

தலைவி கூற்று

திருக்குறள் 1227 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.

(இனையை - இவ்வாறு; என்னை - என்ன?; என்றாட்கு - என்று கேட்ட தோழிக்கு.)

கூற்று விளக்கம்

'மாலைப்பொழுதில் நீ இவ்வாறு மயங்கி இருப்பது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி மறுமொழி சொல்லியது.

காலை அரும்பிப் பகல்எல்லாம் போ(து)ஆகி
மாலை மலரும்இந் நோய்.

தெளிவுரை

காமநோய் எனும் மலர் காலைப்போதில் அரும்பாய்த் தோன்றி, பகற்பொழுதெல்லாம் மொக்காய்த் திரண்டு, மாலைப் பொழுதில் மலர்ந்து விரிகின்றது.

கருத்து

காமநோய் காலையிலிருந்து படிப்படியாய் வளர்ந்து மாலையில் முதிர்ச்சியடைகிறது. (மலர்ந்த மலர் மணம் பரப்புதல்போல மாலைப் பொழுது துன்பத்தைப் பெருக்குகின்றது.)

விளக்கம்

காதல் நோய் காலை, பகலெல்லாம் படிப்படியாய் வளர்ச்சி பெற்று, மாலையில் மலர்ச்சி பெற்று என்னை வருத்துகிறது. (காலை, பகல்போல் இல்லாது மாலை என்னை வருத்துவதால் மயங்கி இருக்கிறேன்).

குறிப்பு

காதல் நோய் பூவாய் உருவகிக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள்

2. இந்நோய் - இக் காமநோய்.
1. காலை அரும்பி - காலைப்பொழுதில் அரும்பாய்த் தோன்றி; பகல் எல்லாம் - பகற்பொழுதிலெல்லாம்; போதாகி - மொக்காய்த் திரண்டு.
2. மாலை - மாலைப்பொழுதில்; மலரும் - மலர்ச்சி அடையும், முதிரும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1228 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'மாலைப்பொழுதில் நீ இவ்வாறு மயங்கி இருப்பது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி மறுமொழி சொல்லியது.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை.

தெளிவுரை

நெருப்புப்போலச் சுடுவதற்கு மாலைப்பொழுது வந்து கொண் டிருக்கிறது என்ற சேதியைச் சொல்வதற்குத் தூதாய் வருகின்ற இடையனின் புல்லாங்குழல் ஓசை என்னைக் கொலைசெய்யும் படையாய் உள்ளது.

கருத்து

மாலைப்பொழுது வருகின்றது என்பதை அறிவிக்கத் தூதாய் வருகின்ற ஆயன் குழலோசை என்னை வருத்துகிறது.

விளக்கம்

என்னை நெருப்பாய்ச் சுடும் மாலைப்பொழுது வருகின்ற செய்தியை அறிவிக்கத் தூதாய் வருகிறது, ஆயன் குழலோசை.

ஆனால் அவ்வோசையே என் உயிர் உண்ணும் படையாயும் உள்ளது. அதனாலேயே மயக்கம் கொள்கிறேன்.

குறிப்பு

தூதே படையாயுள்ளது. தூதனுப்பியவன் எவ்வாறிருப்பானோ?

சொற்பொருள்

1-2.ஆயன் குழல் - ஆயனின் புல்லாங்குழல் ஓசை.

1. அழல் போலும் மாலைக்கு - நெருப்பைப் போல் சுடுகின்ற மாலைப் பொழுதுக்கு; தூதாகி - தூதாய் வந்து; கொல்லும் படைபோலும் - கொல்லும் படைபோல ஆயிற்று.

தலைவி கூற்று

திருக்குறள் 1229 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'மாலைப்பொழுதில் நீ இவ்வாறு மயங்கி இருப்பது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி மறுமொழி சொல்லியது.

பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு
மாலை படர்தரும் பொழுது.

தெளிவுரை

அறிவை மயங்கச் செய்து, இந்த மாலைக் காலம் எனக்குத் துன்பம் தரும்போது, (என் துன்ப நிலைமைக்காக) இவ்வூரினரும் என்னைப் போலவே மயங்கித் துன்பப்படுவர்.

கருத்து

நான் வருந்தும்போது ஊராரும் வருந்துவர்.

விளக்கம்

ஒருவர் வருந்தும்போது மற்ற எல்லோரும் வருந்துவர் என்னும் உலகியல் உண்மையைக் கருத்திற்கொண்டு தலைவி தான் மயங்கித் துன்புற்று வருந்தும்போது ஊராரும் வருந்துவர் என்று கூறுகிறாள்.

குறிப்பு

பதி என்பதற்குக் கணவன் எனப் பொருள் கொண்டு, தலைவி தான் வருந்தும்போது என் தலைவனும் வருந்துவார் என உரை சொல்கிறார், பரிப்பெருமாள்.

சொற்பொருள்

1. மருண்டு - மயங்கச் செய்து.
2. மாலை - இம்மாலைப் பொழுது; படர் தரும் பொழுது - படரும்போது.
1. பதிமருண்டு - ஊரும் மயங்கி; பைதல் உழக்கும் - துன்பப்படும்.

தலைவி கூற்று

திருக்குறள் 1230 **திருவள்ளுவர்**

திணை : முல்லை

கூற்று

மாலைப்பொழுதின்கண் இனையையாதற்குக் காரணம் என்னை என்றாட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

'மாலைப்பொழுதில் நீ இவ்வாறு மயங்கி இருப்பது ஏன்?' என்று கேட்ட தோழிக்குத் தலைவி மறுமொழி சொல்லியது.

பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை
மாயும்என் மாயா உயிர்.

தெளிவுரை

பொருளைத் தேடுதலையே தனக்கு இயல்பாய்க் கொண்டுள்ள தலைவரை, மயக்கம்தரும் இம்மாலைப்பொழுதில் நினைத்து நினைத்து, சாகாமல் சாகிறது என் உயிர்.

கருத்து

தலைவரை நினைந்து நினைந்து நான் சாகாமல் சாகிறேன்.

விளக்கம்

'பொருள் தேடுதலையே கருதியுள்ள தலைவர் பிரிந்துள்ளார். மயக்கம் தரும் இம்மாலைப்பொழுதில் அவரை நினைந்து நினைந்து நான் சாகாமல் செத்துக் கொண்டிருக்கிறேன்' என்று, தலைவி தன் வருத்தமிகுதியைக் கூறுகிறாள்.

குறிப்பு

சாகாமல் சாதல் என்பது உயிர் படிப்படியாய்ப் (சிறிது சிறிதாய்ப்) பிரிந்து கொண்டிருத்தலைக் குறிக்கும்.

சொற்பொருள்

2. மாயா என் உயிர் - (தலைவரின் பிரிவுத் துன்பத்தால்) இறந்துபடாதிருக்கும் என் உயிர்.
1. பொருள் மாலையாளரை - பொருள் தேடுதலையே இயல்பாக உடைய தலைவரை; உள்ளி - நினைத்து; மருள் மாலை - மயக்கும் இம்மாலைப்பொழுதில்; மாயும் - சிறிது சிறிதாய் அழிகிறது (மாய்ந்தும் மாயாமல் இருக்கிறேன்).

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிற்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2

Vol-10
ISBN: 978-81-8379-777-1

விலை ரூ. 7200/-